ஸ்ரீ:

# ஆதிசேஷன்



சிறுபுலியூர் - ஆதிசேஷன்

ஆசிரியர்

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வத்ஸலா ஆ.சாரி

நூலின் பெயர் : ஆதிசேஷன்

பொருள் : வைணவசமயம்

வெளியீடு நாள் : 29.04.2007 (உத்தரம்)

ஆசிரியர் : ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வத்ஸலா ஆ.சாரி


உரிமை : ஆசிரியருக்கே

தாளின் தன்மை : 13.7 Kg. (Demy 1x8)

பக்கங்கள் : 284

நூலின் விலை : ரூ.100/-

பிரதிகள் : 1000

நூல் கிடைக்குமிடம் : திருமதி வத்ஸலா ஆ.சாரி
123/22, பாலாஜி என்க்லேவ்,
மேல அடையவளைந்தான்,
ஸ்ரீரங்கம் – 620 006.
செல் : 0 92451 48788.

அச்சிட்டோர் : பிறைகுடி கிராபிக்ஸ்
8, வடக்கு தேவித்தெரு,
திருவரங்கம், திருச்சி – 620 006.
செல் : 0 99429 44253.

## Thanks

**This book is published with the Financial Assistance of Tirumala Tirupati Devasthanam Under their scheme "Aid to Publish Religious Books"**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ரங்கநாத மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பாதுகா சேவக ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே கோபாலார்ய மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே பகவதே பாஷ்யக்காராய மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வகுள பூஷண மஹாதேசிகாய நம:
ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸமர்ப்பணம்

**சாரி மாமி**

ஸ்ரீரங்கம்.

## ஶ்லோகம்

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்ய பூஷணம் |
ஸ்ரீமத் வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதாந்த தேசிகம் ||
லக்ஷ்மீநாத4 ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் |
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ||


யோ நித்யமச்யுத பதா3ம்பு3ஜயுக்3மருக்ம |
வ்யாமோஹதஸ் ததி3தராணி த்ருணாய மேநே ||
அஸ்மத்3கு3ரோர் ப4க3வதோऽஸ்ய த3யைகஸிந்தோ4: |
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ||

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ||
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்3ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ||

பூ4தம் ஸரஸ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலசேக2ர யோகி3வாஹாந் ||
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ரமிஶ்ராந்
பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ||

கு3ருமுக2 மநதீ4த்தய ப்ராஹ வேதா3நஶேஷாந்
நரபதிபரிக்லுப்தம் ஶுல்கமாதா3துகாம: ||
ஶ்வஶுரமமரவந்த்3யம் ரங்க3நாத2ஸ்ய ஸாக்ஷாத்
த்3விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ||

# ஸமர்ப்பணம்



ஸ்ரீ. S.A. சாரி

## வெண்பா

வாழ்க்கைத் துணையாகி வாழ்வளித்த தெய்வமேநின்
ஆழ்மனத்து அன்பாம் பெருங்கடலுள் - மூழ்கியயான்
சிந்தை நிறைவோடு செய்தஇந் நூலிதனைத்
தந்தேன்கா ணிக்கை நுமக்கு.

# பொருளடக்கம்


| வரிசை எண் | கட்டுரைத் தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| | வாழ்த்துரை - | xii |
| | தில்லை சித்ரகூடம்A.V.ரங்காசார்யர் ஸ்வாமி | |
| | அணிந்துரை - | xiii |
| | வேளுக்குடி ஸ்ரீ.உ.வே. கிருஷ்ணன் ஸ்வாமி | |
| | Introduction - Adiseshan | |
| | ஸ்ரீமதி ப்ரேமா நந்தகுமார் | xv |
| | அடியேனும் ஆதிசேஷனும் | xvii |
| I | முன்னுரை | 1 |
| | 1 சித்து | |
| | 2 அசித்து | |
| | 3 ஈஶ்வரன் | |
| | 4 பத்தர் | |
| | 5 முக்தர் | |
| | 6 நித்யர் | |
| II | 1. ஆதிசேஷன் | 4 |
| | 2. ஆதிசேஷனின் தோற்றம் | 6 |
| | 3. ஆதிசேஷனின் உயர்வு | 7 |
| | கருடனை விட உயர்வு | |
| | 4. பாதாளலோகத்திற்குச் சென்றது | 10 |
| | 5. விஷ்ணுவைத் தாங்கும் அனந்தன் | 13 |
| | பாறையோடு மிதந்த பாலன் | |
| | 6. எம்பெருமானின் நிலைகள | 15 |
| | 7. பரமபதத்தில் ஆதிசேஷனின்நிலை | 17 |
| | பரமபதத்தில் ஆதிசேஷன் | |
| | வியூஹம் | |
| | விபவம் | |
| | 8. மச்ச அவதாரம் | 20 |
| | பிரளய நீரிலே மிதந்த படகு | |
| | 9. கூர்ம அவதாரம் | 20 |
| | 10. வராக அவதாரம் | 21 |

| | | |
|---|---|---|
| | 11. நரசிம்ம அவதாரம் | 21 |
| | 12. வாமன அவதாரம் | 21 |
| | 13. ராம அவதாரம் | 21 |
| | 14. கிருஷ்ண அவதாரம் | 21 |
| | 15. அர்ச்சாவதாரம் | 22 |
| | திருவரங்கம் | 22 |
| | திருமலை | 22 |
| | 16. திருமலை என்கிற திருப்பதி | 25 |
| | திருக்கச்சி (காஞ்சிபுரம்) | 30 |
| | ஆழ்வார்திருநகரி | 31 |
| | திருக்குறுங்குடி | 31 |
| | திருமெய்யம் | 32 |
| | திருவஹீந்திரபுரம் | 33 |
| | திருஇடவெந்தை | 34 |
| | திருகடல்மலை (திருவலந்தை) | 34 |
| | திருக்கடிகை (சோளிங்கர்) | 34 |
| | திருநாராயணபுரம் | 35 |
| | யாதவகிரி | 36 |
| | சிறுப்புலியூர் | 36 |
| | திவ்ய தேசங்களில் ஆதிசேஷனின் நிலைகள் | 37 |
| III | 17. ஆதிசேஷனின் வைபவம் | 40 |
| | சங்க இலக்கியம் | 40 |
| | பரிபாடல் | 40 |
| | ஆதிசேஷன் வில்லின் நாணாகியது | 42 |
| | உபய வேதங்களில் ஆதிசேஷன் | 43 |
| | சிலப்பதிகாரம் | 44 |
| | 18. ஸ்ரீவிஷ்ணுபுராணம் | 46 |
| | 19. ஆழ்வார்கள் | 47 |
| | 20. பொய்கைஆழ்வார் | 48 |
| | 21. பூதத்தாழ்வார் | 50 |
| | 22. பேயாழ்வார் | 52 |
| | தீயோரைஅழித்த வரலாறு | 54 |
| | 23. திருமழிசையாழ்வார் | 55 |

| | | |
|---|---|---|
| | ஆதிசேஷனின் பொங்கும் பரிவு | 55 |
| | ஆதிசேஷனின் ஜோதிட நூல் செய்த வரலாறு | 57 |
| | 24. நம்மாழ்வார் | 64 |
| | 25. குலசேகரஆழ்வார் | 72 |
| | 26. பெரியாழ்வார் | 74 |
| | 27. ஆண்டாள் | 78 |
| | 28. தொண்டரடிப்பொடியாழ்வார் | 82 |
| | 29. திருப்பாணாழ்வார் | 83 |
| | 30. திருமங்கையாழ்வார் | 85 |
| | 31. ஆசார்யர்கள் | 92 |
| | 32. ஆளவந்தார் | 93 |
| | 33. ஸ்ரீபராசரபட்டர் | 96 |
| | 34. பிள்ளைலோகாச்சாரியார் | 99 |
| | அர்ச்சிராதி | 102 |
| | 35. ஸ்ரீவேதாந்த தேசிகர் | 104 |
| | 36. பாதுகாஸஹஸ்ரம் | 105 |
| | 37. பிள்ளைபெருமாள் ஐயங்கார் | 111 |
| IV | 38. ஆதிசேஷனுடைய அவதாரங்கள் | 114 |
| | லக்ஷ்மணன் | 115 |
| | ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதரித்தல் | 115 |
| | விச்வாமித்திரமுனி வருகை | 118 |
| | கைகேயியின் செயலைப்பழித்து இலக்குவன் போர்க்கோலம் கொள்ளல் | 120 |
| | சுமித்திரை சொன்ன அறிவுரை | 124 |
| | சித்ரகூடப்படலம் | 125 |
| | பரதன் சைன்யத்துடன் வருவதைக்கண்டு இலக்குவன் சந்தேகித்தது | 129 |
| | இலக்குவன் இராமனைத் தேற்றுதல் | 134 |
| | இலக்குவன் கிட்கிந்தைக்குப்போதல் | 134 |
| | வாலியின் மனைவியான தாரை இலக்குவனின் வழியை தடுத்துநிற்றல் | 135 |
| | சுக்ரீவனுடன் உரையாடுதல் | 137 |
| | வால்மீகி ராமாயணத்தில் யுத்தகாண்டம் | 137 |
| | ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டத்தில் | 138 |

| | | |
|---|---|---|
| | கம்பன் தன் யுத்த காண்டத்தில் | 139 |
| | கம்பன் தன் உத்திர காண்டத்தில | |
| | சந்திரகேதுநகர் படலம் | 140 |
| | உத்திரராமாயணம் | 142 |
| 39. | **ஆழ்வார் அனுபவித்த இலக்குமணன்** | 147 |
| | ஆண்டாள் | 147 |
| 40. | **ஆசார்யர் அனுபவித்த இலக்குமணன்** | 148 |
| 41. | **கூரத்தாழ்வான்** | 148 |
| | அதிமானுஷஸ்தவம் | 149 |
| 42. | **பிள்ளைலோகாச்சார்யர்** | 150 |
| | இளையபெருமாளைப்போலே இருவருமாக | |
| | சேர்த்தியிலே அடிமைச்செய்யும் முறை | 151 |
| | ஸ்ரீவசனபூஷணம் | 151 |
| | ஸ்ரீவசனபூஷணத்தில் இளையபெருமாள் | 152 |
| 43. | **பலராமன்** | 153 |
| | ஆதிசேஷன் பலராமனாக அவதரித்தது | 153 |
| | தேனுகாஸுரவதம் | 156 |
| | காளிய நர்த்தனம் | 157 |
| | ப்ரலம்பாசுர வதம் | 158 |
| | சங்கசூட வதம் | 158 |
| | ஸ்யமந்தகமணி | 159 |
| | அக்ரூரர் ஆற்றில் கண்ட அற்புதக்காட்சி | 162 |
| | கம்ச வதம் | 163 |
| | கோகுலத்தில் பலராமன் | 164 |
| | ராமகிருஷ்ண திருமணம் | 165 |
| | சூதாட்டத்தில் எழுந்த சச்சரவு | 165 |
| | பலராமனுடைய கோபம் | 166 |
| | நகரையே பெயர்த்த கலப்பை | 167 |
| | பலராமனுடைய தீர்த்த யாத்திரை | 168 |
| | பலராம கிருஷ்ண அவதார பூர்த்தி | 170 |
| 44. | **பரிபாடலில் பலராமன்** | 171 |
| | அகநானூறு | 174 |
| 45. | **ஆழ்வார்கள் அனுபவித்த பலராமன்** | 175 |
| 46. | **ஆசார்யர்கள் அனுபவித்த பலராமன்** | 180 |
| | ஸ்ரீபராசரபட்டர் | 180 |
| 47. | **பதஞ்சலி முனிவர்** | 180 |

| | | |
|---|---|---|
| 48. | ராமாநுஜர் | 183 |
| 49. | ஆதிசேஷன் இராமானுசராகஅவதரித்தல் | 183 |
| | ப்ரம்மராக்ஷஸ்ஸு காட்டின இராமானுஜர் | 189 |
| | ஆளவந்தார் ஆசார்யன் திருவடியைஅடைதல் | 190 |
| | திருக்கச்சி நம்பியிடம் இளையாழ்வாருடைய ப்ரதிபத்தி விசேஷம் | 191 |
| | திருக்கச்சி நம்பிஆறு வார்த்தை | 192 |
| | இளையாழ்வார் மதுராந்தகத்தில் பெரியநம்பிகளை ஆஶ்ரயித்தல் | 192 |
| | ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல் | 193 |
| | ஊமையை பேசவைத்தது | 194 |
| | திருவரங்கப்பெருமாள் அரையரும், தேவபெருமாளும் | 195 |
| | திருவரங்கத்தமுதனாரைத் திருத்திப் பணிக்கொள்ளுதல் | 197 |
| | எம்பார் திருந்தின செய்திகேட்டுமகிழ்தல் | 197 |
| | உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரிதத்வம் | 198 |
| | ஸ்வாமியும் திருக்கோஷ்டியூர் நம்பியும் | 198 |
| | உடையவரின் திருவேங்கட யாத்ரா வைபவம் | 201 |
| | ஸ்ரீராமாயணத்தைப் பூர்த்தி செய்தார் | 202 |
| | பெரியதிருமலைநம்பி | 203 |
| | சாரதாபீடம் சென்றது | 204 |
| | உடையவரின் க்ரந்தத்தை சாரதை சிரஸில் ஏந்தியது | 205 |
| | பத்ரிகாச்ரமத்தை மங்களாசாசனம் செய்தல் | 206 |
| | கூர்மமாக கண்டருளினார் | 207 |
| | பாஷண்டிகளை நிர்தாரணம் செய்தல் | 208 |
| | திருவரங்கம் திரும்புதல் | 209 |
| | உடையவர் இரண்டாவது தடவை ஸ்ரீபாஷ்யம் தொடங்கி தலைக்கட்டியது | 212 |
| | உடையவர் முதலியாண்டானை த்ரிதண்டஸ்தானியாக அபிமானித்தது | 214 |
| | உடையவர் ஊமைக்கு அருளிச் செய்தது | 214 |
| | கூரத்தாழ்வான் கண்பார்வையை இழந்தது | 216 |

| | | | |
|---|---|---|---|
| | | பன்னிரெண்டாயிரம் சமணர்களை வாதில்வென்றது | 216 |
| | | செல்வப்பிள்ளையையும் திருமண்காப்பையும் ஸ்வப்னத்தில் கண்டது | 217 |
| | | சதுர்முகமான ப்ரம்மா, சக்கரவர்த்தி திருமகனான திருமாலுக்கு சமர்ப்பிக்க | 218 |
| | | இராமப்பிரியரை எழுந்தருளச் செய்தல் | 219 |
| | | பெரிய திருமந்திரத்தின் வைபவம் | 220 |
| | | உடையவர் காஷாயம் தரித்தல் | 220 |
| | | மறுபடியும் திருவரங்கம் சேருதல் | 221 |
| | | கூரத்தாழ்வானை வரதராஜப்பெருமானிடம் ஒளி வேண்டச் சொல்லல் | 221 |
| | | கூரத்தாழ்வான் உயிர் நீத்தல் | 222 |
| | | விக்ரஹப் ப்ரதிஷ்டை | 223 |
| | | இளையாழ்வாரின் திருநாமங்கள் | 224 |
| | | உடையவரின் அவயப்ரபாவங்கள் | 225 |
| | 50. | **அனந்தாழ்வான்** | **227** |
| | 51. | **மணவாள மாமுனிகள்** | **231** |
| | | திருவாய்மொழிப்பிள்ளை மாமுனிகளுக்கு செய்தருளிய கட்டளை | 233 |
| | | அழகிய வரதரும் சேனை முதலியாரும் மணவாளமாமுனிகளை ஆச்ரயித்தது | 234 |
| | | பிள்ளைலோகாச் சாரியார் திருமாளிகைக் கண்டு களித்தல் | 236 |
| | | நம்பெருமாள் ஆணை | 236 |
| | | ஸ்தலங்களில் மங்களாசாசனம் செய்தல் | 237 |
| | | மணவாள மாமுனிகள் தம்முடைய நிஜாகாரத்தைக் காட்டல் | 237 |
| | 52. | **மாமுனியின் ஏற்றம்** | **245** |
| V | 53. | **முடிவுரை** | **249** |
| | 54. | பாசுர அடைவுகள் (அனந்த, ஆலிலை) | 257 |


**'ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ' வத்ஸலா ஆ. சாரி**
ஸ்ரீரங்கம்.

வாசிகதோஷ: க்ஷந்தவ்ய:

ஸ்ரீ:

# வாழ்த்துரை

ஸ்ரீவேங்கடார்ய குருகுலம் - அருள்மாரி அருளிச்செயல் ஆய்வகம்
ஸ்ரீ.உ.வே. Dr. A. V. ரங்ககாச்சாரி சிதம்பரம் – 608002

---

திருமதி. வத்ஸலா ஆ. சாரி அவர்களால் ஸமர்ப்பிக்கப்பட்ட 'ஆதிசேஷன்' என்ற ஆய்வுக்கட்டுரையைப் பூரணமாக ஸேவிக்கும்படியான பாக்யம் பெற்றேன். 264 பக்கங்களில் 5 இயல்களில் ஆதிசேஷனைப் பற்றிய அனைத்து செய்திகளையும் தொகுத்து, 54 தலைப்புகளில் கொடுத்துள்ளது மிகவும் பாராட்டுதற்குரியது.

இந்நூலில் ஆதிசேஷனின் தோற்றம், வரலாறு, அவதாரங்களில் ஆதிசேஷன், திவ்யதேசங்களில் ஆதிசேஷன், ஆழ்வார்கள் அனுபவம் ஆசார்யர்களின் அனுபவம், ஆதிசேஷனுடைய அவதாரங்களின் சிறப்பு, ஆகிய அனைத்து வைபவங் களையும், எல்லாக்ரந்தங்களிலிருந்தும் தொகுத்து, வெகு அழகாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமதி. வத்ஸலா ஆ.சாரி அவர்களின் கடும் உழைப்பையும், ஈடுபாட்டையும் இந்நூல் நன்கு புலப்படுத்துகிறது. உண்மையிலேயே இவ்வாய்வுக்கட்டுரை ஆதிசேஷனைப் பற்றிய முழுமையான, தலைசிறந்த ஆய்வுக்கட்டுரையாகும். இதை தயார் செய்த மாணவியையும், இந்தத் தலைப்பில் ஆய்வு செய்யும் வாய்ப்பை அளித்து, Guide செய்த ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்தாபனத்தையும் மிகவும் பாராட்டுகிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அணிந்துரை

## கிஞ்சித்காரம் ட்ரஸ்ட்

ஸ்ரீ.உ.வே. V. வேளுக்குடி கிருஷ்ணன் சென்னை

சென்றால்குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீழ்கடலுள் என்னும்
புணையாம் அணிவிளக்காம் பூம்பட்டாம்
புல்குமணையாம், திருமாற்கரவு


என்ற பொய்கையாழ்வார் பாசுரப்படி ஸ்ரீமந்நாராயணனுக்கு எல்லாவிதமான கைங்கர்யங்களையும் பண்ணுவதிலே முன்னோடியாகத் திகழ்பவர் ஆதிசேஷன். பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தாரும் தம்முடைய ஸ்தோத்ர ரத்தினத்தில் ''யாதோசிதம் சேஷ இதிரிதேஜனை:'' என்று ஆதிசேஷனுக்கு கைங்கர்யம் பண்ணும் சிறப்பாலே 'சேஷன்' என்று அடியார்களே பட்டப் பெயர் கொடுத்து கொண்டாடுவதாகக் கூறுகிறார். பகவானுக்கு ஜீவாத்மாக்கள் எல்லோரும் அடிமைகள் அதாவது சேஷர்கள் அடிமைத் தனத்தைக் குறிக்கும் சேஷன் என்னும் சொல்லையே தனக்கு இயற் பெயராக கொண்டுள்ளார் ஆதிசேஷன்.

ஈரேழு பதினாலு உலகங்கள் அடங்கிய அண்ட சராசரத்தை தன்னுடைய ஆயிரம் தலைகளால் தாங்கி ஆதிசேஷன் நம் எல்லோருக்கும் ஆதாரமாக இருக்கிறார்.

ஸ்ரீவைகுண்டத்தில் நித்ய ஸூரிகளில் முக்யமான

வராக திகழும் ஆதிசேஷன் யுகந்தோறும் நடக்கும் திருமால் அவதாரங்களோடே தானும் பிறக்கிறார். க்ருதயுகத்தில் ஆதிசேஷனாகவும் த்ரேதாயுகத்தில் லக்ஷ்மணனாகவும், த்வாபர யுகத்தில் பலராமனாகவும், கலியுகத்தில் இராமானு சராகவும் பிறந்து பல கைங்கர்யங்களை புரிந்து சேஷத்வத்தை நிலைநாட்டினார்.

இப்படிப்பட்ட பெருமைகளைப் படைத்த ஆதிசேஷனைப் பற்றிய செய்திகள் இதிஹாசங்களிலும், புராணங்களிலும் மற்றும் ஆழ்வார்பாசுரங்களிலும் மறைந்து கிடக்கின்றன. இவற்றை வெளிகொணர்ந்து ஒன்றாகத்திரட்டி ஆராய்ச்சிக் கட்டுரையாக வெளியிடும் ஓர் உன்னதமான கைங்கர்யத்தை மேற்கொண்டுள்ளார் திருமதி வத்ஸலா ஆ.சாரி அவர்கள். இப்புதகத்தைப் படிக்கும் வாய்ப்புபெறும் ஒவ்வொரு பக்தனும் இம்முயற்சியை மனதார பாராட்டப் போவது உறுதி. திருமதி சாரி ஆவர்கள் ஆயுள் ஆரோக்யத்தோடு மேலும் பல தொண்டு களை புரிய அரவின் அணைமிசை மேய மாயன், அரவரச பெருஞ்சோதி அனந்தனென்னும் அணிவிளக்கு உயர் வெள்ளை அணையை மேவிய திருவரங்கனின் திருவடி களில் பிரார்த்திக்கிறேன்.



# INTRUDUCTION - ADISESHAN

**Prema Nandakumar**
M.A, Ph.D

Mudhal Tirumaligai,
91, South Chitrai Street,
Srirangam - 620 006
Phone : 0431-24343959 / 2434265
E-Mail: premnand@dataone.in

The Plumed Serpent, Naga, is a divine symbol in Vaishnavism. As Adisesha, he supports the whole world; he is the couch of Vishnu. Indeed, we have the succinct verse of Poykai Alvar :

**"The Naga for Vishnu is an umbrella when he walks**
**A throne when he sits, sandals when he stands,**
**Always a boat in the huge ocean, a brilliant lamp,**
**Silken garment, also a bed to rest."**

(Mudhal Tiruvantati, verse 53)

Adisesha is considered the first among the serviteurs of Narayana. Though he is an integral part of Vaishnava canon, it is intriguing that so far no independent study of this unique image which is a primal myth of Indian culture and has an important place in religious literature has been made in Tamil. The present study purports to ring together references to Adisesha in the hymns of the Alvars and Acharyas as also in Associated works belonging to Vaishnavism.

After dealing with the myth regarding the birth of serpents (spoken of in detail in the Adi Parva of the Maha bharata), this work proceeds to point out that Adhisesha (Ananta) has a higher status than that of Garuda. In all the

various planes of Vishnu's appearance (Para, Vyuha, Vibhava and Archa in particular) Adisesha has an important place. In the course of explaining his presence in Archa, the author deals with some of the seminal legends regarding temples in Srirangam, Tirupati, Kanchipuram, Alvar Tirunagari, Tirukurungudi and Tirumeyyam that are closely associated with the divine Serpent. In fact, Sirupuliyur has even an independent niche for Adisesha who appears with four shoulders and is known as Anantalvar.

Adhiseshan then takes us to Sangam Tamil works like Paripadal and Chilappadhikaram, as also Kaushidhaki Upanishad and Vishnu Purana. Almost all the Alvars speak of Adisesha's importance (Tirumazhisai Alvar speaks of Adisesha as the Lord's bed, umbrella and sandals). So do Alavandar and Bhattar (the first forty - five stanzas of Sri Rangaraja Stava), Pillai Lokacharya, Kuresa, Pillai Perumal Iyengar and Vedanta Desika. The author has taken pains to point out the weight given to Adisesha in Vedanta Desika's Paduka Sahasra which even sports a "Sesha Paddhati".

Of prime importance in this study are the various linkages that brings us Adisesha-Lakshmana, Adisesha - Balarama, Adisesha - Anantalvan, Adisesha - SriRamanuja and Adisesha - Manavalamamuni. The study directs the reader to a very important fact of Indian culture where the Naga is universally reversed and worshipped as incarnating along with Narayana. Indeed even the banyan leaf on which the Lord as a babe floats in te primal ocean is said to be an incarnation of Adisesha. I have great pleasure in congratulating the author, Srimati Vatsala A.Chari on her significant work and hope the book will be read widely and inspire others to take up deeper research in the symbolism of Adisesha in Vaishnava literature.

ஸ்ரீ:

# அடியேனும், ஆதிசேஷனும் வளர்ந்தவிதம்



மாட பூசியில் ஜனனம். ஈயுண்ணி, திருக்குடந்தை, பாரத்வாஜ கோத்திரம் வீட்டின் கடைக்குட்டி (எட்டாவது) மாற்றுப் பெண்ணாக வாழ்க்கைப் பட்டேன். பெரிய குடும்பமானாலும் அன்பான அழகான கூட்டுக்குடும்பம். கைபிடித்தவர் 18 வருடங்களில் பரம பதிக்க, சீமந்தபுத்ரனையும், கனிஷ்ட குமாரத்தியையும் படிக்கவைத்து ஆளாக்கி நல்லதொரு திருமணவாழ்க்கையும் அமைத்து கொடுத்தாயிற்று.

கணவனை இழந்தபின் சந்திக்காத போராட்டங்கள் கிடையாது. பிறந்த வீடு, புகுந்தவீடு என்று எங்கேயும் அண்டி வாழாமல், தன்கையே தனக்குதவி என்பதற்கேற்ப பல இடங்களில் வேலை செய்து இரு குழந்தைகளையும் நன்கு ஆளாக்கினேன். 2001ம் ஆண்டு இறுதிவரை வேலை செய்தேன். வாழ்கையில் எதிர்நீச்சல் போட்டுபோட்டு சமாளித்து மிகவும் மனம் தளர்ந்துவிட்டது. 59ம் வயதில் ''ஸ்ரீமத் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன்'' ஸ்வாமியின் சம்பந்தத் தால் சமாஶ்ரயணமும், பரண்யாசமும் ஆனது. அதற்கு இரு வருடங்களுக்கு முன்பாகவே மனதை ஆன்மீக வழியில் செலுத்த வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை தழுவின புத்தகங் களை மட்டும் படிப்பது, மற்ற உலக விஷயங்களை தவிர்ப்பது என்ற ஒரு கொள்கையுடன் வாழ்ந்தேன்.

2001 ஆம் ஆண்டு மார்கழியில் பூலோக வைகுண்டமான திருவரங்கத்தில் ''அத்யயன உத்ஸவம்'' ஸேவிக்கும் பாக்யம் பெற்றேன். ஆம்! கட்டாயமாக பாக்யம்தான். முதலில் என்னை ஈர்த்தது அந்த ஐந்து தலையுடன், தங்க கவசங்களை தரித்துக் கொண்டிருக்கும் பெரிய ''ஆதிசேஷனே''. ''நானே இவ்வளவு அழகுடன் இருக்க, என் மடியில் ஸதா உறங்குவான்போல் யோகுசெய்யும் பெரியபெருமாளை பார்'' என்பதாக அடியேன் மனதில் தோன்றும். எப்போது பெரிய பெருமாளை ஸேவித்தாலும் ''ஆதிசேஷனை''யும் சேர்த்தே மனம் அனுபவிக்க ஆரம்பித்தது.

உடல்நிலை காரணமாக 4,5 மாதங்களில் பெங்களூரில் பிள்ளையின் இருப்பிடத்திற்கு அழைத்துச் சொல்லப்பட்டேன். எவ்வளவுதான் புஸ்தங்களைப் படித்து பொழுதைக் கழித்தாலும் மனதில் ஏதோ ஒரு வெறுமை, கண்முன் திருவரங்கத்தின் கர்ப்பக்ருஹம்தான் தோன்றிக் கொண்டு இருந்தது. பகவத் அனுக்ரஹத்தில் 106 வைஷ்ணவ திவ்ய தேசங்களையும் ஸேவிக்கும் பாக்கியம் பெற்றேன்.

2004ம் ஆண்டு சித்திரையில் மறுபடியும் ஸ்ரீரங்க வாஸியாகி நித்யம் பெருமாளை ஸேவித்துக் கொண்டும், உபந்யாஸங்களைக் கேட்டுக்கொண்டும் இருந்தேன். க்ஷேத்ராடனத்தில் (திருமதி. லக்ஷ்மி) ஒரு சகோதரியை சந்தித்தேன்; வீட்டிற்கு வந்தார். அடியேன் படிக்கும் புஸ்தகத்தைப் பார்த்தார். அவர் சென்னையில் ''வைஷ்ண விசம்'' செய்தவர். என்னிடம் ஏதோ கேள்வி கேட்க, அடியேனும் பதில் சொல்ல, இவ்வளவு தெரிந்த நீங்கள் ஏன் 'ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ' எழுதக்கூடாது என்று கையுடன் ஸ்ரீகிருஷ்ணமாசார்யர் ஸ்வாமிகளை சந்தித்து அந்தப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி செய்வித்தான். முதலில் ஒன்றும் புரியாதநிலை. பின்பு படிக்க, படிக்க மிகவும் ஸ்வாரசியமாகவும், அநேக விஷயங்களில் தெளிவும் கிடைக்கப்

பெற்றேன். 14 மாதங்களில் மூன்று நிலை தேர்விலும் நல்ல முறையில் தேறி, கடைசியாக ஆய்வுக்கட்டு எழுத "ஆதிசேஷனை" தேர்ந்தெடுத்தேன். ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ பட்டம் வாங்கிய ஒருசிலர், எதற்கு தெரியாத விஷயத்தை எடுத்து சிரமபடணும், ஏதேனும் தெரிந்த தலைப்பில் 80பக்கங்கள் எழுதலாம் என்றனர். அடியேனுக்கும் முன்பே சொன்னதுபோல் "ஆதிசேஷன்" மேல் ஒரு ஈர்ப்பு. ஒருவரும் செய்யாததை செய்து சாதிக்கவேண்டும் என்ற ஓர் வெறி! மேலும் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்வாமியிடம் இதைப்பற்றிய குறிப்புகள் ஏதேனும் கிடைக்குமா? என்று கேட்க, அவரும் தில்லை சித்ரகூடம் டாக்டர் ஏ.வி. ரங்காசார்யர் ஸ்வாமிக்கு எழுதி கேளுங்கள் என்று சொன்னதின் பேரில் அடியேனும் திரு. ரங்காச்சார்யர் ஸ்வாமிக்கு எழுத, அவர் எழுதிய பதில் கார்டில், "தாங்கள் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் தலைமையில் படித்து, ஆய்வுக்கான கட்டுரையாக 'ஆதிசேஷனை' தேர்ந்தெடுத்திருப்பது மிகப்பெரிய விஷயம். இது, இதுவரை யாரும் செய்யாதது. அதை தாங்கள் சிறப்புடன் செய்து வைஷ்ணவத்திற்கே ஒரு பெருமை சேர்க்க வேணும்" என்று பதில் எழுதியிருந்தார். அந்த வார்த்தைகள் அடியேன் மனதில் சதா திரும்ப, திரும்ப வந்து "ஆதிசேஷன்" உருவாக ஓர் உத்வேகத்தை கொடுத்தது. பின் எழுதி முடித்ததும் படிப்பித்த ஆசான் தான் படித்தது மட்டுமின்றி, மறு பரிசீலனைக்காக திரு.ரங்காசார்யர் ஸ்வாமி அவர்களுக்கு அனுப்பியதன் பேரில் ஸ்ரீவேங்கடார்ய குருகுலம், அருள்மாரி அருளிச்செயல் ஆய்வகம், சிதம் பரத்தை சேர்ந்த திரு. ரங்கசார்யர் ஸ்வாமி கையால் எழுதிய வாழ்த்துக் கடிதம் கிடைக்கப்பெற்றேன். அதில் "ஆதிசேஷன் ஒரு தலைசிறந்த ஆய்வு கட்டுரையாகும்" என்று எழுதி யிருந்ததை பார்த்து ஜென்மம் சாபல்யம் அடைந்ததாக நினைத்துள்ளேன். "ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ" பட்டமும் கிடைக்கப் பெற்றேன்.

கடைசியில் சேகரித்த விஷங்களை வடிவமைக்க

திருமதி.டாக்டர். ராஜலக்ஷ்மி ராமாநுஜம்; அடியேன்மேல் தயைவைத்து உதவி செய்தார். யாவற்றுக்கும் மேல் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ எஸ்.டி. ரங்கராஜன் ஸ்வாமி *(அடியேனுடைய உடன் பிறவா சகோதரன்)* அநேக புஸ்தகங்களை படிக்கக் கொடுத்து உதவினார். படிப்பித்த ஆசான், அவ்வப்போது எழுதும் பதில்களை, வாசித்து அதில் அவர் எழுதும் ''கமெண்ட்ஸ்'' அது ''டானிக்'' சாப்பிடுகிறாபோல் இருக்கும். அடியேன் எழுதிய ஆதிசேஷனை கணிப்பொறி உதவியுடன் வடிவமைக்க, இராவை பகலாக்கி வேலை செய்த திருமதி. வித்யா ரவிச்சந்திரன் பெரிதும் உதவினார். ஆக ''ஆதிசேஷன்'' வர காரணமாய் இருந்த அனைவருக்கும் அடியேன் சிரம்தாழ்ந்த வணக்கத்தையும், க்ருதஜ்ஞதை யையும் தெரிவித்துக் கொள்கிறேன். பிறந்தவீட்டினர், புகுந்தவீட்டினர் அனைவரையும் மிக பெருமை கொள்ள செய்துவிட்டான் ''ஆதிசேஷன்''.


66 வயது முடிந்து இருக்கும் அடியேனுக்கு, திருவரங்கம் வருமுன் இருந்த வாசனைகள்:

பல இடங்களில் வேலை செய்த அனுபவத்தால் தாய் பாஷைத்தவிர 3,4 பாஷைகள் சமாளிப்பேன், சமையற் கலையிலும், ஹிந்தியிலும் பட்டம் பெற்றவள். வாழ்வில் நடந்த உண்மைகளையும், கண்ணால் கண்டவற்றையும் பத்திரிகைக்கு எழுதி அவை பிரசுரமாகியுள்ளன. சாஸ்த்ரிய, கர்னாடக சங்கீதத்தை அனுபவிக்க ஆழ்ந்த ஓர் காதல். திரு. சுப்புடுவின் ரசிகை. மற்றபடி கைவேலைகள், பெயிண்டிங், பூக்கள் செய்வது, பொம்கைள் செய்து அனைத்தும் அறிவேன். எல்லாவற்றிற்கும் அடியேனுக்கு ''ஆசார்ய சம்பந்தமும், அதற்குமேல் திருவரங்கம் திவ்ய தம்பதிகளின் அனுக்ரஹமுமே'' ஆகும்.

23.04.2007, *அன்புடன் விடைபெறும்*

திருவரங்கம். **சாரிஹாசி.**

ஸ்ரீ:




## முன்னுரை

வைணவ மதம் என்பது மிக தொன்மை வாய்ந்த மதமாகும். வேதத்தில் இம்மதம் பரம்பொருளாகச் சொல்லப்பட்டுள்ள ஸ்ரீவிஷ்ணுவையே முழு முதற் கடவுளாகக் கொண்டது. ஸ்ரீவைஷ்ணவ மதமானது சித், அசித், ஈஸ்வரன் என்கிற மூன்று தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது.

1.**சித்து:** என்பது ஞானமாய் விளங்குகின்ற ஆத்மாவாகும். இது ஞான, ஆனந்தமயமாகவும், அணுவாகவும், நித்யமாகவும், தானே ஒளிவிடும் தன்மையை உடையதாயும், எம்பெருமானுக்கு அடிமைப்பட்டதாகவும் அமைந்துள்ளது.

2.**அசித்:** அசித் என்பது அறிவற்றதாய் மாறிக்கொண்டு இருக்கும் தன்மையை உடையதாய் இருப்பது.

3.**ஈஸ்வரன்** சித்தையும் அசித்தையும் நியமிக்கும் எம்பெருமானான ஸ்ரீமந்நாராயணனே ஈஸ்வரனாவன். பிராட்டியை அடையாளமாக உடையவன். எண்ணிறந்த கல்யாண குணங் களையும், திவ்யமங்கள விக்ரஹத்தையும் உடையவன். தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன். சித், அசித், இரண்டையும் தனக்கு சரீரமாகக்கொண்டு அவர்களுக்கு ஆத்மாவாய் இருந்து, இயக்குபவன்.

**மூவகை சேதனர்கள்:** சித் எனப்படும் சேதனர்கள் மூவகைப்படுவர்.

**4.பத்தர்** இவர்கள் தங்களுடைய பாவ புண்யங்களாகிற வினைகளின் காரணமாக ஸம்சாரத்தில் உழல்பவர்கள்.

**5.முக்தர்** எம்பெருமானால் பாவங்கள் நீங்கி சம்சாரத் தினின்று விடுபட்டு பரமபதம் சென்றவர்கள்.

**6.நித்யர்** இவர்கள் ஸம்சார ஸம்பந்தம் இல்லாதவர்களாய் பரமபதத்தில் எம்பெருமானுடன் எப்பொழுதும் இணைபிரியாது இருந்து அவனுக்கு உகந்த கைங்கர்யங்களைச் செய்பவர்கள்.

**'தத் விஷ்ணோ: பரமம் பதம், ஸதா பஶ்யந்தி ஸூரய:'**

என்கிறபடி பரமபதத்திலுள்ள ஸ்ரீமந்நாராயணனைக் கண் இமைக்காமல் நோக்கிக்கொண்டும், ஸாமகானத்தால் எப்பொழுதும் எம்பெருமானை மகிழ்வித்துக் கொண்டும் இருப்பவர்கள். எல்லா தேசங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லா நிலையிலும் அவனுகப்புக்குத் தகுந்த கைங்கர்யங்களை செய்பவர்கள். எம்பெருமானைப் போலவே அப்ராக்ருதமான திருமேனியை உடையவர்கள். தன்னிச்சைப்படி வடிவம் எடுத்து கைங்கர்யம் செய்பவர்கள்.

ஆத்மாவின் தன்மையான சேஷத்வத்துக்குப் பாங்காக இருக்கும் பிறவியே உயர்ந்தது என எண்ணுபவர்கள். இக் கருத்தை அழகியமணவாளப்பெருமாள்நாயனார் தம்முடைய ஆசார்ய ஹ்ருதயத்தில் இரண்டாம் ப்ரகரணம் - முதல் சூர்ணிகையில்:

**"அணைய ஊரப் புனைய அடியும் பொடியும் பட**
**பர்வத பவநங்களிலே ஏதேனுமாக ஜநிக்கப்**
**பெருகிற திர்யக் ஸ்தாவர ஜந்மங்களைப் பெருமக்களும்**
**பெரியோர்களும் பரிக்ரஹித்து ப்ரார்த்திப்பர்கள்"**

என்றருளிச்செய்துள்ளார். அதாவது, நித்ய விபூதியில் எம்பெருமான் கண் வளர்ந்தருளுகைக்குப் பாங்காக இருக்கும் அரவணையாயும் அவன் பலகாலும் மேற்கொண்டு நடத்துகைக்கு வாகனமான கருடனாகவும், அவன் ஆதரித்து சாத்துவதற்கு உரிய திருத்துழாயாயும் உள்ள திர்யக், ஸ்தாவர ஜன்மங்களை மஹாத்மாக்களான நித்யசூரிகள் பகவத் கைங்கர்யத்தில் உள்ள விருப்பத்தினால் எம்பெருமானிடம் பிரார்த்தித்தார்கள்.

திர்யக், ஸ்தாவர ஜன்மங்களில் பிறப்பானது பாபத்தின் பயனாக கிடைப்பது என்று சாத்திரங்களில் கூறியுள்ள பொழுது நித்யசூரிகள் இப்பிறவிகளை ஆசைப்படுவது ஏனெனில், எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்யவேண்டும் என்ற விருப்பத்தினால்தான். எப்பிறவியாக இருந்தாலும் எம்பெருமானுடைய கைங்கர்யத்திற்கு தகுந்ததாக இருக்கவேண்டும் என எண்ணுபவர்கள்.

ஸ்ரீவைகுண்டத்தில் எப்பொழுதும் எம்பெருமானை ஸேவித்தும் கைங்கர்யம் செய்துகொண்டும் இருப்பவர்கள் '**நித்ய சூரிகள்**' என அழைக்கப்படுவர்.

இப்படிப்பட்ட நித்யசூரிகளில் முதன்மையானவர்கள் அனந்தன், (ஆதிசேஷன்), கருடன், விஷ்வக்ஸேனர் என மூவர் ஆகும். திருவனந்தாழ்வாருக்கே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் '**ஆதிசேஷன்**' என்று திருநாமம் வழங்கப்படுகிறது. 'ஆதிசேஷன்' என்கிற இத்திருநாமமே இவருடைய தனிச் சிறப்பையும், ஏற்றத்தையும் காட்டுகிறது.



# 1.ஆதிசேஷன்

ஆதிசேஷன் என்றால் எம்பெருமானுக்குத் தொண்டுபட்ட அடியவர்களில் முதல்வர் (ஆதி – முதல்வர்) எனப் பொருள். எல்லா ஜீவாத்மாக்களுமே ஸ்ரீமந் நாராயணனுக்கே அடிமைப் பட்டவர்கள் ஆவர். இவ்வாறு எல்லாவற்றுக்கும் பிரதானமான அடியனாய் இருப்பவன் ஆதிசேஷனாவான். '**ஆதிசேஷ:**' என்ற சொல் இருபதமாய் ஆதி என்பதற்கு

**'ஆப் நோதிஹவை ஸர்வாந் ஆதிச்ச பவதிய ஏவ வேத'**

என்ற மாண்டுக்ய உபநிஷத் வசனத்தில் '**ஆதி**' ஶப்தத் திற்கு '**ஸர்வப்ரதானம்**' என்று, அருளியிருக்கிற படியாகையால் 'எல்லாவற்றுக்கும் ப்ரதானம்' என்கிறபடி, '**சேஷ**' என்பதற்கு வேதார்த்தஸங்க்ரஹத்தில் ஸ்வாமி எம்பெருமானார் அருளியபடி '**பரகதாதி சயாதா, நேச்சயொ பாதேயத்வ மேவ யஸ்ய ஸ்வரூபம் சேஷ:**' என்பதைக் காணலாம்.

(மற்றொருவனிடத்திலிருக்கும் மகிழ்ச்சியாகிற மேன்மையை உண்டுபண்ணவேண்டும் எனும் எண்ணத்துடன் அங்கீகரிக்கப் படுகையே எவனுக்கு ஸ்வரூபமாக இருக்கிறதோ அவன் சேஷனாவான் என்கிறபடி)

எவன் ஒருவனுக்கு அடிமைப்படுகிறானோ அவனை '**சேஷி**' என்பர். அடிமை செய்பவனை '**சேஷபூதன்**' என்றும் கூறுவர். சேஷனுக்கும், சேஷியான பெருமானுக்கும் உள்ள சேஷ, சேஷி பாவம் விசிஷ்டாத்வைத கோட்பாடுகளில் ஒன்றாகும். இது இராமானுஜரால் ப்ரஸித்தமாக்கப்பட்டது.

வேதாந்த குரு பரமபத ஸோபாதனம் என்றொரு க்ரந்தம் அருளிச்செய்துள்ளார் ஸ்ரீதேசிகன். அதில் திருவனந்தாழ்வானைப் பற்றி மிகவும் அற்புதமாக வர்ணிக்கிறார். ப்ரஹ்மாண்டங்களில்

உள்ள திருப்பாற்கடல்களை எல்லாம் அடுக்கி விரித்தாற்போல், சுத்தமான வெண்மை நிறத்தில், ஸ்ரீவைகுண்டத்தில் விளங்குகிறார் அநந்தன். அந்தந்த சமயத்துக்கு ஏற்றபடி வடிவங்களை எடுத்துக்கொண்டு, சகலவிதமான கைங்கர்யங்களையும் செய்து வருவதால் - சேஷன் செய்யவேண்டிய அடிமைத் தொழிலைச் செய்து வருவதால் - **சேஷன்** என்றே திருநாமம் பெற்றவர்.

ஆதிசேடன் - கத்ருவின் குமரன் - நாகன் - மந்தரகிரியை பெயர்த்துத் தேவர்க்குதவியவன் - **அமுதகலசம் கருடன் கொண்டு வர, அது மறைந்தது கண்டு** அவ்விடமிருந்த தருப்பையை அமுதம் **உண்ணும்** விருப்பத்தால் நக்கி நா பிளவுப்பட்டவன். பிரமன் கட்டளையால் பாதாளத்தில் உள்ள நாகர்களுக்குத் தலைமை பூண்டு பூமியைத் தாங்கவும், கருடனிடம் சிநேகமும் பெற்றவன். பிருகு சாபத்தால் பலராமன், **இலக்குமணன்** முதலியவராகப் பூமியிற் பிறந்தவன். ஒரு காலத்தில் வாயு தேவனிடம் தன் பலம் அதிகம் என்னுமாறு கொள்ளத் தேவர் யுத்தஞ்செய்தல் தகாது என்றனர். ஆதிசேடன் நாம் இருவரும் மேருக்கருகிற் செல்வோம் என்றுச் சென்று தேவர் சொற்படி சேடன், நான் மேருவின் சிகரத்தை கவித்துக்கொள் கிறேன். நீ அச்சிகரத்தை பெயர்த்துவிடுக எனச் சபதங் கொண்டனர். வாயு தன் முழு வலிமையால் முயன்றும் கூடாத தென்று தேவர், சேடனை சிறிது தலை தூக்க வஞ்சிக்க, வாயு அச்சமயத்தில் மலையின் சிகரத்தை கவர்ந்து கடலில் இட்டனன். அது **இலங்கைத் தீவென்பர்**. பாற்கடலில் விஷ்ணு மூர்த்திக்கு படுக்கையாகவும் பரமபதத்தில் ஆசனமாகவும், நடந்தால் குடையாகவும் உதவுவான் இவன். (அபிதான சிந்தாமணி)

## 2.ஆதிசேஷனின் தோற்றம்

ஆதிசேஷன் விஷ்ணுவின் அம்சமாய் பாதாளத்திற்குக் கீழே இருப்பவர். பாம்பினங்களின் அரசர் பாதாள உலகின் தலைவர் அவரை சித்த யோகிகள் '**அனந்தன்**' எல்லையற்ற மஹிமை கொண்டவர் என்பர். அனைத்து கலைகளையும் அறிந்தவர். ஆயிரம் பணங்கள் (முகங்கள்) கொண்டவர். அவற்றில் ஸ்வஸ்திக வடிவமாக ரேகைகள் படிந்து இருக்கும். ஆயிரம் பணங்களிலும் அமைந்த நவரத்னங்களின் பிரகாசத்தால் எல்லா திக்குகளிலும் இருள் நீங்கப் பெற்று ஒளி வீசிக் கொண்டு உலகின் நன்மைக்காக அசுரர்களின் வீர்யத்தை அடக்கி வைத்துள்ளார். மாலை, மகுடம், முதலியன தரித்துக் கொண்டு நேத்ரங்கள் சற்று சிவந்திருக்க அற்புத தோற்றத்தை அளிக்கிறார். நீலாம்பரதாரியாய், வெள்ளை மாலைகள் அணிந்திருக்கும் ஆதிசேஷனின் தோற்றம் காண்பதற்கு ஆச்சர்யமாக இருக்கும்.

எல்லா தேவதைகளாலும் துதிக்கப்பட்ட சேஷன் ப்ரஹ்மனின் ஆணைப்படி பாதாளத்தில் இருந்துக்கொண்டு தனது ஆயிரம் தலையினால் அகில உலகையும் தாங்கிக்கொண்டு இருக்கிறான். நாகலோக கன்னிகள் அவரது திருமேனியில் சந்தனம் பூச, அதன் நறுமணம் எல்லா திக்குகளிலும் பரவி மணம் வீசுகிறது. ஆதிசேஷனின் கண்கள் எப்போதும் சுழன்று கொண்டே இருக்கும். அவனுடைய நீல உடலும், பணங்களால் கண்ணைக் கூசச் செய்யும் நிறமும், அவனை மேகங்களால் அழகுற செய்யப்பட்ட மற்றொரு பெரியமலை போல் தோன்றச் செய்கிறது. இந்த பூமி முழுதும் அவனுடைய கிரீடம் என்றும், அவன் கொட்டாவிவிடும்போது பூமியும், ஜலமும் அசைந்து நடுங்குகின்றன என்றும் சொல்லப்படுகிறது.

எம்பெருமான் பிராட்டியோடு திரை போட்டுக் கொண்டு யோக நித்திரை செய்யும்போதும். ஏகாந்தத்தில், கிட்டி இருந்து

அடிமை செய்பவர் ஆதிசேஷன். இவரது ஸ்ருஷ்டியை எம்பெருமான் செய்யும்போது தான் **'ஸர்வகந்த:'** என்றிருப்பதால் நல்ல மணம் நிறைந்தவராகவும், தம் திருமேனியின் மென்மைக்குத் தக்கபடி குளிர்ச்சி நிறைந்தவராகவும் இருக்கும்படி செய்து, தமதாக்காகிக் கொண்டு மகிழ்கிறார். அனந்தன், திருபாற்கடல் கடையப்பட்டபோது மந்த்ர மலையை மத்தாக பயன்படுத்து வதற்காக பெயர்த்துக்கொண்டு வந்தவர். நாகங்களுக்குள் உயர்ந்த இடம் வகிப்பவர். இவரே பூமியைத் தாங்குகிறார். இவர் பாதாள உலகிற்கு எப்படி வந்தார் என்பதைப் பின்னால் ஆராய்வோம். பிரஜாபதிகளில் ஒருவராக மதிக்கப்படுகிறார். பாஞ்சராத்ர ஆகமத்தின்படி அனந்தன், மஹாவிஷ்ணுவின் நான்கு வ்யூகங்களில் ஒருவனான ஸங்கர்ஷணர் எனப்படுவர். ஞானம், பலம் இவைகளின் இருப்பிடம்.

அனந்தன் மேல் ஸயனித்திருக்கும் விஷ்ணுபகவான் காலத்தின் அதிபதி என்பதை குறிக்கிறது. **'சேஷன்'** என்றால் ஒருவருக்கு அடிமைப்பட்டவன், கீழ்ப்பட்டவன் எனப் பொருள் கொள்ளவேண்டும்.

## 3.ஆதிசேஷனின் உயர்வு

நித்யசூரிகள் பலர் இருக்கும்போது, ஆதிசேஷனை மட்டும் ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரையில் ஆசார்யனாக அவதரித்ததாகச் சொல்வதற்கு காரணம் உண்டு. **'ப்ரக்ருஷ்டவிஜ்ஞாந பலைகதாமா'** என்று ஆளவந்தார் அருளியபடி, நித்யசூரிகளிலே ஆதிசேஷன் மட்டுமே ஞானத்திற்கு இருப்பிடமாக போற்றப் படுகிறான். மற்ற நித்யசூரிகளுக்கு இப்பெருமையில்லை.

நித்யசூரிகளில் ஒருவரான கருடாழ்வானும் எம்பெருமா னுக்கு அடியவனாகவும், தோழனாகவும், வாகனமாகவும், ஆசனமாகவும், கொடியாகவும், விதானமாகவும் பல வடிவங்களில் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்பவர்.

**கருடனை விட உயர்வு:**

கருடாழ்வானும், திருஅனந்தாழ்வானுக்கு இணையானவன் என்று சொல்லப்படும் போது கருடாழ்வானை, திருவனந்தாழ்வானை விட குறைவாக சொல்வதற்கு இடமுண்டு.

எம்பெருமானுக்கு சகலவிதமான அடிமைகளையும் செய்வதில் அனந்தாழ்வாரும், கருடாழ்வாரும் சமமானவர்கள் தான். ஆளவந்தார் ஸ்தோத்திர ரத்தினத்தில் **'தாஸ: ஸகா'** என்கிற சுலோகத்தில் கருடனுடைய கைங்கர்யத்தையும் **'நிவாஸ சய்யாஸன'** என்கிற சுலோகத்தில் அனந்தனுடைய கைங்கர் யத்தை பற்றியும் அருளிச்செய்கிறார். ஆனால் ஆழ்வார்களுடைய பாசுரங்களைப் பார்க்கும் போது திருவனந்தாழ்வானுக்கே ஏற்றம் காணப்படுகிறது. ஆழ்வார் பாசுரங்களில் கருடனுடைய எல்லா விதமான கைங்கர்யங்களும் குறிப்பிடப்படவில்லை.

கருடாழ்வாருக்கு இரண்டு அபசாரங்கள் நேரிட்டதாக புராணங்கள் கூறுகின்றன. ஒன்று பகவத் அபசாரம், மற்றொன்று பாகவத அபசாரமாகும். இது போன்று அனந்தாழ்வானுக்கு அபசாரம் ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை. **'விண்ணுளார் பெற்மாற்கடிமை செய்வாரையும் செறும் ஐம்புலனிவை'** என்கிற பாசுரத்தில் வ்யாக்யானமாக நித்யசூரிகளையும், இந்தி ரியங்கள் நலிவதுண்டு என்று எடுத்துகாட்டும் இடத்தில் நம்பிள்ளை; **'திருவடியையுமகப்பட எனக்கென்ன பண்ணிற்றே'**, ஸுமுகனென்ற ஸர்ப்ப விசேஷனம் திருவடிகளிலே சென்று கிட்ட, பெரிய திருவடி ஓடிச்சென்று, **'எனக்கு ஆமிஷார்த்த மாயிருக்கிற இத்தை கைக்கொண்டு நோக்குவதே'** என்று வெறுத்து **'தேவரீரையும் நாச்சிமாரையும் நெடுங்காலம் ஸஹித்துக் கொண்டு திரிந்தேன்: நான் என் பெற்றேன், என்றானிறே'** என்கிறார்.

கருடனுக்கு இரையாக இருந்த சுமுகன் என்ற பாம்பு எம்பெருமானை சரண்புக, பெருமானும் அபயம் அளித்து விட்டான்.

அங்கு வந்த கருடன் '**தேவரீரையும்**' நாச்சிமாரையும் இத்தனை காலம் சுமந்து திரிந்ததற்குப் பலன் இதுதான் போலும்! '**என் உணவை பறித்து விட்டீரே**'! என்று பல்லக்கு தூக்கும் கூலியாள் போல் அஹங்காரத்துடன் பேசிவிட்டான். கருடனின் கர்வத்தையடக்க எம்பெருமான் '**நீயா என்னைத் தூக்குகிறாய்**' '**என் இந்த வலக்கையை மட்டும் தூக்குவாயா**'? என தன் வலத் திருக்கரத்தை கருடனின் தோளில் வைக்க கருடன் பாரம் தாங்காமல் மூர்ச்சித்தான். பின் அஹங்காரம் தெளியப்பெற்று சுமுகனுடன் நண்பனானான். இதை முதல் திருவந்தாதி 80ஆம் பாசுரத்தில் பொய்கையாழ்வாரும், நான்முகன் திருவந்தாதி 74இல் திருமழிசையாழ்வாரும் பெரியதிருமொழி 5-8-4 இல் திருமங்கையாழ் வாரும் பகவதபசாரம் கருடனுக்கு ஏற்பட்டதாக அருளிச்செய் துள்ளனர். திருவனந்தாழ்வானுக்கு இது போன்ற சரித்திரம் இல்லை.

மேலும், மேல் சமுத்திரத்திலே ருஷபம் என்கிற பர்வதத்தின் மேலே வசியா நிற்பவளாய், ஜ்ஞாநாதிகையாயிருக்கிற சாண்டிலீ என்கிற பாகவதையைச் சென்று கண்டு அபிவாதநாதிகள் பண்ண, அவள் அத்யாதரத்தோடே மிகவும் சத்கரிக்க, அநந்தரம் விஶ்ராந்த யாய் சயிக்கிறவளவிலே '**இப்படி விலக்ஷணையாயிருக்கிற, இவள் ஒரு விலக்ஷண தேசத்திலே வஸிக்கப் பெற்றதில் லையே**' என்று பெரியதிருவடி விசாரித்து, இவளை இங்கு நின்றும் நாமொரு திவ்யதேசத்திலே கொண்டு போய் வைக்கக் கடவோம் என்று நினைத்துக் கிடக்கச் செய்தே அந்த பாகவதை இருந்த தேசத்தைக் குறைய நினைத்த அந்த அபராதத்தாலே சிறகுகள் முதிர்ந்து விழ, இத்தைப் பொறுக்க வேணும் என்று அவளை அநுவர்த்தித்து, அவளனுக்ரஹத்தாலே அவ்வபசாரம் நீங்கி முன் போல் ஆனார். ஆக இது போல் அனந்தாழ்வானுக்கு ஒரு சரித்திரமும் கிடையா. இந்த சரித்திரத்தை ஸ்ரீவசன பூஷணத்தில் பிள்ளைலோகாச்சாரியார் காட்டியுள்ளார். '**இவ்விடத் தில் வைநதேய விருத்தாந்தத்தையும், பிள்ளை பிள்ளை யாழ்வானுக்கு ஆழ்வான் பணித்த வார்த்தையும் ஸ்மரிப்பது**,' என்றருளிச்செய்துள்ளார்.

## 4.பாதாள லோகத்திற்கு சென்றது

கஶ்யப முனிவருக்கு இரு மனைவியர் இருந்தனர். வினதை, கத்ரு. இருவருக்கும் ஒரு சமயம் உச்சைஸ்ரவஸ் என்கிற இந்திரனின் குதிரையின் வாலில் உள்ள ரோமங்கள் எந்த நிறத்தில் இருக்கும் என்கிற சர்ச்சை எழுந்தது. கத்ரு கறுப்பு வர்ணம் என்றுச் சொன்னதை வினதை மறுத்தாள். இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். யார் சொல்வது நிருபணமா கிறதோ அவருக்குத் தோற்றவர் அடிமை என்பதேயாகும். கத்ரு தன் சொல்லை நிருபணம் செய்ய தன் நூறு (100) நாக பிள்ளைகளை அந்த உச்சைஸ்ரவஸ் எனும் குதிரையின் வாலில் அதை மூடியவாறு தொங்குமாறு ப்ரார்த்தித்தாள். சில பிள்ளைகள் ஒப்புதல் தெரிவித்தனர். அனந்தன் முதலான சில ஸர்ப்பங்கள் இந்த தகாத செய்கைக்கு ஒப்பவில்லை. இதனால் கோபம் அடைந்த கத்ரு, பேச்சை மதியாத பிள்ளைகள் ஜனமேஜயன் நடத்தும் ஸர்ப்ப யாகத்தில் விழுந்து நசிக்கட்டும் என சபித்தாள். அச்சமயம் அனந்தன் வீட்டை விட்டு கிளம்பி, பத்ரி, கந்தமாதனம் போன்ற புனித ஸ்தலங்களுக்கு சென்றான். அச்சமயம் ப்ரம்மா அவன்முன் தோன்றி, கீழ் லோகம் சென்று உலகத்தை அவனுடைய ஆயிரம் பணங்களால் (முகங்களால்) தாங்குமாறு கூறினார். மேலும் கருடன் அவருக்கு தேவையான உதவிகள் யாவையும் செய்வார் என்றும் கூறினார். அதனால் தான் கருடனின் உடலை அலங்கரிக்கும் எட்டு சர்ப்பங்களாய் அனந்தன் விளங்குகிறான். இதை ஸ்ரீரங்கத்தில் உள்ள அம்ருத கலச கருடன் ஸந்நிதியில், திரு ஆபரணமாக ஸ்ரீ கருடாழ்வாருக்கு, அநந்தனையே சூடிக்கொண்டு இருப்பதை ஸேவிக்கலாம். கருடாழ்வார் எப்படி நாகங்களை ஆபரணமாக தரிக்கின்றாரோ அது போலவே அனந்தாழ்வாரும் தன் இடக்கையில் கருடாழ்வாரை வளையமாக கொண்டுள்ளார் என்பதை காஶ்யப ஸம்ஹிதையிலும் ஸ்ரீ தேசிகன் கருட பஞ்சாசத்திலே காட்டியுள்ளார்.

ஒரு சமயம் நாரத முனிவர் பாதாளத்திலிருந்து ஸ்வர்கத்திற்கு வந்து, தேவ சபையில் இந்திரனை நோக்கி, 'பாதாள லோகங்கள் சொர்க்கத்தைக் காட்டிலும் மிகவும் அழகாக இருப்பதாயும், அங்குள்ள நாகஜாதியினர் அணிந்துள்ள ஆபரணங்களிலுள்ள திவ்ய ரத்தினங்கள் மிக பிரகாசமாகவும், மிக மகிழ்ச்சியளிப்பவையாகவும் விளங்குவதாயும், தைத்ய தானவருடைய பெண்கள் மிக அழகுடனும், பகலில் சூரிய கிரணங்கள் வெப்பம் இல்லாமல் வெளிச்சத்தை மட்டும் வீசிக் கொண்டும், அது போலவே சந்திரனும் வெளிச்சத்தை மட்டும் தருவதாயும், இஷ்டத்திற்கு உணவுகளையும் பானங்களையும் அருந்தி காலம் செல்வதே தெரியாமல் இருக்கிறார்கள் என்றும் ரம்யமான நதிகளும், மகாவினோதமான உத்யான வனங்களும், குயில் முதலான பறவைகளின் கீதமும், ஆடல் பாடல்களும் இன்னும் வேண்டிய போக பாக்யங்களை அங்குள்ளோர் எப்போதும் சம்பூர்ணமாக அனுபவிக்கின்றனர்' என்றும் கூறினர்.

இப்பேற்பட்ட பாதாளத்துக்குக்கீழே முப்பதாயிரம் யோஜனை உள்ள இடத்தில் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் தமோ குணாசிரயமான திருமேனியுடன் விளங்கும் ஆதிசேஷன் எழுந்தருளியிருக்கின்றார். அவர் அனந்தன் என்ற திருநாமத்திலே புகழப்பட்டு, தேவர்களாலும், முனிவர்களாலும் பூசிக்கப்படுகிறார். மேலும் ஸ்வஸ்திகம் என்ற ரேகையினால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரம் திருமுடிகளோடு கூடி, அந்த திருமுடிகளிலுள்ள திவ்ய ரத்னகாந்திகளாலே திக்குகளை ஒளிரச் செய்து கொண்டும், லோகநலன் கருதி அசுரர்கள் அனைவரையும் சக்தி ஹீனராக்கிக் கொண்டிருக்கும் திருவிழிகளையுடையவராய், எப்போதும் கிரீட வரிசைகளைத் தரித்து, முடியில் அக்னி ஜ்வலிக்கும் வெள்ளி மலையைப் போலவும், நீளமான பட்டாடையையும், வெண்மையான முத்து மாலைகளையும் தரித்து, ஆகாய கங்கை மேலே விழவும் இடையிலே மேகஞ்சூழவும் இருக்கும் கைலாய மலையைப் போல் விளங்குகிறார்.

திருக்கைகளில் உலக்கையும், கலப்பையும் தரித்தவராய் காந்தி, வாருணி என்ற தேவிகள் உபாசிக்க அவர் வீற்றிருக்கிறார். அவரது முகங்களிலிருந்து பிரளய காலத்திலே விஷாக்கினிச் சுவாலைகளோடு கூடிய காலாக்னிருத்திரன், ஸங்கர்ஷண மூர்த்தியாலே ஆவேசிக்கப்பட்டு உண்டாகி ஜகத்தையெல்லாம் நாசஞ்செய்வான். அந்த ஆதிசேஷன் இந்த பூமி மண்டலத்தை தன் திருமுடிகளில் ஓராபரணத்தைப் போலத் தரித்துக் கொண்டு பாதாளத்தின் அடியில் சகல தேவதைகளாலும் பூஜிக்கப்படுகிறார். அங்குள்ள பகவானின் பலத்தையும், சக்தியையும் வர்ணிக்க தேவர்களால் இயலாது. த்வீப சமுத்திர பருவாதிகளோடு கூடிய இந்த பூமண்டலம், ஆதிசேஷனின் திருமுடியில் ஒரு பூமாலைப் போல் விளங்குகிறது. அந்த அநந்தன் மதத்தினால் கண்கள் சுழலக் கொட்டாவி விடுவாரானால் இந்த பூமி முழுதும் நடுங்கும். தேவ, தானவ, யஷ, கந்தர்வ, சித்த சாரணாதிகளும், அவருடைய குணங்களின் முடிவை காணமாட்டாராகையால், 'அநந்தன்' என்ற திருநாமம் உண்டாயிற்று. (விஷ்ணு புராணம்)



## 5.விஷ்ணுவைத் தாங்கும் அநந்தன்

நாகலோகத்தில் போகவதி என்ற பட்டிணம் அது நாகர்களுக்கு தலைநகரம். ஸர்ப்பங்கள் ஒன்று சேர்ந்து அநந்தனைத் தங்களுடைய அரசனாக இருந்து ரக்ஷிக்குமாறு கேட்டது. அநந்தனோ, ஞான யோகத்தைப் பெற விரும்பினான். ஆகவே அவர்கள் கோரிக்கையை ஏற்க முடியாதிருப்பதைத் தெரிவித்தான்.

'நானோ சுகபோகங்களைத் துறந்து ஞான யோகத்தை அடைய விருப்பம் கொண்டுள்ளேன். ஆயினும் என் சகோதரன் வாசுகியை உங்கள் மன்னனாக முடிசூட்டி வைக்கிறேன். அவன் உங்கள் நலன்களை நன்கு கவனித்து வருவான்' என்றான்.

அவர்களும் அதற்கு இணங்க வாசுகியை ஸர்ப்பராஜனாக முடிசூட்டி விட்டு அநந்தன் கானகம் வந்தான். அங்கே தவத்திற் சிறந்த முனிவர்களை அண்டி அவர்களிடம் புராணம் முதலான கேட்டு புத்தி தெளிந்து பரந்தாமனைக் குறித்துத்தவம் இயற்றலானான். அநந்தன் செய்த தவத்தால் மகிழ்ச்சியுற்ற மாதவன் அவன் முன்பு தோன்றி, 'அன்பா, நீ வேண்டும் வரம் யாது?' எனக் கேட்டார்.

அநந்தன் பரந்தாமனை வலம் வந்து வணங்கி 'ப்ரபோ! தங்களிடம் எனக்குள்ள பக்தி என்றும் குன்றாதிருக்க அருள வேண்டும். தங்கள் சமீபத்திலேயே எப்போதும் இருக்க என் உள்ளம் விழைவதால், தங்களுக்குப் பாயாக இருக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிட்டச் செய்ய வேண்டும்' என்று பிரார்த்தித்தான்.

மாதவனும் அவன் கோரிக்கைகளை மனமகிழ்ச்சியுடன் அருளினார். அநந்தன் அன்று முதல் எம்பெருமானுக்குப் பாயானான்.

அநந்தனைப் பாயாகக் கொண்டு நாராயணன் நூறு கல்ப காலம் யோக நித்திரையில் ஆழ்ந்தார். பக்தியொடு அநந்தன் அசையாது இருந்து பகவானுடைய நித்திரைக்குப் பங்கம் வராது

கவனித்து வந்தான். நித்திரை தெளிந்து எழுந்த நாராயணன் அநந்தனுடைய பணியைக் கண்டு அளவற்ற சந்தோஷம் கொண்டார்.

**'அநந்தா, உன் பக்தியை மெச்சுகிறேன். இத்தனை காலம் என்னை சுமக்க நேர்ந்தது பற்றிக் கவலைப்படாதே. உனக்கு என்ன வரம் வேண்டும் கேள், தருகிறேன்'** என்றார்.

'ப்ரபோ, நான் கேட்பது பற்றிக் கோபம் கொள்ளக் கூடாது. நூறு கல்ப காலம் நித்திரை கொண்டாற் போல் எப்போதும் அடியேன் உங்களுக்கு கைங்கர்யங்கள் செய்துக்கொண்டு இருக்க அருளவேண்டும் என அநந்தன் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆழ்வார்கள் பாடியபடி **'சென்றால் குடையாம்'** என்கிறபடி திருவனந்தாழ்வான் ஸ்வரூபம். (ஸ்ரீமச்சபுராணம் - 'திராவிடவியாசர்')

**பாறையோடு மிதந்த பாலன்:**

இரணியன் தன் மகனான பிரகலாதனை பாறையுடன் கட்டிக் கடலிலே எறிந்து விடுமாறு உத்திரவு இட்டான். காவலர் களும் பிரகலாதனை நீரில் அழுத்தி மூழ்கடித்தனர். பிரகலாதன் ஹரியை தியானித்தப்படி நிம்மதியாய் படுத்திருந்தான். அச்சமயம் *யக்ஷன் மீது அமர்ந்தவாறு* இந்திரன் பிரகலாதன் முன்பு தோன்றி **'உனக்கு என்ன காரணத்தால் இத்தன்மை வந்தது'**? என்று கேட்டான். அதற்கு பிரகலாதன் பதில் அளித்தான். **'எதுவும் மனுஷ்யயத்தனத்தில் இல்லை என்பதாகிறது. ஆண்டவன் எவ்வாறு விரும்புகிறானோ அவ்வாறே நடக்கிறது'** என்றான். பிரகலாதன் உள்ளப் பாங்கை அறிந்த இந்திரன் மகிழ்ந்து அவன்கட்டுக்களை அவிழ்த்து விட்டான். அவ்வமயம் வருணதேவன், **'ஆதிசேஷனைப் பாயாகக் கொண்டு அவன் மீது துயிலமர்ந்திருக்கும் எம்பெருமானை நீ தரிசனம் காண்பது போல் நானும் தரிசனம் செய்ய விரும்புகிறேன் எனக்கு அருள வேண்டும்'** என்று பிரார்த்தித்தார். கரையேறிய பிரகலாதன் பக்தியோடு பரந்தாமனைத் தியானிக்க, அவரும் அவனுடைய பிரார்த்தனைக்கு இணங்கி, ஆதிசேஷன்மேல் பள்ளி கொண்டவனாய் சங்கு சக்ரதாரியாய் பரசன்னமானார்.

## 6.எம்பெருமானின் நிலைகள்

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனுக்கு பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என ஐந்து நிலைகள் உள்ளதாக சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு உள்ளன. பரத்வ நிலையில் நித்ய முக்தர்களும், வ்யூஹ நிலையில் சனகாதி முனிவர்களும், இந்திராதி தேவர்களும், அந்தர்யாமி நிலையில் ரிஷிகளும், விபவ நிலையில், அதாவது இராம, கிருஷ்ண அவதாரங்களின் போது, அக்காலத்தில் உள்ளவர்களும், அர்ச்சையில் எக்காலத்திலும், எத்தேசத்திலும் உள்ளவர்கள் எந்நேரமும் வழிபடவும் எம்பெருமான் சேவை சாதிக்கிறான். இதையே பிள்ளை லோகாச்சாரியார் பாட்டுக்கேட்குமிடம், கூப்பிடு கேட்குமிடம், குதித்தவிடம், வளைத்தவிடம், ஊட்டுமிடம் என்றருளிச் செய்துள்ளார். பாட்டு கேட்குமிடம் என்பது – நித்யசூரிகளின் சாம கானத்தை கேட்டுக்கொண்டிருக்கும் பரமபதம். கூப்பிடு கேட்குமிடமாவது - பிரம்மாதி தேவர்களுடைய கூக்குரல் கேட்கும்படி திருப்பாற்கடலிலே யோக நித்திரை செய்யும் நிலை. குதித்தவிடமாவது - நல்லோரைக் காக்கவும், தீயவர்களை அழித்து தர்மத்தை நிலை நிறுத்தவும் இப்பூவுலகில் எடுக்கும் அவதாரங்கள். வளைத்தவிடம் என்பது - மலையாளர் வளைப்பு போல் இட்ட அடி பேராமல் வளைத்துக்கொண்டு இருக்கிற அர்ச்சாவதாரமாகும். ஊட்டுமிடமாவது - உபாஸகர்களுடைய இதயக்கமலத்திலிருந்து தன் அழகினை உண்பிக்கும் அந்தர்யாமித்வமுமாகும்.

இவ்வைந்து நிலைகளையும் அழகியமணவாளப் பெருமாள்நாயனார் ஒரு அரசனுடைய நிலைக்கு ஒப்பிடுகிறார். அதாவது: எப்படி ஒரு ராஜா தன் ராஜதர்பாரில் அமர்ந்திருப்பானோ அது – பரமபதம். ராஜா மந்த்ராலோசனை செய்வதும் - திருப்பாற் கடலில் உள்ள எம்பெருமானின் வியூகத்துக்கு ஒப்பாகவும், மக்களை காக்க விலங்குகளை வேட்டையாடும் அரசனின் நிலையை, மக்களைத் துன்புறுத்தும் அசுரர்களை அழிக்க

எம்பெருமான் எடுத்த விபவ அவதாரங்களுடன் ஒப்பிடுகிறார். அரசனானவன் மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்கு செல்வது– நம் உள்ளத்தில் அந்தர்யாமியில் இருக்கும் எம்பெருமானின் நிலை. ராணியோடு நந்தவனத்தில் உகந்து இருப்பது– அர்ச்சையாகப் பிராட்டிமாருடன் பல இடங்களில் எழுந்தருளியுள்ளது என்றும் அருளிச்செய்துள்ளார். எம்பெருமானுடைய எல்லா நிலைகளிலும் ஆதிசேஷன் ஸர்வ கால, ஸர்வாவஸ்தைகளிலும் கைங்கர்யங்கள் செய்கிறான்.



## 7.பரமபதத்தில் ஆதிஷேஷனின் நிலை

**பரமபதம்:**

எல்லாவுலகிலும் புகழ்ப்பெற்றதாய் நித்யசூரிகளாலும் முக்தர்களாலும் ஸேவிக்கப்படுகிறதாய், விஷ்ணுவுக்கு மிக இனிதாய், மங்களமாகவும், நவரத்னங்கள் பதிக்கப்பெற்றதான மதிள்களால் விளங்கும் படியாகவும், கோபுரங்களும், மண்டபங் களாலும், அலங்கரிக்கப்பட்டதாய், மங்களமானதான அரண்மனை களோடு பிரகாசிப்பதாய், பொன்மயமான மரங்களை உடைய தோட்டத்தையும், சந்திரனின் ஒளியையுடைய வெளுத்த விமானங் களால் எப்போதும் அப்ஸரஸுக்களால் ஸேவிக்க பெற்றதாய், கோடி சூர்ய ப்ரகாசமும், ஆயிரம் சந்திரன்கள் போன்ற ஒளியுள்ள புருஷர்களால் விளங்கா நிற்பதாய், பலவித கொடி, செடிகளாலும், ஏரியில் உள்ள அப்ராக்ருத பக்ஷிகளாலும், என்றும் நித்யாநந்த மென்றும், பேரின்பம் என்றும் பெயர் பெற்றதாயும், எவராலும் ஜயிக்க முடியாததும், தனக்கு மேலானதில்லாததாய் பேரின்பத்தை அளிப்பதாய், ப்ரம்மா முதலான தேவர்களால் புகமுடியாததாய், பக்தியுடையவருக்கு புக எளிதாய் **வைகுண்டம்** என்ற திருநாமமுடையதான நகரம் நித்யவிபூதியில் உள்ளது. அதில் அப்ராக்ருதமான அலங்காரங்கள் மற்றும் மணம் கமழ்வதாய் மதிமுக மடந்தையர்கள் நிறைந்ததாய், நித்யர்களும், முக்தர்களும் சூழப்பெற்ற திருமாமணிமண்டபம் உள்ளது.

**பரமபதத்தில் ஆதிசேஷன்** :

மண்டபத்தின் நடுவே நெடுந்தடக்கையனாய், மஹா பலமுடையவனாய், ஆயிரம் படங்களையுடையவனாய், தோஷமற்ற ஒளியையுடையவனான திருவனந்தாழ்வான் எழுந்தருளியிருக்கிறான். அப்பேற்பட்ட அநந்தாழ்வானின் மேலே, தடக்கையனாய் சங்கு சக்ரதரனாய், தாமரையிதழ் போன்ற திருக்கண்களை உடைய கோடி மன்மத அழகுடைய, உலகை மயக்கும் திருவாபரணங்

களால் அலங்கரிக்கப் பெற்றவனாய், பீதாம்பரத்தை தரித்து எப்பொழுதும் ஸ்ரீதேவி, பூமி, நீளா தேவிகளோடு கூடிய பரமேஶ்வரானாய், நித்ய முக்தர்களால் ஸேவிக்கப்படும் ஸர்வ வ்யாபியான பரமபதநாதன் பேரின்பத்துடன் எழுந்தருளியுள்ளான்.

இவ்வாறு **'இருந்தால் சிங்காசனமாம்'** என்ற ஆழ்வார் வாக்குப்படி எம்பெருமான் பரமபதத்தில் அடியவர்களோடும், தேவிமார்களோடும் அமர்ந்திருக்கும் நிலையில் ஆதிசேஷன் சிம்மாசனமாக இருந்து கைங்கர்யங்களை செய்கிறான்.

**வியூஹம்** :

எம்பெருமான் அசுரர்களாலும், அரக்கர்களாலும் வருத்தப்பட்டவர்களான பிரம்மன் முதலான தேவர்களுடைய துயர ஒலி கேட்பதற்காக பரமபதம் இவ்வண்டத்துக்கு வெகு தொலைவில் இருப்பதால், இவ்வண்டத்துக்குட்பட்ட திருப்பாற் கடலிலே உறங்குவான் போலே யோகு நித்திரைசெய்து, ஆத்மாக் களைக் காப்பாற்றும் வழியைச் சிந்தனை செய்து கொண்டிருக்கும் நிலையே வியுஹ நிலை எனப்படும். இந்நிலையில் ஆதிசேஷன் எம்பெருமானுக்கு 'புல்கு **மணையாம்**' என்கிறபடி படுக்கையாக இருந்து கைங்கர்யம் செய்கிறான். இவ்வியூகம் அவதாரங்களுக்கு விதை என்று சொல்லப் படுகிறது. அதாவது திருவனந்தாழ்வான் மேலே, பெரிய பிராட்டியுடன் இருக்கும்போது ஒரு சேதனன் என்று கூசவேண்டாமல், பெருமாளும், பிராட்டியும் இஷ்டப்படி துகைத்து விளையாடலாம் படியான பஞ்சணை போலேயிருக்கும்படி; ராஜாக்களின் அந்தப்புரத்தில் எப்படி கூனர், குறளர், அலிகள் முதலானோர் வேலைக்காரர்களாய் இருப்பது போலே இவனு மிருக்கிறபடி.

<u>விபவம்:(அவதாரங்கள்)</u>

**'பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம் |**
**தர்மஸம்ஸ்தா பநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே' ||**
**(கீதை 4-8)**

(சாதுக்களை ரஷிப்பதற்கும், துஷ்டர்களை அழிப்பதற்கும், தர்மத்தை நிலை நிறுத்துவதற்கும் எம்பெருமான் ஒவ்வொரு யுகத்திலும் அவதாரம் செய்கிறான்) என்கிறபடி, தேவர்களுடைய துயர ஒலியைக் கேட்டு துடித்துக்கொண்டு எழுந்திருந்து

**'ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதந:**
**நாகபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்'**

(பிராட்டியோடு கூடிய நாராயணனான இவனே திருப்பாற் கடலில் ஆதிசேஷ சயனத்தை விட்டு மதுராபுரிக்கு எழுந்தருளினான்)

என்கிறபடி திருப்பாற் கடலில் திருவரவணையில் இருந்து இப்பூவுலகில் வந்து அவதரிக்கும் நிலையே விபவமாகும். எம்பெருமான் நல்லர்களைக் காத்து, தீயவர்களை அழித்து, தர்மத்தை நிலை நாட்ட பல அவதாரம் எடுத்தான் அப்போதெல்லாம் ஆதிசேஷனும் உடன் அவதரித்து உசித கைங்கர்யங்களைச் செய்தான்.



## 8.மச்ச அவதாரம்

**பிரளய நீரிலே மிதந்த படகு (ஸ்ரீமச்ச புராணம்):**

பிரளய காலத்திலே, சத்தியவிரதன் ஹரியிடம் குறையாத பக்தி கொண்டு வந்ததன் பலனாக, ஸ்ரீமந்நாராயணன் வேதத்தைக் காக்கும் பொருட்டு அவனுக்கு நியமனம் தந்து இருந்தார். சப்த லோகங்களும் நீரில் ஆழ்ந்தன. நீர் ஒன்றைத்தவிர வேறேதும் காணப்படவில்லை. நீரின் பிரவாகத்தில் இழுத்துச்செல்லப்பட்ட சத்தியவிரதன் தன்னை நோக்கிப் படகு ஒன்று அசைந்து வருவதைக்கண்டான். அதை நெருங்கி அதனுள் ஏறிக்கொண்டான். அவனைப்போன்று யோகசக்தியால் நீரிலே அமிழ்ந்து விடாது வந்து கொண்டிருந்த உயிர்ப்பீஜங்களான ஓஷதிகளையும் படகில் ஏற்றினான். சத்தியவிரதன், தன்னையும் மற்றவரையும் காப்பாற்ற நாராயணனை வேண்ட, பரந்தாமன் முன்னர் அவனுக்குத் தரிசனம் தந்தவாறே ஒற்றைக்கொம்புடன் பிரம்மாண்டமான மச்சமாகத் தோன்றினார். பகவானைக் கண்டு வணங்கிய அரசன் கயிறு போன்று வலியுள்ள பாம்பு ஒன்றைக் கொண்டு படகை, மச்சமாகிய பகவானுடைய ஒற்றைக் கொம்பிலே இழுத்துக்கட்டினான். படகைக் கட்டியதும், காற்றினால் அது இங்கும் அங்கும் இழுக்கப் படுவது நின்று விட்டது. ஆம்! கட்டப்பட்டது ஆதிசேஷனல்லவா!

சென்னைக்கு வடக்கே சுமார் ஐம்பது மைலில் திருப்பதி செல்லும் மார்க்கத்தில் **'வேதபுரம்'** அமைந்துள்ளது. பரந்தாமன் வேதங்களை மீட்க எடுத்த மச்சரூபம் எடுத்த ப்ரபாவத்தை விளக்கும் ஆலயம் இவ்வூரில் அமைந்துள்ளது. இந்தியாவிலேயே நாராயணனுக்கு மச்சாவதார மூர்த்தியாய் ஆலயம் எழுப்பப் பட்டுள்ளது இந்த ஸ்தலத்தில் தான்.

## 9.கூர்ம அவதாரம்

எம்பெருமான், கூர்ம அவதாரம் எடுத்து, பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுக்கும் போது ஆதிசேஷன், பாற்கடலை கடையும் கடை கயிறானான். (பின்னால் பரிபாடலில் தெரிய வரும்)

## 10.வராக அவதாரம்

வராக அவதாரம் எடுக்கும் போதும் உடன் இருந்தான் ஆதிசேஷன் என்பதை நித்யகல்யாணப் பெருமாள், பிராட்டியுடன் எழுந்தருளியிருக்கும் திருவிடந்தையில், எம்பெருமானின் ஒரு திருவடியைத் தாங்குபவர் ஆதிசேஷனே என்பதை, அங்கு அவர் தன் பத்தினியுடன் பெருமானின் திருவடிக்குக் கீழே சேவை சாதிப்பதிலிருந்து அறியலாம்.

## 11.நரசிம்ம அவதாரம்

நரசிம்ம அவதாரத்தைச் சொல்லும் போது, அஹோபிலத்தில் நரசிம்ம பெருமாளுக்கு குடையாக இருப்பதைக் காணலாம்.

## 12.வாமன அவதாரம்

வாமன அவதாரத்தில் பெருமாள், உலகளந்த பெருமாளாக வடிவெடுக்கும் போது, அப்பெருமாளின் திருவடியை பாதாள லோகத்திலிருந்து ஆதிசேஷன் தாங்குகிறார் என்பதை அறியலாம்.

## 13.ராம அவதாரம்

ராம அவதாரத்தில், ஒரு க்ஷணமும் அவரை விட்டு அகலாது, அவருக்கு சேவை செய்வதற்காகவே ராமருக்கு பின் பிறந்த, லக்ஷ்மணனாக அவதரித்ததும் ஆதிசேஷனே.

## 14.கிருஷ்ணா அவதாரம்

அதுபோன்று கிருஷ்ணாவதாரத்திலும், கிருஷ்ணனுக்கு முன் பிறந்து, அண்ணனாக அவருக்கு அடிமை செய்த பலராமனும் ஆதிசேஷ அவதாரமே.

*லக்ஷ்மண, பலராம அவதாரங்களைப் பின்வரும் பகுதிகளில் அனுபவிக்கலாம்.*

## 15.அர்ச்சாவதாரம்

பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி நிலைகளில் எம்பெருமானை அனுபவிக்க இயலாத சம்சாரி சேதனர்களின் கண்ணுக்கு இலக்காகி,

**'பின்னானார் வணங்கும் சோதியாய்'**
**'தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே'**

என்கிறபடி அடியவர்கள் உகந்த ஒரு திரவியத்தை திருமேனியாகக் கொண்டு அருள்புரியும் எம்பெருமானுடைய அழகிய வடிவமே அர்ச்சாவதாரமாகும். **'ஸௌலப்யத்திற்கு எல்லைநிலம் அர்ச்சாவதாரம்'** என்கின்றபடி பரமசுலபனாய் அடியார்கள் உகந்த திருமேனியையும், அடியார்கள் உகந்த திருநாமங்களையும் கொண்டு, எம்பெருமானை அனுபவிக்க வேண்டும் என்று எண்ணும் போதெல்லாம் சென்று சேவிக்கலாம்படி இருக்கும் அர்ச்சாவதாரத்திலே எல்லா குணங்களும் பிரகாசிக்கின்றன. அடியவர்களுக்கு அருள்புரியவேண்டும் என்று எம்பெருமான் உகந்து எழுந்தருளியுள்ள இத்தலங்களை ஆழ்வார்கள் அனைவரும் போற்றிப் பாடியுள்ளனர். அவை **'திவ்யதேசங்கள்'** என வழங்கப்படுகின்றன. தம் அடியவர்களுக்காக எம்பெருமான் இறங்கி வந்த அர்ச்சாவதார நிலையில் ஆதிசேஷனும், படுக்கையாகவும், இருக்கையாகவும், இருப்பிடமாகவும் இருந்து தொண்டுகள் செய்கிறான். அவற்றுள் சிலவற்றைக் காணலாம்.

**திருவரங்கம்** :

**'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கத் திருப்பதி'**யானது **'கோயில்'** என்றே அழைக்கப்படுகிறது. இது எல்லா வைணவத் தலங்களுக்கும் முதன்மையானதும், வேர்ப் பற்றானதுமான திவ்யதேசமாகும். ஆழ்வார்கள் பதின்மராலும், அனைத்து ஆசார்யப் பெருமக்களாலும் கொண்டாடப்படும் திருத்தலமாகும். **'அணியரங்கத்தரவணையில் பள்ளி**

**கொள்ளும் அம்மானாக'** விளங்கும் அரங்கநாதனை அனுபவிக்கும் ஆழ்வார்கள், அவனுக்கு அணையாகத் திகழும் ஆதிசேஷனைக் கொண்டாடுகிறார்கள்.

**'வாய் ஓர் ஈரைஞ்ஞூறு துதங்கள் ஆர்த்த**
**வளை உடம்பின் அழல் நாகம் உமிழ்ந்த செந்தீ**
**வீயாதமலர்ச் சென்னி விதானமே போல்**
**மென்மேலும் மிக எங்கும் பரந்ததன் கீழ்**
**காயாம் பூமலர் பிறங்கல் அன்னமாலை,**
**கடி அரங்கத்து அரவணையிற் பள்ளிகொள்ளும்**
**மாயோனை மணத்தூணே பற்றி நின்று என்**
**வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே!**

பெருமாள் திருமொழி 1-2 பாசுரத்தில் குலசேகர ஆழ்வார், எம்பெருமானை அனுபவித்து அதனால் உண்டான மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக ஆயிரம் நாவினாலும் எம்பெருமானை துதிப்பவன், வெளுத்த திருமேனியை உடையவன். எதிரிகள் நெருங்க முடியாதபடி தபிப்பவன். அவன் வாயாலே இடைவிடாதே உமிழ் கிற செந்தீயானது எம்பெருமானுக்கு விதானம் போலே அமைந துள்ளது. இப்படி பரிவனான திருவனந்தாழ்வான்மேல் கண் வளர்ந்தருளுகின்றான் அரங்கநகரப்பன் என்றும், ஆதிசேஷன் எம்பெருமானுக்கு புல்கும் அணையாகவும், எதிரிகளிடமிருந்து எம்பெருமானை காப்பதற்காக இடைவிடாமல் ஆயிரம் நாவினாலும் தீயை உமிழ்ந்து தன்னுடைய பரிவைக் காட்டுபவனாகவும் கைங்கர்யம் செய்கிறான் என்று அருளிச்செய்கிறார்.

வால்மீகி முனிவருக்கு முன்னே வேத ஸ்ம்ருதி இதிகாச புராணங்களும் மற்ற க்ரந்தங்களும் இருந்தும் ப்ரம்மன் நேரில் வந்து இவருக்கு வாக்கு அளித்துச்சென்றார். சரஸ்வதி பூ உலகிற்கு இழிந்ததும் முதன் முதல் அப்போதே என்கின்றனர். கருத்தாவது முன்னிருந்த வாக்கில் ஒவ்வொரு குறையுண்டு. பிரபுவின் ஆஜ்ஞையைப் போலே வேதங்களும் ஸ்ம்ருதிகளும் புராணாதிகளுக்கும் எல்லோரையும் வசப்படுத்த வல்லமை

இல்லை. சில காவியங்கள் போன்ற சொற்கள் இருந்தாலும் ஸம்ஸார விஷயமாகி உயர்ந்த தத்துவ ஹித புருஷார்த்தங்களை அறிவிப்பவனவாகவில்லை. இதுக்குகந்த இக்ஷ்வாகுஎன்ற சக்கரவர்த்தியின் தவப்பயனாய் ப்ரம்மனால் அருளப்பெற்ற **'ஸ்ரீரங்கநாதன் என்ற அர்ச்சசை'**யை நீ ஏற்றிக்கொண்டு முதன் முதல் பூவுலகிற்கு எழுந்தருளியது ஒப்பற்றதாகும். முன் பல விபவ அவதாரங்கள் இருந்தும் **'நீயே முதல் அர்ச்சசை'** யாகத் தோன்றினவன். முழுபாரதமும் உன்னால் அநுக்கிரஹிக்கப் பட்டதும் முன்னே மேலுலகுப்போலே பின்னே கீழுலகும் யோக க்ஷேமம் நீ அளிப்பதும் அறிந்ததே:

**'ஏதேஹி ஸர்வலோகஸ்ய யோகக்ஷேமம் விதாஸ்யத:'** என்கிறார் வால்மீகி.

<u>திருமலை</u>

**'தானோங்கி நிற்கின்றான் தன் வேங்கடமே**
**வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு'**

என்கிறபடி விண்ணவர்க்கும் மண்ணவர்க்கும் நிதி போன்று அமைந்துள்ளது திருவேங்கடம். அங்கே

**'மந்திபாய் வடவேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்' என்றும் 'வானரமும் வேடுமுடை வேங்கடம்'**

என்னும் சொல்லுக் கேற்றபடி நித்யசூரிகளோடும் நித்ய ஸம்சாரிகளோடும் வேடுவர்களோடும், வானரங்களோடும் வாசியற அனைவருக்கும் முகம் கொடுத்துக் கொண்டு **'நிகரில் புகழாய்'** என்னும்படி நிகரில்லா புகழையுடைய வாத்ஸல்ய குணத்தை காட்டி நிற்கும் திருவேங்கடவனுக்கு இருப்பிடமாக உள்ள திருமலையாக இருப்பது ஆதிசேஷனே. அர்ச்சாவதாரத்திற்குப் **"பொற்கால் பொலிய விட்ட இடம்"** என்று ஆசார்யர்கள் அருளிச்செய்வர்.

## 16.திருமலை என்கிற திருப்பதி

திருமலைக்கு க்ருதயுகத்தில் '**விருஷபாசலம்**' என்றும், த்ரேதா யுகத்தில் '**அஞ்சனாசலம்**' என்றும், த்வாபரயுகத்தில் '**சேஷாசலம்**' என்றும், கலியுகத்தில் **வேங்கடாசலம்** (வேங்கடமலை) என்றும் பெயர்கள் வழங்குவதாக பவிஷ்யோத்தர புராணத்தின் ஆரம்பத்தில் கூறப்பட்டு உள்ளது.

மேல் உலகத்தில் ஒரு சமயம் திருபாற்கடலில் பள்ளிக் கொண்டிருக்கும் ஸ்ரீமந் நாராயணனை நாரத முனிவர் தரிசனம் செய்ய வந்த போது, பூவுலகில் தாம் வசிக்க தகுந்த இடத்தை கூற வேண்டும் என்பதாக திருமால் கேட்க, நாரதரும் பூலோகத்தில் '**ஸ்வர்ணமுகி**' என்கிற நதிக்கரை மிகவும் ரம்யமான இடம் என்று கூறியதை அடுத்து திருமாலும் அருகாமையில் இருந்த ஆதிசேஷனைப் பார்த்து '**ஆதிசேஷா! நீர் ஓர் மலையாய் உருவெடுத்து அந்த நதிக்கரையில் இருக்க வேண்டும். நாம் எல்லா பரிஜனங்களுடன் பின் அங்கு வந்து உலாவக் கடவோம்**' என உத்தரவிட்டார். ஆதிசேஷனும் மலையுருவாய் அந்த நதிக்கரையில் அமைந்து, பெருமாள் உலாவுதற்குத் தக்கவகையிலும், பக்த கோடிகளும், பாகவதர்களும் தங்கி இருக்கும்படியாக, அதற்கு ஏற்றார்போல் தோட்டங்களும், புஷ்பங்களுமாய், பல புண்ணிய தீர்த்தங்கள் நிரம்பினதான உயர்ந்த புண்ணிய க்ஷேத்திரமாய் விளங்கினான்.மேலும், கங்கை முதலான பல புண்ணிய நதிகளும் தன் மேல் வந்து சேருமாறும், தாவர, விலங்குகள் எவை வசிக்கின்றதோ அவை தம் விருப்பத்தை அடைந்து உய்வு எய்தவும் ஆதிசேஷன் எம்பெருமானை வரம் கேட்டான். எம்பெருமானும் அதை உகப்புடன் அளித்தார். ஆதிசேஷன் மலையுருவாய் அமைந்ததால் திருமலைக்கு '**சேஷாத்ரி**' என்றும் '**சேஷாசலம்**' என்றும் பெயர் உண்டானது. பாம்பின் உருவத்தை ஒத்தவாறே இம் மலையானது காட்சியளிக்கிறது. பாம்பின் தலைபாகம் சேஷாத்ரி என்றும்,

நடுபாகம் அகோபிலம் என்றும், வால்பாகம் ஸ்ரீசைலம் என்றும் பெரியோர்கள் பணித்தனர்.

ஒரு சமயம் கலியுகத்தில் வீரநரசிம்மதேவன் எனும் கஜபதியானவன் தீர்த்த யாத்திரையில் இச்சை கொண்டவனாய் சேது தரிசனம் செய்ய எண்ணி தெற்குத் திசையினின்று வந்தான். வரும் வழியில் ஸ்ரீவேங்கடாசலம் என்று சிறப்பாக வழங்கப்படும் இம்மலையின் பெருமையை கேள்வியுற்று, திருமலை மீது சென்று ஸ்வாமி புஷ்கரிணியில் தீர்த்தமாடி, ஞானப்பிரானையும், வேங்கடத்து ஹரியையும் ஸேவித்து, ஸ்வாமி திருவடியில் பக்தி மேலிட்டதால் பரவசமடைந்து ஏதேனும் கைங்கர்யம் செய்ய நினைத்தான். அங்குள்ள பெரியவர்களையும், படித்தவர்களையும் கேட்டான். அவர்களும் பெருமாளுக்கு அணிகலமான கிரீடம், வாகனங்களில் தேர் போன்றவையும், கோபுரங்களில் விமானம், இரத்தினங்களில் வைரமும், ஜாதியில் பிராமண ஜாதியும், ஆஶ்ரமங்களில் ஸன்யாஸ ஆஶ்ரமும் உயர்ந்ததாக ஆகம சாத்திரங்கள் சொல்வதாகக் கூறி, இவன் மனதில் விரும்பும்படி செய்யலாம் எனக் கூறினர். அந்த அரசனும் மகிழ்ந்து, ஒரு திருக்கோபுரத்தை நிர்மாணம் செய்ய நினைத்து அதற்கான பொருட்களையும், வேலையாட்களையும், தனத்தையும் கொடுத்து கோபுர பணிகளை செய்யச் செய்தான்.

மறுபடி தீர்த்த யாத்ரையாக ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம் முதலான திவ்ய தேசங்களை ஸேவித்து அனுபவித்து கொண்டே சென்று, சேது தரிசனத்தையும் முடித்துக் கொண்டு திரும்பவும் திருமலைக்கு வந்து சேர்ந்தான். கட்டப்பட்ட கோபுரத்தைப் பார்த்து மனநிறைவு கொண்டான். பல தான, தர்மங்களை செய்து அங்கு சில நாட்கள் தங்கியிருந்தான்.

ஓர் இரவு கஜபதி கனவில் உயர்ந்த பாம்பு அவன் முன் தோன்றி 'வாராய் கஜபதியே! இந்த திருமலை என் சரீரமாக இருக்கும். இதில் நீ கோபுரத்தை கட்டுவதால் என் உடலில்

**அதிகபாரம் ஏற்படுகிறது. அதன் காரணமாக வருத்தம் ஏற்படுகிறது. ஆகையால் தன் ஸ்வாமியின் ஸந்நிதியில் போனாலல்லாது என் துன்பத்தை போக்கிக் கொள்ள வழி இல்லை'** என்று சொல்லியது. பின் அப்பாம்பு கோயிலில் திருவேங்கடமுடையானுடைய வலதுபக்க திருக்கரத்தில் சுற்றி கொண்டதை கனவில் கண்ட மன்னன் விழித்தெழுந்து பயமிகுதியால், பெரியோர்களிடம் இந்த ஸ்வப்னத்தை சொல்லி கருத்து யாது? என வினவினான்.

அவர்களும் இத்திருமலையானது வராகவாமன புராணங் களின் வசனபடி '**சேஷாசலம்**' என்றும், இப்படி சேஷன் வடிவமான இதனை வெட்டுவதாலும், அதன் மேல் கற்களைக் கொட்டுவதும், குவிப்பதும் அவனுக்கு பாரமாய் இருக்கும் என்று கருத்து தெரிவித்தனர். அதன் பேரில் அரசனும் கோபுரத்தை தொடர்ந்து கட்டவேண்டாம் என்று பணித்து மொட்டையாய் நிறுத்தி வைத்தான். இந்த அளவிலாவது திருவேங்கடமுடையானுக்கு கைங்கர்யப்ராப்தி கிடைத்ததை குறித்து மனம் மகிழ்ந்தான். அதே சமயம் சேஷனுக்கு அபசாரபட்டுவிட்டோமே என்று, அஞ்சி அதற்கு பரிகாரமாக திருமலையப்பனுக்கு ஒரு '**நாகாபரணம்**' செய்து அணிவிக்க வேண்டும் என்று அவா கொண்டான். அதன் படியே நாகாபரணத்தை செய்து கொண்டு வந்து அர்ச்சகரிடம் கொடுத்து பெருமாளுக்கு சாற்றியருள வேண்டினான். அவர்களும், அதை எங்கு சமர்ப்பிப்பது? இது தேவதைகளுக்கு உரிய ஆபரணமாக இருக்கிறதே என சந்தேகப்பட்டு நிற்க, திருவேங்கடவன் ஒரு பக்தர் மூலமாக ஆவேசித்து, முன்பு ஒரு சமயம் ஆதிசேஷனுக்கும், வாயுதேவனுக்கும் ஏற்பட்ட விவாதத்தைக் கூறினார். ஆதிசேஷனுக்கும், வாயுவுக்கும் ஏற்பட்ட விவாதத்தில் ஆதிசேஷ மலையை இங்கு கொணர்வதற்காக தான் வாயுவிடம் சிறிது பட்ச பாதியாயிருக்க அதனால் ஆதிசேஷனுக்கு வருத்தம் ஏற்பட்டது. சேஷனும்

**சேஷோகதமத: பச்சாத் தஸ்மிந்நேவ நகோத்தமே!**
**வாயவ்யே ஸ்வாமி ஸரஸ: நாகதீர்தே மநோரமே||**
**உத்தரே சிகரே புண்ய ஸாந்நித்யம் ஜகதீபதே|**
**தபஸ் தேபே மஹாகோரம் திவ்யம் வர்ஷஸஹஸ்ரகம்||**

என்கின்றபடி, தனது அவதாரமான இந்த திருமலையிலே தேவர்கள் கணக்குப்படி ஆயிரம் வருடங்கள் தவம் புரிந்து தானே இங்கு என்னை வரவழைத்து 'என்னைத் தோன்றும்படி செய்து படுக்கை உருவத்தைப் போல் என்னை தாங்குவது போல் மலை உருவங்கொண்டு என்னை தாங்குகின்றவனாய், என் எல்லையற்ற அன்புக்கு இலக்காகி வருகிறான். அவன் பக்கலிலே நமக்கு இப்போது முழுமையான நட்பு உண்டானபடியாலே, எப்படி ஒரு தந்தை, தன் பிள்ளையை கையில் தூக்கி சீராட்டுவானோ அதுபோல் தாமும் ஆதிசேஷனை கையில் தரிக்கிறோம். ஆதிசேஷனே எல்லா இடங்களிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நிலைகளிலும் செய்யத்தக்க கைங்கர்யங்களில் ஊற்றமுடையவன்; இத்திருமலையிலே சிறப்பாக எல்லாவித பணி புரிவதிலும் ஊக்கமுடையவன். என் அன்புக்கு பாத்திரமானவன். ஆகையால், அவனுருவமுடைய இந்த நாகாபரணத்தை என்கையில் சாத்துங்கோள்' எனக் கட்டளையிட்டார். பின் அனைவரும் மகிழ்வுற்று அந்த நாகாபரணத்தை பெருமாளுக்கு அணிவித்தனர்.

முன் கூறியபடியே சேஷன் வாயு ஸம்வாதத்தில் செருக்கழியப் பெற்ற சேஷன் பின்பு அம்மலையிலேயே ஸ்வாமி புஷ்கரணிக்கு வடமேற்கே புண்யமான மலை சிகரத்தில் மனத்துக்கு மகிழ்ச்சியை அளிக்கும் நாக தீர்த்தத்தில் எம்பெருமான் ஸ்ரீநிவாஸனாக தோன்றுவதற்காக தேவர்கள் கணக்குப்படி ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தார். அத்தவத்தை கண்டு மகிழ்ந்த பெருமான் நேரில் தோன்றி வேண்டிய வரம் கேட்க சொன்னார்.

ஆதிசேஷனும் அடியேன் திறத்தில் தேவரீருக்கு தயை இருக்குமாயின் பாற் கடலில் எப்படி என்னுடம்பில் துயில் வளர்கிறீகளோ அது போன்று இம்மலை உருவம் போன்ற என் உடலிலும் எப்போதும் வாசம் செய்ய வேண்டும்' என வேண்டினான். இதனைக் கேட்ட பெருமானும் 'தான் விளையாடி களிப்பதற்காக நல்ல இடம் பூவுலகத்தில் எங்குள்ளது என ஆராய்ந்ததில், உனக்கும், வாயுவுக்கும் உண்டான விவாதம் காரணமாக புண்ணியமான இம்மலை இங்கு வந்து சேர்ந்தது. நீயும் தவம் செய்து என்னை இங்கு இருக்க வேண்டுகிறாய். இது எனக்கு விருப்பமானதாய் முன்பு என்னால் கோரப்பட்டதே. அப்படியே ஆகுக' என்று வரமளித்தார். இது பற்றியே வைகுந்தநாதன் 'பரன் சென்று சேர் திருவேங்கடமாமலை' என்கிற படியே உயர்ந்த வைகுந் தத்தை விட்டு இம்மலைக்கு வந்து ஸ்வாமி புஷ்கரணி கரையில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியுடன் களிக்கிறார்.

'உந்நித்ர திந்த்ரிணீ த்வ மேஸ்யத்வ பமஹோரக': என்ற புராண ப்ரசித்தத்தின் படி திருவேங்கடமுடையான், திருவனந்தாழ்வான் அம்சமான திருப்புளியாழ்வார் கீழ் தோன்றினார். சிலகாலம் சென்றபின் ரங்கதாஸன் என்பவன் தென் திசையிலிருந்து திருமலைக்கு வந்து வாழ்ந்து வந்தான். எம்பெருமானின் திருமேனிப் பிரிவாலே ஒரு திருக்கோயில் கட்ட நினைத்தான். ஸ்வாமியின் பின்னே இருந்த இந்த புளிய மரம் உறங்காபுளியாய், ஒரு கொம்பு துளிரும், ஒரு கொம்பு பழமாய் இப்படி விசித்ரவடிவுடையதாய், திருமேனி பரிவாலே குடை பிடித்தாற்போல் தழைத்து இருந்ததை கண்டான். அதை வெட்டமனமின்மையால், அது கண்டு என்ன செய்வது என்று விசாரித்து குழப்பமடைந்தான். அன்று இரவே அந்த புளிய மரமானது ஒரு அம்பு செல்லும் தூரமாய் எழுந்தருளியிருக்க ரங்கதாஸன் ஆச்சர்யப்பட்டு இம்மரம் திருவனந்தாழ்வானே என நிச்சயித்தான். பின்னர் தோட்டம் அமைக்க எண்ணி வேலையை

தொடங்கும்போது திருவேங்கடமுடையான், தங்கள் இருவருக்கும் ஆஸ்தான ஸ்தலமாய் இருக்கிற இரண்டையும் வெட்ட வேண்டாம் என நியமித்தார். ரங்கதாஸனும் பக்தி மேலிட்டு திருவேங்கட வனையும், திருப்புளியாரையும் வணங்கி வந்தான்.

திருமால் சேஷனிடம் அன்பு கொண்டு இருப்பதைத் தெரிவிக்கும் வகையில், ப்ரம்மோத்ஸவத்தில் முதல் நாள் இரவும், இரண்டாம் நாள் காலையிலும் சேஷ வாகனத்தில் புறப்பாடு நடத்த ஸங்கல்பித்து இன்றும் அவிச்சிந்நமாக நடந்து வருவது வெள்ளிடை மலை. மேலும் உத்ஸவ காலங்களில் அங்குரார்பண தினத்தில் ம்ருத் ஸங்க்ரஹணம் செய்வதற்கு மண்ணை வெட்டி எடுக்க, மண் வெட்டியும் எடுத்துச் செல்லவேண்டும். மண் வெட்டிக்கு அதிதேவதை சேஷனேயாகும். அங்குரார்பணத்திற்கு புற்று மண் கொண்டு வரும் கைங்கர்யத்தையும் திரு அனந்தாழ் வான் செய்கிறான் என்பது இதிலிருந்து அறியலாம். மேலும் தெப்ப உத்ஸவத்தில், தெப்பத்தின் அதிதேவதை பூமாதேவி விமானத்திற்கு அதிதேவதை அனந்தனே.

**திருக்கச்சி (காஞ்சீபுரம்):**

'தியாக மண்டபம்' என்று போற்றப்படுவதும், 'வரம் தரும் பெருமாள்' என்று பெயர் பெற்ற வரதராஜப் பெருமாள் அடியவர்களுக்கு அருள் பாலிப்பதும், தொண்டைமண்டலத் திருத்தலங்களில் ஒன்றானதுமான அத்திகிரியே, காஞ்சிபுரம் என அழைக்கப்படுகிறது. எம்பெருமானுடைய அர்ச்சாவதாரத்திலும், ராமன் கிருஷ்ணன் முதலிய விபவ அவதாரங்களிலும் ஆதிசேஷனும் அவதரித்து கைங்கர்யம் செய்கிறான் என்று மஹா தேசிகன் அருளிச் செய்கிறார். காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயிலில் '**அனந்த ஸரஸ்**' எனும் புஷ்கரணிக்கரையில் அதன் தலைவனாக இருந்து பேரருளாளனை சேவித்து வருகிறான் அநந்தன் என்று ஹஸ்தகிரி மஹாத்மியத்தில் கூறுகிறார்.

**ஆழ்வார் திருநகரி**

இவ்விடத்தை திருக்குருகூர் என்றும் சொல்லலாம். ஜீவாத்மாவினுடையவும், எம் பெருமானுடையவும் முக்யத்வத்தை தெரிவிக்கும் பிரணவம் போலே, ஆழ்வாருடையவும் பொலிந்து நின்ற பிரானுடையவும் பெருமை தோன்ற இருக்கும் திவ்ய தேசம் திருக்குருகூராகும். இங்கு எழுந்தருளியிருக்கும் நம்மாழ்வாருடைய பெற்றோர்கள் **'நெடுங்காலமும் கண்ணன் நீண் மலர்ப்பாதம் பரவிப்பெற்ற'** என்கிறபடி திருக்குறுங்குடியில் கோயில் கொண்டுள்ள நம்பியை சேவித்து **'அடியோங்களுக்கு புத்ர பாக்கியம் வேண்டி . அருள எம்பெருமானும் அளித்தருளினார்.' ஸாஷாதனந்தஸ் ஸகிரி: ஸர்வதா ஸேவ தேஹரிம், லஷ்மணா க்ருதி மாஸ்தாயத்ரேதாயாத்ம்யம்'** (11.78. நாரதீய புராணம் - யாதவகிரி மஹாத்ம்யம்).

**திருக்குறுங்குடி :**

இங்கு கோயில் கொண்ட எம்பெருமான், எம்பெருமானாரிடத்தில் சிஷ்யனாய் இருந்து வைஷ்ணவ நம்பி என்று பெயர் பெற்றதாலும், வாமன க்ஷேத்திரம் என்று புராணப் பிரசித்தமாக இருக்கையாலும், திருக்குறுங்குடி வைஷ்ணவ வாமன க்ஷேத்திரம் என்று வழங்கப்படுகிறது. திருக்குறுங்குடி நம்பியின் அம்சமாகவும், சேனை முதலியாருடைய அம்சமாகவும் நம்ஆழ்வார் அவதரிக்கும் முன்பே 'சென்றால் குடையாம்' என்கின்ற பாசுர ரீதியில் தொடர்ந்து அடிமை செய்யும் திருவனந்தாழ்வான் இவர் மீது மழை, வெய்யில் முதலியன படாமல் ரக்ஷிப்பதற்காக திருக்குருகூரில் ஒரு புளிய மரமாக வளர்ந்து வந்தார் என்பதை ராமானுஜ அஷ்டபதியில் காணலாம்.

மேலும் இப்பாண்டிய நாட்டின் வைஷ்ணவ திவ்ய தேசமாகிய திருக்குறுங்குடியில் ஆதிசேஷன் ஒரு விசித்ரமான முறையில் சித்தரிக்கப்பட்டு உள்ளார். அதில் ஆதிஷேசனுடைய

பணங்கள், நாக்கு ஆகியவை நல்ல சிறப்பு வர்ணத்தில் எழுதப்பட்டு உள்ளன. அதை நோக்குங்கால், ஆதிசேஷன் தன் நாக்கினின்று நெருப்பை கக்குவது போல் தோன்றும். மற்றும் ஆதிசேஷன் எதிரில் மது, கைபடர் எனும் அசுரர்களும் தெரிய வரும். பூமித் தாயாரின் பிரார்த்தனையில் பாற்கடலிலிருந்து கடைந்தெடுக்கப்பட்ட அமிர்தத்தின் ஒரு பகுதியை அந்த இரு அசுரர்களுக்கும் எம்பெருமான் கொடுத்து விடுவாரோ என்கிற கவலையின் காரணமான சீற்றமாகும்.

**திருமெய்யம் :**

இத்திவ்ய தேசத்திலும் ஆதிசேஷன் தன் முகத்தை சுருக்கிக் கொண்டு சீறி எழுவது நன்கு தெரியவரும். மஹாவிஷ்ணு, தேவர்கள், ரிஷிகணங்களுடன் தன் அடுத்த அவதாரத்தை எங்கு வைத்துக் கொள்ளலாம் என்று கலந்தாலோசனை செய்யும்போது, மது, கைபடரால் துரத்தப்பட்ட பூமாதேவி தாயார், பெருமானின் வலது திருவடியில் தஞ்சம் அடைகிறாள். பெருமானும் தன் திருவடியை சற்றே சாய்த்தாற்போல் பூமாதேவியை ரக்ஷிப்பதைக் காணலாம். அசுரர்களைப் பார்த்த ஆதிசேஷன் கோபத்தில் சீற்றம் கொள்ள திருமார்பில் இருக்கும் மஹாலக்ஷ்மி பயத்தால் நடுங்க, திருமால் தன் இடது திருக்கரத்தை சற்றே திருப்பி மஹாலக்ஷ்மிக்கு அபயம் அளிப்பதையும் காணலாம்.

இந்த திருமெய்யத்தை எம்பெருமான் ஆதிசேஷனுக்கு காட்டிக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. எம்பெருமான், ஆதிசேஷனை ஸத்ய க்ஷேத்திரத்திற்கு சென்று அஷ்டாக்ஷர மந்திரத்தை பக்தி சிரத்தையுடன் ஜபிக்குமாறு கூறினாராம். அதற்கேற்ப ஆதிசேஷனும் பூமிக்கடியில் சென்று சத்யலோகத்தை அடைந்தார். அவர் வந்த வழியில் ஒரு நதி ஓடுகிறது. அதற்கு 'ஸர்ப்ப நதி'- பாம்பாறு என்று பெயர். ஆதிசேஷன் வெளிப்பட்ட இடத்தில் அவர் பிரார்த்தனையின் பேரில் எம்பெருமான் ஹயக்ரீவ

உருவத்தில் தோன்றி ஆதிசேஷனை ஆசிர்வதித்தாராம். ஆதிசேஷன் திருமாலிடம் திருப்பாற் கடலில் உள்ள சயன கோலத்தில் பக்தர்களுக்கு காட்சித் தருமாறு வேண்டிக் கொண்டாராம்.

## திருவஹிந்திரபுரம்

**'அடியவர்க்கு மெய்யனாகிய தெய்வ நாயகன்'** என்றும் **'மூவராகிய ஒருவன்'** என்றும் ஆழ்வாரில் மங்களாசாசனம் பண்ணப்பட்ட ஸ்ரீ தேவநாதன் எழுந்தருளியிருக்கும் திருத்தலமே திருவஹீந்திரபுரமாகும். முன் ஒரு சமயம் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் திருவஹீந்திபுரத்தில் பயங்கரமான சண்டை நிகழ்ந்த காலத்தில், தேவர்கள் பக்கம் விஷ்ணுவும், அசுரர்கள் பக்கம் சிவனும் உதவுவதாக வாக்களித்து இருந்தனர்.

போர் செய்யும் காலத்தில் எம்பெருமானுக்கு மிக களைப்பும், தாகமும் ஏற்பட்டதால், கருடாழ்வாரிடம் எங்கிருந்தாகிலும் தாக சாந்திக்கு தீர்த்தம் கொண்டு வரச் சொன்னாராம். அதன் பேரில் கருடனும் பறந்து சென்று வெகு நேரமாகியும் திரும்பி வராததால் திருமால் ஆதிசேஷனை தீர்த்தம் கொண்டுவர பணித்தாரம். ஆதிசேஷன் ஔஷதகிரியிலிருந்து கீழேயிறங்கி பூமியில் ஓர் இடத்தை தன்வாலைக் கொண்டு ஓங்கியடிக்க, அதனின்று நீர் பீரிட்டுக் கொண்டு எழுந்தது. அந்த தீர்த்தத்தை எடுத்துச்சென்று ஆதிசேஷன் திருமாலுக்குக் கொடுத்ததாகவும், அதுமுதல் திருவஹிந்திபுரத்தில் உள்ள அந்த புனித தீர்த்தம் **சேஷதீர்த்தம்'** என்றும் வழங்கப்படுகிறது. இந்த தீர்த்தத்தில் நீராடினால் மோக்ஷம் சித்தியாகும் என்றும் சொல்லப்படுகிறது. அந்த கிணற்றின் நீரை புனிதமாகக்கருதி வழிபடுகின்றனர். எம்பெருமானுக்கு சமர்ப்பிக்கப்படும் பிரசாதங்கள் அனைத்தும் அப்புனித தீர்த்தத்தாலே தயார் செய்யப்படுகிறது.

மேலும் சிலர் பாம்புப் புற்றுக்கு பால் வார்க்கும்

வழக்கத்தை கொண்டுள்ளனர். தை, ஆடி, மாதங்களில் பாம்பு புற்றுக்கு பால் வார்ப்பதற்கு பதில் திருவஹிந்திரபுரத்தில் கோவில் ப்ராகாரத்தில் உள்ள சேஷதீர்த்தத்தில் பால் வார்க்கப்படுகிறது.

**திருஇடவெந்தை :**

இந்த நித்ய கல்யாணபுரி என்கிற திவ்ய தேசத்தில் ஆதிவராகபெருமாள், கோமளவல்லி, அகிலவல்லித் தாயாருடன் நின்ற திருக்கோலம். ஒரு திருவடியை பூமியிலும், அதன் கீழே, கூப்பிய கைகளுடன் உள்ள ஆதிசேஷன் தன் பத்னி (ஜனி) சமேதராய் இருக்க, அவர்கள முடியின் மீது வைத்திருப்பதை தரிசிக்கலாம். இடது தொடையில் அகிலவல்லித் தாயார் வீற்றிருந்த திருக்கோலம். வராகமூர்த்தி சரமஶ்லோகம் உபதேசிக்கும் கிரமமாக ஸேவை சாதிக்கிறார். நித்ய கல்யாணப் பெருமாள் எனப் பெருமை பெற்றவர். இடது மடியில் தாயார் அமர்ந்த திருக்கோலம்..

**திருக்கடல்மலை (திருவலந்தை) :**

இங்கு ஸ்ரீவராகப்பெருமாள் வலது மடியில் தாயாரை வைத்து அணைத்தபடி காட்சி அளிப்பது, திருவடிக்குக் கீழே ஆதிசேஷன் தன் பத்தினியுடன் கூப்பிய கைகளுடன் எழுந்தருளியபடி. இந்த க்ஷேத்திரம் மஹாபலிபுரத்தில் ஒரு குகையில் உள்ளது. இங்கும் பெருமாளின் திருவடியை ஆதிசேஷன் தாங்குவதை காணலாம்.

**திருக்கடிகை (சோளிங்கா):**

இதுவும் ஓர் ப்ரஸித்தி பெற்ற திவ்யதேசமாகும். இங்கு பெரிய மலை, சின்னமலை இரண்டையும் ஏறி, ஸ்ரீ நரசிம்மப் பெருமாளையும் ஸ்ரீ ஆஞ்சநேயரையும் வழிப்பட்டுத் திரும்புகின்றனர். இந்த சோளிங்கர் என்கிற திவ்ய ஸ்தலத்தில்

அமைந்துள்ள பெருமாள் கோவிலுக்கு செல்லும் பக்தர்களின் கண்களுக்கு ஓர் அரிய காட்சி காணக் கிடைக்கும். அங்கு எழுந்தருளியுள்ள சடாரியில், சுருட்டிக் கொண்டிருக்கும் சர்ப்பத்தின் தலையில் எம்பெருமானின் திருவடிகள் எழுந்தருளியுள்ள காட்சி காண பெறலாம். இதை போன்ற சடாரி தென் இந்தியாவில் வேறு எந்த கோயிலிலும் காணப்படாதது என்று சொல்லப்படுகிறது.

கன்னட தேசத்தில் திருநாராயணபுரமலையும் **'சேஷகிரி'** என்று அழைக்கப்படுகிறது. கல்யாண தீர்த்தத்தில் மஹாசேஷ னுடைய ஸந்நிதி உண்டு. பட்டாபிராமர் சந்நிதியில், அனந்த, லக்ஷ்மண, பலராம, இராமனுஜ என்கிற நான்கு உருவத்தில் நிற்பதை காணலாம்.

உத்ர பத்ரிகாச்ரமத்தில் **'சேஷநாகம்'** என்னுமிடத்தில் திருஅனந்தாழ்வானுடைய ஓர் உருவம் உள்ளது. இங்கு எம்பெருமானார் அநேக நாட்கள் வசித்து வந்ததாக ஆதார பூர்வமான சின்னங்கள் இருக்கின்றன. காஷ்மீரத்தில் **'அனந்தநாக்'** என்கிற சரோவரமும், திருகச்சியில் **'அனந்த ஸரஸ்'** என்கிற தீர்த்தங்களும் திருவனந்தாழ்வாரால் ஏற்பட்டு உள்ளன.

திருநாராயணபுரத்திற்கு – கிருதயுகத்திலே ஸநந்தகுமார் ஸத்ய லோகத்தில் நின்றும் ஆநந்தமய திவ்ய விமாநத்தோடே எழுந்தருளுவித்துக் கொண்டு திருநாராயணனை இங்கேப் ப்ரதிஷ்டிப்பிக்கையாலே **'நாராயணாத்ரி'** என்றும் திரேதா யுகத்தில் தத்தாத்ரேயர் நாலு வேத புருஷர்களையும் சிஷ்யராக்கிக் கொண்டு வந்து வேத புஷ்கரணிக்கரையிலே ஸதாவேதாத்யயந நிரதராயிருக்கையாலே **'வேதாத்ரி'** என்றும், த்வாபரயுகத்திலே நம்பி மூத்தபிரானாலும் ஸ்ரீகிருஷ்ணனாலும் ஆராதிக்கப்படுகயைாலே **'யாதவாத்ரி'** என்றும்,

**'யுகே கலௌ து ஸம்ப்ராப்தே எதிராஜேந பூஜநாத்|**
**எதிஶைல ப்ரோக்தம் நாமதே யாந்தரம் த்ரே: ||**

என்கிறபடி கலியுகத்திலே எம்பெருமானார் எழுந்தருளி ஜீரணோத்தாரணம் பண்ணி அபிமானிக்கையாலே **'எதிஶைலம்'** என்றும் ப்ரஸித்தமாயிற்று.

**யாதவகிரி:**

திருவனந்தாழ்வான் தானே யாதவகிரியின் உருவமெடுத்து எப்போதும் ஹரியை தாங்கி அடிமை செய்து கொண்டு இருக்கிறான்.

**'ஸாக்ஷாதனந்தஸ் ஸகிரி: ஸர்வதா ஸேவதே ஹரிம்,**
**லக்ஷ்மணா ஆக்ருதிம் ஆஸ்தாய த்ரேதாயாத்**

(11-78. நாரதீய புராணம், யாதவகிரி மாஹாத்மியம்)

**சிறு புலியூர்**

சிறுபுலியூர் என்னும திவ்யதேசத்தில், அநந்தாழ்வாருக்காக, ஒரு தனிக்கோவில் உள்ளது. அவர் இங்கு நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கைகளுடன் காட்சி தருகிறார். மேல் இரண்டு கைகளில் சங்கு சக்கரம், கீழ் உள்ள இரண்டில் ஒன்று அபயஸ்தம், மற்றொன்று வரத ஹஸ்தம். ஒவ்வொரு வருடமும் கிருபா ஸமுத்ரப் பெருமாள், மாசிமாச, சுகல ஏகாதசி அன்று அனந்தாழ்வார் கோவிலுக்கு எழுந்தருளி அவரை ஆசீர்வதிக்கிறார்.

இனி ஆழ்வார்கள் அனுபவித்து பாடிய வைஷ்ணவ திவ்ய தேசங்களில் எம்பெருமானுடன் அர்ச்சாவதார கோலங்களில் ஆதிசேஷனின் நிலைகளைக காணலாம்.

**சோழதேசம்** (மொத்தம் நாற்பது (40) அவற்றில்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருவரங்கம் | புஜங்கசயனம் | ஸ்ரீரங்கநாதபெருமாள் |
| 2. | திருக்கரம்பனூர் | புஜங்கசயனம் | புருஷோத்தம பெருமாள் |
| 3. | அன்பில் | புஜங்கசயனம் | வடிவழகியநம்பி |
| 4. | திருப்பேருர் | புஜங்கசயனம் | அப்பக்குடத்தான் |
| 5. | திருக்கவித்தலம் | புஜங்கசயனம் | கஜேந்திரவரதன் |
| 6. | புள்ளம்பூதங்குடி | புஜங்கசயனம் | வல்வில்ராமன் |
| 7. | திருஆதனூர் | புஜங்கசயனம் | ஆண்டள குமையன் |
| 8. | திருக்குடந்தை | ஆதிசேஷசயனம் (உத்தியோக சயனம்) | சார்ங்கபாணி, ஆராவமுதன் |
| 9. | திரு வெள்ளியங்குடி | புஜங்கசயனம் | கோலவல்லி ராமன் |
| 10. | திருச்சிறுபுலியூர் | சலசயனம் | அருள்மாகடல்பெருமாள் |
| 11. | திருஇந்தளுர் | வீரசயனம் | பரிமள ரங்கநாதன் |
| 12. | திருத் தெற்றியம்பலம் | புஜங்கசயனம் | செங்கண்மால் |
| 13. | திருச்சித்ரகூடம் | போசயனம் | கோவிந்தராஜன் |
| 14. | திருவைகுந்த விண்ணகரம் | வீற்றிருந்த கோலம் | பரமபதநாதன் |

## தொண்டைநாடு

மொத்தம் இருபத்திஇரண்டு (22) அவற்றில்:

| | | | |
|---|---|---|---|
| 15. | திருவெ.்.கா | புஜங்கசயனம் | யதோத்தகாரிப் பெருமாள் |
| 16. | திருப்பவள வண்ணம் | ஆதிசேஷன் மேல் வீற்றிருந்த கோலம் | பச்சைவண்ணர் |
| 17. | திருஎவ்வுள் | புஜங்கசயனம் | வீரராகவப் பெருமாள் |
| 18. | திருவல்லிக்கேணி | புஜங்கசயனம் | ரங்கநாதப்பெருமாள் (ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம்) |
| 19. | திருநீர்மலை | மாணிக்க சயனம் | ரங்கநாதன் |
| 20. | திருக்கடல்மல்லை | சயனதிருக்கோலம் | ஸ்தல சயனப்பெருமாள் (மஹாபலிபுரக்ஷேத்ரம்) |
| 21. | திருக்காரகம் | ஆதிசேஷனுடன் நின்ற கோலம் | கருணாகரப்பெருமாள் |
| 22. | திருஇடவெந்தை | ஆதிசேஷன் திருமுடியில் நின்றகோலம் | வராகபெருமாள் |

## வடநாட்டு திருப்பதிகள்

மொத்தம் பன்னிரெண்டு (12) அவற்றில்

| | | | |
|---|---|---|---|
| 23. | திருப்பிரிதி | புஜங்கசயனம் | பரமபுருஷன் |
| 24. | திருப்பதி | புஜங்கசயனம் | கோவிந்தராஜப்பெருமாள் |

### மலைநாடு (பதின்மூன்று (13) அவற்றில்

| | | | |
|---|---|---|---|
| 25. | திருவனந்தபுரம் | புஜங்க (அனந்த) சயனம் | அனந்தபத்மநாபப் பெருமாள் |
| 26. | திருவாட்டாறு | புஜங்கசயனம் | ஆதிகேசவப் பெருமாள் |

### பாண்டியநாடு மொத்தம் பதினெட்டு (18) அவற்றில்

| | | | |
|---|---|---|---|
| 27. | திரு வரகுணமங்கை | ஆதிசேஷன் குடை பிடிக்க(வீற்றிருந்த கோலம்) | விஜயாஸன பெருமாள் |
| 28. | திருப்புளிங்குடி | புஜங்கசயனம் | காய்சினவேந்தன் (நவ திருப்பதி) |
| 29. | திருக்கோளூர் | புஜங்கசயனம் | வைத்தமாநிதிப் பெருமாள் (நவதிருப்பதி) |
| 30. | ஸ்ரீ வில்லிபுத்தூர் | புஜங்கசயனம் | வடபத்ரசாயி |
| 31. | திருக்கோட்டியூர் | புஜங்கசயனம் | உரகமெல்லணையான் |
| 32. | திருப்புல்லாணி | தர்ப்பசயனம் | கல்யாண ஜகந்நாதன் (லக்ஷ்மணன் ஆதிசேஷனாக நின்றபடி) |

### திருநாடு (இரண்டு)

| | | | |
|---|---|---|---|
| 33. | திருப்பாற்கடல் | ஆதிசேஷசயனம் | க்ஷீராப்திநாதன் |
| 34. | திருப்பரமபதம் | ஆதிசேஷன் வீற்றிருந்தகோலம் | பரமபதநாதன |

தொண்டைநாட்டில் திருஊரகத்தில் ஆதிசேஷனாகவே எழுந்தருளியுள்ளார்.

## III. 17.ஆதிசேஷனின் வைபவம்

ஆதிசேஷனுடைய வைபவங்கள் வேதத்திலும், புராணங்களிலும், சங்க இலக்கியங்களிலும், ஆழ்வார்கள் அமுத மொழியிலும், ஆசார்யர்களின் ஸ்தோத்ர நூல்களிலும் பரக்கப் பேசப்பட்டுள்ளன. 'அமிதௌஜா: பர்யங்க:' (அளவற்ற பலத்தையுடைய அனந்தன் படுக்கை) என்று கௌஷீதகி உபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது. ஆழ்வார்களும் ஆதிசேஷன் அலைகடலில் அறிதுயிலமரும் மாயவனுக்கு 'புல்குமணையாக' இருந்து செய்யும் கைங்கர்யத்தைப் போற்றிப் பாடியுள்ளார்.

**சங்க இலக்கியம் :**

சங்ககாலம் முதற் கொண்டே தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆதிசேஷனைப் பற்றிய பல அரிய சமயக் கருத்துக்கள் குறிப்பிடப் பெற்றுள்ளன. எட்டுத்தொகை, நூல்களில் ஒன்றான பரிபாடலில் திருமாலின் சிறப்புக் கூறும் பாடல்களில் ஆதிசேஷனுடைய பெருமைகளும் கூறப் பெற்றுள்ளன.

**பரிபாடல்:**

பரிபாடல் மிக மிகத் தொன்மையானது. பரிபாடல் ஆதிசேஷனை முன்னிட்டுக் கொண்டே தொடங்குகிறது. இதன் விளக்கம் வருமாறு:

**'ஆயிரம் விரித்த வணங்குடை யருந்தலை**
**தீயுமிழ் திறனொடு முடிமிசை யணவர**
**மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனி**
**சேயுயர் பணைமிசை யெழில் வேழ மேந்திய**
**வாய் வாங்கும் வளை நாஞ்சி லொரு குழை**
**யொருவனை:...** (பரிபாடல் 1)

என்பதில், ஆயிரமாக விரித்துக் கொண்ட அழகுடைய அரிய தலைகளுடைய ஆதிசேஷன், பரமபதத்திலுளளோர் கைங்கர்யம் செய்யும் போது 'ஸஹஸ்ரதாபவதி' என்று ஆயிரம் உருவம் எடுக்கிறார்கள் என்று அருமறை அறிவித்ததன்றோ, அழகுடைய பரம புருஷனுக்கு எல்லா விதமான அடிமையையும் செய்யவல்ல அருமையுடைய தலை.

**'திகளொழி முந்நீர் கடைந்தக்கால் வெற்புத்**
**திகழ்பெழ வாங்கித்தஞ் சீர்ச்சிரத் தேற்றி ........**

(பரிபாடற்றிரட்டு -1)

இப்பாடலில் ஆதிசேஷனின் பலவகை பெருமைகளை கூறுகிறார். தூய வெள்ளை ஒளி திகழும் பாற்கடலைக் கடைந்த அக்காலத்தில், ஆற்றுநீர், ஊற்று நீர், மழை நீர் என கடலை விளங்கா நிற்கும் மந்தர மலையை மேலே ஏற்றி, உலகையே தாங்கும் பெருமையை உடைய தம் தலைகள் மேலே அம்மலையை ஏற்றி, திமிங்கிலம் உலாவும் அப்பாற்கடலிலே மத்தாக நாட்டி, அது அசையாதபடி நிறுத்தி, புகழமைந்த சிறப்புடைய தேவ அசுரர் ஆகிய இரு வகுப்பினரும் அமுதத்தைக் கடைந்து கொடுக்க, மிகவும் நீண்டு நின்ற கடைகயிற்றின் இருபுறங்களையும், சக்கரத்தை ஏந்தி நிற்கும் திருமால் பிடித்துக் கடைய, இருபுறமும் கடைகயிறாகி, வாசுகியே கடை கயிறாயிற்று என்று புராணங்களில் சொல்லப்பட்ட போதிலும் தன் அடியனான வாசுகிக்கு தன் அம்சத்தை ஆதிசேஷனை கொடுத்திருந்தபடியால், இங்கு அந்த ஆதிசேஷன் கடை கயிறானதாக கூறப்படுகிறது. அழிவதோ குறைவதோ செய்யாத தன் பலத்தாலே மிக நீண்ட காலம் கடையப்பட்டதாகையாலே அக்காலம் முழுதும் வாசுகியாகிற கயிறு அறுந்து போகாதபடி தன் சக்தியை அக்கடைகயிற்றுக்கு கொடுத்து மந்தர மலையை அழகு செய்ததும் இவ்வாதிசேஷனே. மந்தர மலையைப்பறித்து கடலிலே நாட்டியது திருமாலே என்று சில புராணங்களில்



காண்கையாலே, வேறு வகையான பொருளும் கூறலாம். இப்பாடலில் **'அமுது கடைய விருவயினாணாகி'**..... ஆதிசேஷன் செய்ததைச் சொல்லுகிறது. பலம் மிகுந்து நின்ற காற்று கடவுளின் மிகுந்த பலம் முழுதும் மேருமலையை அணுகாதபடி எதிரிட்டு நின்றதும் இவ்வாதிசேஷனே. ஒரு காலத்தில் வாயு தேவனுக்கும், ஆதிசேஷனுக்கும் பலத்தில் யார் பெரியவர் என்ற போட்டி உண்டாக, மேரு மலையின் சிகரங்களில் மூன்றை தான் பெயர்த்து தள்ளுவதாகவும் ஆதிசேஷன் வலிமை மிகுந்த வனானதால் அதைக் காக்கலாம் என்று வாயு தேவன் கூறி தன் பலத்தை கொண்டு காற்று அடிக்க, ஆதிசேஷன் தன் வலிமையினால் அம்மேருமலையை காற்று சிறிதும் அணுகாதபடி தன் ஆயிரம் படங்களைக் கொண்டு அதை அணைத்து காத்தான் எனும் புராண விருத்தாந்தத்தைக் கூறலாம்.

**ஆதிசேஷன் வில்லின் நாணாகியது:**

நீலமணியை ஒக்கும் கருநிறம் பொருந்திய பெரிய

மலைகளோடு விளங்கும் இவ்வுலகை ஓர் ஆபரணம் போல் தலையில் தாங்குபவனும் ஆதிசேஷனே, பணிய வேண்டிய வர்களுக்கும் பணியாதவன் எனும் சிறப்புடையவனாய், ஓடுவதையே இயல்பாக கொண்ட எருதை ஊர்கின்றவனான சிவன் திரிபுரத்தை அழித்தபோது அவன் தாங்கிய மிகவுயர்ந்த உச்சியையுடைய இமயமலையாகிற வில்லுக்கு நாணாயிருந்து அத்திரிபுரத்தை வெல்லச் செய்தவனும் இவ்வாதி சேஷனே.

**'தன் உரு உறமும் பாற்கடல் நாப் பண்,**
**மின் அவிர் சுடர் மணி ஆயிரம் விரித்த**
**கவை நா அருந்தலைக் காண்பின் சேக்கைத்**
**துவளம் சூடிய அறிதுயிலோனும்** (பரிபாடல் - 13)

எனுமிடத்தில், நீலமேகத் திருஉருவான தன் உருவோடு வேறுபட்டு நிற்கையாலே வர்ண சேர்த்தியழகும் வெண்ணிறப் பாற்கடலின் நடுவே மின்னலைப் போன்று சுடர் விடும், ஆயிரம் ரத்னங்களைக் கொண்ட, பிளவு பட்ட நாவையுடைய, ஆயிரம் அரிய தலைகளையுடைய காணவினிய படுக்கையான ஆதிசேஷன் மேலே, ஜகத்ரக்ஷண சிந்தையுடன் உறங்குவான் போல் யோகு செய்யும் க்ஷீராப்தி நாதனைச் சொல்லுகிறது. மேலும்,

**'அணங்கு அருந்தலை ஆயிரம் விரித்த**
**கணங் கொண் சுற்றத்து அண்ணலை வணங்கி,**
**நல் அடி ஏத்தி நிற்பரவுதும் -**
**எல்லேம் பிரியற்க எம் சுற்றமொடு ஒருங்கே.**

இப்பாடலின் கடைசி அடியில், ஆதிசேஷனை முன்னிட்டுக் கொண்டு திருமாலை வணங்க வேண்டும் என்கிறார். கண்டவர்க்கு அச்சத்தை விளைவிக்கும் தன்னுடைய அரியவையான ஆயிரம் தலைகளையும் குடை போல் விரித்து உனக்கு நிழலைத் தருகிறவனான ஆதிசேஷனை வணங்கி, புருஷகாரத்தை முன்னிட்டே பரமபுருஷனை பற்ற வேண்டும் என்னும் வைஷ்ணவ

சித்தாந்தத்தைக் காட்டுகிறார். திருமாலின் அடியவனான ஆதிசேஷனின் திருக்கோயிலை **'துங்கா விழுச்சீர்த் துறக்கமான'** மோஷத்திற்கு ஒப்பிடுவதிலிருந்தும், சிவனுடைய திரிபுர மெரித்த பெருமையையும் ஆதிசேஷனால் வந்தது என்று பாடுவதிலிருந்தும் சங்க கால தமிழர்கள் திருமாலையே பரம் பொருளாகக் கருதினர் என்பதும் விளங்குகிறது.

**உபய வேதங்களில் ஆதிசேஷன்:**

கௌஷீதகி உபநிஷத்தில் பர்யங்க வித்யை என்று ஒரு பிரம்ம வித்யை படிக்கப்படுகிறது. அதில் முக்தி அடையும் ஜீவன் பரமபதம் சென்று ஒரு படுக்கையில் வீற்றிருக்கும் பிரம்மத்தை, திருவடியைப் பற்றிக்கொண்டு படுக்கையில் ஏறும் விவரமும் பிரம்மத்துக்கும் அந்த ஜீவனுக்கும் இடையே நடக்கும் உரையாடலும் வர்ணிக்கப்படுகிறது.

கொஷீதகி உபநிஷத்தில் படுக்கையைப் பற்றிப் பேசும் வாக்கியம் 'ஆமிதௌஜா: பர்யங்க:' என்பதே. 'அளவற்ற பிரம்மத்தை உடையவன் பிரம்மத்திற்குப் படுக்கையாக இருக்கிறான்' என்பது இதற்கு பொருள். இதைத் திருவுள்ளம் பற்றிய ஆளவந்தார் தம் ஸ்தோத்திர ரத்னத்தில் கூறியதை பின் நோக்குவோம்.

அந்த பெரியபிராட்டியாரோடு கூட மேலான ஞானத்திற்கும் பலத்திற்கும் நிகரற்ற இருப்பிடான திருவனந்தாழ்வானுடைய திருமேனியில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் என்று அநுசந்திக்கிறார். பெரியவாச்சான்பிள்ளை இந்த ஶ்லோகத்தின் வியாக்கியானத்தில் 'பர்யங்க வித்யையில்' சொல்கிறபடியே திருவனந்தாழ்வான் மடியிலே பிராட்டியோடே எழுந்தருளியிருக்கிற சேர்த்தியை அநுபவிக்கிறார், என்று அருளியுள்ளார். அளவற்ற ஞானம், பலம் முதலான குணங்களை உடையவன் இத்திருவனந்தாழ்வான் என்றும் கந்தர்வர்களும் அப்ஸரஸுக்களும்

கின்னரர்களுடனும், மஹாநாகங்களுடனும் கூடிய சித்தர்களும் இவனுடைய குணங்களின் எல்லையை அடைவதில்லை. ஆகையால் அநந்தானென்று சொல்லப்படுகிறான் என்னும் ப்ரமாண ஶ்லோகத்தைக் காட்டி நிரூபிக்கிறார். இவனுடைய பலத்தைப் பற்றிப் பேசும்போது 'எம்பெருமானும் கூசவேண்டாதே துகைத்து பரிமாறலாம்படியான தாரண ஸாமர்த்தியத்தை உடையவன்' என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

**சிலப்பதிகாரம்** :

மேலும் சிலப்பதிகாரத்தில் **'வடவரையை மத்தாக்கி வாசுகியை, நாணாக்கி,** கடல் வண்ணன் பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே என்ற வரிகளில் கடல் கடைய நாணாகியது பற்றி கூறுவதைக் காணலாம். **'நீலமேகம் நெடும் பொன் குன்றத்து பால் விரிந்து அகலாது படிந்தது போல்'** என்கிற பாடலின் சிலப்பதிகாரச் செய்யுளையும்,

**' காந்தளஞ் சிலம்பிற்கயிறு படிந்தாங்கும்**
**பாம்பணைப் பள்ளிய மர்ந்தோன்'**

என்கிற பெரும்பாணாற்று படையில் திருவெ·காவில் ஆதிசேஷன் மேல் பள்ளிக் கொண்டது பற்றிக் கூறுவது தெரியும். எப்படி எனில், ஒரு பெரிய பொன்மலை மீது ஒரு நீலமேகம் அம்மலையனவாக படிந்தாற்போல், படம் விரித்தெழுந்த ஆயிரம் தலைகளையும், அரிய வலிமையையும் உடைய ஆதிசேஷனாகிற படுக்கையின் மீது, உலகெல்லாம் தொழுதேத்தும்படியான, திருமகளைத் திருமார்பிற் கொண்ட திருமால் கிடந்த திருக் கோலமாக எழுந்தருளியிருப்பதாக பாடியிருப்பது படித்துப் படித்து இன்புறத்தக்கது.

## 18. ஸ்ரீ விஷ்ணுபுராணம்

ப்ரளய கடலிலே பள்ளி கொண்ட உனது யோக நித்திரையானது, விஷ்ணு புராணத்தில்:

**'ஆத்மாநம் வாஸுதேவாக்க்யம் சிந்தயர் மதுஸூதந':**
**(6-4-6)**

என்று வர்ணிக்கப்படுகிறது.

உலகில் அநேக பாகங்களை அழித்து ஆத்மமாயை யாகிற மூல ப்ரக்ருதியில் எந்த ஜீவாத்மாக்களுக்கு யோகம் இனி செய்ய வேண்டும். நமது பரவாஸுதேவ ரூபத்தை யனுபவித்து நிற்கும்படி எத்தனை ஜீவாத்மாக்களுக்கு அங்கே யோகம் (சேர்க்கையை) செய்தோம். இதற்கு நாமெடுக்க வேண்டிய திருமேனி கள் யாவை? தோற்றுவிக்க வேண்டிய குணங்கள் யாவை? எந்த அம்சத்தில் வாசியறிதல் நலமாயிருக்கும் என்றெல்லாம் சிந்திப்பதே யோக நித்திரையாகும். பாற்கடலிலும், ப்ரளயக் கடலாம் யோக நித்திரைக்கு ஒப்பாய் சற்று குறுகலான சிந்தையாம்.

இப்படி சேதனர்களுடன், ஆதிசேஷனுடன் யோகத்திற்காக சிந்தனை செய்கின்றவன் நீ இவ்வளவு செய்வதாலே எனக்கு மஹோபகாரனானாய், இப்போது செய்யும் இந்த வாய்ப் பணியாம் அடிமையானது முடிவில் வழுவிலா அடிமைக் கொண்டு சேர்க்கப் போவதால், பரமபதத்திற்போலே இங்கிருந்த நாளுமினி நற்போதாவதாய் அந்தமிலடிமையடைந்தவனேயானேன். ஆதிசேஷன் விட்டாலும் நான் விடமாட்டேன் என்ற திடம் எனக்கு உளது என்கிறார்.



## 19.ஆழ்வார்கள்

திருமகள் கேள்வனாலே மயர்வற மதிநலம் அருளப் பெற்றவர்கள் ஆழ்வார்கள். எம்பெருமானிடத்தில் பக்தியில் ஆழ்ந்தவர்கள். ஆதலால் **'ஆழ்வார்கள்'** எனபட்டனர். எம்பெருமானுடைய அருளைப்பெற்று, அதனால் பக்தி மேலிட்டு, எம்பெருமானை அனுபவிக்கத் தொடங்கினார். அந்த அனுபவம் உள்ளடங்காமல் அழகிய தமிழ்ப் பாசுரங்களாக வெளிப்பட்டன. இவர்கள் எம்பெருமானைப் பாடுவதோடு நில்லாமல், அவனுடைய அடியவர்களையும் பாடினர். பரமபதத்திற்கு சென்று பகவானுடைய அடியவர்களுடன் கூடுவதையே பெறும் பேறாகக் கருதினார். **'அடியார் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ'** என்றும் **'மெய்யடியார் ஈட்டங் கண்டிடக் கூடுமேல் அதுகாணும் கண்** பயனாவதே' என்றும் **'அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை'** என்றும் **'உற்றதும் உன்னடியார்க் கடிமை'** என்றும் எம்பெருமானடியவர்களுக்கு ஆட்படுவதை **'பெரியார்க்கு ஆட் பட்டக்கால் பெறாத பயன்'** பெறுவதாக எண்ணினர். அதனால் அவர்கள் எம்பெருமானுக்குச் செய்யும் கைங்கர்யங்களைப் புகழ்ந்து பாடினர். திருவாழி, திருச் சங்கு, ஆதிசேஷன், கருடன் முதலிய நித்யசூரிகளையும், அவர்கள் செய்யும் கைங்கர்யங்களையும் பாசுரங்களிளில் குறிப்பிட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக ஆதிசேஷனைப் பற்றி அதிக அளவில் பாடியுள்ளனர். ஆழ்வார்களை அடைவை மாமுனிகள்:

**' பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ் மழிசை**
**ஐயன ருள்மாறன் சேரலர் கோன் துய்யப்பட்ட**
**நாதன் அன்பர் தாள் தூளி நற்பாணன் நன்கலியன்**
**ஈதிவர் தோற்றத் தடைவாமிங்கு.'**

(உபதேச ரத்தினமாலை – 4)

என்றருளிச் செய்துள்ளார். ஆழ்வார்கள் பதின்மரும், ஆண்டாளும் ஆதிசேஷனை அனுபவித்த அழகைக் கீழே காண்போம்.

அநந்தாழ்வான் ஸர்வேச்'வரனையும் விஞ்சும் ஸ்வரூப, ரூப, குணங்களை உடையவன். ஸ்தோத்திரம் செய்ய ஆயிரம் வாய்களை உடையவன். எம்பெருமானுக்கு பணிவிடை செய்ய பல உருவம் எடுப்பவன், பரிவுடன் மங்களாசாஸனம் செய்பவன். இவன் மேல் பள்ளி கொண்டதாலேயே எம்பெருமான் உலகைக் காக்கும் பரம்பொருள் என்று போற்றப்படுவது ஆகிய சிறப்புக்களை ஆழ்வார்கள் பாசுரங்களிலே காணலாம்.

## 20.பொய்கை ஆழ்வார்

**துலாயாம் ஸ்ரவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சந வாரிஜாத்|**
**த்வாபரே பாஞ்சஜந்யாம்ஸம் ஸரோயோகி நமாஸ்ரயே ||**

முதலாழ்வார்கள் மூவரில் முதல்வராக வந்துதித்த பொய்கைஆழ்வார் திருக்கச்சி மாநகரில் ஐப்பசியில் திருவோணத்தில் அவதரித்தவர். புற இருளை ஒழித்திட **'மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து'** திருவிளக்கு ஏற்றியவர். இவர் தம்முடைய **'அருந்தமிழ் நூற்றந்தாதியி'ல்** ஆதிசேஷனின் அரும் பெரும் தொண்டுகளை அழகுற விளக்குகிறார்.

**'சென்றால் குடை ஆம் ; இருந்தால் சிங்காசனம் ஆம் ;**
**நின்றால் மரவடி ஆம் ; நீள் கடலுள் என்றும்**
**புணை ஆம் ; மணி விளக்கு ஆம் ; பூம் பட்டு ஆம் ; புல்கும்**
**அணை ஆம் திருமாற்கு அரவு**

(முதல் திருவந்தாதி 53வது பாசுரம்)

கட்டிப் பொன் பல விதமான ஆபரணங்களாக்க வல்லாதாயிருப்பது போலே அனந்தானாகிற இவ்வடிவமும், குடை, சிங்காசனம், மரவடி, புணை, மணி விளக்கு, பூம்பட்டு, அணை முதலான பல கைங்கர்யோபகரணங்களாக ஆக்கிக் கொள்ளலாம்

படியிருக்கிறது. தன் உகப்புக்கும் போக்குவீடாக ஸர்வேஶ்வரன் உலாவியருளப் புக்கால் மழை, வெய்யில் படாதபடி குடையாக ஆவான் திருவனந்தாழவான். கிருஷ்ணாவதாரத்திலே குழந்தையாகிய கண்ணனை வஸுதேவர் தூக்கிச் சென்றபோது இவன் குடையாகப் பின் தொடர்ந்ததைக் கண்டோமன்றோ. **'நான் குடையாய் நின்றேன் ; நீ உலாவுவாயாக'** என்று கூறுவதில்லை. அவன் உலாவினால் குடை வேணடியபோது தான் குடையாகிறான் சேஷியுகந்த அடிமை செய்பவன் என்று கருத்து. இதனால் அன்றோ **'சேஷன்'** எனப்படுகிறான். ஸர்வேஶ்வரன் தானே விரும்பி எழுந்தருளியிருக்க நினைத்த போது அழகியசிம்மாசனமாக தன்னை ஆக்கிக் கொள்கிறான். அவன் தான் விரும்பி எழுந்தருளி நின்றால் இவன் திருப்பாதுகைகளாவான். பெரும் பரப்பையுடைய தான் திருபாற்கடலிலே கண் வளர்ந்தருளும் போது இவன் எல்லா காலத்திலும் திருப்பள்ளி மெத்தையாகியிருப்பான். ஏதேனும் ஒரு பொருளை விளக்கிட்டு காண வேண்டியிருக்கும் போது சோதிமயமான இரத்தினங்களைத் தலையிலே தாங்கி நிற்கும் திரு அனந்தாழ்வான் மகர தீபமாகவும் ஆவான். சர்வேச்வரன் சாத்திக் கொள்ள திருப்பீதாம்பரம் வேண்டியிருக்கும் போது இவன் தானே பரமபுருஷனைக் காட்டித்தரும் திருப் பீதாம்பரமாவான். சாய்ந்தருளும் போது பிராட்டிமாரும் பொறாமை கொள்ளும்படி பரமபுருஷன் தழுவிக் கொள்ளும் அணையாக ஆவான் திருவனந்தாழ்வான். பிராட்டிமாரோடு ஊடல் நடையாடும்போது அத்துன்பம் தீரத்தழுவிக் கொள்ளும் அணையாய் இருப்பான் திருவனந்தாழ்வான் என்றுமாம்.

மேலும் முதல் திருவந்தாதி 21ம் பாசுரத்தில்

**' நின்று, நிலம் அங்கை நீர் ஏற்று மூவடியால்,**
**சென்று, திசை அளந்த செங்கண் மாற்கு என்றும்**
**படை ஆழி ; புள் ஊர்தி ; பாம்பு அணையான் பாதம்**
**அடை ஆழி நெஞ்சே! அறி.**

மகாபலியிடம் மூன்றடி யாசித்துப் பெற்று திரு உலகளந் தருளின எம்பெருமானின் பரத்வ சின்னங்களைப் பேசுகிறார். எம்பெருமான் கையில் திருவாழியை உடையவனாயும், கருடனை வாகனமாக உடையவனாகவும், திருவனந்தாழ்வானாகிற படுக்கையையும் உடையவனாகவும் விளங்குகிறான். எப்பொழுதும் திருவனந்தாழ்வானாகிற படுக்கையைப் பிரியாமல் இருப்பவனாகையாலே அடியாரோடு கலப்பதையே இயல்வாகக் கொண்டவன். அவனை அனுபவிக்கப்பார் என்று நெஞ்சிடம் கூறுகிறார்.

## 21.பூதத்தாழ்வார்

**துலா தநிஷ்டா ஸம்பூதம் கல்லோகமாலிந : |**
**தீரே புல்லோத்பலே மல்லாபுர்யாமீடே கதாம்ஸகம் ||**

முதலாழ்வார்கள் மூவரில் இரண்டாவதாக அவதரித்த பூதத்தாழ்வார் திருக்கடல் மல்லையில் ஐப்பசியில் அவிட்ட நக்ஷத்திரத்தில் தோன்றியவர். **'இறைவனைக் காணும் இதயத்து இருள் கெட ஞான மென்னும் திருவிளக்கேற்றியவர் ;** தம்முடைய ஞானந்தமிழாகிய திருவந்தாதியில் ஆதிசேஷன் புகழ் பாடுகிறார்.

**' திரிந்தது வெம் சமத்துத் தேர் கடவி ; அன்று**
**பிரிந்தது சீதையை மான் பின் போய் ; பிரிந்ததுவும்**
**கண் பள்ளி கொள்ள அழகியதே நாகத்தின்**
**தண் பள்ளி கொள்வான் தனக்கு?**

(2ம் திருவந்தாதி – 15ஆம் பாசுரம்)

கிருஷ்ணாவதாரத்தில் கொடிய பாரத யுத்தத்தில் பார்த்த சாரதியாகத் தேரை நடத்திக் கொண்டு திரிந்ததும், இராமாவதாரத்தில் மாயமானாகிய மாரீசன் பின்னே சென்று பிராட்டியைப் பிரிந்து அலைந்ததும், தரையிலே பள்ளி கொண்டதும் திருவனந்தாழ்

வானாகிற குளிர்ந்த படுக்கையில் பெருமானுக்குத் தகுந்ததோ என்கிறார். பிராட்டிமார்களும் கூசிப்பிடிக்கும் படியான சுகுமாரமான திருமேனியைக் கொண்டு இந்த செயல்களை செய்தது சரியோ? திருவனந்தாழ்வானாகிற தண்மைமிக்க படுக்கையிலே பள்ளி கொள்வதையே இயற்கையாகவுடைய அதிசுகுமாரமானமான திருமேனியைக் கொண்டவன் என்று, எம்பெருமான் மென்மையான திருமேனியை உடையவன் என்றும் காட்டுகிறார். தன்னுடைய மேன்மைக்குத் தக்கவாறு மென்மை, குளிர்ச்சி, நாற்றம், விசாலம், பளபளப்பு முதலிய படுக்கைக் குணங்களை இயல்பாகவே உடைய திருவனந்தாழ்வானைத் தனக்கு படுக்கையாகக் கொண்டவன். எம்பெருமானின் உகப்புக்கு தக்க அமைப்பைக் கொண்ட படுக்கையாக இருந்து அனந்தன் பண்ணும் கைங்கர் யத்தைக் குறிப்பிடுகிறார்.

மேலும் பூதத்தாழ்வார் 2ம் திருவந்தாதி 96ஆம் பாசுரத்தில் ஆதிசேஷனை அனுபவிப்பதை சற்றே நோக்கலாம்.

**'அத்தியூரான், புள்ளை ஊர்வான், அணி மணியின்**
**துத்தி சேர் நாகத்தின் மேல் துயில்வான் முத்தீ**
**மறை ஆவான், மா கடல் நஞ்சு உண்டான் தனக்கும்**
**இறை ஆவான் எங்கள் பிரான்.'**

பெரியதிருவடியை வாகனமாகக் கொண்டவனாய், ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டவனாய், வேதத்தால் அறிவிக்கப்படுபவனாய், ருத்ரனுக்கும் ஸ்வாமியானவனாய் இருப்பவன் திருஅத்தியூரில் எழுந்தருளி உள்ளான். அணி மணியின் துத்தி சேர் நாகத்தின் மேல் துயில்வான் - அலங்காரமாக அணியப்பட்ட அழகியமணி களையும், படத்திலுள்ள அழகிய பொறிகளையும் கொண்டிருப் பதால் ஸர்வேச்வரனுடைய படுக்கையாயிருக்கத்தக்க அழகை உடையவனாயிருக்கிறான் திருவனந்தாழ்வான். **"தன்பால் ஆதரம் பெருக வைத்த அழகனு"**க்கேற்ற அழகிய படுக்கை.

## 22.பேயாழ்வார்

**துலா ஸதபிஷக்ஜாதம் மயூரபுரிகைரவாத் |**
**மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீநந்த காம்சகம் ||**

முதலிரு ஆழ்வார்களும் ஏற்றிய விளக்கின் ஒளியினால், புற இருளும், அக இருளும் **'மாண்டபின் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டவர். திருமயிலையில் ஐப்பசியில் சதயத்தில் அவதரித்தவர்', 'திருக்கண்டேன், பொன் மேனி கண்டேன்'** என்று பரத்வ சின்னமான பிராட்டியுடன் எம்பெருமானைக் கண்டவர்.

**நன்கு ஓதும் நால் வேதத்து உள்ளான் ; நறவு இரியும்**
**பொங்கு ஓதருவிப் புனல் வண்ணன் ; சங்கு ஓதப்**
**பாற்கடலான் ; பாம்பு அணையின் மேலான் ; பயின்று உரைப்பார்**
**நூல் - கடலான் ; நுண் அறிவினான்."**

(மூன்றாம் திருவந்தாதி – 11)

நான்கு வேதங்களில் சொல்லப்படுபவனும், கடல் போன்ற நிறத்தை உடையவனும், திருபாற்கடலில் கண் வளருபவனும், சேஷ சயனத்தின் மேல் சயனித்திருப்பவனுமான எம்பெருமான் தன் முயற்சியினால் அறிபவர்க்கு அறிய முடியாதவன்.

எல்லா வேதங்களிலும் உட்பொருளானவன் என்கின்றபடியே எல்லா வேததிலும் சொல்லப்படுகின்றவனாகயிருந்த போதிலும், மேலெழப்பார்ப்போர்க்கு இந்திரன் முதலிய தேவதைகளைச் சொல்லுகிறவையாக தோன்றும்.

சங்குகளை அலைகளால் கொழித்து எறிகிற திருபாற்கடலிலே சயனித்திருப்பவன், பாம்பணை மேல் நீர் உறுத்தாமலிருக்க ஆதிசேஷனான படுக்கையை விரித்து படுத்து இருப்பவன். அடியரோடு அணைந்திருப்பதே தன் இயல்பு என

குணப்பெருமையும் காட்டி கொண்டிருப்பவன் என்கிறார் பேயாழ்வார். மேலும், (15ஆம் பாடலில்,

**'பணிந்து உயர்ந்த பௌவப் படு திரைகள் மோத,**
**பணிந்த பணமணிகளாலே – அணிந்து அங்கு**
**அனந்தன் அணைக் கிடக்கும் அம்மான் அடியேன்**
**மனம் தன் அணைக் கிடக்கும், வந்து'.**

எம்பெருமானை ஸ்பரிசிக்க வேண்டும் எனும் ஆவலாலே மேலே எழுவதும், கீழே விழுவதுமாயிருக்கும் கடலில் உண்டாகும் அலைகளானவை நாற்புறமும் எம்பெருமானுடைய மென்மையை நோக்காமல் மலை மோதுவது போலே மோதிக் கொண்டிருக்க, அத்திவலைகளில் ஒரு சிறிதும் திருமேனியில் படாதபடி குடை பிடித்தாற்போல் கவிழ்ந்திருக்கும் பணா மண்டலத்தில் உள்ள மணிகளாலே அழகுபெற அலங்கரித்துக் கொண்டுள்ள அப பேற்பட்ட திருவனந்தாழ்வானாகிய திருப்பள்ளி மெத்தையிலே சயனித்திருக்கிறார் ஸர்வேஶ்வரன். எத்தனை அலைகள் மேலே மோதினாலும், அவற்றை எல்லாம் தானே தாங்கிக் கொண்டு எம்பெருமானைக் காக்க வல்ல அனந்த பலத்தை உடையவன். அஸ்தானே பயசங்கையால் அநந்தனாய் இருப்பவன் என்றுமாம், அத்தகைய படுக்கயைில் கிடப்பதிலிருந்தே இவனை சர்வேச்வரன் என்பது தெளிவாகிறது.

**'இவை அவன் கோயில் இரணியனது ஆகம்**
**அவை செய்து அரி உருவம் ஆனான், செவி தெரியா**
**நாகத்தான், நால் வேதத்து உள்ளான் நறவு ஏற்றான்**
**பாகத்தான், பாற்கடல் உளான்.'**

(மூன்றாம் திருவந்தாதி – 31ஆம் பாசுரம்)

**'இரணியனதாகம்'** என்று தொடங்கி அவனுடைய ஆஶ்ரித விரோதி நிரஸன ஸ்வபாவத்தையும், ஆஶ்ரித ரக்ஷண

ஸ்வபாவத்தையும் அனுபவிக்கிறார். கண்களையே செவியாக உடையவன், கண்ணைக் கொண்டே காதின் கார்யமான கேட்டலையும் செய்யக் கூடியவனாகையாலே, **'செவியாலே தெரியும். தெரிவு (அறிவு) இல்லாதவனான திருவனந்தாழ்வான்' 'செவி தெரியா நாகம்'** எனப்படுகிறான். அவனுடைய திருமேனியை எப்போதும் உகந்திருப்பவனாகையாலே **'செவி தெரியா நாகத்தான்'** எனப்படுகிறார் ஸர்வேஶ்வரன். செவி தெரியா நாகம், அப்பரம் பொருள் காது இல்லாமலேயே கேட்கக் கூடியது என்று பரமனை ஒரு புடை ஒத்திருப்பவன். இத்தால் ஆஶ்ரித ஸம்ஶ்லேஷ பாவத்வம் சொல்லப்படுகிறது.

**தீயோரை அழித்த வரலாறு :**

இனி 66ஆம் பாசுரத்தை அனுபவிப்போம்.

**"காய்ந்து, இருளை மாற்றி கதிர் இலகு மா மணிகள்**
**ஏய்ந்த பணக் கதிர் மேல் வெவ்வுயிர்ப்ப, வாய்ந்த**
**மதுகைடவரும் வயிறு உருகி மாண்டார்**
**அது கேடு அவர்க்கு இறுதி ஆங்கு".**

சிறிய ஒளியாயிருந்தால் இருளோடு சேர்ந்துமிருக்கும். பேரொளியாகையாலே இருளோடு சேர்ந்திருக்க மாட்டாமை யன்றிக்கே, இருளை அழிக்கும் கிரணங்களை உடையவன் ஆதிசேஷன். அப்பேறபட்ட கிரணங்கள் ஒளிவிடாநிற்கும் பெருமதிப்புள்ள படத்தின் ஒளிக் கற்றைக்கு மேலே, எம்பெருமான் பெருமூச்சு விட வயிறுருகி மாண்டனர் எதிரிகளாகிய மது, கைடவர். இப்படி எம்பெருமானின் பெருமூச்சாலே மாண்டார்கள் என்று கொண்டால்தான் மதுசூதனன், கைடபாரி எனும் நாமங்களுக்கு மிக பொருத்தமாயிருக்கும் அப்படியிருக்க, சககரத்தால் தலை கொண்டாலும் இவனே தலையறுத்ததாகச் சொல்வது போல் திருவனந்தாழ்வானுடைய விஷப்பெரு மூச்சாலே

அவர்களை அழித்தான் என்றும் கூறுவர். தன் பணங்களின் ஒளிக்கு மேலே, திருவனந்தாழ்வான் எம்பெருமானை அனுபவித்ததால் உண்டான ஆனந்தத்துக்குப் போக்குவீடாய் பெருமூச்சு விட, அப்போது ப்ரதிகூலராக வந்த மதுகைடபர் குடலுருகி மாண்டார்கள் என்கிறபடி.

## 23.திருமழிசை ஆழ்வார்

**காயாம் மகரே மாஸே சக்ராம்ஸம் பார்க்க வோத்பவம் |**
**மஹீஸாரபுரதீசம் பக்திஸாரமஹம் பஜே||**

'உறையிலாடதவர்' என்ற திருநாமம் பெற்ற இவ்வாழ்வார் எம்பெருமானின் ஜகத்காரணத்வத்தையும், பரத்வத்தையும் தன் பாசுரங்கள் மூலம் சந்தேகமற நிலை நாட்டியவர். **'நான்முகனை நாராயணன் படைத்தான். நான் முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான' என்றும், இனியறிந்தேன் ஈசற்கும் நான் முகற்கும் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை இனியறிந்தேன் காரணம் நீ'** என்ற பாசுரங்களில் தெளிவாக அருளிச் செய்துள்ளார். இவ்வாழ்வார் நற்றவர்கள் கொண்டாடும் நாளான தையில், மகத்தில், திருமழிசை என்ற க்ஷேத்திரத்தில் தோன்றியவர். தம்முடைய ப்ரபந்தமான திருவிருத்தத்திலும், நான்முகன் திருவந்தாதியிலும் ஆதிசேஷனின் பெருமைகளைக் கூறியுள்ளார்.

**ஆதிசேஷனின்** பொங்கும் பரிவு

**'ஆங்கு ஆரவாரம் அது கேட்டு, அழல் உமிழும்**
**பூங்கார் அரவு அணையான் பொன் மேனியாம் காண**
**வல்லமே அல்லமே? மா மலரான் வார் சடையான்**
**வல்லரே அல்லரே ? வாழ்த்து!**

(நான்முகன் திருவந்தாதி – 10ஆம் பாசுரம்)

திருவிக்ரம அவதாரத்தில் பிரம்மன் முதலான தேவர்களுடைய கோஷத்தைக் கேட்டு, அசுரர்கள் வந்து ஆரவாரம் செய்வதாக நினைத்து பிரமித்து, விஷாக்னியைக் கக்குகின்ற, அழகிய திருனந்தாழ்வானைப் படுக்கையாக உடைய எம்பெருமான்.

எம்பெருமான் அடியவர்களுக்காகத் திருவுலகளந்தருளின போது, எல்லா திக்கில் உள்ளவர்களும், எம்பெருமானைத் துதிக்கும் ஶப்தத்தைக் கேட்டு, ஸர்வேஶ்வரனுக்கு யாரேனும் தீங்கிழைக்க வருகிறார்களோ, என நினைத்து தகாதவிடத்தில் பயப்பட்டு ஆதிசேஷன் தீயை உமிழ்கிறான். ஆதிசேஷனைப் **'பூங்காரவணையான்'** என்கிறார் ஆழ்வார். எம்பெருமானிடத்தில் உள்ள அன்பாலே உண்டான சீற்றமாகையாலே **'அழகிய சீற்றம்'** என்கிறார். இந்த சீற்றம் எப்பொழுதும் மாறாதே இருக்க வேண்டுமென்று ஆழ்வாரும் மங்களாசாஸனம் செய்யும்படியாயுள்ளது.

அடுத்து 35ஆம் பாசுரத்தில்

**தாளால் உலகம் அளந்த அசைவே கொல்?**
**வாளா கிடந்தருளும் வாய்திறவான் - நீள் ஓதம்**
**வந்து அலைக்கும் மா மயிலை மா அல்லிக் கேணியான்,**
**ஐந்தலை வாய் நாகத்து அணை.**

பெரிய அலைகள் வந்து அடிக்கிற சிறந்த மயிலைக்கு அடுத்த திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் ஐந்து தலைகளையும் வாய்களையுமுடைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையில் அசையாமல் கிடக்கிறான். பேசவும் இல்லை. திருவடியால் உலகம் அளைந்த களைப்போ! என வினவுகிறார்.

காற்றும் வெய்யிலும் தாக்காதபடி குடை போன்றிருக்கும் ஐந்து தலைகளையும், பரிவுடன் துதிக்கவல்ல ஐந்து வாய்களையும் உடையவனாய், எம்பெருமான் கரடுமுரடான காடு

மேடுகளை அளந்த களைப்பு தீர மெத்தென்ற பஞ்சணையா யிருக்கும் ஆதிசேஷனாகிற படுக்கையிலே, உலகம் அளந்த களைப்புத் தீர சாய்ந்தருளினான் போலும் என்கிறார்.

அடுத்து 36ஆம் பாசுரத்தில் மேலும் அனுபவிக்கிறார்,

**நாகத்து அணைக் குடைந்தை வெ.'.கா திருஎவ்வுள் ;**
**நாகத்து அணை அரங்கம் பேர் அன்பில் ; நாகத்து**
**அணை பாற்கடல் கிடக்கும் ; ஆதி நெடுமால்**
**அணைப்பார் கருத்தன் ஆவான்.**

எம்பெருமாள் திருவனந்தாழ்வான் மேல் பள்ளி கொண டிருக்கும் நிலையை நாலைந்து திவ்ய தேசங்களோடு சேர்த்து அனுபவிக்கிறார். திருக்குடந்தை, காஞ்சியில் திருவெ.'.கா, திருவெவ்வுள், திருவரங்கம், திருப்பேர், திரு அன்பில், திருப்பாற்கடல் ஆகிய இடங்களில் சேஷசாயியாகக் கண் வளர்ந்தருளுவது அடியவர்களின் நெஞ்சிலே புகுவதற்காகவே என்கிறார்.

**ஆதிசேஷன் ஜோதிட நூல் செய்த வரலாறு:**

திருமழிசையாழ்வார் தன்னுடைய நான்காம் திருவந் தாதியில் 63வது பாசுரத்தில் மேலும் கூறுகிறார்.

**தரித்திருந்தேன், ஆகவே தாராகணப் போர்**
**விரித்து உரைத்த வெம் நாகத்து உன்னைத் தெரித்து எழுதி**
**வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும் ;**
**பூசித்தும் போக்கினேன் போது என்கிறார்.**

அதற்கு பொருள் எழுதிய ப்ரதிவாதி பயங்கரம் காஞ்சி ஸ்ரீ அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி அவர்கள் :

'நக்ஷத்திர கணங்களுடைய சுப, அசுப நிமித்தமான சஞ்சாரத்தை ஜ்யோதிச் சாத்திர முகத்தாலே விஸ்தாரமாக வெளியிட்டவனும், பிரதி கூலர்க்கு தீக்ஷணனுமான திருவனந்தாழ்வானுக்கு அந்தராத்மாவாகி உன்னை'. என்று உரை எழுதியுள்ளார்.

அதற்கு ப்ரமாண ஶ்லோகமாக:

'பபஸே ஜ்யௌ தி ஷீ வித்யா
யது பஜ்ஞா தராதலே
தம நந்த ம நந்தஸ்ய
தல்பம் லங்கல்பயே ஶ்ருதி':

எனும் ப்ரமாண ஶ்லோகத்தை தந்துள்ளார். இதனின்று திருவனந்தாழ்வான் சோதிட நூல் அருளிச்செய்தது உறுதியாகிறது. மேலும்,

நாகம் ஏந்து மேரு வெற்பை நாகம் ஏந்து மண்ணினை
நாகம் ஏந்தும் ஆக! மாகம் மாகம் ஏந்து வார்புனல்
மாகம் எந்து மங்கும் நீ ஒருவாய் ஐந்து அமைந்து, காத்து
ஏகம் ஏந்தி நின்ற நீர்மை நின்கணே இயன்றதே.

என்கிற திருச்சந்தவிருத்தம் 6ஆம் பாடலுக்கு சங்கநூல் ஒற்றுமையை காண்போம். (பரிபாடல்)'அனைத்தையும் வியாபித்து நிற்பதால் அனைத்துக்கும் ஆதாரமாயிருப்பவன் திருமாலே' என்ற இப்பாட்டில் விவரிக்கிறதாகையாலே எல்லா பொருளிலும் இவன் பூர்ணமாக வியாபித்து அந்தர்யாமியாயிருக்கிறான் என்றும் காட்டப்பட்டுள்ளது. பரமன் எல்லாவிடத்திலுமிருக்கிறானானால் எல்லா பொருள்களாலும் இவன் சுமை போல் சுமக்கப்படுகின்றனோ? எனும் ஐயம் விளையும். ஞானஸ்வருபனாகையாலே இவ்விரு ஐயங்களுக்கும் இடமில்லாமலே எல்லா பொருள்களையும் வியாபித்து அவற்றைத் தாங்குகிறான் எனும் விஷயத்தை கீதை (9-4-5) ஶ்லோகத்தில் சொன்னது போலவே 'உறையும்

**உறைவதும் இலையே : உண்மையும் மறவியில் சிறப்பின் மாயமார் அனையை'** எனும் மூன்றாம் பரிபாடல் காட்டியதும் தெரியவரும். சங்கநூல் ஒற்றுமையில் ஸர்வவ்யாபகவத்தால் ஏற்படும் ஸர்வதாரத்வத்தைத் திருமாலுக்கு முழங்கும் சங்கநூல் நூற்பகுதிகள் இங்கு மேற் கோளாகக் காட்டத்தக்கவை.

மேலும் ஆறாம் பாடலில்:

ஃஸ்வர்க்கத்தைத் தரிக்கிற மேரு எனப்படும் மலையை, ஸ்வர்க்கலோகத்தைத் தரித்து நிற்பவன், நாக! என்னும் பதம், ஆதிசேஷனான பாம்பையும் யானையையும் குறிக்கும்.பூமியை ஆதிசேஷனும் எட்டு திக்கஜங்களும் தாங்குவதாக புராணங்கள் கூறும். திக்கஜங்களாலே தாங்கப்படும் பூமி என்றும், ஆதிசேஷனால் தாங்கப்படும் பூமி என்றும் இரு விதமாகக் கொள்ளலாம். **'நாகமேந்துமாக:'** துன்பத்தின் வாஸனையும் அற்றதாய் இன்பம் நிறைந்திருக்கும் பரமபதம், இவ்வுலகத் துன்பங்களற்ற ஃஸ்வர்க்கம் (அன்றிக்கே) மற்ற நான்கு பூதங்களைக் காட்டிலும் பெரியதாயிருக்கையாலே **'மஹாகம்'** – ஆகாயத்தை கூறுவதாகவுமாம். மாகமேந்துவார்புனல் - ஆகாயத்திலே தரிக்கபடுகிற கங்கை. மாகம் எனும் முதல் பதத்திற்கு **'நாகம் ஏந்து'** என்று விசேஷணமிட்டிருப்பதன் கருத்து: துன்பம் சிறிதுமற்ற இன்பம் நிறைந்த என்கிற விசேஷணமாகும். **'கம்'** என்றால் துன்பத்தை குறிக்கும். ஒரு நஞ்சைச் சேர்த்து **'நாகம்'** துன்பம் சிறிதுமற்ற இன்பம் ஆகும். **'நாகமேந்துமாக'** என்ற விளிச் சொல்லால் திருவனந்தாழ்வானாலே தரிக்கப்பட்ட திருமேனியுடையவனே என்று பொருள் கொள்ளலாம்.

**அங்கம் ஆறும் வேதம் நான்கும் ஆகி நின்று அவற்றுளே**
**தங்குகின்ற தன்மையாய்! தடங்கடற் பணத்தலை**
**செங்கண் நாகணைக் கிடந்த செல்வம் மல்கு சீரினாய்!**
**சங்க வண்ணம் அன்ன மேனி சாரங்கபாணி அல்லையே!**

(திரு.ச.15ஆம்பாடல்)

இப்பாடலில் சங்கநூல் ஒற்றுமையைக் காணலாம். இப்பாட்டின் முதற்பகுதியில் அங்கங்களோடு கூடிய வேதத்துக்குப் பொருளாயிருப்பவன் திருமாலே என்று கூறப்பட்டது. நாலாம் பாட்டில் சங்க நூலொற்றுமையில் இவ்விஷயம் சங்க நூல்களிலிருந்து விரிவாக்கப்பட்டது இங்கும் அனுசந்திக்கத்தக்கது. '**தடங்கடல் பணத்தலைச் செங்கணாகணைக்கிடந்த செல்வம் மல்கு சீரினாய்**' என்று ஆதிசேஷனின் மேல் திருப்பாற்கடலில் சயனித் திருக்கும் நிலை இங்கு இப்பாட்டின் நடுப்பகுதியில் கூறப்பட்டது. முதல் பரிபாடலில் தொடக்கத்திலேயே '**ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர்**' என்று ஆதிசேஷன் மேல் அமர்ந்திருக்கும் நிலையும் 13ஆம் பாடலில் '**தன் உருஉறழும் பாற்கடல் நாப்பண்மின் அவிர்சுடர் மணி ஆயிரம் விரித்த கவைநா அருந்தலைக் காண்பின் சேர்க்கை துளவம் சூடிய அறிதுயிலோனும்**' என்று சேஷசாயியாய், திருப்பாற்கடலில் அறிதுயில் கொள்ளும் நிலையும் கூறப்பட்டது, இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. '**சங்கவண்ண மன்னமேனி**' என்று இங்கு கூறியது போல மூன்றாம் பரிபாடலில் கருங்கண் வெள்ளை என்று வெள்ளை திருமேனி காட்டப்பட்டதும், முதல் பரிபாடலில் '**மையில் வால்வளைமேனி**' என்று அத்திருமேனி குறிக்கப்பட்டதும் காணத்தக்கது. '**சார்ங்கபாணியல்லையே**' என்று இங்கு குறிக்கப்பட்ட இராமாவதாரம் அகநானூற்றில் எழுபதாம்பாடலில் '**வெல்போர் இராமன் என்று அனுபவிக்கப்பட்டதும் காணத்தக்கது.

திருசந்தவிருத்தம் 15ஆம் பாடலில் திருமழிசையாழ்வார் அனுபவித்தது:

**அங்கம் ஆறும்வேதம் நான்கும் ஆகிநின்று அவற்றுளே**
**தங்குகின்ற தன்மையாய்! தடங்கடற் பணத்தலை**
**செங்கண் நாகணைக் கிடந்த செல்வம் மல்கு சீரினாய்!**
**சங்க வண்ணம் அன்ன மேனி சார்ங்கபாணி அல்லையே!**

வேதத்தினாலேயே அறியதக்க பெருமையுடைய நீ அடியார் களுக்கு அருள்புரிவதற்காக அவதாரங்களுக்கெல்லாம் மூலமான க்ஷீராப்தி நாதருபத்துடன் திருபாற்கடலிலே துயின்று அதுவும் **'பரநிலையோடு ஒக்கும்'** என்கிறபடி அங்கிருந்து அடியார் உகந்த உருவத்தையே உன் உருவமாகக் கொண்டு இவ்வுல குக்கு வந்து அவதரித்த உன்னுடைய நீர்மையை ஒருவராலும் அளவிட முடியாது. விஷ்ணுவினுடைய அந்த பரமபதத்தை நித்ய சூரிகள் எப்போதும் பார்க்கின்றார்கள். (தடங்கடற் பணத்தலை செங்கண் நாகணைக் கிடந்த செல்வம் மல்கு சீரினாய்) வேதத்திலே அறியத் தக்கவையாய், இந்தத் தன்மைகள் கேட்டே போகும்படி ஆகிவிடாமல் திருப்பாற்கடலிலே அறிதுயில் கொள்வதன் மூலம் இந்த குணங்கள் வெளிப்படுத்தினவனே! தலைகளும் சமனில்லாத பல பரப்பித்துயில் கொள்ளலாம்படி மிக்க இடமுடையதான கடலிலே, உன்னுடைய ஸ்பரிசத்தாலே அணைத்துப் பருத்திருக்கும் படங்களின் மேலே மது பானத்தாலே மயங்கினவர்களைப் போலே சிவந்த திருகண்களையுடையவனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி அளவற்ற செல்வத்தையும் கல்யாண குணங்களையும் அடியார் களுக்குக் காட்டிக் கொண்டிருப்பவனே! என்கிறபடி

திருச்சந்த விருத்தம் பாசுரம் 18

**"விடத்தவா யொராயிர மிராயிரங்கண் வெந்தழல்**
**விடுத்துவீழ்வி லாதபோக மிக்க சோதி தொக்கசீர்**
**தொடுத்து மேல் விதானமாய பௌவ நீர ராவணைப்**
**படுத்த பாயல் பள்ளி கொள்வ தென்கொல் வேலை வண்ணனே"**

நீலக்கடல் போலிருக்கிற வர்ணத்தையுடையவனே! விஷத்தை உடைத்தான, ஆயிரம் வாயையுடையவனாய், இரண்டாயிரம் கண்களாலே, வெம்மை மிக்க, விஷாக்நியை புறப்படவிட்டு, விஸ்லேஷம் இல்லாத போகத்தையுடையனாய் அதிகமான

தேஜஸ்ஸையுடையவனாய், மேற்கட்டியாயிருக்கும் படங்களில், திரளாயிருக்கும் அழகை சேர்த்து வைத்து திருப்பாற்கடலிலே விரித்திருக்கும் திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே கண் வளர்ந்தருளுகிற இது, என்னோ'? வ்யாக்யானம். விஷத்தை உமிழ்கின்ற ஆயிரம் வாயையுடையவனாய், இரண்டாயிரம் கண்ணாலும் வெம்மைமிக்க நெருப்பைக் கக்கிக்கொண்டு, எம்பெருமானை அனுபவிப்பதே தொழிலாயிருக்கும் ஆதிசேஷனுக்கு, கோபத்தால் உண்டாகும் இந்தக் கொடுமை எப்படி விளைந்தது? எனில், **"தீய அசுரர்களும் அரக்கர்களும் நடையாடும் இந்த லீலா விபூதியில் கண் வளர்ந்தருளும் எம்பெருமானுக்கு எவராலே என்ன தீங்கு வருகிறதோ'** என்று ஐயப்பாட்டால் விளைந்தது இக்கொடுமை.

இவன் எம்பெருமானை அனுபவிப்பது அவனிடமுள்ள ஆராத காதலாலேயாயிருப்பது போலே, எதிரிகளிடம் வெறுப்பும் கோபமும் எம்பெருமானிடம் ஆராத காதலாலேயே விளைகின்றன வன்றோ. இதை அனுசந்திப்பதின் மூலம் **"தீயவர்கள் நெருங்க முடியாதபடி திருவனந்தாழ்வானாலே நன்கு பாதுகாக்கப்பட்டு எம்பெருமான் கண் வளர்ந்தருளுகிறான்"** என்று ஆழ்வார் திருப்தி அடைகிறார். எம்பெருமான் அணைத்தால் எவ்வகையாலும் பிரிய இயலாத மிக இனிய திருவுடம்பை உடையவனாய் என்கிற படி **"மேல் விதானமாய தொக்க சீர் கொடுத்த"** என்று அன்வயம். **"மேற்கட்டியாயிருக்கும் படங்களில் திரளாயி ருக்கும் அழகைச் சேர்த்து வைத்து"** என்று பொருள். அப்பேற பட்ட அழகியதாய் பல வர்ணங்களையுடையவையான அவனு டைய படலங்களின் அழகை சேர்த்து அனுபவித்துக்கொண்டு எம்பெருமான் கண் வளர்ந்தருளியபடியைச் சொல்லுகிறது. திரு மேனியின் மென்மைக்குத் தக்கபடி கடல்நீரில் படுப்பதோடன றியில், அந்த நீர் உறுத்தாமைக்காக அதிலே விரித்த திருவனந் தாழ்வானாகிற படுக்கையிலே கண் வளர்ந்தருளுவது எதற்காக? **" எங்களுக்கு ஆபத்து வருங்காலத்தில் உதவுவதற்கு இங்கு**

**பள்ளி கொள்ள வேண்டும்"** என்ற பிரமன் முதலான தேவர்கள் வேண்டிக் கொண்டதால் செய்ததோ இது? அப்படி ஒருவரும் வேண்டிக் கொள்ளாமையாலே, அவர்களுக்கு ஆபத்து வருங்காலத்தில் உதவுவதற்காகத் தானே பள்ளி கொண்டான் எனக் கருத்து. வெள்ளைக் கடலிலே ஒரு நீலக்கடல் சாய்ந்தாற் போலே தேவரீர் திருப்பாற்கடலில் சயனித்திருக்கும் வர்ணச் சேர்த்தியழகு.

இதற்குச் சங்க நூலின் ஒற்றுமையை காண்போம். (திருச்சந்த விருத்தம் 18ம் பாடல்) **"விடத்த வாயொராயிரம் இராயிரம் கண் வெந்தழல் விடுத்து"** என்று இங்கு **'அஸ் தானே பயஸங்கையாலே ஆதிசேஷன் விஷஜ்வாலையைக் கக்குகிறான்",** என்று சொல்லப்பட்டது. இவ்வாறே முதற்பாடலின் தொடக்கத்தில் **"ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை தீ உமிழ்திறவோடு"** என்று கூறப்பட்டது. **"வீழ்விலாத போகம் மிக்க சோதி தொக்க சீர் தொடுத்து"** என்று திருவனந்தாழ் வானின் போகமும் ஒளியும் இங்கு அனுபவிக்கப்பட்டது. பதின் மூன்றாம் பரிபாடலில் **"மின் அவிர்சுடர்மணி ஆயிரம் விரித்த கவைநா அருந்தலை காண்பின் சேக்கை"** என்று இவையே அனுபவிக்கப்பட்டன. **"மேல் விதானமாய பௌவ நீரரவணை படுத்த பாயல்"** என்று திருவனந்தாழ்வான் மேற் கட்டியாகவும், படுக்கையாகவும் கைங்கர்யம் செய்வது இங்கு கூறப்பட்டது. முதற்பரிபாடலில் **"முடி மிசை அணவர"** என்று மேற் கட்டியாகக் கைங்கர்யம் செய்வதும், பதின்மூன்றாம் பரிபாடலில் **"கவைநா அருந்தலை காண்பின் சேர்க்கை"** (பிளவுபட்ட நாவையும் ஆயிரம் அரியதலைகளையுமுடைய காண இனிய படுக்கையான ஆதிசேஷன் மேலே) என்று படுக்கையாக கைங்கர்யம் செய்வதும் சொல்லப்பட்டது. இப்பாட்டில் **'பள்ளி கொள்வது என் கொல் வேலை வண்ணனே"** என்று பாற்கடலில் பள்ளி கொள்ளும் வர்ண சேர்த்தியழகு அனுபவிக்கப்பட்டது. பதின்மூன்றாம் பரிபாடலில் **"தன் உரு உறழும் பாற்கடல் நாப்பண் அறிதுயிலோனும்"**

(நீலமேகத் திருவுருவான தன் உருவோடு வேறுபட்டு நிற்கையாலே வர்ணச் சேர்த்திழகை அளிக்கும் வெண்ணிறப் பாற்கடலின் நடுவே விழித்துக் கொண்டே துயில்பவனும்) என்று அதுவே அனுபவிக்கப்பட்டது.

## 24.நம்மாழ்வார்

**வ்ருஷபே து விசாகாயாம் குருகாபு காரிஜம் |**
**பாண்ட்யதே ஸேகலேராதெள சடாரிம் ஸைந்யபம் பஜே||**

மற்ற ஆழ்வார்களைத் தனக்கு அவயவமாகவும், தான் அவர்களுக்கு '**அவயவி**'யாகவும் (ஆத்மாவாகவும்) கொண்டு ப்ரபன்னஜன கூடஸ்தராகவும் விளங்குபவர், நம்ஆழ்வார் எனப்படும் சடகோபன்,. வைகாசி விசாகத்தில் அவதரித்தவர் இவர் எழுந் தருளியிருக்கும் இடத்திலுள்ள புளியமரமே ஆதிசேஷ அவதாரமாகக் கூறப்படுகிறது. அப்புளிய மரத்தடியிலே எம்பெரு மான் அக்குழந்தைக்கு, சேனை முதலியாரை அனுப்பி பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் செய்வித்து, எல்லா அர்த்தங்களையும் உபதேசிக்கச் செய்து மயர்வற மதிநலம் அருளினார். நம்பெரு மாளாகிய ஸ்ரீரங்கநாதனால் '**நம் ஆழ்வார்**' என அபிமானிக்கப் பெற்றதால், இவர் நம்மாழ்வார் என்னும் திருநாமத்தையும் பெற்றார். பிறந்தது முதல் 16 வருடங்கள் பேசாமல் இருந்தார். பரவாசு தேவனும், வ்யூஹ மூர்த்திகளும், விபவ மூர்த்திகளும், அந்தர்யாமி எம்பெருமானும், திவ்ய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சா மூர்த்திகளும் திருப்புளிஆழ்வார் அடியிலே எழுந்தருளியிருக்கும் ஆழ்வாருடைய நெஞ்சமென்னும் உட்கண்ணுக்கு ஸேவை ஸாதித்தனர். அவ்வெம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை அனுபவித்து, அவ்வனுபவத்தாலுண்டான ப்ரீதி உள்ளடங்காமல் வழிந்து திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நாலு திவ்யப் பிரபந்தங்களாக வெளிப்பட்டது.

திருவிருத்தம் ருக்வேதசாரம் என்றும், திருவாசிரியம் யஜுர் வேத சாரம் என்றும், பெரிய திருவந்தாதி அதர்வண வேதசாரம் என்றும், திருவாய்மொழி வேதங்களில் ஒப்பற்றதான ஸாம வேத சாரம் என்றும் முன்னோர்கள் அருளிச்செய்தனர். அவரின் திருவாய்மொழியை அனுபவிக்க நித்யசூரிகளும், ச்வேதத்வீப வாசிகளும், இவ்வுலகில் உள்ள ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரேஷ்டர்களும் திருபுளியாழ்வாரடியிலே கூடினார்கள். அதில் சிலவற்றை நாமும் அனுபவிக்கலாம்.

ஆதிசேஷனைப் பற்றி ஆழ்வார்களின் தலைவரான நம்மாழ்வார் அனுபவித்ததை சற்றே ஆராய்வோம். நாயகனுடைய பிரிவாற்றாமையால் துடிக்கும் நாயகியைக் கண்டு அப்போது வந்து உதவாத நாயகனை தோழியானவள் வெறுத்துச் சொல்லும் பாசுரமிது – திருவிருத்தம் 33ஆம் பாசுரம்.

**அருளார் திரு சக்கரத்தால் அகல் விசும்பும் நிலனும்**
**இருளார் வினைகெடச் செங்கோல் நடாவுதிர்; ஈங்கோர் பெண்பால்**
**பொருளோ வெனும் இகழ்வோ? இவற்றின் புறத்தாளென்றெண்ணோ?**
**தெருளோம் அரவணையீர்! இவள் மாமை சிதைக்கின்றதே.**

திருவனந்தாழ்வானை படுக்கையாகக் கொண்டவனே ! விண்ணுலகத்தையும், இந்த நில உலகையும் உன்னுடைய சக்தி வாய்ந்த சக்ராயுதத்தால் துன்பங்கள் நீக்கிக் காத்தருள்கிறாய். ஆனால் இந்த பராங்குச நாயகியினுடைய பிரிவாற்றாமையைப் போக்கவில்லை. இப்படி ஒரு பெண்ணைக் காப்பது நமக்கு ஒரு பொருளோ அல்லது புருஷார்த்தமோ? என்று எண்ணி கைவிட்டீரோ? அல்லது இந்த உபய விபூதிக்கும் புறம்பானதாய் அங்கிருக்கும் காதலியைக் கைவிடுதலே நன்று என்ற எண்ணமோ?

இவ்விடத்தில் தோழி அரவணையீர்! என்று எம்பெருமானை அழைப்பதில் சிறந்த கருத்துள்ளது. நம்பிள்ளை ஈட்டில் உம் முடைய உடம்பை ஆசைப்பட்டார்க்கு கொடாதவராகிலுமாமிறே,

இவள் தரையில் கிடக்க, உமக்கு படுக்கை பொருந்துவதே? தோழி அரவணையீர்! என்கிற சொல்லினால் எம்பெருமானைச் சாடுகிறார். திருவனந்தாழ்வான் உம்மை ஆச்ரயிக்க, அவனுக்கு, உமக்குத் திருப்பள்ளியாக இருக்கும் கைங்கர்யம் தொடங்கி எல்லாப் பணிகளும் செய்யும் பாக்யத்தை அளித்துள்ளீர். நீர் சேஷபூதர் களுக்கு விருப்பமான கைங்கர்யத்தைக் கொடாதவராய் இருந்தால் ஆறியிருக்கலாம்.ஒரு பெண், பராங்குச நாயகி உம்மைப் பிரிந்து மென்மலர்ப்பள்ளியை வெம்பள்ளியாகக் கருதி, தரையிலே கிடக்க, உமக்கு படுக்கை எங்ஙனம் பொருந்தும். படுக்கையில் தனிக்கிடை கூடுமோ? இவள் வேண்டாவோ? என்கிறார்.

திருவாய்மொழியில் இரண்டாம் பத்தில் முதல் திருவாய் மொழி: **'வாயும் திரைகளும்'** என்பதில் ஸ்ரீபராங்குச நாயகி (ஆழ்வார்) எம்பெருமானை விட்டு பிரிந்து துடிக்கும்போது அநேக உயர்திணை அஃறிணை பொருள்களையும் கண்டு அவைகளின் உண்மையான நிலைமை, பகவானைப் பிரிந்ததால் தம்மைப் போல் அவைகள் படும்பாடுகளைத் துன்பமாகக் கருதி அழுகிறார். ஆறாம் பாசுரத்தில் (திருவாய்மொழி 2-1-6):

**'நைவாய எம்மே போல் நாண்மதியே நீ இந்நாள்**
**மைவானிருளகற்றாய் மாழாந்து தேம்புதியால்**
**ஐவாயரவணை மேல் ஆழிப் பெருமானார்**
**மெய் வாசகம் கேட்டு உன் மெய் நீர்மை தோற்றாயே!'**

ஒரு தலையை உடைய சந்திரனைப் பார்த்து நீயும் ஐவாய் அரவணை மேல் ஆழிப் பெருமானார் மெய்வாசகம் கேட்டுத்தான் என்னைப் போல் ஆகியிருக்க வேணும் என்பது ஈட்டு வ்யாக்யானம்:

அவருடைய பெரிய பொய்யிலே அகப்பட்டார் ஆகாதே நீ? தம் பாம்பு போல் நாவுமிரண்டுளவாயிற்று என்னுமாபோலே,

தமக்குப் பொய் சொல்ல ஒரு வாயுண்டானால் தம் பரிகாரத்துக்கு அஞ்சு வாயுண்டு. அவனுக்கு பள்ளித் தோழமை பலித்த படி, திருவனந்தாழ்வானைப் புருஷகார பூதராக நினைத்துப் போற்றும் ஆழ்வார், எம்பெருமான் தம்மை விட்டு நீங்கியபடியால் அவன் மேல் உண்டான கோபமும், துக்கமும் ஆதிசேஷனின் மேலேறிப்பாய, அவரையும் சாடுகிறார். எம்பெருமானுக்கு பொய் சொல்ல ஒருவாய், இவருக்கு ஐந்துவாய் (ஐவாய் அரவணை) அவனினும் மிக்க பொய் சொல்வதில் வல்லவர் **'பள்ளித் தோழமை'** என்ற சொல் சாடுக்தி – பள்ளி (பள்ளி கூடம்) படுக்கையான ஆதிசேஷனின் நட்பு வெகு காலமாக உண்டு. அதுவே தம்மை மறந்ததற்குக் காரணம் பள்ளியில் உண்டான தீய நட்பும், பழக்கமும் விடவொண்ணாதாப்போல் ஸர்வேஶ்வரனுக்கும், திருவனந்தாழ்வானின் நட்பும், தீயப்பழக்கமான பொய் சொல்லுகையும். மேலும் திருவாய்மொழி 2-5-7 இல்,

**'பாம்பணை மேற் பாற்கடலுள் பள்ளியமர்ந்ததுவும்,**
**காம்பணை தோள் பின்னக்காயே(ஏ)றுடனேழ் செற்றதுவும்**
**தேம் பணைய சோலை மராமரமேழ் எய்ததுவும்**
**பூம்பிணைய தண்துழாய் பொன்முடி அம்போரேறே'**

என்கிறார் ஆழ்வார்.

க்ஷீர சமுத்திரத்திலே ஆதிசேஷ சயனத்தில் யோக நித்திரையில் ஆழ்ந்து, மூங்கிலைத் தழுவின அதற்கொத்த தோள்களையுடைய நப்பின்னைக்குப்ரியனாகி எருதுகளேழையும் ஒரே சமயத்தில் அழித்ததும், தேன் நிறைந்த கிளைகளையுடைய சோலைகளைத் தழைத்து ஆச்சாமரங்கள் ஏழையும் அம்புக்கு இரையாக்கினதும், பூக்கள் கொண்ட தொடைகளை உடைய குளிர்ந்த திருத்துழாய் சூழ்ந்த ஸ்வர்ண கிரீடம் உடையவனாக போருக்கான அழகிய விருடபமே!

மென்மையான நெஞ்சுடையவர்கள் நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்க செய்யுமதொன்று, நித்யசூரிகளில் ஒருவர் இப்படி வடிவு கொண்டதே! அந்த பாம்புடலின் மென்மை இத்தகைய வகையில் எம்பெருமான் கைங்கர்யத்துக்கு உதவும் என்று கருதியே சகல ஜீவாத்மாக்களும் தாங்கள் சேஷத்வ ஸ்வருபத் திற்கு சேர மனம், மொழி, மெய், ஆகிய மூன்று காரணங்களால் ஈஸ்வர கைங்கர்யம் செய்ய வேண்டும்.

(திருவாய் 2-6-5) **'உய்ந்து போந்து என்......ஐந்து பைந்தலை யாடரவணை மேவி பாற்கடல் யோக நித்திரை,' 'சென்றால் குடையாம் இருந்தாற் சிங்காசனமாம்'** என்றவாறே பல அடிமைகள் செய்து சேஷனென்ற பேர்பெற்று, அவதாரங்களிலும் உன்னை விடாமலேயிருக்கும், அரவரையன் உனது திருமேனி ஸ்பரிசத்தாலே பரமானந்தம் பெற்று அது உள்ளடங்காமையால் தான் ஸாத்மிப்பதற்காக அவ்வானந்த வெள்ளத்திற்கு போக்கு வீடாக முதலில் ஐந்து தலைகொண்டான், ஐநூறாக்கினான், ஆயிரமாக்கினான். இப்படி பல தலைகளாலே அதற்குப் போக்கு விட்டிருக்க, மலர்ந்து குளிர்ந்த தனது தலை எல்லாம் ஆனந்தத்திலாட, ஸேவிக்கிறவர்கள் செய்யும் ஸ்தோத்ரங்களில் கர்வப்பட்டுக் கொண்டாடுவதாலும் ஆட, தன் மேல் பள்ளி கொண்ட உனக்கு உசிதமாக மந்த மாருதமிட்டு உபசரிப்பதற்காகவும், விசிறி போல் ஆட, பாற்கடலில் கிளர்ந்த திரைகள் மேன்மேல் மோதுவதால் உடல் முழுதும் **'உததிபய; ப்ரேங்கோள பர்யங்கிகா'!!** என்கிறபடி ஊஞ்சல் போல் உனது யோக நித்திரைக்கு பாங்காக ஆட, வெண்மை, வாசனை, மென்மை, அழகு, குளிர்ச்சி என்ற குணங்கள் நிறைந்த அணையை விட்டகல மனமின்றி நீயும் அங்கே யோகநித்திரைச் செய்கிறாய். உறக்கம் அற்றவர்க்கும், உறக்கம் பெறுவிக்கும் அணை அது. உனது சக்தியினால் அதை யோக நித்திரையாக்கிக் கொள்கிறாய் என்று அநுசந்திக்கிறார் ஆழ்வார்.

**குறைவு இல் தடங் கடல் கோள் அரவு**
**ஏறி தன் கோலச் செந்தாமரைக்கண்**
**உறைபவன் போல ஓர் யோகு புணர்ந்த**
**ஒளி மணி – வண்ணன், கண்ணன்**
**கறை அணி மூக்கு உடைப்புள்ளைக்**
**கடாவி அசுரரைக் காய்ந்த அம்மான்**
**நிறை புகழ் ஏத்தியும் பாடியும் ஆடியும்**
**யான் ஒரு முட்டு இலனே.** (திருவாய்மொழி 3-10-2)

குறைவில் தடங்கடல்:- நானேயன்றி, என்னினும் குறைவற்றாருண்டு '**தடங்கல்**' என்னா நிற்கச் செய்ததே. குறைவில் தடங்கலென்று திருமேனி நீ தீண்டப்பெற்று – மாலும் கருங்கடலே யென்றிருக்கை. யசோதா பிராட்டி கிருஷ்ணனைத் தன் மடியில் வளர்த்தி உகக்குமாபோலே, சர்வேச்வரனை தன்னுள்ளேயிட்டுக் கொண்டு அத்தாலே உகந்து குறைவற்றிருக்கை. அஸங்குசிதமாகக் கண் வளர்ந்தருளும்படி இடமுடைத்தான கடல், கோளென்று ஒளியாய், திருமேனியோட்டை ஸ்பர்சத்தாலே நிரவதிக தேஜஸ்ஸை உடையவனான திருவனந்தாழ்வான் மேலே ஏறி என்னுதல்; அன்றிக்கே கோளென்று மிடுக்காய், என்கின்ற படியே சர்வதாரண சாமர்த்தியத்தை உடையவனாயிருக்கு மென்னுதல், மென்மை, ப்ரக்ருதியாகவுடையனாயிருக்கை. வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியாய், ஸர்வைஶ்வர்ய சூசகமாய் அப்போதலர்ந்த செவ்வித்தாமரையை ஒருபமை சொல்லலாம்படி அழகியதாய் சிவந்திருந்துள்ள திருக்கண்கள் கண் வளர்ந்தருளுகை. கண்வளருகையென்று பேராய், ஜகத் ரக்ஷண சிந்தாயுக்தனாகை என்று ஆழ்வார் அனுபவிக்கிறார், மேலும்:

**நிச்சலும் தோழி மீர்காள்!**
**எம்மை நீர் நலிந்து என் செய்திரோ?**
**பச்சிலை நீள் கமுகும்**
**பலவும் தெங்கும் வாழைகளும்,**

**மச்சணி மாடங்கள் மீது**
**அணவும் தண்திருவல்ல வாழ்**
**நச்சு அரவின் அணைமேல்**
**நம்பிரானது நல்நலமே.** (திருவாய்மொழி 5-9-4)

கமுகு முதலிய மரங்கள் வானளாவி வளர்ந்து பச்சிலை யடர்ந்த் மச்சுக்களைப் போலே, மாடங்களும் வெய்யிலொளி படாதாபடி குளிர்ந்திருக்கும் திருவல்லவாழிலே நின்ற திருக் கோலமான கோலப்பிரான் திருப்பள்ளி எழுந்தருளும் போது பெருமானும் பிராட்டியும் பள்ளியிலிருக்கும் போது - இளைய பெருமான் வெளியிலே வில்லேந்திக் காவலாக இருந்த கணக் கிலே, பகைவரின் வாதைக்கு அஞ்சி எங்கும் நஞ்சு நிறைந்த மூச்செறிந்து காக்கும் அநந்தாழ்வான்மேல் அப்பிரானுக்குமுள்ள சிறந்த அன்பே என் மேலும் உள்ளது. எல்லா வடிமையும் செய்து சேஷனென்ற பேர் பெறும்படி அவரைக் கொண்டாற் போல் என்னையும் கொண்டிருக்கிறான். அப்படியிருக்க அவனை நீச்சலும் பெற்றிராமல் பிரிந்து இருக்கவல்லேனோ? ஏன் என்னை இப்படி நலிகிறீர்கள் என்றபடி. இப்படி ஆதிசேஷனைப் பலபடிகளாலும், எம்பெருமானுக்கு அந்தரங்க கைங்கர்யம் செய்யுமவனாய் (குற்றவேல்) காட்டிய ஆழ்வார் அவனை எம்பெருமானை அடைவதற்கு பெரியபிராட்டியாரைப் போல் புருஷகாரம் ஆகவும் பற்றுகிறார். திருவாய்மொழி 5-10-11 **'நாகணைமிசை'** இத்யாதி (ஈடு: திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய, ஸர்வேஶ்வரன் திருவடிகளே நமக்கு உபாயம் என்று. அநந்த சாயித்வம் (பாம்பணை மேல் பள்ளி கொள்ளுகை) ஸர்வாதிக வஸ்துவுக்கு (அறப்பெரியவனுக்கு) லக்ஷணமாகையாலே ஸர்வாதிகனே சரண்யன் என்கிறது. திருவனந்தாழ்வானுடைய புருஷகார பாவம் சொல்லுகிறதே என்னுமாம். இவனுடைய உபாய பாவத்தில் புருஷகாரமாக வல்லார் அவன் பரிகரத்தில் உள்ளார் ஆகாதே. படுக்கை கிடப்பது அந்தப்புரத்தியிலாயிறே.

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாசியத்தின் முதல் பாசுரம்:

செக்கார் மாமுகில் உடுத்து மிக்க
செஞ் சுடர்ப் பரிதி சூடி
அம் சுடர் மதியம் பூண்டு,
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய்
திகழ் பசுஞ் சோதி மரகதக் குன்றம்
கடலோன் கைம்மிசைக் கண்வளர்வது போல,
பீதக ஆடை முடி பூண் முதலா
மேதகு பல் கலன் அணிந்து சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப, மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப,
நச்சு வினைக் கவர்தலை அரவின் அமளி
ஏறி,........ என்பதில்,

அலங்காரங்களை எல்லாம் ஒன்று சேர உள்ளடக்கிக் கொள்ளப் பார்த்த திருமேனி அவற்றையெல்லாம் வென்று மிகவும் ஒளிவிடக் கூடியதான திருமால், நச்சுவினை – 'வாய்ந்த மதுகைட பரும் வயிறுருகி மாண்டார்' (மூன்றாம் - திருவந்66) என்கிற படியே தனியே சயனித்திருக்கும்போது எதிரிகளாய் வரும் மதுகைட பர் போன்ற அசுரர்கள் அழிந்து போகும்படியான விஷம் கக்கும் தொழிலை உடையவனாய் இருப்பவன் என்று திருவனந்தாழ் வானை சொல்லுகிறார். பல தலைகளை உடையதாய் எம்பெரு மானுடைய ஸ்பர்சத்தாலே நூறாயிரமாக பூரித்த தலை என்றும் கொள்ளலாம். குழந்தையை மடியில் வைத்திருக்கும் தாயைப் போலே பெரியபெருமாளை மடியிலே வைத்துக் கொண்டு கவிழ்த்த தலைகளோட கட்டிக்காக்கும் தாய் போல் இருப்பவன்.

**இத்திவ்ய ஸூக்திகள், பிராட்டியின் ஸம்பந்தத்தால் திருவனந்தாழ்வானும் புருஷகாரபூதன் ஆகிறான் என்று தெள்ளத் தெளியக்காட்டுகிறது. அதுபோன்று தான் ஆசார்யனும் புருஷகாரபூதன் ஆகிறான்.**

இப்படி நம்மாழ்வார் பலபடிகளால் திருவனந்தாழ்வானைப் போற்றிப் புகழுகிறார். அத்திருவனந்தானின் பெருமையை, ஆயிரம் நாப் படைத்த அவனாலும் கூறமுடியாது.

**'தனக்கும் தன் தன்மையறிவரியான்'** என்பது இவனுக்கும் பொருந்தும். எம்பெருமான் ஆயிரக்கணக்கான முகங்கள் படைத்தவன். அவனாலும் இவன் பெருமையை வர்ணிக்க இயலாது.

ஆழ்வார் திருவாசிரியத்தில் அநுபவித்தவை.

**நச்சுவினைக் கவர்தலை அரவின் அமளி ஏறி,**
**எறிகடல் நடுவுள் அரிதுயில் அமர்ந்து**
**சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர்**
**தெய்வக்குழாங்கள் கைதொழக் கிடந்த**
**தாமரை உந்தி தனிப் பெருநாயக.**

பிறர் நடுங்கும்படியான நச்சுத் தொழிலையுடையவனும், பல தலைகளை உயைவனும், ஒரு தாயானவள் குழந்தையை மடியிலே வைத்திருப்பது போல் பெரிய பெருமாளை மடியிலே வைத்திருப்பவனும், சிவன், ப்ரம்மா, இந்திரன் முதலிய அனைவராலும் தொழப்படுபவனும், ஜகத்துக்குக் காரணமான திருநாபியை உடையவனே உலகுக்கு நாயகன் என்கிறார்.

## 25.குலசேகர ஆழ்வார்

**கும்பே புநர்வஸௌ ஜாதம் கேரளே சோளபத்தநே|**
**கௌஸ்துபாம்ஸம் தராதீஸம் குலசேகரமாஸ்ரயே||**

இவ்வாழ்வார் சக்கரவர்த்தித் திருமகன், அவதரித்த இக்ஷ்வாகு வம்சத்தில் எம்பெருமான் அவதரித்த புனர்வஸு நட்சத்திரத்தில் மாசி மாதம் அவதரித்தவர்.

ஸ்ரீராமபிரானுடைய சுக, துக்கங்களைத் தன்னுடையதாக நினைப்பவர். **'எல்லையில் சீர்த்தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்று அது முதலாத் தன்னுலகம் புக்கதீறா'** என்கிறபடி ஸ்ரீராமபிரானுடைய அவதாரத்திலிருந்து தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுவது வரை ஸ்ரீ ராமாயணக் கதையைப் பாசுரமாக அருளிச் செய்துள்ளார். **'பெருமாள் என வழங்கப்படும்'** சக்கரவர்த்தித் திருமகனிடம் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக இவர் குலசேகரப்பெருமாள் என்றழைக்கப்பட்டார். இவர் கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குலசேகரன் என்று மூன்று அரசுகளுக்கும் தலைவராக இருந்தவர். இருந்தபோதிலும் அரசாட்சியை விரும்பாமல் **'வானாளும் மாமதிபோல வெண்குடைக் கீழ் மன்னவர்தம் கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வத்தை'** வேண்டேன் என்றிருந்தவர். திருவஞ்சிக்களம் என்ற ஊரில் அவதரித்தவர். **'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவானே'** என்று திருமலையில் விலங்காகவோ, மரம் செடிகளாகவோ பிறவி வேண்டும் என்று ஆசைப்பட்டவர். இவர் அனுபவித்த பெருமாள் திருமொழி 1

**இருள் இரியச் சுடர் மணிகள் இமைக்கும் நெற்றி**
**இனத்துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த**
**அரவு அரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும்**
**அணி விளங்கும் உயர் வெள்ளை அணையை மேவித்**
**திருவரங்கப் பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி**
**திரைக் கையால் அடி வருடப் பள்ளி கொள்ளும்**
**கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு என்**
**கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே!**

என்றருளிச் செய்கிறார். இருள் சிதறிப் போகும்படி ஒளியையுடைய மணிகள் விழிக்கின்ற நெற்றியையும், இரண்டாய் சேர்ந்த திருவடி நிலையென்று சொல்லும்படியான பணங்களாயிரத்தையும் பரிபூர்ணமாக உடையவனாய், அரவங்களுக்கெல்லாம் அரசன்

என்னும் தேஜஸ்ஸை உடையவனாய், எல்லாவற்றையும் வியாபித்து நிற்கிற ஸர்வேஶ்வரனும் விரும்பும் ஸ்வரூப குணங்களை உடையனாகையாலே அனந்தன் என்று சொல்லப்படுகின்ற அழகும், உயர்வும் உடைய களங்கமில்லாத வெள்ளைப் படுக்கையாகிற திருவனந்தாழ்வான் மேல் ஒரு நீலரத்னம் போல் சாய்ந்து கண் வளருகிறான் திருவரங்கத்தெம்பெருமான், என்று அணையாக விளங்கும் ஆதிசேஷனை அழகுற வர்ணிக்கிறார் ஆழ்வார்.

## 26.பெரியாழ்வார்

**மிதுநே ஸ்வாதிஜம் விஷ்ணோ ரதாம்ஸம் தந்விந: புரே|**
**ப்ரபத்யே ஸ்வஸுரம் விஷ்ணோ: விஷ்ணு சித்தம் புரஸ்ஸிகம் ||**

பொங்கும் பரிவாகிற செல்வத்தையுடையவராய், எவராலும் அளவிடமுடியாத பெருமையையுடையவர். வேத ஸ்வரூபனான கருடாழ்வானின் அம்சமாயிருப்பவராய், கலி பிறந்து குரோதன வருஷத்தில் ஆனி மாதம், ஸ்வாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வில்லி புத்தூரில் அவதரித்தவர். நிர்ஹேதுக கடாக்ஷத்தினாலே, விஷ்ணு சித்தர் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதில் ஊற்றம் உடையவரானார். கைங்கர்யமே அவருக்கு மிகவும் உகப்பானது ஆகையால் **'மாலாகைங்கர்யமே மிகவும் உகந்தது'** என்று அறுதியிட்டு பெரிய தொரு திருநந்தவனம் அமைத்து வடபெருங்கோயிலுடையானுக்குத் திருமாலைக் கட்டிச் சாற்றிக் கொண்டு வந்தார். எம்பெருமானிடம் இவர் கொண்ட பொங்கும் பரிவினாலே 'பெரியாழ்வார்' என அழைக்கப்பட்டார். இதை அமுதனார் **'சோராத காதல் பெருஞ்சுழிப்பு'** என்று அருளிச் செய்துள்ளார். இனி அவர் பாடிய பாசுரங்களை அனுபவிப்போம்.

**அரவு அணையாய்! ஆயர் ஏறே!**
**அம்மம் உண்ணத் துயிலெழாயே!**

**இரவும் உண்ணாதது உறங்கி நீ போய்,**
**இன்றும் உச்சி கொண்டதாலோ ;**
**வரவுங் காணேன் ; வயிறு அசைந்தாய் ;**
**வன முலைகள் சோர்ந்து பாயத்**
**திரு உடைய வாய்மடுத்துத்**
**திளைத்து உதைத்துப் பருகிடாயே.**

(பெரியாழ்வார் திருமொழி 2-2-1)

**அரவணையித்யாதி:** மென்மை, குளிர்ச்சி, நாற்றம், தொடக்கமானவற்றை பிரக்ருதியாகவுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனாயிருந்து வைத்து, என்கிறபடியே அப்படுக்கையை விட்டுப் போந்து அவதீரணனாய் ஆயர்க்கு பிரதானனானவனே. அப்படுக்கை வாய் போலே பள்ளி கொண்டு போந்தவாஸனையோ ஆயரேறான விடத்திலும் படுக்கை விட்டெழுந்திராதே பள்ளி கொள்ளுகிறது? அவன் தான் இதர ஸஜாதீயனாயவதரித்தால் **'சென்றால் குடையாம்'** என்கிறபடியே சந்தாநுவர்த்தியாய் (அவனுடன் கூட வருபவனாய்) அடிமை செய்யக்கடவ திருவனந்தாழ்வானும் அவனுடைய அவஸ்த் தானுகுணமாகப் பள்ளிக் கொள்வதொரு திருப்படுக்கையான வடிவை கொள்ளக் கூடுமிறே. ஆகையால் அங்குண்டான சுகமெல் லாம் இங்குண்டாயிருக்குமிறே கண் வளர்ந்தருளுகிறவனுக்கு ராத்திரி அலைந்ததாலே கிடந்துறங்கினால் விடிந்தாற்றானாகிலு முண்ண வேண்டாவோ; என்று கண்ணனை அழைக்கிறார். அடுத்து,

**ஆலத்து இலையான், அரவின் அணை மேலான்,**
**நீலக் கடலுள் நெடுங்காலம் கண்வளர்ந்தான் ;**
**பாலப் பிராயத்தே பார்த்தற்கு அருள் செய்த**
**கோலப் பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா,**
**குடந்தைக் கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டு வா.**

(பெரியாழ்வார் திருமொழி : 2-6-6)

ஆலத்திலையன் ஜகத் ப்ரளயம் வந்த போது வடதளத் திலே கண் வளர்ந்தருளுனவன். திருவனந்தாழ்வானாகிற படுக்கை யிலே கண் வளர்ந்தருளுகிறவன் என்கிறபடியே, வடவிருக்ஷ மானாலும் ஆலத்திலையானரவினணை மேலானென்கையாலே அந்த அர்த்தமுந்தோற்றுகிறது. நீலக்கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தான். க்ஷீரமாகையாலே வெளுத்த நிறமாயிருக்க செய் தேயும், திருமேனியின் நிழலீட்டாலே நீலமான நிறத்தையுடைத்தா யிருக்கிற கடலிலே, ப்ரளயா வழியாகக் கண் வளர்ந்தருளினான், என்று இந்த லவண ஸமுத்ரந் தன்னை சொல்லிற்றாகவும், அரவினணை மேலானாய்க் கொண்டு நீலக் கடலுள் நெடுங்காலம் கண் வளர்ந்தானென்று அந்வயிக்கவுமாம். மேலும் அநுஸந்திக் கிறார். (பெரியாழ்வார் திருமொழி : 3-5-11).

அரவில் பள்ளி கொண்டு அரவம் துரந்திட்டு
அரவப்பகை ஊர்தி அவனுடைய
குரவிற் கொடி முல்லைகள் நின்று உறங்கும்
கோவர்த்தனம் என்னும் கொற்றக்குடை மேல்
திருவிற் பொலி மறைவாணர் புத்தூர்த்
திகழ் பட்டபிரான் சொன்ன மாலை பத்தும்
பரவு மனம் நன்கு உடைப் பத்தர் உள்ளார்
பரமான வைகுந்தம் நண்ணுவரே.

மென்மை, குளிர்ச்சி, நாற்றம் பிரகிருதியாகவுடைய திருவனந் தாழ்வான் மேலே திருப்பாற்கடலிலே பள்ளி கொண்டு, அப்படுக் கையை விட்டுப் போந்து அவதரித்த விடத்திலே கோபஜாதியும், கோக்களும், தண்ணீர் குடிக்கும் மடுவை விஷதூஷிதமாக்கிக் கொண்டு கிடந்த காளியனாகிற ஸர்ப்பத்தை அங்கு நின்று மோட்டி விட்டு 'அரவ' ஜாதிக்கெல்லாம் பகையான பெரிய திருவடியை வாஹனமாகக் கொண்டுள்ளவனே, என்கிறார்.

இனி 3-5-7 ஆம் பாசுரத்தில்,

**படங்கள் பலவும் உடைய பாம்பு அரையன்**
**படர் பூமியைத் தாங்கிக் கிடப்பவன் போல்**
**தடங்கை விரல் ஐந்தும் மலர வைத்துத்**
**தாமோதரன் தாங்கு தடவரைதான்;**

கண்ணபிரான் தன் தடங்கை விரல் ஐந்தினையும் மலர வைத்துக் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தாங்கினபடியை, ஆதிசேஷன் தன் ஐந்து தலைகளாலும் பூமியைத்தாங்குவதற்கு ஒப்பாகச் சொல்கிறார்.

**பை அரவின் அணைப் பாற்கடலுள்**
**பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி!**
**உய்ய உலகு படைக்க வேண்டி**
**உந்தியில் தோற்றினாய் நான்முகனை;**
**வைய மனிசரைப் பொய் என்று எண்ணிக்**
**காலனையும் உடனே படைத்தாய்;**
**ஐய! இனி என்னைக் காக்க வேண்டும் ;**
**அரங்கத்து அரவணைப் பள்ளியானே!**

(பெரியா. திரு. 4-10-5)

க்ஷீராப்தியில் பரந்த படங்களையுடைய திருவனந்தாழ்வானாகிற இனிய படுக்கையின் மேலே கண் வளர்கின்ற பரம சேஷியா னவனே! அரங்கத்தரவணைப் பள்ளியானே! திருப்பாற்கடலிலே ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையவனாய், பஞ்சணைக்குரிய குணங்களை உடையவனாய் (மென்மை, குளிர்ச்சி, நாற்றங்களை பிரகிருதியாகவுடைய) உள்ள திருவனந் தாழ்வானாகிற படுக்கை மேலே '**உள்ள பல் யோகு செய்தி**' என்கிறபடி ஸம்சாரிகளான ஆத்மாக்களை உஜ்ஜீவிப்பிக்கைக் கீடான பல உபாயங்களையும் திருவுள்ளத்திலே சிந்தித்திக் கொண்டு கண் வளர்ந்தருளா நின்ற பரம சேஷியானவனே.

ஐச்வர்யத்துக்கும், விக்ரஹத்துக்கும் வாசக மாகையாலே, இவ்விடத்தில் ஐச்வர்ய வாசகமாகக் கொண்டு சேஷித்வத்தைச் சொல்லுகிறது.

**வெள்ளை வெள்ளத்தின் மேல் ஒரு பாம்பை**
**மெத்தையாக விரித்து அதன் மேலே**
**கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம் ......**

(பெரியா. திரு.: 5.1.7)

நிர்மலான ஜலத்தின் மேலே, நாற்றம், மென்மை, குளிர்ச்சி தொடக் கமான குணங்களுக்கு ஆச்ரயமாகையாலே அத்விதீயமான பாம்பைப் படுக்கையாக விரித்து அதன் மேலே, **'உலகெல்லாம் நன் கொடுங்க யோகணைவான்'** என்னும்படி கள்ள நித்திரை கொள்கிற பெருமானே என்கிறார்.

## 27.ஆண்டாள்

**கர்க்கடே பூர்வ பலகுந்யாம் துளஸீகாநநோத்பவாம் |**
**பாண்ட்யே விச்வம்பராம் கோதாம் வந்தே ஸ்ரீரங்கநாயகீம்||**

(பாண்டிய தேசத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாருடைய துளசித் தோட்டத்தில் தோன்றியவளாய், பூமா தேவியின் அவதார மாக திருவாடிப்பூரத்தில் அவதரித்தவளாய் ஸ்ரீரங்கநாதனின் பத்னியானவளான கோதை எனப்படும் ஆண்டாளை நமஸ்கரிக் கின்றேன்). வேதத்தினால் விளக்கப்படும் பரம்பொருளாகிய திருமால், தன்னை எளிமைப்படுத்திக்கொண்டு மானிட உருவில் தயரதனுக்கு மகனாய்த் தோன்றினார். அது கண்டு வேதமும் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு வால்மீகி வாக்கில் ஸ்ரீராமா யணமாகத் தோன்றியது. அது போன்றே பூமா தேவியானவள் மண்ணுலக மாந்தரை வாழச்செய்த **"குன்றாக வாழ்வான் வைகுந்தவான் போகம் தன்னை இகழ்ந்து"** ஸ்ரீ வல்லிபுத்தூரில்

பெரியாழ்வாரின் திருமகளாகத் தோன்றினாள். அது கண்டு வேதத்தின் தலையாய பகுதியாகிய உபநிஷத்துக்களும், ஆண்டாள் வாக்கிலிருந்து அருமையான திருப்பாவையாக வெளி வந்தன. ஆகவே தான் 'திருப்பாவை,' **'வேத மனைத்துக்கும் வித்து'** என்று போற்றப்படுகிறது. **'நாச்சியார் திருமொழியும்** இவரால் பாடப்பெற்றதே. பூமிப் பிராட்டி 'ஸர்வம்ஸஹா' என்று அதீத காருண்யத்துடன் எல்லாவற்றையும் பொறுப்பவள். சாக்ஷாத் பூமிப் பிராட்டியின் அவதாரமான **'கோதா'** என்கிற **'ஆண்டா ளும்'** மிகுந்த வாத்ஸல்யத்தோடு நம்மை உய்விக்கப் பாசுரங்களை அருளியுள்ளார். **'பகவானையும் ஆண்டாள், நம்மையும் ஆண்டாள்'** என்பதாக அந்த சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் திருநாமத்துக்கு விளக்கம் கொள்ள வேணும். இனி அவள் அருளிச்செய்ததை நாமும் சிலவற்றை அனுசந்திப்போம்.

**அஞ்சு குடிக்கொரு சந்ததியாய் ஆழ்வார்கள்**
**தஞ்செயலை விஞ்சிநிற்குத் தன்மையளாய் - பிஞ்சாய்ப்**
**பழுத்தாளை ஆண்டாளை பக்தியுடன் நாளும்**
**வழுத்தாய் மனமே மகிழ்ந்து.**

பெரியாழ்வார் பெற்றெடுத்த ஆண்டாள் மார்கழி மாத முழு நிலா நாளிலே ஆயர் பாடியில் உள்ள செல்வச்சிறுமியர்களை நோன்பு நோற்க வாருங்கள் என துயில் எழுப்பும் பாசுரங்களில் 2ம் பாசுரத்தில்,

**வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்கு**
**செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்**
**பையத்துயின்ற பரமனடி பாடி**
**நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி**
**மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்**
**செய்யாதன செய்யோம் தீக்குறளைச் சென்றோ தோம்**
**ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கை காட்டி**
**உய்யுமாறென் றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.**

என்பதில், **'பாற்கடலுள் பையத்துயின்ற'** எனும் இடத்தில் திருப்பாற்கடலிலே ஆர்த்தருடைய (துன்புற்றோர்) ஆர்த்த நாதம் செவிப்படும்படி அவஹிதனாய் கொண்டு (ஊக்கமுடையவாய்) மெத்தென்றே கண் வளர்ந்தருளினபடி ஜகத் ரக்ஷண சிந்தையிறே (துயின்ற பரமன்) உறக்கத்துக்கு ஆலத்தி வழிக்க வேண்டி யிருக்கை **'நம்பாற்கடல் சேர்ந்த பரமனிறே, 'கிடத்த தோர் கிடக்கையிறே'** அநாஶ்ரிதர்க்கு புலியுறங்கினாப்போலே ஆச்ரிதர்க்கு என்றும் அபயமாயிருக்கும் தொட்டிற்காற்கடையில் படுத்துக்கொள்ளும் தாயைப் போலே ஸம்ஸாரார்ணவத்தின் நடுவே கிடக்கை (பரமனை) தகட்டிலழுத்தின மாணிக்கம் போலே திருவனந்தாழ்வான் மேலே சாய்ந்த பின்பு நிறம் பெற்றபடி என்னுமா போலே. மேலும் ;

**புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்**
**வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ?**
**பிள்ளாய் எழுந்திராய், பேய் முலை நஞ்சுண்டு**
**கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி**
**வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை**
**உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்**
**மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்**
**உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்**

(திருப்பாவை – 6ம் பாடல்)

**'வெள்ளத்தரவில் துயில் அமர்ந்த வித்தினை'** என்னுமிடத்தில் பகவத் குணங்களை நினைத்து ப்ரவிருத்திக்ஷமரன்றிக்கே, முனிவர்களும் நாராயணனை க்ஷணகால விஶ்லேஷத்திலும் ஸஹியாத யோகிகளும், குழந்தையை மார்பிலேயேறிட்டு கொண்டு உறங்கின மாதா, ப்ரஜை- உணராமல் க்ரமத்தாலே எழுந்திருக்கு மாபோலே எழுந்திருந்து **'ஹரி,ஹரி'** என்று எம்பெருமானும் உணர்ந்து கேட்டாரும் வாழும்படி பண்ணின திருநாம சங்கீர்த்தனமானது படுக்கை கீழே வெள்ளம் கோத்தாபோலே

க்ருஷ்ண விஸ்லேஷத்தாலே, கமர்பிளந்த எல்லா ஹ்ருதயங்களும் நனைந்து வெள்ளமிட்டது. அது காண் எங்களை எழுப்பிற்றென் கிறார்கள். மென்மை, குளிர்ச்சியுண்டானபடி ஜ்ஞானம், விஜ்ஞானம் என்று எல்லா கைங்கர்யமும் பண்ணுகை. தன்னை மறந்து பெருமாளும், பெரியபிராட்டியாரும் துகைக்கைக்குப் பாங்கான சக்தி, பிராட்டி திருமுலை தடத்தாலே நெருக்கினாலும் உணராமை என்பதாக ஆதிசேஷனை ஆண்டாள் வர்ணிக்கிறாள்.

இனி நாச்சியார் திருமொழி (10-6)ல் ஆண்டாள் அனுபவிப் பதை பார்ப்போம்.

**கண மா மயில்காள்! கண்ணபிரான் திருக்கோலம் போன்று**
**அணி மாநடம் பயின்று ஆடுகின்றீர்க்கு அடி வீழ்கின்றேன் ;**
**பணம் ஆடு அரவணைப் பற்பல காலமும் பள்ளிகொள்**
**மணவாளர் நம்மை வைத்த பரிசு இது காண்மினே.**

என்பதில், திரளாய் நினைத்தது பெருமையுடைய மயில்களே, ஒப்பற்ற அழகிய க்ருஷ்ணனுடைய கண்ணுக்கு அழகியதாய், இடைவிடாமல் ஆடாநின்றுள்ள உங்களுடைய பாதங்களில் வீழ்கிறேன். படத்தை உடைய திருஅனந்தாழ்வானாகிற திருப் படுக்கையிலே பள்ளி கொண்டருளிகிற அழகியமணவாளா என ஆண்டாள் வர்ணிக்கிறாள். கண்ணுக்கு இனியதாய், பாதத்திலே, ஒரு காலாடிற்றாய்த் தலைக் கட்டுகையன்றிக்கேயிருக்கை, இக்கூத்து மாற வேணுமாய் உங்கள் காலில் விழுகிறேன். எல்லோ ருக்கும் அவனைப் பின் செல்ல வேணுமே. தம்மை கிட்டினாரைத் தரிப்பிக்க கடவர். நமக்கு சோகத்தை உண்டாக்கி உங்கள் காலிலே விழும்படி பண்ணினால், இனி நம்மால் செய்யலாவ துண்டோ? தம்மோட்டை ஸ்பரிசத்தாலே களித்து வர்த்திக்கிற திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையவர். தம்முடம்போடே யணையவாசைப்பட்டார்க்கு உடம்பு கொடுக்குமவர். அவர் அநாதிகாலங்கூடிப், பண்ணிய க்ருஷி பலமன்றோ, நான் உங்கள்

காலைப் பிடிக்கிறது. பெரியபெருமாள் போலே காணும் இவனை இப்பாடுபடுத்தினார்.

## 28.தொண்டரடிப்பொடியாழ்வார்

**கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம் |**
**சோளோர்வ்யாம் வநமாலாம்சம் பக்தபத்ரேணுமாச்ரயே ||**

(சோழ தேசத்தில் மண்டங்குடி, எனும் நகரில மார்கழி மாதத்தில் கேட்டை நக்ஷத்தில் "வைஜயந்தி" எனும் வனமாலையின் அம்சமாக அவதரித்த தொண்டரப்பொடியாழ்வாரை ஆச்ரயிக்கிறேன்.

(திருமாலைபாசுரம் -20) தொண்டரடிப்பொடியாழ்வார் அநுபவித்தவை

**'பாயும் நீர் அரங்கந் தன்னுள் பாம்பு அணைப்பள்ளி கொண்ட**
**மாயனார் திருநன் மார்வும் மரகத உருவும் தோளும்**
**தூய தாமரைக்கண்களும் துவர் இதழ்ப் பவளவாயும்**
**ஆயசீர் முடியும் தேசும் அடியரோர்க்கு அகலலாமே?'**

அணைகட்டி நீர் ஏற்றும்படி, மேடாயிராமல் நீருக்கு பள்ள மடையாயிருக்கும் திருவரங்கம் நீரைப் போலே பரிசுத்தப்படுத்துவதாகவும் தெளிவாகவுமுள்ள எல்லாப் பொருள்களைப் போல் ஆழ்வார்களும், ஆசார்யர்களும் என அனைவரும் வந்து சேர்ந்து படுகாடு கிடந்தார் சான்றோ, எப்போர்பட்ட மேடுபள்ளமிருப்பினும் அந்நீர் உறுத்தாமைக்கு படுத்தபடுக்கையாகத் திருவனந்தாழ்வான்.



## 29.திருப்பாணாழ்வார்

**வ்ருச்சிகே ரோஹிணீஜாதம் ஸ்ரீபாணிம் நிசுளாபுரே |**
**ஸ்ரீவத்ஸாங்கம் காயகேந்த்ரம் முநிவாஹநமாச்ரயே||**

கார்த்திகை மாதம் ரோஹிணியில் நிசுளாபுரி என்னும் உறையூரில் அவதரித்தவர். கையில் வீணையை ஏந்திப் பெரியப் பெருமாளை மனமுருகப் பாடுபவர். பாணர் குலத்தில் தோன்றியவர் என்பதால் '**திருப்பாணர்**' என அழைக்கப்பட்டார். '**அமலானாதி பிரான்**' என்ற திவ்யப்ரபந்த பத்து பாசுரங்களில் திருவரங்கன் மேல் தம் அனுபவத்தை உலகுய்ய வெளியிட்டருளி அரங்கன் திருவடிகளிலே, அனைவரும் காணும்படி தன் திருமேனியோடு, ஆண்டாளைப் போலே அந்தர் பவித்தருளினார்.

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான் (பாசுரம் . 9)

**ஆலமாமரத்தினிலை மேலொரு பாலகனாய்**
**ஞாலமேழுமுண்டா னரங்கத்தரவினணையான்**
**கோல மாமணியாரமும் முத்துத் தாமும் முடிவில்ல தோரெழில்,**
**நீலமேனி ஐயோ! நிறைகொண்ட தென் நெஞ்சினையே.**

என்பதில், பெரியதான ஆலமரத்தினுடைய சிறிய இலையிலே, ஒரு சிறு பிள்ளையாகி ஏழு உலகங்களையும் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனும், கோயிலிலே திருவனந்தாழ்வானாகிற இனிய திருப்பள்ளியின் மீது கண் வளர்ந்தருள்பவனுமான ஸ்ரீரங் கனுடைய கோலம் தன் நெஞ்சைக் கொள்ளைக் கொண்டதாகக் கூறுகிறார். ஆலமாமரத்தினிலை மேல், '**பாலாலிலை**' என்கிறபடியே, ஆலமரத்திலே நெரியில் பால் பாயும்படியிருக்கிற இளந்தளிரிலே, '**இலைமேல்**' என்கை போலே இந்த இலைக் குள்ளே அடங்கும்படியாய்த்து வடிவில் சிறுமையிருப்பது,

'யசோதா ஸ்தநந்தயம் ப்ரரௌடதஸ' என்னும்படி அத்விதீ யனான பாலகனாய், யசோதா ஸ்தநந்தயமான க்ருஷ்ணனும் பெரியவன் என்னும்படி இவனுடைய பால்யம் செம்பால் பாய நிற்கும்.

இந்த பால்யத்தை விளக்குகிறார். சிறு பிள்ளைகளா யிருப்பார், கண்ணில் கண்ட பதார்த்தங்களை எடுத்து வாயிலிடுமா போலே எம்பெருமானும் ஸப்தலோகங்களையும், 'தேவதிர்யங்க மநுஷ்யஸ் தாவருபமான ஜகத்தை வமுது செய்து ஒரு ஆலம்தளிரிலே இடம் வலங்கொண்டு கண் வளர்ந்திருளுகிற அகடிதங்களை (செயற்கரிய செயல்) செய்தவன், (அரங்கத் தரவினையான்) ஸம்சார ப்ரளயத்தினின்று மெடுக்கக் கிடந்தபடி, அந்த ஆலிலையினின்றும் இங்கே வர சருக்கின் வித்தனை இப்ரமாணத்தோடே கூடின செயலை செய்தானென்று பயப்படுமவர்கள் அச்சங்கெடும்படி கிடக்கிற இடம் (அரவிணையான்), அப்ரளய ஜலதியிலே இந்த ஜகத்தையுடைய தன் திருவயிற்றுக்குள்ளே வைத்து, தான் அத்யந்தம் சிசுவாய், ஆலிலை என்று பேர் மாத்ரமான தோரிளந்தளிரிலே இடம் வலம் கொண்டு கண்வளர நின்றான்.

இப்படி பெரிய ஜகத்தையெல்லாம் அமுது செய்தால் அறாதொழிதல், அமுது செய்ய அண்டத்தின் பெருமையாலும் இவற்றின் சிறுமையாலும் வயிறு விரிதல், ஆலமிளந்தளிரிலே இடம் வலங் கொள்ளப்புக்கால் கடலிலே புக்கு போதல் செய்யிற் செய்வதென்"?. என்று வயிறு பிடிக்க வேண்டாத படியிறே. திருவரங்கப் பெருநகராகிற பெரியகோயிலிலே இருளிரியச் சுடர் - அநந்தனென்னும், அணை என்ற பெரிய படுக்கையிலே மொகுமொசென்று வளர்ந்த பெரிய வடிவும் தாமுமாய் பெரியபெருமாள் கண் வளர்ந்தருளின படி. அங்குப் பரிவரில்லையென்ற குறையில்லையிறே -- படுக்கையான இவன் தான். ஜகதுபாதாநமாய் இருப்பதொரு சிந்தாமணியையுமிழ்ந்து

இத்தை யாரேனுமொருவர் இறாய்ஞ்சிக் கொள்ளில் செய்வதென னென்று தன் மடியிலே வைத்து கரண்டக மிட்டுக் கொண்டு கிடக்கிறாப்போலேயிருக்கை. '**தீ முகத்து நாகனை**' என்றும் '**ஆங்காரவாரமது கேட்டழலுமிழும் பூங்கா ரரவு**' என்றும் சொல்லுகிறபடி இவ்வஸ்துவுக்கு என் வருகிறதோ என்று தன்னுடைய பண மண்டலங்களால் விஷாக்நியை உமிழ்ந்து கொண்டு நோக்கிக் கொண்டு போருகையாலே, அவாந்தரப்ரள யத்திலே அகப்பட்டவர்களை தன் வயிற்றில் வைத்து ரஷித்தான். ஸமஸாரமாகிற மஹா ப்ரளயத்திலே, புக்கவர்களை '**ஸ்ரீமாந் ஸுகஸுப்த:**' என்றும் '**கிடந்ததோர் கிடக்கை**' என்றும் சொல்லுகிற தன் கிடையழகைக் காட்டி ரக்ஷித்தான் என்கிறார்.

## 30.திருமங்கையாழ்வார்

**'ஸுதா கா நாப்தா நாம் கலியுக பவா நாம பகமே**
**நளே வர்ஷே மாஸே ஸரதி சரமே தை வதகுரோ: |**
**திநே தாரே வஹ்நேஸ்ஸிஸிர கிரண பூர்ணி மஜுஷி**
**ஷிதாவா விர்புத: கலிரிபுர மேயாத் மமஹிமா ||**

(கலியில், 397 வருஷங்கள் சென்றபின் நள வருஷத்தில், கார்த்திகை மாதம் அக்னியின் நட்சத்திரமான கார்த்திகையில் அவதரித்தருளினார். கள்ளர் குலத்தில் நீலன் எனும் திருநாமத தில் திருக்குறையலூரில் அவதரித்தார்) ஆயுத வித்தைகளில் தேர்ச்சி பெற்று சோழ அரசனிடம் சேனாதிபதியாய் இருந்து பல போர்களில் வெற்றிப் பெற்று பின், '**பரகாலன்**' என்று புகழ்பெற்று பின் சிற்றரசனாகவும் முடி சூடினார். பின் திருமங்கை மன்னன் எனப்பெயர் பெற்றார். இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழிலும் ஈடுபாடுடையவராய் நான்கு புருஷார்த்தங்களில் மூன்றாவதான காம புருஷார்த்தத்திலேயே கண் செலுத்துபவராய் இருந்தார். பல இன்னல்களுக்குப் பின் பகவத் அனுக்ரஹம் பெற்று திவ்யப்ரபந்தங்களைப் பாட வல்லவரானார். பல திவ்ய

தேசங்களை ஸேவித்தார். திருவரங்கத்தில் விமானம் அமைப்பது, கோபுரம் கட்டுதல் போன்ற பல கோயில் பணிகளை மிக சிறப்பாகச் செய்தவர். பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிறிக்கை, சிறிய திருமடல், பெரியதிருமடல் போன்ற ப்ரபந்தங்களை அருளிச்செய்தார். அவற்றிலிருந்து சிலவற்றை நாமும் அனுபவிப்போம்.

**ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல்வாழி**
**தாழ்வாது மில் குரவர் தாம் வாழி – ஏழ்பாரும்**
**உய்ய அவர்களுரைத்தவைகள் தாம் வாழி**
**செய்ய மறை தன்னுடனே சேர்ந்து.**

- (பெரியஜீயர் அருளிச்செய்தது)

இனி திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பாசுரங்களைக் காண்போம்.

**பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவு அணைப்**
**பள்ளி கொள் பரமா! என்று**
**இணங்கி வானவர் மணிமுடி பணிதர**
**இருந்த நல் இமயத்து.**
**மணம் கொண் மாதவி நெடுங் கொடி விசும்பு உற**
**நிமிர்ந்து அவை முகில் பற்றிப்**
**பிணங்கு பூம் பொழில் நுழைந்து வண்டு இசைசொலும்**
**பிரிதி சென்று அடை, நெஞ்சே!**

- (பெரிய திருமொழி : 1-2-6)

ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க அங்கு நின்றும் எங்களுடைய கூக்குரல் கேட்கைக்காகத் திருபாற்கடலிலே கண்வளர்ந்தருளின தேவரீர் எல்லார்க்கு மொக்க அனுபவிக்கலாம்படி இங்ஙனே எழுந்தருளியிருப்பதே! ஆறு, குளங்கள் நிரம்பினால் அதிக ஜலத்துக்கு போக்கு விடுகைக்கு

பல வாய்த்தலைகளுண்டாமா போலே பகவதநுபவ ஜநித ஹர்ஷத்துக்கு போக்கு விடுகைக்கு பலதலைகளையுமுடையனா யிருக்கிற திருவனந்தாழ்வானுடைய ஸ்பர்சத்தாலே கண் வளர்ந் தருளுகிற ஸர்வாதிகனே! பிராட்டியை எனக்கென்னுதல், திருவனந் தாழ்வானைப் படுக்கையாக பெறுதல் செய்யும் தத்வமாயிற்று. ஸர்வாதிகமாவது, ஸர்வேச்வரனுக்கு தூங்கு மெத்தை போலே அசைந்து வாரா நிற்குமாயிற்று. யசோதா பிராட்டி க்ருஷ்ணனை தன் மடியிலே கொண்டிருந்து தாலாட்டுமா போலே ஸர்வேஶ் வரனை தன் மடியிலே சாயவிட்டுக் கொண்டிருந்து ஏத்தா நிற்குமா யிற்று. திருவனந்தாழ்வான் மடியிலும், திருவடி சிறகின் கீழும், ஸ்ரீசேனாதிபதியாழ்வான் பிரம்பினுள்ளுங் காண் இத்தத்வம் வளருவது. வ்ருத்த மந்திரிகள் ராஜபுத்ரர்களை வைத்து நடத்துமா போலேயாயிற்று அவர்கள் நடத்தும்படி, ஸர்வேஶ்வரனும் பிராட்டியாக சாய்ந்ததால் அவர்கள் நினைவுக்கு பாங்காக குழைந்து கொடுக்கைக்கீடான ஜ்ஞாநாதிக்யத்தையும், இருவருமாய் துகையா நின்றல், ஒரு சேதனன் என்று கூசாதே படுக்கை என்று துகைக் கலாம்படி, சேஷியானவன் ஸர்வாதிகனாயிருக்க செய்தே தன்னை ஆஶ்ரித பரதந்திரனாக்கி வைக்குமாபோலே சேஷபூதனும் தன்னு டைய ஸர்வவ்யா பாரங்களையும் சேஷிக்கு உறுப்பாக்கி வைத் தாற போல் உள்ளது. மேலும்,

உரம் தரு மெல் அணைப்பள்ளி கொண்டான்
ஒரு கால் முன்னம் மாஉருவாய்க் கடலுள்
வரம் தரு மாமணி வண்ணன் இடம்
மணி மாடங்கள் சூழ்ந்து அழகு ஆயகச்சி
நிரந்தவர் மண்ணையில் புன் நுகர் வேல்
நெடு வாயில் உக, செருவில் முன நாள்
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே.

- (பெரிய திருமொழி – 2-9-3)

இப்பாட்டில் அர்த்தமான பாலநதர்மத்தை, திருப்பாற்கடலில் கண் வளர்ந்தும், ஹஸ்திகிரியில் அருளாளரையும் நடத்தின படியை அநுஸந்திக்கிறார்.

உரத்தை – பலத்தை தரும் லக்ஷணயா சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றியருளச் செய்கிறார். திருமுடி பக்க முயர்ந்து கொடுக்கையும், மற்றையிடம் தாழ்ந்து கொடுக்கையும் கடலிலே திருவனந்தாழ்வான் மேல் கண் வளர்ந்தருளினான், என்றன்வயித்து, இதற்கீடாக, மாமணி சிந்தாமணி போலே ஸர்வாபேஷிதங்களையும் தருகையே ஸ்வபாவமாகவுடையவனென்று சப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார். அடுத்து ;

**செங்கமலத் திருமகளும், புலியும் செம்பொன்**
**திருவடியின் இணை வருட, முனிவர் ஏத்த,**
**வங்கமலி தடங்கடலுள் அநந்தன் என்னும்**
**வரி அரவின் அணைத் துயின்ற மாயோன் காண்மின்**
**எங்குமலி நிறை புகழ் நால் வேதம், ஐந்து**
**வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை**
**அம் கமலத்து அயன் அணையார் பயிலும் செல்வத்து**
**அணி அழுந்தூர் நின்று உகந்த அமரர் கோலே.**

- (பெரிய திருமொழி 7-8-1)

ஆஶ்ரிதருடைய ஸர்வ அபராதங்களையும் பொறுப்ப வளான பெரியபிராட்டியாரும், அப்பொறைக்கு எடுத்துக்காட்டான ஸ்ரீபூமி பிராட்டியும், ஸ்ப்ருஹணியமாய் (இனிமையாய்) ஒன்றுக் கொன்று ஒப்பான திருவடிகளை வருட, சனகாதிகள் துதிபாட, மரக்கலங்களால் மிக்கியிருக்கிற பெரியகடலிலே, திருவனந் தாழ்வான் என்று ப்ரஸித்தமாயிருப்பவன் மேலே கண்துயிலும் மாயோன். ஸர்வேஶ்வரனையும் **'அனந்தன்'** என்னக் கடவதிறே – அநந்தன் தன்னையும் விளாக்குலை கொள்ள வல்லனாயிருக் கையாலே அநந்தன் என்று ப்ரஸித்தியையுடையவனான, குன்றிச்

சூடுபோலே ஸர்வேஶ்வரனுக்கு வைத்த கண் மாறாதே கண்டு கொண்டிருக்க வேண்டும்படி தர்ஶநீயமான வரி களையுடையவனாய், ஸைத்யஸௌரப்யாதிகளை ப்ரக்ருதியாக வுடைய, திருவனந் தாழ்வான் மேல் கண் வளர்ந்தருளின ஸர்வேஶ்வரன்.

**வங்க மா முந்நீர், வரி நிறப் பெரிய**
**வாள் அரவின் அணை மேவி,**
**சங்கம் ஆர் அம்கைத் தடமலர் உந்தி,**
**சாமமா மேனி என் தலைவன்**
**அங்கம் ஆறு ஐந்து வேள்வி, நால்வேதம்,**
**அருங் கலை பயின்று எரி மூன்றும்**
**செங்கையால் வளர்க்கும் துளக்கம் இல் மனத்தோர்**
**திருக்கண்ணங்குடியுள் நின்றானே.**

- (பெரிய திருமொழி 9-1-1)

பெரியகடலிலே சிறப்பாக அழைத்துச் செல்கின்ற மரக் கலங்களில், நாநாவான வரிகளையும், அழகிய நிறத்தையுமுடைய வனாய், பிராட்டிமாருக்கும் தனக்கும் நினைத்த பரிமாற்றங் களெல்லாம் பரிமாறுகைக் கீடான பரப்பையுடையவனாய், மென்மை, குளிர்ச்சி, நாற்றம் துடக்கமானவற்றையுமுடையவனான திருவனந் தாழ்வான் மேலே படுக்கை வாய்ப் போலே பொருந்திக் கண்வளர்ந் தருளி, அழகிய திருக்கையிலே ஸ்ரீபாஞ்ச ஜன்யத்தையுடைய வனாய், ஜகத் காரணமான தாமரைப் பூவைத் திருநாபியிலேயுடை யனுமாய் கண்டார் கண் குளிரும்படி எழுந்தருளியுள்ளபடி,

**விடம் கலந்து அமர்ந்த அரவணைத் துயின்று**
**விளங்கனிக்கு இளங் கன்று விசிறி**
**குடம் கலந்து ஆடி குரவை முன் கோத்த**
**கூத்த எம் அடிகள் தம் கோயில்**

**தடங் கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத்**
**தடவரைக் களிறு என்று முனிந்து,**
**மடங்கல் நின்று அதிரும் மாலிருஞ்சோலை –**
**வணங்குதும் வா, மடநெஞ்சே!**

- (பெரிய திருமொழி 9-8-6)

பேய் முலை சுவைத்து என்று கிருஷ்ணாவதாரத்தில் அபராதங்களை அடியே பிடித்தநுசந்திக்கிறார். அரவான போதே விடம் கலந்து இருக்கும். கனமான உகவாதார் மேலே விஷத்தை உமிழா நிற்பானாய், அவனுக்கு எப்போதும் விடாதே மருவ வேண்டும்படி திருமேனிக்கநுருபமான ஸௌகுமார்யத்தை யுடையவனான திருவனந்தாழ்வான் மேலே கண் வளர்ந்தருகிறபடி என்கிறார் ஆழ்வார்.

இனி பெரிய திருமடலில் அனுபவித்தவை: பெரிய திருமடலில் தொடக்கத்தில்,

**'மன்னிய பல்பொறி சேர் ஆயிரவாய வாளரக்கன்**
**சென்னி மணிக்குடுமித் தெய்வச்சுடர் நடுவுள்**
**மன்னிய நாகத்தனை மேல் ஓர் மாமலைபோல்'**

அநேக புள்ளிகளோடு பொருந்தியுள்ளதும், வைத்த கண் வாங்க ஒண்ணாதபடியான அழகுடையவனும், ஆயிரம் வதனங்களில் உடைய ஒளி மிக்க ஆதிசேஷன் சிரஸிலுள்ள ரத்தினங்களின் திவ்யமான ப்ரகாசத்தின் நடுவே மன்னிய அனந்தனான நாகத்தின் மேலே ஒரு அஞ்சன கிரி போல் படிந்து உள்ளவன் என்று அனந்தாழ்வானை வர்ணனை செய் துள்ளார். மேலும்,

**'தேவகுமாரனைப் போன்ற உருவினனும், அலங் கரிக்கப் பெற்றவனும் என்னை நோக்கி வருகின்றவனு மான மைந்தன் ராமனை மனமெனும் உட்கண்ணால் கண்ட**

**வுடனே உகப்பிக்கிறேன். கட்கண்ணால் கண்டவுடனே கண்டாலோவெனில் மறுபடியும் வாலிபனாக ஆகி விடுகிறேன்'** என்று தசரதனும்,

' மஹாத்ஸவம்வா ·ஸத்ய புத்ரா நநவிலோகநாத்|
யுவேவ வஸுதேவாS பூத்வி ஹாயாப் யாகதாம் ஜராம்||

மைந்தன் முகம் காண பெறுகையாலே, பெருவிழைவைப் பெற்றது போலே, வந்தடைந்த கிழத்தனத்தை விட்டு வஸுதேவர் வாலிபராக ஆனார் என்றதனால் பரமபுருஷனைக் கண்ணால் கண்ட பொழுதே கிழத்தனம் நீங்கி வாலிபராக ஆகிறபோது அவனைத் தீண்ட பெற்ற திருவனந்தாழ்வானின் ஒளி விஞ்சுவதில் ஆச்சர்யமென்ன?

ஆதிசேஷனின் பட (தலை)த்தில் மணியின் கொழுந்து விட்டு ஓங்கும் அப்ராக்ருதமான ஒளிக்கற்றையின் நடுவே, வெளுத்ததாய் பெருக்கெடுத்தோடும் கங்கை நீரலைகளினுள்ளே இருப்பது போல் எழுந்தருளியிருக்கை.

திருவனந்தாழ்வானின் திருமேனியின் பெருமை, பெரிய பிராட்டியார் இனிமையின் எல்லை நிலமான தம் திருமுலைத் தடத்தாலே நெருக்கி வில்லாவடித்து எழுப்பினாற் போலே எழுப்பி னாலும், எழும்பவொண்ணாதபடி மெய்ம்மறந்து உறங்கும்படி, வாளரவாகிற அந்த ஆதிசேஷனாகிற ஒளி பொருந்திய அணை மேல் - திருவனந்தாழ்வானாகிற படுக்கையின் மேல் திருமேனி அழகுமிளிர திருமால் சயனித்திருப்பது.

## 31.ஆசார்யர்கள்

**'ஏகோ ஹவை நாராயண ஆஸீத், நப்ரஹ்மா நேசாந:'**
(மஹோபநிஷத்)

(நாராயணன் ஒருவனே முதலில் இருந்தான், பிரமனும் இல்லை, சிவனுமில்லை) என்கிறபடி ப்ரளய காலத்தில் லீலா விபூதி அழிந்து கிடந்தபோது, **'ஸஏகாகீ நரமேத'** (மஹோபநிஷத்) (அவன் ஒருவனா இருந்து இன்புறவில்லை) என்கிறபடியே அசித்சமராய் கிடந்த பத்த சேதனரைக் கண்டு வருந்தி, **'இவர்கள் உய்யும் வழி என்ன?'** என்று ஆராய்ந்து, **'ஒன்றியொன்றி உலகம் படைத்தான்'** என்கிறபடியே உலகைப்படைத்து, இச்சேதனருக்கு கரண களேபரங்களைக் கொடுத்து அதிலும் திருந்தாமையாலே, கிணற்றில் விழுந்த குழந்தையை எடுக்க தானே கிணற்றில் குதிக்கும் தாயைப் போலே, தானே பல அவதாரங்கள் எடுத்தும் திருந்தாமையாலே, மானைக் கொண்டு மானைப் பிடிப்பாரைப்போலே சேதனரைத் திருத்தச் சேதனரான ஆழ்வார்களையும் ஆசார்யர்களையும் அவதரிக்கச்செய்ய திருவுள்ளம் கொண்டான். ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன்.

உயிர்களாகிய பயிர்களைச் செழிப்பிக்கிறத் திருவுள்ளங் களைக் கொண்ட பத்தியுழவனாகையாலே பெரும் புறக்கடலான தன்னிடமுள்ள கருணையாகிற நீரைப் பருகும் காலமேகமாக நம்மாழ்வாரையும், அம்மேகம் பொழியும் நீரைப்பருகும் மலையாக நாதமுனிகளையும் அம்மலையிலிருந்து பெருகும் ஆறாகவும் கால்வாய்களாகவும் ஏரிகளாகவும் மதகுகளாகவும் எழுபத்தி நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளையும் அவதரிப்பித்தருளினான். அவர்களில் சில ஆசார்யர்களை நாம் இப்பகுதியில் பார்க்கலாம்.

## 32.ஆளவந்தார்

**யத்பதாம்போருஹத்யாந வித்வஸ்தாசேஷகல்மஷ:!**
**வஸ்துதாமுபயாதோSஹம் யாமுநேயம் நமாமி தம் !!**

(எவருடைய திருவடித்தாமரைகளை த்யானிப்பதால் எல்லா தோஷமும் நீங்கப்பெற்று, யான் ஒரு பொருளாக ஆனேனோ, அத்தகைய யமுனைத் துறைவரை வணங்குகிறேன்)

மணக்கால் நம்பி அவதரித்து நாற்பத்தேழு வருடங்களுக்குப் பின்பு '**தாது**' வருடத்திலே (கி.பி.976) ஆடி மாதம் பௌர்ணமி உத்திராடம் கூடிய வெள்ளிக்கிழமையில் நாதமுனிகளுடைய குமாரரான ஈஸ்வர முனிகளுக்கும் அவருடைய தர்ம பத்தினியான ஸ்ரீரங்கநாயகிக்கு குமாரர் நாதமுனிகள் அவதரித்த வீரநாராயணபுரத்திலே அவதரித்தருளினார். நாதமுனிகள் நியமனப்படி அவர் கைங்கர்யம் செய்த வடநாட்டு கோவர்த்தன புரத்திலுள்ள எம்பெருமானின் '**யமுனைத் துறைவன்**' என்னும் திருநாமம் இவருக்குச் ஸாத்தப்பட்டது.

**ஸ்வாதயந்நிஹ ஸர்வேஷாம் திரய்யந்தார்த்தம் ஸுதுர்லிரஹம்!**
**ஸ்தோத்ரயாமாஸ யோகீந்த்ர: தம்வந்தேயாமுநாஹவயம்!!**

இந்த ஸ்தோத்திரத்தில் ஒவ்வொரு ஃலோகத்திலும் வேதாந்த விழுப்பொருள்கள் அடங்கியிருக்கின்றனவென்பதை காட்டும். இத்தனியன் வேதாந்தமாவது உபநிஷத்துக்கள்; அவற்றின் பொருள்களை அவற்றைக் கொண்டே நேராக அறிவது அருமை; இந்த ஸ்தோத்திரத்தை அர்த்தத்துடன் தெரிந்து கொண்டால் வேதாந்தங்களின் ஸாரமான பொருள்கள் யாவும் எளிதில் தெரிந்து விடும். ஆளவந்தார் வேதாந்த தாத்பர்யங்களை அஸ்மதாதிகளுக்கு சுலபமாக தெரிவிக்கத் திருவுள்ளம் பற்றியே ஸ்தோத்திரரத்னம் என்கிற திருநாமத்தால் இந்த திவ்யக்ரந்தத்தை

அருளிச்செய்தார். வித்வான்களாயுள்ளவர்கள் உபநிஷத்துக் களைக் கொண்டு அவற்றின் பொருள்களை அறிந்து கொள்ளலா மாயினும், இந்த ஸ்தோத்திரத்தின் மூலமாய் எவ்வளவு போக்யமாக அறிந்து கொள்ள முடியுமோ அவ்வளவு மதுரமாக உபநிஷத்துக்களால் அறிந்து கொள்ள முடியாது. வேதார்த் தங்களை இதில் வெளியிடுகிற முறையானது பண்டிதர்களோடு பாமரர்களோடு வாசியற எல்லார்க்கும் இனிமையாயிருக்கும். இப்படி நமக்கு மஹோபகாரம் செய்தருளிய **'எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன்'** என்றும் ப்ரஸித்தரான ஆளவந்தாரை வணங்குகிறேன்.

**' நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம: |**
**நமோ நமோ யாமுநாய யாமுநாய நமோ நம: ||**

இனி அவர் அருளிச்செய்த ஸ்தோத்திரரத்னத்தில் பாடலை காணலாம்.

**'தயா ஸஹாஸீ நமந்தபோகிநி**
**ப்ரக்ருஷ்ட விஜ்ஞான பலைகதாமநி |**
**பணாமணி வ்ராதமயூகமண்டல**
**ப்ரகாச மாநோதரதிவ்யதாமிநி ||** (ஸ்தோ. ரத். 39)

**நிவாஸ ஸய்யாஸநபாதுகாம் ஸு*க**
**உபதாந வர்ஷாதப வாரணாதிபி: |**
**சரீர பேதைஸ் தவ சேஷதாம் கதை:**
**யதோசிதம் சேஷ இதீரிதே ஜநை: ||** (ஸ்தோ. ரத். 40)

ஆளவந்தார் ஸ்தோத்ரரத்தினத்தில் 39-40 ஶ்லோகங்களில், தயா ஸஹ அப்படிப்பட்ட பிராட்டியோடு கூட சிறந்த ஞான சக்தி களுக்கு முக்கியமான இருப்பிடமானவனும் தனது பணமணிகளின் ஸமூஹங்களினுடைய கிரண ராசிகளாலே பளபளவென்று

விளங்கா நிற்பதாக வர்ணிக்கின்றார். முன் இரு ஶ்லோகத்திலும் பிராட்டி வர்ணிக்கப்பட்டாள். அப்படிப்பட்ட பிராட்டியோடு திருவணையின் மீது எழுந்தருளியிருப்பவன் எம்பெருமான் என் கிறது இந்த ஶ்லோகத்தில். இது திருவனந்தாழ்வானை வர்ணிப்பவை. சிறந்த ஜ்ஞான பலங்களுக்கு இருப்பிடமாகவும் தமது பணமணியொளிகளினாலே பளபளவென்று விளங்குகின்ற உட்புறம் பொருந்திய திவ்ய வைகுண்ட விமானத்தையுடை யனாயும், எம்பெருமானுக்கு வசிக்கும் இடமாகவும், படுக்கை யாகவும், சிங்காசனமாகவும், மரவடியாகவும், திருப்பரியட்டமாகவும், தழுவிக்கொள்ளும் அரவணையாகவும், குடையாகவும் அந்தந்த சமயங்களுக்குத் தக்கபடி உனக்கே ப்ரயோஜனமாகும்படி பலபல வடிவுகளை கொடுத்துக் கொண்டு சேஷ விருத்திகள் செய்வது காரணமாக எல்லோராலும் **'சேஷன்'** என்று சொல்லப்படுகிற வனாயுமுள்ள திருவனந்தாழ்வானுடைய திருமேனியிலே பிராட்டியோடே எழுந்தருளியிருக்கிற உன்னை எப்பொழுதும் ஸேவிக்கப் பெறுவேன் என்று அநுபவிக்கிறார். **'மன்னிய பல பொறி சேராயிரவாய் வாளரவின் சென்னி மணிக் குடுமித் தெய்வச்சுடர் நடுவுள் மன்னிய நாகத் தணைமேல்'**என்ற பெரிய திருமகவை திருவுள்ளத்தில் கொண்டு **'பணாமணிவ்ராத'** - இத்யாதி விச்சேஷணம் இடப்பட்டது. **'சென்றால் குடையாம்'** என்கின்ற (முத. திரு. -53) பாசுரத்தில் பெரும்பாலும் **'நிவாஸ ஸய்யாஸந'** என்ற ஶ்லோகமாக மொழிப்பெயர்த்தனர் போலும். வெய்யிலில் நின்றும் காப்பதும் மழையில் நின்று காப்பதுமாகிய இரண்டு குடையின் காரியமாதலால் **'வருஷா தபவாரண'** எனப்பட்டது. ஆழ்வார் **'சென்றால் குடையாம்'** என்று பொது வாக கூறியதை இவர் விவரித்தாராயிற்று.

**'சேஷ இதீ யதே ஜநை:** என்று பலர் பாட மோதுவர் மோதுவர்களேனும் அது தப்பான பாடமென்றொழிக்க ஈறிதே என்று ஸப்தமீவிபக்தியாகவே ஓத வேண்டும். **'அனந்தபோகினி'** என்கிற விசேஷ்ய பதத்தில் அந்வயிப்பதென்பதை தெளிவு படக்கூறுகிறார்.

நித்யசூரிகள் என்பவர் அநேகர் இருக்கும் போது ஆதிசேஷனை மட்டும் ஸ்ரீவைஷ்ணவ குருபரம்பரையில் ஆசார்ய னாக அவதரித்தவனாக கூறுவதற்கு காரணம் என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். நித்யசூரிகளிடையே ஆதிசேஷன் மட்டுமே **'ப்ரக்ருஷ்டவிஜ்ஞாத பலைகதாமா'** என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடியே, ஞானத்துக்கெல்லாம் இருப்பிடமாக கொண்டாடப்படுகிறான். மற்ற நித்யசூரிகளுக்கு இந்த பெருமை அளிக்கப்படவில்லை.

ஆளவந்தார் அருளிச்செய்த சதுஃலோகி முதல் ஃலோகத்தில் பிராட்டியைக் குறித்து, '**கல்யாண குணங்கள் நிறைந்**'தவளே ; புருஷோத்தமனான உனக்கு ப்ரியனான கணவனுக்கு நாகங்களுக்கு அரசனான ஆதிசேஷன் படுக்கை' என்று அருளிச்செய்கிறார். மென்மை, குளிர்ச்சி, நறுமணம் ஆகியவற்றை ஸ்வபாவமாக உடைய ஆதிசேஷனாகிற படுக் கையை எம்பெருமான் மிகவும் உகந்தது. அதைப் போலவே எம்பெருமானுக்கும் அபிமதையும் அநுருபையாயிருக்கும் பிராட்டிக கும் அவனுடைய படுக்கைப்ராப்தம் என்கிறார் ஆளவந்தார்.

## 33.ஸ்ரீபராசரபட்டர்

**ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித: |**
**ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமாந் ஃரேயஸே மேஸ்து பூயஸே||**

(ஸ்ரீரங்கநாதனுக்குப் புரோஹிதராய், ஸ்ரீவத்ஸாங்கரென்னும் கூரத்தாழ்வானின் குமாரராய், திருவுடையவரான ஸ்ரீபராசர பட்டார்யர் மிகுதியான நன்மைகளை அருளட்டும்.)

எம்பெருமானுடைய சிஷ்யர்களில் முதல்வரான கூரத்தாழ் வானும், அவருடைய தேவிகளான ஆண்டாளும், பரம விரக்தர் களாய், விஹித விஷய நிவ்ருத்தியுடையவர்களாய் வாழ்ந்து

வந்தார்கள். ஒரு தினம் அமுதுசெய்ய ஒன்றும் காணாததால் அதனால் பெருமாள் திருவுள்ளம் ஊறத்தன் அரவணைப் ப்ராஸா தத்தை அருளும்படி நியமித்தருளினார். அந்த அரவணைகொண்டு தனக்கும் ஆண்டாளுக்குமாக இரு திவள்கள் ஸ்வீகரிக்க, புத்ரகாமேஷ்டியாகத்திலுண்டான பாயஸத்தினால் எப்படி தசரதனுக்கு நான்கு குமாரர்கள் அவதரித்ததுபோலே இவருக்கும் பட்டரும், ஸ்ரீராமப்பிள்ளையும் அவதரித்தார்கள். ஸ்ரீபராசபட்டர் பால்யதிலேயே அதிமேதாவியாய் எம்பெருமானாராலும், நம்பெரு மாளாலும், ஸ்ரீரங்கநாச்சியாராலும் சீராட்டி வளர்க்கப்பட்டார். திருமணத்தூண்களிடையே தொட்டிலிட்டு நம்பெருமாள் பட்டரை லாலனம் செய்தார் என்பது ப்ரஸித்தம். **'ஸ்ரீரங்கராஜ கமலாபதலாளி தத்வம்'** என்று இதை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் அருளியிருக்கிறார்.

ஶ்ரிய:பதியான பகவானுக்கு எப்போதும் அடிமை செய்து உகப்பிக்கும் நித்யசூரிகளுள் திருவனந்தாழ்வான் எனப் படும் ஆதிசேஷனே முதலில் எண்ணத் தகுந்தவர். பூர்வா சார்யர்கள் தங்கள் ஸ்தோத்ரங்களில் ஆங்காங்கே ஆதிசேஷனைப் பற்றி அனுபவித்துள்ளது இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. முதலில் ஸ்ரீபராசரபட்டர் அனுபவித்ததை காணலாம்.

ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் முதல் 45 ஸ்லோகங்களில் ஆதிசேஷனின் பெருமையை அருளிச்செய்கிறார். சகலவித கைங்கர்யங்களுக்கும் உரியவனான திருவனந்தாழ் வானே ஸ்ரீரங்கவிமானமாக வடிவம் கொண்டு இருப்பதால், அந்த திருவனந்தாழ்வானுடைய நிறம் வெளுத்திருப்பது போன்றே ஸ்ரீரங்க விமானமும் வெள்ளை நிறத்தையுடையது. அதில் கண் வளர்ந்தருளுகிற காளமேகம் போன்ற கரியதிருமேனியை உடைய பெரியபெருமாளின் நிழலாலே கருமையடைந்து, கடல் நீரைப் பருகி கிளர்ந்த காளமேகத்தைக் காட்டிலும் வீறுபெற்று விளங்கு கிறது. ஆகவே பரம போக்யமான அந்த திவ்ய விமானம் நமக்கு குளிர்ச்சியினைத் தருகிறது, என்கிறார்.

பெரியபெருமாளை அனுபவிக்க புகுந்த பராசரபட்டர் முந்துற முன்னம் திருப்படுக்கையான திருவனந்தாழ்வானை வணங்குகிறார். கைங்கர்யத்தையே வேண்டும்பட்டர், ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் திருவனந்தாழ்வானைப் போன்றே சகலவிதமான கைங்கர்யமும் தாம் செய்யவேணும் என்கிற விருப்பத்தைத் தெரிவிக்கிறார். திருவனந்தாழ்வான் படுக்கை, ஊஞ்சல் படுக்கை, திருவனந்தாழ்வானுடைய படம் பள்ளி கொள்ளும் மெத்தைக்கு மேற்கட்டியாகிறது. **'மன்னிய பல்பொறிசேர் ஆயிரவாய் வாளரவின் சென்னி மணிக்குடுமித் தெய்வசுடர்'** (பெரியதிருமடல்) என்கிறபடி, ஆதிசேஷனின் பணத்தில் மாணிக்க ஒளிகள் பரவியிருப்பதானது அந்த மேற்கட்டியில் இரத்தினங்கள் இழைத்திருப்பது போன்று உள்ளது. நல்லபரிமளம், சோபை, மெத்தென்றிருத்தல் போன்ற குணங்கள் நிறைந்து தன்னுடலில் ஸ்ரீரங்கநாதனை இனிதாக கண் வளரச் செய்கிறான் திருவனந்தாழ்வான். ஊஞ்சல் போல் அசைந்து கொண்டு இருக்குமே. இத்திருவனந்தாழ்வானுக்கு ஸ்ரீரங்கநாதனைத் தாங்குவதால் ஏற்படும் களைப்பினால் மேல்மூச்சு, கீழ்மூச்சுக்களை மெல்ல வீச அதனால் அசைகிறது. இப்பேர்பட்ட ஊஞ்சல் படுக்கையான ஆதிசேஷனை வணங்கி **'எம்பெருமானுக்கு பரிவர் ஒருவருமில்லையே எனும் அச்சம் தவிர்த்து மகிழ்ச்சி உண்டாயிற்று'** என்கிறார் பட்டர். ஸ்ரீவைகுண்டத்தையும் ஸ்ரீபாற்கடலையும் மறந்தொழிந்து, **'அவற்றைக் காட்டிலும் போக்யதை விஞ்சினவிடம் இது'** என்று கோயிலிலே எழுந்தருளி உறங்குவான் போல், ஆதிசேஷன் மீது யோகு செய்யும் பெருமானாய் விளங்கும் பெரியபெருமாள் நம்மையும் திருவுள்ளம் பற்றி அருளவேண்டும் என ப்ரார்த்திக்கிறார்.

பெரியபெருமாள் சிலகாலம் ஸ்ரீதேவியொடு விளையாடுகிறார். சில காலம் நித்ராதேவியோடு விளையாடுகிறார். திருப்பள்ளி மெத்தையாய் இருக்கும் திருவனந்தாழ்வானுடைய மிகுதியான மூச்சு காற்றினால் திருக்கண்கள் சிதறுகிறதாம்,

பெரியபெருமாளுக்கு திருக்கண்களை மூடியும் திறந்தும் ; துயில் கொள்கிறார் என்கை.

ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பூர்வ சதகம் 14ம் ஶ்லோகத்தில் ஸ்ரீபராசரப்பட்டர்:

‘யதிமேஸஹஸ்ர வதநாதி வைபவம்
நிஜமர்ப்பயேத் ஸகில ரங்கசந்த் ரமா:|
அதஸேஷவந் மம சதத் வதேவவா
ஸ்துதி ஸக்த்ய பாவ விபவேஅபி பாகிதா|

அழகியமணவாளனை ஸ்தோத்ரம் பண்ண என்னால் ஆகாது. அந்த வார்த்தை சொல்வதற்கு எனக்கு யோக்கியதை இல்லை என்கிறார். ‘எம்பெருமானை துதிக்க என்னால் முடியாது என்று சொல்ல வேண்டில் துதிப்பதற்கு சிறிதேனும் யோக்கியதை இருந்தால் அன்றோ இந்த வார்த்தையை சொல்ல ப்ரஸக்தி உண்டாகும். திருவனந்தாழ்வான் போலேவேயோ அந்த எம்பெருமானை போலேயோ நானும் ஆயிரம் வாய்கள் படைத்திருந்தேனாகில் துதிப்பதற்கு எனக்கு அதிகாரம கிடைக்கலாம். அது போலவே ஸ்தோத்ரம் பண்ண என்னால் முடியாது’ என்று சொல்வதற்கும் ஆதிசேஷனைப் போலே ஆயிரம் வாய்கள் படைத்திருக்க வேண்டும் என்கிறார்.

## 34.பிள்ளைலோகாசார்யர்

லோகாச்சார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே |
ஸம்ஸார போகி ஸந்தஷ்ட ஜீவ ஜீவா தவே நம :

வள்ளல் வடக்கு திருவீதிப்பிள்ளை:

நம்பிள்ளையின் சிஷ்யர்களில் இருகண்ணர் என்று போற்றப்படுபவர்கள் வடக்குத்திருவீதிப்பிள்ளையும், பெரியவாச்சான்

பிள்ளையும் ஆவர். பகலெல்லாம் நம்பிள்ளை அருளிச்செய்த திருவாய் மொழிப் பேருரையைக் கேட்டு, இரவில் அவற்றை ஏற்படுத்திப் பின்புள்ளோர் அனைவரும் பயன் கொள்ளுமாறு செய்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இது பற்றிய அவருடைய திருநாமத்திற்கு முன்பு **'வள்ளல்'** என்ற அடைமொழி அமைந்துள்ளது.

**பிள்ளைலோகாசார்யர் பெயர்க்காரணம்:** அடைய வளைந்தான் திருமதிளின் கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த கேசவப்பெருமாள் திருக்கோயிலின் வடக்கு மாடவீதியில் எழுந் தருளியிருந்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை என்று கொண்டா டப்படும் ஸ்ரீகிருஷ்ணர். அவர், நம்பூர் தேவராஜர் என்ற நம்பிள்ளை யின் திருவருளாலும், காஞ்சி தேவப்பெருமாளுடைய அவதார விசேஷமாகவும் பிறந்த தம் குழந்தைக்குப் **'பிள்ளைலோகா சார்யன்'** என்ற திருநாமத்தை இட்டருளினார். வெள்ளப் பெருக் கெடுத்து அணை உடைந்தால் அது காடு மேடு எங்கும் பரந்து பாய்ந்திடுவது போல் பிள்ளைலோகாசார்யன் என்ற திருநாம மானது அறிவுடையார், அறிவற்றவர் என்ற பேதமின்றி அனைவர் உள்ளத்திலும் நிலை நின்றது.

ஸ்ரீமணவாளமாமுனிகள் தம்முடைய உபதேசத்தின் மாலை 52ஆம் பாட்டில்

**'பின்னை வடக்குத் திருவீதிப்பிள்ளை அன்பால்**
**அன்ன திருநாமத்தை யாதரித்து – மன்னு புகழ்**
**மைந்தர்க்குச் சாத்துகையால் வந்து பரந்ததெங்கும்**
**இந்தத் திருநாமம் இங்கு'**

என்று இந்த வைபவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பூர்வாசார்யர்களிடையே மிகுதியான கருத்து வேறுபாடுகள் இல்லாமல் வளர்ந்து வந்த இந்த விஸிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ

மதத்தில் ரஹஸ்யத்ரய அர்த்தங்கள் விஷயத்தில் சில கருத்து வேறுபாடுகள் எம்பெருமானாரது காலத்திற்கு பிறகு தோன்றின. அந்நிலையில் திவ்யப்பிரபந்த வ்யாக்யாதாக்களின் கருத்துக்கள் வடக்குத் திருவீதிப் பிள்ளையின் திருகுமாரர்களாய், நைஷ்டிகப்ரம் மசாரிகளான பிள்ளைலோகசார்யராலும், அழகியமணவாளப்பெரு மாள் நாயனாராலும், பெரியவாச்சான்பிள்ளையின் திருக்குமாரரான நாயனாராச்சான் பிள்ளையாலும் தமது நூல்களில் நிலை நாட்டப் பெற்றன. இவர்களில், அநுபவ நூல்களாக திவ்யப்ரபந்தங் களுக்கோ, ஸ்தோத்ரங்களுக்கோ உரையிடாமல், தத்வஹித புருஷார்த் தங்களையே பிள்ளைலோகாசார்யர் எனும் மதாசாரியர் **'அஷ்டாதச ரஹஸ்யங்கள்'** அருளிய இவர் இந்த நூல்களில் விசிஷ்டாத் வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தக் கொள்கைகளை தெளிவுபடுத்தி யிருக்கிறார். வாழ்நாள் முழுதும் திருமணம் செய்து கொள்ளாமல் தர்சனத்துக்காகவே வாழ்ந்து, பின் முஸ்லீம் படையெடுப்பின் போது திருவரங்கப்பெருமாளை (அழகியமணவாளனை) காப்பதற் காகத் தன் உயிரையும் தியாகம் செய்தவராவர்.

ஸ்ரீமணவாளமாமுனிகள் **'வாழிய உலகாசிரியன்'** என்கிற திருநாமத்தைத் தாமும் பலகாலம் அனுஸந்தித்தருளி தமக்கு அந்தரங்கமானவர்களுக்கும் பேற்றுக்குத் துணையாக உபதேசித் தருளுவாராம். இந்தத் திருநாமத்தை வாய்விட்டுச் சொல்லாதவர் களை **'இப்படி எளிதும் இனிதுமான திருநாம மிருக்க, இத்தை வாய்வெருவி உய்வு பெறாமல் இழந்து போவதே'** என்று வெறுத்தருளுவாராம்.

<u>பிள்ளைலோகாசார்யர் அருளிய நூல்கள்:</u>

அஷ்டாதச (18) ரஹஸ்யங்களைத் தவிர இவர் அருளிச் செய்ததாக சில ரஹஸ்யங்கள் (மறைபொருள் நூல்கள்) உரை களில் மேற்கோளாகிக் காட்டப்பட்டுள்ளன.

இந்த பதினெட்டு ரஹஸ்யங்களில் முமுக்ஷுப்படி, தத்வத்ரயம் ஸ்ரீவசனபூஷணம் எனும் மூன்றும் மாமுனிகளால் உரையிடப் பெற்று ஸ்ரீவைஷ்ணவவுலகில் காலக்ஷேபக்ரந்தங்களாகக் கற்கப்படுகின்றன. ஸ்ரீவசனபூஷணத்தில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் சுருக்கமாக ஸப்தகாதை என்ற நூல் பிள்ளை லோகாசார்யருடைய சிஷ்யரான விளாஞ்சோலைப்பிள்ளையால் அருளிச்செய்யப்பெற்றது. அஷ்டாதச ரஹஸ்யங்களில் ஒன்றான **'அர்த்தபஞ்சகத்திற்கு'** பிள்ளைலோகம் ஜீயர் உரையருளிச் செய்துள்ளார்.

**அர்ச்சிராதி**:

பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த மற்றொரு ரஹஸ்ய க்ரந்தமான **'அர்ச்சிராதியில்'** முமுக்ஷுவானவன் அர்ச்சிராதி கதியில் செல்லும் வைபவத்தினை விவரிக்கையில் நித்யசூரிகளது திருமாளிகைக்கு எழுந்தருளும் வைபவத்தை அனுபவிப்பதை இனி காணலாம்.

அநேக மாயிரங்கொடிகளாலும், முத்துத்தாமங்களாலும், மேற்கட்டிகளாலும் அலங்க்ருதமாய், திவ்ய ஸ்த்ரீபரிவ்ருதமாய், பகவத் ஸங்கல்பகல்பிதமாயிருப்பதொரு திவ்ய விமானத்தை பெரியதிருவடி கொண்டு வர, அதில் இவனை ஏற்றி, ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு திவ்யகாந்தாரத்தளவிலே சென்றவாறே: நாநாவிதமான உபஹாரங்களை ஏந்திக்கொண்டு வேறே சில திவ்ய அப்ஸரஸுக்கள் எதிர் கொண்டு அழைக்க, பின் திவ்ய கந்தம், ப்ரஹ்மகந்தம் தொடக்கமான அப்ராக்ருத கந்தங்களை ஆக்ராணம் பண்ணி ஸர்வகந்தனாய் **'கொடியணி நெடுமதிள் கோபுரங்குறுகினர்'** என்கிறபடியே த்வஜபதாகாதிகளாலே அலங்க்ருதமான திவ்ய கோபுரத்தை அடைந்து, திருவாசல் காக்கும் முதலிகள் **'வைகுந்தத்தமரேமரேமதிடம் புகுந்து'** என்கிறபடியே பெரிய ஆதாரத்தோடே ஸத்கரிக்க **'ஸ்மதீத்ய ஜனாகுலம்' 'கவாடங்கடந்துபுக்கு'** என்கிறபடியே நெஞ்சையும்

கண்ணையும் வருந்தி மீட்டுக்கொண்டு, அயோத்யையென்றும் அபராஜிதை என்றும் சொல்லப்படுகிற ஏர்கொள் வைகுந்த மாநகரத்திலே ஒரு வண்ணஞ்சென்றுபுக்கு, '**ஸ்ரீ வைகுண்டாய திவ்ய நகராயநம ; என்று கண்ணன் விண்ணூரைத் தொழுது, வைகுந்தத்தமரரும் முனிவரும், கடலில் நீர் ஸஹ்யத்திலே ஏறிக் கொழித்தாற் போலே ஸம்ஸாரஸ்தனான இவன் இத்தேசத்திலே வரப் பெறுதே!'** என்று விஸ்மிதராய் கொண்டாட, பின்பு கோயில்கொள் தெய்வங்களான பெரிய திருவடி, ஸ்ரீசேனா பதியாழ்வான் தொடக்கமானவர்கள் தந்தம் திருமாளிகைகளிலே கொண்டு புக்கு, இவனை ஆசனத்தில் உயர வைத்து, தங்கள் தரையிலிருந்து, தங்கள் மஹிஷிகள் நீர்வார்க்க, ஸ்ரீபாதம் விளக்கி, தங்கள் மஹிஷிகளுக்கு **'தேவர் வைகல் தீர்த்தங்களே'** என்று இவன் ப்ரபாவத்தைச் சொல்லி ஸத்கரிக்கும் க்ரமத்திலே ஸத்கரிக்க'.

பரமபதத்திலே ஸ்ரீ சேனாபதியாழ்வான் தொடக்கமானவர்கள் என்று குறிப்பிடும்பொழுது அனந்தாழ்வானாகிற ஆதிசேஷனும் இந்த முமுக்ஷுவாகிய ஜீவனைத் தன் திருமாளிகைக்கு எழுந்தருளச் செய்வித்து ஸ்ரீபாதம் விளக்கி சத்காரம் செய் தருள்வான் என்று கொள்ளவேண்டும்.

இவர் காலத்தில் கி.பி1311இல் முதன்முதலில் மாலிக்கா:. பூரின் தலைமையில் முகம்மதியர்களின் படையெடுப்பு நிகழ்ந்தது. இந்த படையெடுப்பின் போது தங்க விமானம், தங்கத்தாலான கொடிமரம் மற்றும் தேர், தங்கப்பதுமைகளான பொன் மேய்ந்த பெருமாள், சேரகுலவல்லி, உறையூர் கமலவல்லி ஆகியவற்றோடு விலையுயர்ந்த ஆபரணங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. அழகியமணவாளன் இந்தப் படையெடுப்பின் போது டில்லி சுல்தான் அரண்மனைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் கோயிலொழுகு குறிப்பிடுகிறது. அவர் மீண்டும் ஆஸ்தானம் எழுந்தருளிய போதுதான் அழகியமணவாளனும், பிள்ளைலோகா சார்யரால் எழுந்தருளப் பண்ணப்பட்டார்.

## 35. ஸ்ரீவேதாந்த தேசிகர்

**ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ |**
**வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ||**

(கவிகளுக்கும், தார்க்கிகர்களுக்கும் சிங்கம் போன்றவராய் ஜ்ஞாநம், புத்தி, வைராக்கியம் முதலான செல்வங்கள் நிறைந்தவராய் 'வேங்கடநாதன் எனும் திருநாமமுடையவரான ஸ்ரீவேதாந்த தேசிகர் நெஞ்சில் எப்பொழுதும் வாழ்வாராக)

நடாதூரம்மாளுடைய சிஷ்யர்களில் கிடாம்பியாச்சானு டைய பேரரான கிடாம்பி அப்புள்ளாரும் ஒருவர் **'அப்புள்'** எனபட்ட கருடனை ஒத்தவர் என்று பொருள் தருகிறது இப்பட்ட பெயர். இவருடைய மற்றொரு பட்டப்பெயர் **'வாதிஅம்ஸாம் புவாஹர்'** என்பது தாய் தகப்பனார் இட்ட பெயர். **'ராமானுஜர்'** என்பது இவருடைய மருமகனும், சிஷ்யருமாக இருந்தவரே உலகம் நிறைந்த புகழுடையவரான ஸ்ரீவேதாந்ததேசிகர். ஸ்வாமி இளம் வயதிலேயே மாதுலருடன் நடாதூரம்மாளுடைய காலட்சேப கோஷ்டிக்கு சென்ற போது, அம்மாள் **'இவன் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தை ப்ரதிபக்ஷ நிரஸன பூர்வமாக நிலைநாட்டப் போகிறான்'** என்று தம்மை ஆசீர்வதித்தாக தேசிகனே தம் க்ரந்தங்களில் அருளிச்செய்துள்ளார். தென்மொழி, வடமொழி, மணிப்பிரவாளநடையில் சுமார் நூறு க்ரந்தங்கள் அருளிச் செய்துள்ளார். காஞ்சியில் திருத்தண்காவில் விஶ்வா மித்திர கோத்திரத்தில் திருவேங்கடமுடையானின் திருமணியின் அம்சமாக அனந்த சூரிக்கும் தோத்தாரம்பைக்கும் குமாரராய் சுமார் 25 வருஷம் முன் புரட்டாசி திருவோணத்தில் அவதரித்தவர். திருவேங்கடமுடை யானது திருவவதார தினத்திலேயே அவதரித்ததைப் பற்றி இவருக்கு **'ஸ்ரீவேங்கடேசன்"** என்று திருநாமம் சூட்டினர். ஸ்ரீரங்கநாதபெரு மாளால் **'வேதாந்தசார்யார்'** என்றும் ஸ்ரீரங்கநாச்சியாரால் **'கவிதார்கிக கேஸரீ, ஸர்வதந்த்ரஸ்வதந்தரர்'** எனும் விருதுகள் பெற்றவர்.

## 36. பாதுகா ஸஹஸ்ரம்

ஸ்ரீரங்கநாதனுடைய பாதுகைகளைப் பற்றி ஸ்வாமி தேசிகன் அற்புதமாக, ஆயிரம் ஶ்லோகங்களைக் கொண்ட **'பாதுகா ஸஹஸ்ரம்'** எனும் கரந்தத்தை அருளியுள்ளார். ஆதிசேஷனே எம்பெருமானுக்கு பாதுகையாகவும் ஆவதால் (நின்றால் மரவடியாம்) ஆதிசேஷனின் பெருமையை விளக்குவது தான் **'பாதுகாஸஹஸ்ரம்'** முழுதும். ஆயினும் சேஷனுக் காகவே ஒரு தனி அதிகாரம் **'சேஷ பத்ததி'** என்று அருளியிருக்கிறார்.

சேஷன் என்ற பெயருக்கேற்ப எப்பொதும் கைங்கர்யம் செய்துக்கொண்டு இருக்க வேண்டும் என்பதற்காகவே அனந்தன் எம்பெருமானுக்கு படுக்கையாகவும், பாதுகையாகவும் ஆகிறான் ஆனாலும் பெருமானுடைய திருவடிகளுடன் முழுமையான ஸ்பரிசம் வேண்டும் என்பதற்காக பாதுகையாகவும் இருக்கிறான் அனந்தன். படுக்கையாக இருப்பதால் அனந்தனுக்கு சேஷத்வம் இருந்த போதிலும் எப்போதும் பாதுகையாக இருந்து பகவானை தாங்குவதால் அந்த சேஷத்வம் இன்னும் அதிகமாகிறது.

**ஸ்ருஷ்டாம் பூர்வநந்தேந நித்யம் சேஷஸமாதிநா**
**அஹம் ஸம்பாவயாமி த்வாம் ஆத்மாநம் இவ பாதுகே.**

ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன், சேஷ பத்ததியில் இவ்வாறு கூறி உள்ளார்.

எல்லோரும் சேஷராக வேண்டுமென்று அவர்களின் புண்யபாபங்களை நீக்கி திருத்த உலகில் ஜீவஸம்ஷ்டியைப் பெருமாள் படைகிறான். அந்த ஜீவ ஸமஷ்டிக்கும் பாதுகைக்கும் அனந்தனாலே சேஷ ஸமாதியாலே படைக்க படுகை என்ற ஒப்புமையிருப்பதால் பாதுகையை ஜீவஸமஷ்டி போல் என்கிறார்.

அனந்த என்ற சொல்லுக்கு பொருள் வெவ்வேறு. இது எல்லோரும் இட்ட உரை. நித்யஸூரியான பாதுகையை, பக்த ஜீவஸமஷ்டி போன்றதென்றால், உத்க்ருஷ்டத்தை நிக்ருஷ்டமாக்கினதாமே என்னில், பாதுகை அன்று அசேதன உருவை மட்டும் எடுத்து, அதைச் சேதநனான ஜீவனுக்கு ஒப்பாக சொல்வதில் விரோத மில்லை. மேலும் ஸந்நிவேசம், ரேகை முதலியன சொல்லபட வேண்டியிருக்க, உள்ளிருக்கும் ஆத்மாவை குறிக்க சேஷபத்த தியை இங்கே சேர்ப்பானேன் என்கிற கேள்விக்கு இந்த உதாரணம் ஸமாதானமாகும். எவ்வாறெனில், பொன், மணி போன்ற அம்சங்கள் சொல்லப்பட்டன. முழுவுரு மேலே சொல்லப்படும். பஞ்சபூதங்கள் தேஹமாய் மாறுவதற்கு முன்னமே ஜீவன் இங்கே இருப்பது போல் சேஷனின் ப்ரவேசம் முன்னே என்பதாக.

இனி ஆசார்யனை, எம்பெருமானைப் போல் தனக்கு சமமாக நினைத்து எல்லா போகங்களையும் ஸமர்ப்பிக்க வேண்டு மென்ற ப்ரமாணத்திற்கு இணங்க, **'ஆத்மா நமிவ'** என்பதற்கு என்னைப் போல் என்பது பொருளாகும். நான் அநந்தஸூரி என்கிற மஹானால் சேஷஸமாதிநா சேஷமலையென்ற திருமலையை வாஸஸ்தலமாக உடைய திருவேங்கடாமுடை யானால், அல்லது திருவேங்கடத்திற்கு எழுந்தருளித் தங்கிய அநந்தஸூரியால் பூமியில் புதல்வனாக படைக்கப்பட்டவன் எனக் கொள்ளலாம். அநந்த சேஷ ஸமாதி மூலமான பிறப்பென்பது இவருக்கும் பாதுகைக்கும் ஒத்துமையாகும். பூமியில் என்பதால் இவரும் அவதாரமென்று குறிக்கப்படும். பாதுகையை பூமியில் படைக்கப்பட்டதாக பகர்ந்ததும் ஆதிசேஷன் நீரில் திருப்பள்ளியாயிருப்பவர் நிலத்தில் நடமாடும் பிரானுக்கு பணிச் செய்ய பாதுகையானாரென்று குறிக்கவாம்.

சேஷனே பாதுகையென்பதற்கு ஸம்ப்ரதாயத்தை ஸாக்ஷியாகக் காட்டுகின்றதாய், ஆதிசேஷனுக்கு பல போகங்களில் இதுவுமொன்றனத் தெரிவிக்கிறார். ஆளவந்தார்

அருளிய எல்லா ரூபங்களும் சுருக்கி சொல்வதில் இந்த ஶ்லோகத்துக்கு நோக்கு:-

**பத்மா போகாத் பாதுகே ரங்கபர்த்து:**
**பாதாஸ் பர்சாத் போகம் அந்யம் ப்ரபித்ஸோ:**
**சேஷஸ்யேகாம் பூமிகாம் அப்ரவீத் த்வாம்**
**ஆசார்யாணாம் அக்ரணீர் யாமுநேய:**

பெருமானின் திருவடியை வருடி அந்த ஸ்பர்சத்தாலே ஸுகம் அனுபவிப்பவள் பிராட்டி சிறிது காலம் பட்டு அவன் அவள் அனுபவிக்கும் ஸுகத்திற்கு மேலாக ஸஞ்சார காலமெல்லாமும் அத்திருவடி முழுமையும் தன் மேலாம்படி ஓர் உருவமெடுத்து சிறந்த ஸ்பரிசஸுகம் பெற வேணுமென்று ஆசைப்பட்டு ஆதிசேஷன் பாதுகாரூபமெடுத்திருக்கிறார்.

இப்படி பாதுகாரூபம் ஆதிசேஷனுடையதென்று ஆளவந்தார் '**நிவாஸசய்யாஸந பாதுகா**' என்ற ஸ்தோத்திர ரத்னத்தில் அருளிச்செய்கிறார் என்றபடி.

சேஷனுக்கு ஸஞ்சாரத்தில் வரும் சேஷத்வத்தை அருளினார். திருவடி நிலையாகையில் திருமேனியின் வேறு பாகத்திற்கானமையாலான சேஷத்வத்தைவிட மேலொன்றும் அது பிறர்க்கு சேஷத்வ மேன்மையை கொடுப்பதாலும் சிறக்குமென்றும் அருளுகிறார்.

மேலும், ஆதிசேஷன், பாதுகையாகாமற் போனால் அவருக்கு சேஷத்வம் சிறக்காது. பிறகும் சிறப்பான சேஷத்வத்தைப் பெறமாட்டிலர். சேஷனுடைய உருவங்களில் பாதுகையைத் தானே அவர்கள் சிரங்களில் அணிகிறார்கள். ஆகத்தானும் சிறந்து சேஷத்வத்திற்கு காரணமுமாகையென்ற சிறப்பு இப்போதென்கிறபடி.

சேஷனுக்கு விஜ்ஞாநாதிகமான மூர்த்தியும் உண்டென்பதற்காக அதை பலாப்யதிகை என கொள்ளலாம் என்கிறார் வ்யாக்யாதா.

ராமன் பாதுகையை அளிக்கும்போது இது எல்லா பாரமும் வஹிக்கும் என்று சொல்லவில்லை. ஏறியிறங்கியருளி யளித்தாரத் தனை, அப்படியிருக்க ஸத்யவசஸா என்பதென்? (சேஷபதத்தி- ஸ்லோ.5) வனவாசம் செய்தே தீருவேன் என்ற ஸத்யவாக்கைக் கொண்டவரென்னலாம். அது அவர் திரும்பாமைக்கு காரணமாகும். பாதுகையின் பெருமைக்கு காரணமாகாதே என்னில் - ஸத்ய வசஸா என்பதற்கு – எவராலே வஸிஷ்ட பாதர்களுடைய பாதுகை வேணுமென்று வாக்கு ஸத்யமாயிற்றோ, அந்த பொருள் கொள் ளலாம். பரதனுடைய தன்மையை மறந்து லக்ஷ்மணன், 'ஸஸைந் யம் பரதம் ஹத்வாபவிஷ்யாமி ந ஸம்சாய: என உக்ரமாகப் பேசியபோது முடிவாக ராமன் அருளினார். பரதனிடம் லஷ்மண னுக்கு ராஜ்யத்தைக் கொடு என்றால் 'அப்படியே' கொடுப்பான் என்றார். அதைக்கேட்டு லக்ஷ்மணன் வெட்கமுற்றாரென உளது. இராமன் அவ்வளவு தீவிரமாக சொன்னதன் உட்கருத்து, லக்ஷ்மணா உனது மற்றோர் உருவமான என் பாதுகையினிடம் ராஜ்யம் அவன் அளிக்க போகிறானென்பதே. அந்த வாக்கு இப்போது உண்மையாயிற்றென்க.

ராமனை விட்டு அயோத்தி போன போதும் சேஷத்வம் விடப்படாமலிருந்ததென்றார். பள்ளியில் பெருமானை விட்டு பிரிந்தபோதும் காலணையின் அருகிலேயேயிருப்பதால் சேஷத்வம் நிலைக்கிறதென்றார். இந்த அம்சமும் வேத மூலமான பாஞ்சராத்ராதிகளால் அறியபடுவதால் ஆகமங்கள் உன்னை இங்கே ஆஶ்ரயித்தன என்கிறார்.

நீ பாதுகையென்ற ரூபத்தில் பிரித்திருந்தாலும், சேஷனென்ற உருவிலெ பிரியாமலேயிருந்து சேஷத்வம் பெறுகிறா யென அறிவிக்க '**த்வத்ரூபபேத**' என்ற விசேஷணமாகும்.

பாதுகை சேஷனின் உருவமாகில் லக்ஷ்மணன் சேஷனா கான். சேஷனேயாகில் லக்ஷ்மணன் பாதுகையை வணங்கியது தகுமோ. தன்னை தானே வணங்குவாரோ என்னில், மறுமாற்றம் அளித்து லக்ஷ்மணனும் பாதுகையேயென்கிறார்.

**பரத சிரஸி லக்நாம் பாதுகே தூரதஸ் த்வாம்**
**ஸ்வதநும் அபி வவந்தே லக்ஷ்மண: சேஷபூத**
**கிம் இதம் இஹ விசித்ரம் நித்யயுக்த: ஸிஷேவே**
**தசரததநயஸ் ஸந் ரங்கநாத: ஸ்வமேவ**

என ஏழாவது ஶ்லோகத்தில் தேசிகர்,

அறியாததாரின் எதிரில் அபிநயம் செய்யுமிடத்தில் தானே வேற்றுருக்கொண்டு தன்னையே வணங்குவது, புகழ்வதெல்லாம் தகும். ரங்கநாதனே ராமனென்பது திண்ணம். விஷ்ணுவின் அவதாரமேயல்லாவோ இருவரும். ஆயினும் தம் இல்லத்தில் எழுந்தருளியிருக்கும் ரங்கநாதனென்ற அர்ச்சாமூர்த்தியை குறித்தே '**தாம் அர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத்**' என்றபடி நித்யகர்மாநுஷ்டங்களையும், ஆராதனங்களையும், ஸேவையையும் ராமனாய் தானே எல்லாம் செய்யவில்லையோ என்கிறபடி.

பெருமாளே செய்யும்போது இளைய பெருமான் செய்ததில் என்ன வியப்பு என்றபடி வ்யாக்யானத்தில், வேறு சேஷிகயுள்ள வரான லக்ஷ்மணனே தன்னை வணங்கியபோது, வேறு சேஷியே யில்லாத பகவான் தன்னை ஸேவிப்பதில் என்ன ஆஶ்சர்யமென்று மாற்றி உரைத்து இருக்கிறார்.

எம்பெருமானுக்கு படுக்கை முதலான உருவங்களைக் கொள்வது குறிக்கப்பட்டதேயானாலும், ஆதிசேஷன் நித்யஸூரி, பரஹ்மாதிகளைபோல் அழியும் ஸம்ஸாரியல்லன் என்று

தெரிவிப்பதற்காகவும், ஆலிலைக் குழவிக்கு தக்க சிற்றுருவ மேற்றான் என்ற வியப்பினாலும் அவ்வுருவைத் தனித்தருளி செய்கிறார்.

பாதுகையின் ஆலிலையுருவமே படுக்கையாயிருக்க, படுக்கையை செய்கிறதென்று சொல்லகூடுமோ. ஆனாலும் இருப்பதை நிர்வஹிக்க, பூமிகா அந்யா என்பதற்கு. ஆலிலையுரு என்ற பொருள் கொள்ளாமல் அதற்கு காரணமான மஹா ஸர்ப்ப வுருவை பொருளாக்கினம். அதுவும் பாதுகா ரூபத்தை விட வேறானபடியால் அந்யா என்னப்படலாமே. உனது அப்பேருருவம் இச்சிறிய வுருவையும் செய்ததென்றபடி, **'ததாத்மானம் ஸ்வயமக்ருத'** என்றாற்போலாம்.

ஆதிமூலமான சேஷ ரூபமும் பாதுகைக்கு என்பதை **'அஹீந'** பதத்தினாலே நினைக்கும்போது **'அஹீந'** என்ற சொற்போக்கினாலேற்படும்யாகமென்ற பொருளையும் கொண்டு அழகாக வர்ணிக்கப்படுகிறது.

அஹிந ஶப்தத்திற்கு மூன்று பொருள்கள் இங்குக்கூடும். அஹி-ஸர்ப்பங்களுக்கு இனன் - அரசன் ; ஹீநமாகாதது - ஸர்வகுணபூர்ணமாகியது ; அஹநமென்றயாகம். அதாவது ஸோமமென்ற கொடியின் சாற்றைக் கொண்டு செய்யப்படும் ஸோமயாகத்தில் ஒரு நாள் மட்டும் அவ்வாறு செய்யும் யாகம் ஏகாஹம். அது ஜ்யோதிஷ்டோமம் மூலயாகம். 2நாள் முதல் 12 நாள் வரை அவ்வாறு பண்ணும் யாகம் அஹீனம். 12ம் நாள் முதல் எவ்வளவு நாள் செய்யும் யாகமும் ஸத்ரம். இதற்கு யஜமானர்கள் பலர் ஆவர். இந்த மூன்று யாகமும் நீ என்கிறார். இங்கு ஸ்தோத்ரமாக பொருள் உண்மையில் வேறு.

பாதுகை சேஷனானபடியால் அஹி - இநனாய் அஹீநம். *ஸத்துக்களை காப்பதால் ஸத்-த்ரம். ஏகாஹமென்ற* ஒரே பகலான

இடம் மோக்ஷம் - அதற்கு வழி பக்தி. அதில் பாதுகை முக்கிய மாய் ஸம்பந்தபட்டிருப்பதால் ஏகாஹ பதமுள்ளதென்றார். எந்த யாகத்தாலும் ஆராதிக்கப்படும் பாதுகை. எந்த யாகத்தின் கார்யத் தையும் செய்து அதற்கு ப்ரதிநிதி யாகையால் யாகமேயாம். அதன் பலனும் பாதுகாப்ராப்தியே முக்கியமாக நம் போன்ற வர்க்கே.

இப்படி சேஷனாலே ஸ்ருஷ்டிக்கபட்டு பல சேஷவுருக் களைக் கொண்ட பாதுகை தானும் சேஷ ரூபமாய் தன்னை ஸேவிப்பாரும் சேஷரூபமாம்படி விளங்குகிறதென்று நிகமிக்கிறார்.

ஆதிசேஷன் பஹுமுக போகஸமேதன். பாகமாவது பாம்பின் உடல், ஆயிரம் முகம் கொண்ட தன்னுருவமுடையவன் என்றதாயிற்று. நீயும் பஹுமுக போகை. ஆராதிப்பவர் புஷ்பம், சந்தனம், தூபம் போன்ற பல வகையான போகங்களை அர்ப் பணம் செய்ய நீ பெறுகிறபடியால், உன்னை ஸேவிப்பவருக்கும் பலவிதமான போகங்கள் - ஸுகங்கள். ஆதிசேஷன் நிர்முக் தனாம்போது (தோலை உரித்த பாம்பை நிர்முக்தனென்பர், அவ்வாறானபோது) விசுத்தமாய் வெளுப்பாயிருப்பான் - நீயும் திருமஞ்சனம் செய்து எல்லாம் களைய விசுத்தமாவாய். ஸேவிப்பவரும், ப்ருக்ருதியினின்று விடப்பட்டால் தங்கள் சுத்த ரூபத்தை பெறுவார். இப்படி ஒரே விதமாய் எல்லாம் சேஷமய மாகும்.

## 37. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

ஆழ்வார்கள், ஆச்சார்யர்களுக்கு பின் எழுந்தருளியிருந்து திருவரங்கனைத் தவிர மற்றொருவரைப் பாடமாட்டேன் என முதலில் பாடப் பெற்று பின்பு எம்பெருமானால் உணர்த்த பெற்று, திருவேங்கடவனையும், திருமாலிருஞ்சோலை அழகரையும் பாடத்துவங்கி, 108 திவ்யதேசப் பெருமாளையும் பாடியவர்

பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் எனும் அழகியமணவாளதாஸரே ஆவார். '**அஷ்டப்ரபந்தம்**' போன்ற அரிய தமிழ்ப் பாசுரங்களை தமிழ் உலகத்திற்குத்தந்தவர். இந்த அஷ்டப்ரபந்தம் எட்டு ப்ரபந்தங்களாய் இருந்தாலும் அதில் பாடப்பெற்றவர் எம்பெருமான் ஒருவரே.

வியூகமாகிய பாற்கடலில் இருந்த போதிலும், திருவரங் கத்தில் அர்ச்சை நிலையிலும் என இரு இடங்களில் பணிபுரியும் பாங்கினை பெற்றவர் திருவனந்தாழ்வானே.

**'அங்கும் இங்கும் ஒக்க, போகத்துகொண்ட பணநாகம் ஒன்று பொறுத்த பின்னே'** (திருவரங்கத்து மாலை – 97ம் பாசுரம்) எனக்கூறி வியூகமும், அர்ச்சையும் ஒன்றே என எடுத்துக்காட்டுகிறார். கங்கையிற் புனித மாய காவிரியை முதலிலும், '**கரை பொழுது ஒழுகும் காவிரியாறே**' என்கிறார். அப்பேற்பட்ட திருவரங்கத்தில் அநந்தாழ்வானின் இருப்பைக் கூறுகிறார். அப்படிப்பட்ட அரவில் கிடந்தருளும் அரங்கனைப் போற்றி, '**அரவம் சுமப்பதோர் அஞ்சன மலையே**' என்று அருளுகிறார். (பா – 73). அர்ச்சையில் அனுபவித்த பிள்ளைப் பெருமாள் வியூக நிலையையும் அனுபவிக்கிறார்.

பாற்கடல் 32 லட்சம் யோசனைகள் பரப்பு உடையது என்றும், அதில் விளங்கும் திருவனந்தாழ்வானின் திருமேனியின் பரப்பு மூன்று லட்சம் யோசனை என்றும், அதில் பள்ளி கொண்டுள்ள எம்பெருமானின் திருமேனியின் பரப்பு இரண்டரை லட்சம் யோசனை எனவும் அளவிட்டு கூறுகிறவராய்,

**'கறங்கு ஆழி நால் எட்டு இலக்கம் யோசனை, கட்செவியின்**
**பிறங்கு ஆகம் மும்மை இலக்கம் யோசனை, பேருலகில்**
**இறங்கு ஆழிமேகம் எனவே, அரங்கத்தில் எந்தை அதில்,**
**உறங்கு ஆகம் நீளம், ஐந்து ஐம்பதினாயிரம் யோசனையே'**

என்பது அருமையான செய்தியாகும். இப்பாசுரத்தில்

திருவரங்கனின் திருமேனி பரப்பைக் காட்டிலும், அப்பெருமானைத் தாங்கி நிற்கும் திருவனந்தாழ்வானின் உடற்பரப்பு இன்னும் மிகுதியாக கூறப்பட்டுள்ளது போற்றத் தக்கதாகும்.

**'சிறந்த அகலம் ஏல் கவின் ஒன்றரை'** என்பதில் எம்பெருமானின் திருநாபி கமலத்தில் தோன்றிய தாமரை மலரை சிறப்பிக்கும் வகையில், அம்மலரின் புற இதழ் சக்கரவாளகிரி என்றும், மலரின் தேன் இவ்வுலகத்தின் கடல் என்றும், பொன்மயமான பெரிய மேருவே அத்தாமரையின் மொட்டென்றும், எட்டுகுல மலைகள் அத்தாமரையின் மகரந்த தூளே பூமி என்றும், அதன் தண்டாக விளங்குபவர் தான் திருவனந்தாழ்வான் என்றும் அம்மலரில் பொருந்தியுள்ள வண்டே பிரம்மன் என்றும் கூறுகிறார்.

**'புறக்குன்று புல்லிதழ், முந்நீர்விசம், பொருவில் செம்பொன்**
**நிறக்கன்று கன்னிகை, எண் கிரிதாது, நிலம் அதனுள்**
**பிறக்கும் துகள், முதுமா சுணம் நாளம், பிரமன் வண்டு,**
**சிறக்கும் திகிரி அரங்கேசர் உந்திச் செரு மலர்க்கே'**

(பா.12)

என்று அனுபவிப்பது மிக அருமையான உருவகமாகும். திருவரங்கத்தில் எம்பெருமானின் கிடக்கைக் கோலத்தை விளக்கி அருளுவதோடு நில்லாமல்,

**'ஊர் அரவில், தாமோதரன் பள்ளிகொள்ளும் கோளூர்**

என்று திருக்கோளூர் திவ்யதேசத்தையும்,

**'பாம்பணை மேல் வாட்டாற்று கண்துயில் கொள்வாய்'**

என்னுமிடத்தில் திருவட்டாறு திவ்யஸ்தலத்தையும், நூற்றி எட்டு திருப்பதி அந்தாதியில், திருவனந்தாழ்வானோடு தொடர்புபடுத்தி பிள்ளை பெருமாள் ஐயங்கார் அருளிச்செய்துள்ளது போற்றத் தக்கதாகும்.

## IV. 38.ஆதிசேஷனுடைய அவதாரங்கள்

**'அஜாய மாநோ பஹுதா விஜாயதே'** (புருஷஸூக்தம்) **'ஸ உச்ரேயாந் பவதிஜாயமாந'**: என்றும், **'பிறப்பில் பல் பிறவிப் பெருமான்'**(திருவாய்மொழி 2-9-5) என்றும், **'பலபிறப் பாய் ஒளி வரும் முழுநலம்** (திருவாய்மொழி 1-3-2) என்றும் வேதபுருஷனும், வேதம் தமிழ் செய்த மாறனும் அருளியபடியே பரமபுருஷனான ஸ்ரீமன் நாராயணன், புண்ய பாபங்களாக கருமங் காரணமாக பிறக்கும் நம்மை போல் பிறவாமல் **'உயிரளிப்பான் எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்** (திருவிருத்தம்-1) என்கிற படியே உயிர்களைக் காக்க வேண்டுமென்று எண்ணி தன்னுடைய க்ருபை காரணமாக பலபடியாகப் பிறப்பதையும், பிறக்கப் பிறக்கப் பாபங்களை ஈட்டி ஒளியிழக்கும் நம்மைப் போலில்லாமல் பிறந்து பிறந்து நம்முடன் புரையறக் கலந்து பழகித் தனது எளிமை, அன்பு, பாசம், தயை முதலிய குணங்களைப் பயன்படுத்தி அவற்றால் ஒளி மல்கப் பெறுவதையும் கண்டான் ஆதிசேஷன்

தானும் எம்பெருமானைப் போலவே அடிக்கடி பிறந்து தனது அடிமைக் குறுப்பான நற்குணங்களினால் ஒளிமல்கப்பெற வேண்டுமென்று நினைத்து, லக்ஷ்மணன், பலராமன், இராமனுஜன், அநந்தாழ்வான், மணவாளமாமுனிகள் என்கிற பெயர்கள் கொண்டு முறையே அவதரித்து, எம்பெருமானுடைய இராம, கிருஷ்ண அவதாரங்களிலும், கோயில், திருமலை முதலிய திவ்ய தேசங்களில் விளங்கும் அர்ச்சாவதாரங்களிலும் தன்னை உட்படுத்திக் கொண்டு தொண்டு செய்து பகவான், ஆசார்யன் ஆகிய இவர்கள் திறத்தில் பக்தி, பாரதந்த்ரயம் (வசப்படுதல்) முதலிய தொண்டுக்குரிய குணங்களினால் ஒளிமல்கப் பெற்றான் என்பது பூர்வக்ரந்தங்களிலிருந்து நாம் ப்ரத்யக்ஷமாய் அனுபவிக்கலாம்.

**அநந்த: ப்ரதமம் ரூபம்**
**லக்ஷ்மணஸ்ச தத: பர:**
**பல பத்ரஸ் த்ருதீயஸ்து**
**கலௌ கஸ்சித் பவிஷ்யதி.**

திருவனந்தாழ்வான் முதல் மூர்த்தியானவன். லக்ஷ்மணன் அவனுடைய அடுத்ததான அவதாரம். பலராமன் மூன்றாவது மூர்த்தியாவான், நான்காவதாக கலியுகத்தில் ஒரு மஹாபுருஷன் அவதரிக்க போகிறான், என்ற வசனத்தின் படி கலியுகத்தில் பாரெல்லாம் உய்யும்படியாக திரு அனந்தாழ்வான் இராமனுசராக அவதாரம் செய்தருளினார்.

## லக்ஷ்மணன்

**ஆதிசேஷன் லக்ஷ்மணனாக அவதரித்தல் :**

விண்ணகத்தில் உள்ள இந்திரன் முதலிய தேவர்கள் அரக்கர்களால் துன்புற்று அலைகள் மிகுந்த பாற்கடலில் பள்ளி கொள்கிற திருமாலை மனதில் த்யானித்தனர். உடனே எம்பெருமானும் அவர்கள் முன் தோன்றினான். அரக்கர்களால் அவர்கள் படும் துன்பத்தைக் கேட்டவுடன் திருமால் அவர்களை நோக்கி, **'நீங்கள் வருந்த வேண்டா நான் பூமியில் மானிடனாக அவதரித்து இராவணனுடைய தலைகளை அறுத்து உங்கள் துன்பத்தைப் போக்குவேன். வானில் உள்ள தேவர்களாகிய நீங்களும் கூட்டங்களாக குரங்காக காடுகளிலும், மலைகளிலும், மணம் வீசும் சோலைகளிலும் போய் பிறந்திடுங்கள். சங்கும் சக்கரமும் வடவைக்கனலும் கரிந்து போகும்படி பொங்குகின்ற விஷத்தையுடைய ஆதிசேஷனும், என் தம்பியாராக வந்து என் பாதங்களைப் பணிய, வளைந்த மதிலையுடைய அயோத்தி நகரில் அவதரிப்பேன்.'** என்று கூறினார்.

லக்ஷ்மணனுடைய பிறப்பைப் பற்றி கூறும்போது - இந்திரனும் அவன் சுற்றத்தாரான தேவர்களும் ஆகாயத்தில் நின்று ஆராவாரம் செய்யவும் புற்றிலே புகும் தன்மை பெற்ற பாம்பின் வடிவமான ஆயில்ய நட்சத்திரமும். கடக லக்கினமும் நல்வாழ்வு பெறவும், தசரதன் தேவியருள் இளையவளான சுமித்திரை இளைய பெருமாளாகிய இலக்குவனைப் பெற்றெடுத்தாள் என்று கம்பர் கூறுகிறார்.

கம்பநாடன் கவி என்றால் கற்றோர்க்கு இதயம் களி கொள்ளும். ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்பவர் ஆதிசேஷன் என்கிற ஆதிமூர்த்தி. கம்பன் தன் இராமாயணக் குறிப்பால் சில இடங்களில் இலக்குவண் சார்ந்த ஸ்ரீஆதிசேஷனின் பெருமையைக் காட்டுகிறான். அவற்றில் நாமும் சில துளிகளை நோக்குவோம். **'அளை புகும் அரவினோடு அளவன் வாழ்வுற'**, அறவு – ஆயில்யம், அளவன் - கடக ராசி (பால காண்டம் - 284) ஸ்ரீஆதிசேஷன் உதித்த திருநாளிலே இலக்குவனும் உதித்தான் என்பதை சூசகமாக காட்டியிருக்கிறார்.

திரேதாயுகத்தில் திருமால் ஸ்ரீராமனாக திருவவதரித்தபோது ஆதிசேஷன் இலக்குமணனாகத் தோன்றினான். தசரதன் அறுபதினாயிரம் வருடங்கள் புத்ர பாக்கியமில்லாமல் பெற்ற மைந்தர்களுக்கு பெயர் சூட்டும் நாள் வந்தது. நான்கு குழந்தை களையும் தனித்தனி தொட்டிலில் இட்டு அலங்கரித்து இருந்தனர். வரிசைக்கிரமமாக விடப்பட்டிருந்த குழந்தைகளை குலகுரு வசிஷ்டர் பார்த்தார். மூன்றாம் தொட்டிலில் இடப்பட்டு இருந்த குழந்தை அழுதுகொண்டே இருந்த காரணத்தைத் தன் ஞான திருஷ்டியில் கண்டு, அக்குழந்தை ஆதிசேஷ அவதாரமென்பதால் முதல் தொட்டிலில் உள்ள, குழந்தையுடன் (திருமாலுடன்) சேர்த்துவிட அழுகை நின்றது. குழந்தைகளுக்கு குலகுரு வசிஷ்டர் சூட்டிய திருநாமங்கள்:

முதல் குழந்தை – ராமன் - ரமயதீதிராம:- கண்டவர்களை

எல்லாம் ரமிக்கச் செய்பவன் என்பதாகும். **'அழகிய அவனுடைய வடிவால் தூண்டப்பட்டவராய் உலகிற்கு முதல் மங்களமான ராமன்'** எனும் பெயரை குலகுருவான வசிஷ்டர் இட்டருளினார். (ரகுவம்சம் - 10-67)

அடுத்ததாக லஷ்மணன் - **'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:'** இளையபெருமாள் கைங்கர்யத்தையே சொரூப, நிருபகமான அடையாளமாகக் கொண்டவன். (லக்ஷ்ம - அடையாளம்) கைங்கர்யமாகிய செல்வத்தை உடையவன்.

அடுத்து பரதன் - பரிக்க (தாங்க) (ராஜ்யத்தை) வேண்டியதால் பரதன் ஆனான்.

கடைசியாக சத்ருக்னன் - (தான் என்னும் நினைவில்லாமல்) அஹங்காரமில்லாமையை குறிக்கிறது. இந்திரியங்களை ஜயிப்பவன் என்பதாக அவரவர் லக்ஷணத்திற்கு ஏற்பப் பெயர் சூட்டினார். தொட்டில் பருவம் முதல் ஆதிசேஷன் திருமாலை விட்டு பிரியாது இருந்தான் என்பதை இதன் மூலம் அறியலாம். குழந்தை பருவம் முதல் லக்ஷ்மணன், அன்புடன், பவன வாஸத்திலும், பின் வனவாஸத்திலும் வாசியேதுமின்றி இராமனுக்குச் செய்யவேண்டிய அடிமைப்பணியில் ஊன்றியிருந்து ஒளி மிகப் பெற்றானென்னும் விஷயம் ஸ்ரீராமாயணத்தில் பிரசித்தமானதே. சீதையானவள் இரு தடவைகள் இராமனைப் பிரிந்த போதிலும் லக்ஷ்மணன் பிரியாதிருந்து அடிமை செய்தது குறிக்கொள்ள தக்கது.

வால்மீகி ராமாயணத்தில் பாலகாண்டம் 18வது ஸர்கத்தில் 26 முதல் 29 வரை ஶ்லோகங்களில் வால்மீகி அநுசந்திக்கிறார். எல்லா அழகையும் பெறுகிற லக்ஷ்மணன் உலகத்தை ரமிப்பிக்கிற ஜ்யேஷ்டரும் உடன் பிறந்தவருமான ஸ்ரீராமருக்கு இளமை முதல் எப்பொழுதும் அன்புள்ளவர். 'எல்லா அழகும் நிரம்பிய **லக்ஷ்மணன்** சரீரத்தைக் காட்டிலும் அந்த ஸ்ரீராமருக்கு **வேறான**

**வெளிப்பிராணனைப் போல் (ப்ராணனே வெளியிலுரு வெடுத்து வந்தது போல்) ஸர்வவிதத்திலும் ப்ரியத்தைச் செய்பவர் அவர் இல்லாமல் புருஷோத்தமர் நித்திரையும் அடைபவர் இல்லை. அவர் இல்லாமல் கொண்டுவரப்பட்ட இச் ஶ்ரேஷ்டமான அன்னத்தையும் உண்ணுகிறதேயில்லை. ராகவர் எப்போதும் குதிரையை ஏறினவராய், வேட்டைக்குப் போகிறாரோ அப்போது இவரை வில்லோடு கூடினவராய் பாதுகாப்பாய் பின்னால் போகிறார்.'** என்கிறார்.

ஸ்ரீராமாயணத்தில் லக்ஷ்மணன், ஆதிசேஷ அவதாரமே என்பதை மேலும் சில இடங்களில் அனுபவிக்கலாம்.

**விஸ்வாமித்திரமுனி வருகை:**

தசரத மஹாராஜனிடம், விஶ்வாமித்திரர் எனும் முனிவர், தான் செய்யப் போகும் யஞ்யத்தை காப்பதற்காக, ராம, லக்ஷ்மணா களை தன் உடன் அழைத்துச் சென்றார். குழந்தைப் பருவமே ஆன அவ்விருவரும் அவரிடம் அஸ்தர, சஸ்தர மற்றும் மந்திரங் களைக் கற்றும் அவருடைய வேள்வியைச் செவ்வனே நடக்கத் தொண்டு செய்தனர். அநேக தினங்கள் கண் விழித்து வேள்வியை நன்கு பரிபாலித்தனர். வேள்வி முடிந்ததும் குழந்தைகளான ராம, லக்ஷ்மணர்களை உறங்கச் சொன்னார். மறுநாள் காலை ஸந்தயையை உபாசிக்கும் நேரம் வந்து விட்டதால்,

**'கௌசல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே|**
**உத்திஷ்ட நரஸார்த்தூல கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்||**

தசரத சக்ரவர்த்திக்கும், ஸ்ரீகௌசல்யா தேவிக்கும் தவம் இருந்து பெற்ற பிள்ளையாயிருக்க கௌசல்யையின் நல்ல பிள்ளையான ராமனே! என்கிறார் விஸ்வாமித்திரர். 'ராமா **எழுந்திரு'** என்கிறார். ஏன் லக்ஷ்மணனை எழுப்பவில்லையா? என்று கேட்கலாம்.. ராம, லக்ஷ்மணர்கள் தூங்கும் விதமே

லக்ஷ்மணன் என்கிற ஆதிசேஷன் மேல் தூங்கும் திருமாலாகத் தான் ராமனை நினைக்கத் தோன்றுகிறது. அதனால் தான் லக்ஷ்மணனை 'உத்திஷ்ட' என்று சொல்லாமல் ராமனைச் சொன்னதாகக் கொள்ளலாமே!

கம்பன் தன் இராமயணத்தில், அயோத்தியாகாண்டம் 403 ஆம் பாடல்:

தசரத சக்கரவர்த்தி, கைகேயிக்குக் கொடுத்தவரத்தின் பலனாக இராமரை '14 வருடம் காட்டில் இருக்கவும், தன் மகனான பரதன் நாட்டை ஆளவும்' வேண்டும் என்று கேட்டதனால் இராமன் காட்டிற்கு நாட்டைவிட்டுச் செல்லும்படியான கட்டம். அச்சமயம் செய்திக்கேட்டு இலக்குவன் மிகச் சீற்றம் கொண்டான்.

'கேட்டான் இளையோன் கிளர் ஞாலம் வரத்தினாலே
மீட்டாள் அளித்தான் வனம் தம்முனை வெம்மை முற்றி
தீட்டாத வேல் கண்சிறு தாய் என யாவராலும்
மூட்டாத காலத் தீ என மூண்டு எழுந்தான்'

(மக்கள் இவ்வாறு வருத்திக் கொண்டிருந்தபோது, இளைய பெருமானான இலக்குமணனின் 'அரத்தினால் கூர்மையாக்கப் படாமல் இயல்பாகவே கூர்மையுள்ள வேலைப் போன்ற கண்ணைப்பெற்ற கைகேயி கொடுமை கொண்டு விளங்கும் நாட்டை இராமனிடமிருந்து தன் மகனுக்காக வரத்தினா லேயெ மீட்டுக்கொண்டாள். தன் தமயன் இராமனுக்கு காட்டைக் கொடுத்தாள்' என்பதைக் கேள்வியுற்றான். 'எவராலும் கொளுத்தப்படாத பிரளய காலத்து பெருந்தீயைப் போலே கோபம் கொண்டு எழுந்தான்' என்கிறார். மேலும்,

'கண்ணின் கடைத் தீ உக நெற்றியில் கற்றை நாற
விண்ணில் சுடரும் சுடர் தோன்ற மெய்ந்நீர் விரிப்ப

**உள்ளிருக்கும் உயிர்ப்பு எனும் ஊதை பிறக்க நின்ற அண்ணல் பெரியோன் தனது ஆதியின் மூர்த்தி ஒத்தான்'**

(அ. க. 404)

(இலக்குமணனின் கடைக் கண்களில் நெருப்புப் பறந்தது புருவத்தை நெறித்ததால் புருவத்தின் மயிர்த்தொகுதி மேலேறி நெற்றியில் தோன்றியது. இக்கோபத்தின் முன்னர், ஆகாயத்துச் சூரியனும் நிலைக்கெட்டுப் போனான். உடம்பிலிருந்து வியர்வை வடிந்தது உள்ளேயிருக்கும் உயிர்ப்பு என்னும் கடுங்காற்று வெளியே தோன்றியது. இவ்வாறு கோபித்து நின்ற இலக்குமணன் என்னும் பெருந்தகைமைக்கு உரியவன், தனது மூலமூர்த்தியான ஆதிசேஷனை ஒத்திருந்தான்) என்கிறார்.

**<u>கைகேயின் செயலைப் பழித்து இலக்குவன் போர்க் கோலம் கொள்ளல்:</u>**

நகர் நீங்கு படலம்: கைகேயிக்குக் கொடுத்த வரத்தால் இராமன் பதினான்கு (14) வருடங்கள் காட்டில் வாழ வேண்டும் என்பதை கேட்ட இலக்குவன் கோபம் மிகக் கொண்டான். இலக்குமணனின் கால்களில் கட்டியுள்ள ஒளி வீசும் வீரக்கழல், கடல் நாணும்படி ஒழித்தது. தனது பிடியிலே இருந்த வில்லின் நாணை அவன் தடவியதால் பிறந்த ஒலி ஏழு கடல்களின் நீரையும் உட்கொண்டு, இடியோடு தொடர ஒலிக்கும் மேகங்களைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இருந்தது. (க-ரா-அ-க-407)

இலக்குமணனின் கழல் ஒலியையும் (பாடல் 408) நாண் ஒலியையும் கேட்டு இலக்குமணனும் அவருடைய தமயனான இராமனும் தவிர மூன்று உலகங்களிலும் உடம்பும் உயிருமாய் உள்ள அனைவரும், **'இப்பரந்தவாக உள்ள வானம், பூமி முதலாகிய முடிவில்லாத – அளவற்ற ஐம்பூதங்களும் மேலேயிருந்து கீழ்வரையிலும் விழுகின்றன. அந்த ஒலியே**

இது' என்று நினைத்து மனம் வருந்தி ஒதுங்கிக்கொண்டனர். மேலும் இலக்குவனன் 'இராமனுக்கு முடிச்சூட்டுவதை தடுத்து என்னுடன் போருக்கு வருகிற அனைவரையும் அழிப்பேன்' என்றார். இராமனுக்கு 'வெற்றியை உடைய முடியைச் சூட்டுபவனாக நான் நின்றுள்ளேன். இதைத் தடுக்கும வலிமை உள்ளவர்கள் தடுங்கள்' என்றான். (பாடல்-409) இவ்வுலகததை ஆக்குபவர் - காப்பவர் - அழிப்பவர் ஆகிய மும்மூர்த்திகளும் வந்து எதிர்த்த போதும், இந்த பெரிய உலகில் கைகேயி ஆகிய பெண்ணின் எண்ணத்திற்கு நான் இடம் தர மாட்டேன்' என்றான் இலக்குவன்.

410ஆம் பாடலில் அப்போது இராமன், தனக்கு துணையாக நிற்கும் ஆற்றல்பெற்ற இலக்குமணனது வில்லாகிய மேகத்திலிருந்து, அண்டக்கோளம் பிறந்து சிதற உண்டாகிய வில்லின் நாணினது ஒலியாகிய இடியோசையைக் கேட்டான். மேலும் வரும் பாடல்களில், இலக்குமணனை நோக்கி 'என் ஐயனே! இதற்கு முன் சிறிதளவு கோபமும் கொள்ளாதவனே! இப்போது நீ போருக்கு ஆயத்தமாகி வில்லை ஏந்தி நிற்பதற்கு காரணம் என்ன?' என்று கேட்டான் இராமன். 'கரிய நெஞ்சம் கொண்ட கைகேயியின் முன்னே, உனக்கு முடி சூட்டும் செயலைச் செய்ய முடிவு செய்துள்ளேன். அச்செயலைத் தடுப்பவர்கள் தேவர்களாக இருந்தாலும், பஞ்சை எறிக்கும் கொடும் தீயைப் போல சுட்டு அழிக்கத் துணிந்துவிட்டேன். வல்லமை மிக்க வில்லானது என் கையில் உள்ளவரை, அந்த வானத்துத் தேவர்களும் என்னைத் தடுக்க மாட்டார்கள். ஒரு வேளை அவர்கள் வந்து தடுத்தாலும், என் கையில் உள்ள அம்புகளுக்கு அவர்களை இலக்காகும்படி செய்து அழித்து, பதினான்கு உலகங்களையும், அவற்றின் அரசர்களாய் இருப்பவர்களின் அரசுரிமையும் இன்று உனக்கு நான் கொடுக்க ஏற்றுக்கொள்' என்று இலக்குமன் கூறினான். மேலும் கூறுகிறான் 'தீயைப் போலக் கொதிக்கும் என் மனத்தை எப்படித் தணியச் செய்வேன்!' அன்று நடந்த செயலை அறிந்த இலக்குமணனின்

சொற்களைக் கேட்டதும், ஐயனே! நீ விரும்பாததைச் செய்தவர். பெற்ற தாயும் தந்தையுமாக இருக்கும்போது அவர்கள் மீது கோபம் கொள்வது எவ்வாறு முறையாகும்? அது முறையன்று. **'இலக்குவா, விளையாத நிலத்து எங்ஙனம் விளைந்தது? தொண்டில் பழுத்தவனுக்கு தோன்றுமா சினம்? ஐய நின் வாய் தந்தன கூறுதியோ? மறைதந்தவாய்!'** 'மறைதந்தநா' எண்ணி எண்ணி இன்புறத்தக்கது **' ஏதத்ஸாமகாயன் ஆஸ்தே'** என எப்போதும் வேத முழங்கிட இறைத் தொண்டு செய்யும் நித்யசூரிகளில் முதல்வனான ஆதிசேஷனையே குறிப்பால் உணர்த்துகிறது. **'வாயவனைவல்லாது வாழ்த்தாது'** என்ற ஆழ்வார் அனுபவத்திற்கு ஒப்ப எல்லா விதத்திலும் தொண்டே செய்து உகக்கும் முதல் அடியவன் ஆதிசேஷன் அல்லவா! இளம்பிறையை தலையில் அணிந்த ருத்திரமூர்த்தியை ஒத்தவனான இலக்குமணன் இராமனை நோக்கி, **'மற்றவர்களுக்கு எதையும் கொடுக்கக் கற்றவனே! எனக்கு நீயே சிறந்த தந்தை! ஒப்பற்ற தலைவனும் நீயே! வயிற்றில் சுமந்து என்னைப் பெற்ற தாயும் நீயே! எனக்கு வேறு எவரும் இல்லை. இப்போது நான் செய்யப் போவதை காண்பாயாக'** என்று கூறினான்.

இவ்வாறு கோபம் கொண்ட அவனை கையை நீட்டி தடுத்தான். மேலும் இராமன் **'இனிய சொற்களைக் கூறி என்னைப் பாதுகாத்துப் பின்னால் வரையிலும் வளர்த்த தந்தையின் சொல்லை மீறி அரசாள்வது எனக்குத் தகுந்தது அன்று. ஆனால் என் சொல்லை நீ மீறி நடந்தால் உனக்கு என்ன இழிவு உள்ளது?'** என்று கேட்டான். ஏவல் மகளிர் மரவுரி எடுத்துக் கொடுத்தனர்.

இவ்விடத்தில் கம்பன் அனுபவித்ததை சற்று அநுசந்திப்போம். **'நம் அன்னையர் யாவரும் தசரத சக்ரவர்த்தியும் இப்பொழுது முன்னிருந்த நிலையில் இல்லை. கொடுந் துன்பத்தில் மூழ்கியிருக்கின்றனர். என்னைப் பிரிந்த துன்பமும்**

**அனுபவிக்கின்றனர். அவர்கள் மேலும் துன்பம் அடையாத நிலையில் இங்கே தங்கி அவர்க்குத் துணை செய்க. என் பொருட்டு நீ இச்செயலைச் செய்வாயாக என்றான் இராமன்'.**

ஆண்மைக் குணம் மிகுந்த இராமன் அந்த சொற்களைச் சொல்ல ; அவனிடம் அன்பு கொண்ட இலக்குமணன் தூணைப் போன்ற தன்னுடைய திரண்ட தோள்கள் நடுங்கும்படி திடுக்கிட்டு, எமன் வாயிலிருந்து வந்த ஒரு உயிர் இடையில் விம்முவது போல விம்மி அழுதபடி, **' இப்போது அடியேனாகிய நான் உனக்குச் செய்த தவறு யாது?'** என வினவினான்.

**'நீர் உள எனில் உள மீனும் நிலமும்**
**பார் உள எனில் உள யாவும் பார்ப்புறின்**
**நார் உளதனு உளாய் நானும் சீதையும்**
**ஆர் உள எனில் உளம் அருளுவாய்' என்றான்**

(பாடல்.444)

(நாணைப் பூண்ட வில்லையுடையவனே! ஆராய்ந்துப் பார்த்தால், குளத்து நீர் இருந்தால் தான், மீன்களும் கருங்குவளைகளும், அங்கு இருப்பவை ஆகும். உலகம் இருந்தால் தான், உலகம் யாவும் இருப்பவை ஆகும். நானும் சீதா தேவியும் யார் இருந்தால், இருப்பவர்கள் ஆவோம்? நீங்களே சொல்லுங்கள்' என்று இலக்குமணன் கேட்டான் என்பதை கம்பன் விளக்கம் தந்துள்ளார்.)

**ஸ்ரீராமாயணத்தில்,**

பித்ருவசன பரிபாலாநார்த்தமாக, ராமன் வனவாசம் செல்லும்படியான கட்டத்தில் லஷ்மணனிடம் **'திருவயோத்தியிலுள்ளாரைக் காப்பாற்றுவதற்காகவும், ஸ்ரீபரதாழ்வானுக்கு துணையாகவும் நில்'** என்று சொல்ல, காட்டிலும் கூடச்சென்று கைங்கர்யம் செய்ய வேண்டுமென்னும் ஆசையினாலே ராமன் அருளிய வார்த்தையைப் பொறுக்காமல் **'நானும் கூட காட்டுக்குப்**

போகவேணும்' என்று பிராட்டியை புருஷகாரமாகப் பற்றிப் பெருமாள் திருவடிகளிலே சரணம் புகுகிறார் இளைய பெருமாள். 'நச ஸீதா த்வயா ஹீநா ந சாஹமபி ராகவ, முஹூர்த்தமபி ஜீவாவோ ஜலாந் மத்ஸ்யாவிவோ த்ருதௌ' (ரா.அ.53.31) 'ராகவரே! உம்மைப் பிரிந்து ஸீதையும் பிழைக்க மாட்டாள் ; உம்மைப் பிரிந்த நானும் இல்லையாய் விடுவேன். பிழைத்தோமானால், ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மீன்களைப் போல் சிறிது காலமே பிழைத்திருப்போம்' என்கிறார் லக்ஷ்மணன்.

சுமித்திரை சொன்ன அறிவுரை:

அந்த இலக்குமணன் அப்பணிப்பெண்கள் அளித்த மரவுரிகளை அன்போடு ஏந்திக்கொண்டு, 'எம்முடைய அன்னையே! உன் துன்பத்திலிருந்து மனம் தேறி', நீயும் என் இராமனுடன் காட்டுக்குச்செல்'என்று என்னிடம் சொன்னால் அதுவே எனக்குத் துணையாகும்' என்று கூறி தூய்மையான சுமித்திரையின் பொன்போன்ற அடிகளில் பணிந்தான். அவளும் பேசலானாள். 'ராமன் செல்லப்போகும் அந்தக் காடு, (பாடல் - 438) நீ செல்வதற்குப் பொருந்தாது அன்று. அந்தக் காடுதான் உனக்கு அயோத்தி நகரமாகும். பேரன்புக்குரிய இராமனே நம் தசரத மன்னன் ஆவான்: பூவை அணிந்த கூந்தலை உடைய நம்முடைய சீதையே, இராமன் இந்த நாட்டை பரதனுக்குக் கொடுத்ததை அறிந்தும் உயிர் விடுத்திடாத,. உன் தாயார் ஆவாள். நீ இங்கே ஒரு நொடி நிற்பதும் குற்றமாகும்' என்று சுமித்திரை சொன்னாள்.

மேலும் கம்பன் தன் இராமாணயத்தில் குகன் இராமனைக் காண வரும் போது இலக்குவனை முன்னிட்டுக் கொண்டு இராமனை அடைந்தான் என்பதை,

**கூவ முன்ன மிளையோன் குறுகி நீ**
**யாவன் யாவென வன்பி னிறைஞ்சினான்**
**தேவ நின்கழல் சேவிக்க வந்தனன்**
**நாவ வேட்டுவ னாயடி யேனென்றான்.**

என்று கம்பர் கூறுவது இங்கு நோக்குக, குகன் இலக்குவனை நோக்கி **'தேவ நின்கழல் சேவிக்க வந்தனன்'** என்று கூறுமிடத்து:

உன் திருவடியைத் தொழுது உன்னால் வணங்கப் பெறும் இராமனின் சேவடியை சேவிக்க வந்தேன் என்று இலக்குவனைப் புருஷகாரமாகப் பற்றிக் கொண்டு இராமனை சேவிக்க வந்தான் என்று கூறுவது காண்க. இலக்குவன் ஆதிசேஷாம்ஸம் என்பது இங்கு கருதத் தக்கதே. இதே போன்று **'யுத்ர ராமோ ஸலக்ஷ்மண:'** என்று யுத்த காண்டத்தில் விபிஷணனும் இலக்குவனைப் புருஷகாரமாகப் பற்றிக் கொண்டு இராமனை சேவித்தான் என்பதை வால்மீகியும் தன் ராமாயணத்தில் கூறி உள்ளார்.

**சித்ர கூடபடலம் :**

சித்ர கூடத்தில் இராமன் இலக்குவன் அன்பாலும் ஆர்வத்தாலும் அமைத்த பர்ணசாலையைக் கண்டு மனம் கனிந்து பேசுகிறான். கவியரசன் கம்பன் கூறும் போது **'மாயம் நீங்கிய சிந்தனை, மாமறை, தூய பாற்கடல் வைகுந்தம் சொல்லல் ஆம் ஆயசாலை'** எனக் குறிப்பிடுகிறார். இதில் ஆதிசேஷன் பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. இலக்குவனே எதிரில் இருந்து விட்டதால் இராமன் அதைக் குறிப்பிடவில்லை. இங்கு உய்த்துணர்ந்து ஆதிசேஷன் சிறப்பை ரசிக்கலாம்

ஸ்ரீராமாயணத்தில்,

**'ப வாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே|**
**அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதா: ஸ்வபதச்சதே||**

(ரா.அ.31.25)

**'தேவாநாம் பூர யோத்யா'** என்கிற பரமபதத்திலும், திருவயோத தியிலும் வாழும்போது **'யதோ சிதம் சேஷ இதிதேஜஸை: (ஸ்தோ.ரத்-40) என்று சேஷன் எனும் ஸ்வருப நிருபகமான நாமத்தையுடைய என்னைப் போல் அங்குள்ளோர் பலரும் அடிமைசெய்ய, நானும் ஒரு சிறிது அடிமை செய்யப் போந்த என்னை வனவாசத்துக்குக் கூட வரும்படி அங்கீகரித்த நன்றியாலே காட்டிலும் எல்லா நிலையிலும் எல்லா அடிமைகளும் செய்கிறேன் ; என்னை கூட்டிக் கொண்டு போக வேண்டும்'** என்கிறார் என்றும் இந்த ஸ்லோகத்திலே கொள்ளலாம். தான் ஒரு ராஜகுமாரனாயிருக்க, இழி தொழிலென்று பாராதே **'உங்களுக்கும், பிராட்டிக்கும் வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்கிறேன்'** என்று ஒருவன் ஜ்யேஷ்டானுவர்த்தனம் பண்ணிய படியே! என்று லோகமடங்க ஆஶ்சர்யபடும்படியான வார்த்தைப் பாடுடையவர், **'ஸப்ராது: என்கிற முன் ஸ்லோகத்திலே சரணம் புகுந்தபடியைச் சொல்லி, இந்த சரணாகதிக்கு பலம் கைங்கர்யம்'** என்று ஸ்வபாவங்களுடன் கூடிய பலத்தைச் சொல்லுகிறது.

**'தத: பஞ்சவடீம் கத்வா நாநாவ்யாள ம்ருகாயுதாம்|**
**உவாச ப்ராதரம் ராம: ஸௌமித்ரிம் தீப்த தேஜஸம்||**

(ரா-ஆ-15-1)

பஞ்ச வடிக்கு வந்த பிறகு, ராமன் தனக்குக் கைங்கர்யம் செய்யவே ஸுமித்திரையால் கொடுக்கப்பட்டு, அதற்குத் தகுந்த பக்தியும், சக்தியும் நிறைந்து, அதற்கேற்ற காலமும் தேசமும் நேர்ந்ததைப் பற்றி அகஸ்திய மஹரிஷி குறிப்பிட்ட தேசம் இதுவே. வனங்களில் அதிகமாக ஸஞ்சரித்தவனாதலால் எந்த இடத்தில் ஆஶ்ரமத்தை ஏற்படுத்தலாமென்று நான்குபுறங்களிலும் பார், சீதைக்கு புஷ்பத்திடம் மிகுந்த ப்ரீதி ; ஆகையால் செடி, கொடி நிறைந்த இடமாக இருக்க வேணும் ; எனக்கு சுகமாக படுக்கக்கூடிய இடம் வேண்டும் ; மேடு பள்ளங்களில்லாமலும்,

மிருதுவான மணல் பாய்ந்த இடமாகவும், புஷ்பங்கள், தர்ப்பம், ஜலம் முதலிய சமீபத்தில் இருப்பதாயும் இருக்க வேண்டும். எல்லா ஸிஸ்ருக்ஷை நீயல்லவா செய்ய வேண்டும்? அதற்கு ஏற்றதான இடத்தை பார் என்று ராமன் லக்ஷ்மணனிடம் கூறினார்.

இப்படி தன் சௌகரியத்தையும் ஆலோசித்து சொன்ன வார்த்தையை பொறுக்காமல், லக்ஷ்மணன் சீதையை புருஷகாரமாக கொண்டு, **'ஸ்வாமி, தாங்கள் பிரபு, நான் தாஸன். தங்கள் ஸ்வரூபம் வேறு. அடிமையாய் வேலை செய்வதே, என் ஸ்வரூபம். இது தாங்கள் வைகுண்டத்தில் எழுந்தருளி யிருக்கும்போது மாத்திரம் அல்ல, மற்ற அவதார காலத்திலும் எப்போதும் உண்டு. தங்களுக்கும், பிராட்டியாருக்கும் சுகமான இடத்தைப் பாரென்று கட்டளையிடுவது, எனக்கு அழகே தவிர, என் சௌக்கியத்தையும் ஆலோசித்துதகாது, தாங்களே தங்களுக்கு அனுகூலமான இடத்தைக் காட்டி உத்திரவு செய்ய வேண்டும்'** என்று பிரார்த்தித்தார்.ராமன் அதைக் கேட்டு மிகுந்த சந்தோஷம் அடைந்து புஷ்பங்கள், பழங்கள், பக்ஷிகள் முதலிய நிறைந்த ஓர் ஓடையின் சமீபத்தைக் காட்டினார். மஹா ஞானியான அகஸ்தியர் சொன்னபடி கோதாவரி நதி சமீபத திலிருந்தது. பிறகு லக்ஷ்மணன் அதிவிரைவாக ஒரு விஸ்தாரமான ஆஶ்ரமத்தை கட்டினார். க்ருஹ சாந்திகளை விதிப்படி செய்வித்து ராமனை அழைத்துக் காட்டினார். ராமனும், சீதையும் லக்ஷ்மணன் கட்டியுள்ள நேர்த்தியைப் பார்த்து உள்ளம் மகிழ்ந்தனர். ராமன் தம்பியை பார்த்து **'உனக்கு தற்சமயம் வெகுமதி தர சௌகர்யமில்லை'.**

**பாவஜ்ஞேந க்ருதஜ்ஞேந தர்மஜ்ஞேந ச லக்ஷ்மண|**
**த்வயா புத்ரேண தர்மாத்மா நஸம்வ்ருத்த:பிதாமம||**

(ஆர. கா. 16வது ஸர்க்கம் 29 ஶ்லோகம்)

**ஆகையினால் அதற்கு பதிலாக உன்னை மிக்க** பிரேமையுடன் அணைத்துக் கொள்கிறேன். **எனக்கும் சந்தோஷ**

தனியாக இடம் வேண்டும் என நினைத்தேனே ஒழியச் சொல்லவில்லை. என் மனதை அறிந்து செய்தாய். 'புத்' தென்ற நரகத்திலிருந்து பிதாவைக் கரையேற்றுகிறவனே புத்ரன். என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யாமலிருப்பதே நம்பிதாவிற்கு நரகத்தை போன்றது. நீ என் இஷ்டப்படி நடப்பதால் அந்த நரகத்திலிருந்து அவரைக் கரையேற்றினாய். நான் உள்ளவரை அவர் என் இஷ்டங்களை பூர்த்தி செய்தார். தான் இறக்கும் போது உன்னை நியமித்து சென்றாறோ?! என் பிதா மரணமடையவில்லை. நீயே எனக்கு பிதா.. நீதான் தகப்பனை இழந்தாய் நான் அல்ல" என்றார். ராமனும், சீதையும் லக்ஷ்மணனால் சகல பணிவிடைகளையும் செய்யப்பெற்று தேவலோகத்தில் இந்திரன் விளங்குவது போல் அங்கு காலம் கழித்தனர்.

கம்பன் தன் பாடலில் இலக்குவன் சித்ர கூடத்தில் இராமபிரானுக்கும் சீதைக்குமான ஒரு பர்ணசாலை அமைக்கும் விதத்தைக் கூறுகிறார்.

**' தேக்கு அடைப் படலையின் செறிவு செய்துபின்**
**பூக்கிளர் னாணலின் புல்லு வேய்ந்து கீழ்த்**
**தூக்கிய வேய்களின் அவரும் கற்றுறப்**
**போக்கி மண் எறிந்து அவை புனலின் தீற்றியே'**

(தேக்கு மரத்து இலைகளைக் கொண்டு பரப்பி அதைக் கொண்டு மேற்கூரை எழுப்பினான். மூங்கிலால் சுவர் எழுப்பினான், இராமனுக்கும், மிதிலை நாட்டவளான சீதைக்கும் மனையடி சாத்திரத்தில் கூறப்பட்ட ஒழுங்குமுறை பொருந்த, வெவ்வேறு இடம் ஏற்படுத்தினான்: மனையின் உட்புறத்தில் குங்குமக்குழம்புக் கொண்டு அழகு அமைய பூசினான்: வலிமை வாய்ந்த சுவரின் உட்புறத்தில் ஆற்றில் கிடந்த மணிகளையும் முத்துக்களையும் பதித்தான். இப்படி அழகு பெறக் கட்டிய குடிலுக்கு இராமரும், சீதையும் குடிபுகுந்தனர்.

**'பெருஞ்செல்வமான அரசினை பரதனுக்கு வழங்கிய தசரதனது கட்டளையின்படி காட்டிற்கு வந்து அறத்தைக் காத்து, சூரியனைப் போல விளங்கும் உண்மையான புகழை அடைந்தேன் என்று என்னை உலகத்தினர் புகழ்வதில் என்ன பயன்? நீண்ட துன்பம் உனக்கு அல்லவோ அளித்துவிட்டேன்'** என்று இராமன் இலக்குமணனிடம் வருந்தினார். இதைக் கேட்ட இலக்குவன் மனம் வருந்தி **'என் தந்தை போன்றவனே! எனது துன்பத்திற்கு உரிமையுள்ள சக்கரவர்த்தி உனக்கு அரசு இல்லை என்று கூறியபோதே தோன்றி விட்டதல்லவா? என்றான். இராமன் மீண்டும் தன் தம்பியைப் பார்த்து 'ஒருவன் அடையும் செல்வத்திற்கு, அது அழியும் காலம் உண்டு இப்போது நாம் மேற்கொண்டுள்ள தவ வாழ்வுக்கு என்ன கெடுதி உள்ளது? பின்னே கிடைக்கும் பெரும் பயனோடு கூடிய எல்லையில்லாத இன்பத்தின் சிறப்பை எண்ணிப்பார்'** என்று இராமன் தம்பியைத் தேற்றினார்.

**<u>பரதன் சைன்யத்துடன் வருவதைக்கண்டு இலக்குமணன் சந்தேகித்தல்:</u>**

சித்ரகூடத்தில் இராமன், சீதையுடன் உட்கார்ந்து அவளுக்கு இனியதான ஆகாரவஸ்துக்களை யூட்டிக் கொண்டிருந்தனன். அச்சமயம் பரதனுடைய சேனைக் கூட்டங்களுண்டான கூச்சல்கள் கேட்டன. தூளிகள் ஆகாசமெங்கும் வெகு தூரம் பரவின. காட்டில் உள்ள மிருகங்கள் மிகவும் பயந்து கூட்டம் கூட்டமாக மூலைக்கு மூலை ஓட ஆரம்பித்தன. இதைக் கண்ட இராமன் இலக்குவணனை கூவி அழைத்து அதற்கென்ன காரணம் என்று அவனைத் தெரிந்து வரும்படி அனுப்பினன். இலக்குவன் வெகு சீக்கிரம் சென்று ஓர் உயர்ந்த பெரிய மரத்தின் மேலேறி நான்கு திசைகளிலும் கண் செலுத்தும்போது வடதிசையில் பெரிய சமுத்திரத்தைப் போன்ற பரதனது நான்கு விதமான சைன்னியங்களைக் கண்ணுற்றான். உடனே அவன் கீழே இறங்கி ' **இராமா! ராஜ்யாபிஷேகம்**

பெற்றதோடு திருப்தியடையாமல் நாம் தாயாதிகளாதலால் நம்மால் ஒருக்கால் பிறகு தனக்கு கஷ்டம் விளையும் என்று நினைத்து ராஜ்யத்தை சாசுவதமாக அனுபவிக்க விரும்பி நம்மைக் கொல்ல வந்து கொண்டிருக்கின்றான். இதில் சிறிதும் சந்தேகம் இல்லை. மலையத்தி மரத்தின் கொடி அதோ தேரின் மேல் பறந்து கொண்டிருக்கிறது. ராகவா! சீதையை நீ பார்த்துக்கொள் இப்போதே இப்பரதனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் ஒரு நொடிப் பொழுதில் கொன்று உனக்கு ராஜ்யாபிஷேகம் செய்கிறேன் இப்போதே அவர்களின் தேகங்களை இக்கானத்தில் திரியும் புலி முதலிய கொடிய மிருகங்கள் இழுத்துக்கொண்டு போகுமாக. இப்பிரதேசத்திலுள்ள காடுகளை எல்லாம் ரத்தத்தினால் நனைத்து விடப்போகிறேன் இதில் சந்தேகம் வேண்டாம்' என்று மொழிந்து விரைந்தான்.

ஸ்ரீராமாயணத்தில், கிஷ்கிந்தா காண்டத்தில் ராம லக்ஷ்மணர்கள் ராவணனால் அபகரிக்கப்பட்ட சீதையை தேடி அலைந்து கொண்டிருந்த சமயம், வாலியின் தம்பியான சுக்ரீவனுடன் ரிச்யமுக பர்வதத்தில் ஸக்யம் ஏற்பட்டது. அவ்வமயம் சுக்ரீவன் ராமனிடம், 'ஸ்வாமி! தாங்கள் உயரிர்த்தோழர், நம் இருவருக்கும் சுக, துக்கங்கள் பொது' என்றபடி . புஷ்பங்களால் நிறைந்த ஒரு பெரிய ஆச்சாமரக்கிளையை முறித்துத் தரையில் போட்டு (ஆஸனமாக), அதன் மேல் ராமனுடன் உட்கார்ந்தான். இதே போல் மாருதியான அனுமனும், லஷ்மணன் உட்காருவதற்காக ஒரு சந்தனமரக்கிளையை முறித்துப போட்டார்.அச்சமயம் சுக்ரீவன் ராமனிடம், தான் இந்த வனத்தில் அண்ணனான வாலியினால் பயந்து ஒளிந்துக்கொண்டு இருப்பதை தெரிவித்தார். மேலும் அனுமனுடனும் மற்ற இரு வானரங்களுடனும் இருக்கும் போது ஆகாய மார்க்கத்தில் ஒரு பெண்ணை ராக்ஷஸன் ஒருவன் அபகரித்துச் சென்றதையும், அவள் மேலிருந்து ஹாராம! ஹாலஷ்மண! என்று தீனமாக கதறிக் கொண்டு செல்வதையும்

பார்த்தோம். நீங்கள் சொல்லும் அங்க அடையாளங்களை வைத்துப் பார்த்தால் அது உங்கள் பார்யை சீதையாக இருக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன். மேலும் அந்த பெண் அச்சமயம் தன் வஸ்திரத்தை கிழித்து அதில் தன் ஆபரணங்களை முடிந்து கீழே போட்டாள். அதை ஜாக்கிரதையாக காப்பாற்றி வருகிறேன் என்றும்; அந்த ஆபரணங்களைப் பார்த்து அவை சீதையி னுடையதா என்றும் சொல்லவேண்டும் - என்று கூறினான்.

சுக்ரீவனும் தன் குகையில் புகுந்து அந்த ஆபரணங்களை எடுத்து வந்து ராமனுக்கு காட்டினான். ராமன் உத்தரீயத்தையும், ஆபரணங்களையும் எடுத்துப் பார்த்து, சந்திரன் பனியால் மூடப் படுவது போல் கண்கள் நீரால் மறைய, சீதையின் ஞாபகத்தினால் சோகம் மேலிட கண்ணீர் தாரை தாரையாக பெருக, பக்கத்தில் நின்ற லக்ஷ்மணனைப் பார்த்து தீனமாகபிரலாபித்தார். **'குழந்தாய்! சீதையை ராவணன் எடுத்து போகும்போது, அவள் விட்டெறிந்த உத்தரீயத்தையும் ஆபரணங்களையும் பார்த்தாயா? இவை சீதையின் ஆபரணங்களா பார்த்துச் சொல். கண்ணீர் வெள்ளத்தால் என் கண்கள் மறைந்து பார்க்க முடியவில்லை'** என்றார்.

அப்போது லக்ஷ்மணன்,

**'நாஹம் ஜாநாமி கேயூரே நாஹம் ஜாநாமி குண்டலே!**
**நூபு ரேத்வபி ஜாநாமி நித்யம் பாதாபி வந்த நாத்!!**

(கிஷ். 6ஸர். - 22 ஶ்லோகம்)

"(அண்ணா இந்த வங்கிகளை அறியேன்; குண்டலங்களையும் அறியேன் ; இந்த பாதச் சிலம்புகள் சீதை தரித்திருந்தவை என்று எனக்கு நன்றாகத் தெரியும், ஒவ்வொரு நாளும் நான் அவள் பாதங்களில் பணியும் போது அவைகளைப் பார்த் திருக்கிறேன்') என்றார்.

மேலும், ராமன் சுக்ரீவனுடன் ஸக்யம் ஏற்பட்டதும், தான் வாலியை வதம் செய்து தருவதாகவும், அதற்கு பதில் சுக்ரீவன் சீதையை தேடிக்கண்டுபிடித்து வரவேண்டும் என்றும் தீர்மானித்தார்கள். சிறுவயதான ராமனோ, தேஜஸுடன் இருக்கிறான். நம் அண்ணனான வாலியின் வீரம் இந்த சிறுவனுக்கு இருக்குமா? என மனம் சிறிது சஞ்சலப்பட்டான். அதைப் புரிந்து கொண்ட ராமனும் அவன் சந்தேகத்தைத் தீர்க்க அருகே மராமரங்கள் ஏழு இங்கொன்றும் அங்கொன்றுமாய் இருந்ததை அம்பு எய்து பிளக்க எண்ணினான். அதைக் குறிப்பால் அறிந்த லக்ஷ்மணன் தன் கால் கட்டை விரலை ஒரு க்ஷணமாத்திரத்துக்கும் குறைவான நேரத்துக்கு பூமியில் ஓர் இடத்தை அமுக்க அந்த ஏழு மராமரங்களும் ஒரே நேர்க்கோட்டில் வர ராமபாணமும் அவ்வேழு மராமரங்களையும் துளைத்துக் கொண்டு பூமியில் புகுந்து கீழ் ஏழு லோகங்களையும் துளைத்து, சிறிது நேரத்திற்கெல்லாம் பூமியிலிருந்து கிளம்பி அதிவேகமாக ராமனுடைய அம்பறையில் வந்து சேர்ந்தது. இங்கு லக்ஷ்மணன் ஏன் தன் கால் கட்டை விரலை அழுத்தினான் என்பதைப் பார்க்கலாம்.

ஆயிரம் தலையுடைய ஆதிசேஷன் பாதாள லோகத்திலிருந்து கொண்டு பூமியைத் தாங்குகிறான். அவன் அங்க அசைவுகளே, பூமியில் நடுக்கமும், ஜலங்கள் அசைதலும் ஆகும். மராமரங்கள் ஏழும் ஒரு நேர்கோட்டில் வர லக்ஷ்மணனான ஆதிசேஷன் அதன் வால்பகுதியை சற்று அழுத்தம் கொடுக்க தாங்கும் ஆதிசேஷனும் சற்றே அசைய அம்மரங்கள் ஒரே நேர்கோட்டில் வந்தது என தெரிய வருகிறது. (நாரதீய புராணம். திருவனந்தபுரத்தில் குலசேகர மண்டபத்தில் சிற்ப ரூபத்தில் இந்த காட்சியைக் காணலாம்.)

சுக்ரீவனுடன் ராமருக்கு ஸக்யம் ஏற்பட்டு வாலியை வதம் செய்வது என்பது முடிவானது. சுக்ரீவனும் கிஷ்கிந்தைக்குச் சென்று வாலியை யுத்தம் செய்ய அழைத்தான். ராமலக்ஷ்மணர்கள் மாருதியுடன் ஒரு மரத்தின் பக்கம் மறைந்து இருந்தனர். வாலி,

சுக்ரீவயுத்தம் கோரமாக நடந்தது.வாலி, சுக்ரீவன் இருவரையும் பார்த்தால் அசுவனி தேவர்களைப் போல் பார்வைக்கு ஒரே மாதிரியாய் இருந்தபடியால் ராமன் அஸ்த்ரப்ரயோகம் செய்யாமல் விட்டுவிட்டார். வாலியிடம் நன்கு அடிபட்ட சுக்ரீவன் திரும்ப வந்தான். 'ஏன் வாலியை கொல்லாமல் விட்டு விட்டீர்கள்? என்று ராமனைக் கேட்க ராமனும், **'உங்கள் இருவரில் யார் வாலி என்ற வித்யாசம் தெரியாமையே காரணம்'** என்றும் சொல்லி உன்னைக் கண்டுபிடிக்கும்படி ஒரு அடையாளத்தைச் செய்துகொள். **'லக்ஷ்மண! கஜபுஷ்பி என்ற புஷ்பங்கள் நிறைந்த இந்தக் கொடியை ஸுக்ரீவனுடைய கழுத்தில்கட்டு'** என்கிறார். லக்ஷ்மணனும் அப்படியே செய்ய சூரியனைப் போலவும், சந்தியா காலத்தில் கொக்குகளால் சூழப்பட்ட மேகத்தைப் போலும் விளங்க ராமனுடைய வார்த்தையால் மறுபடி கிஷ்கிந்தைக்கு சென்று வாலியுடன் யுத்தம் செய்ய ராமன் வாலியை வதம் செய்தார் என்பது தெரிந்ததே. கஜபுஷ்ப மாலையை லக்ஷ்மணன், சுக்ரீவன் கழுத்தில் போட அச்சமயம் மாலையை ஏற்க சுக்ரீவன் தலை தாழ, அது லக்ஷ்மணனின் திருவடிகளைப் பார்க்க அந்தக்ஷணமே சுக்ரீவனுக்கு ராமனுடன் ஸக்யம் செய்யும் சமயம் ராமனுக்கு மட்டும் ஆச்சா மரத்தில் ஆசனத்தை கொடுத்து லக்ஷ்மணனை மதிக்காமல் இருந்த அந்த அபராதம் நீங்கப் பெற்றான் எனவும் கொள்ளலாம்.

வாலியைக் கொன்று கிஷ்கிந்தையில் சுக்ரீவ பட்டாபிஷேகமும் ஆனது. சுக்ரீவன் மணம் புரிந்த தாரை (வாலியின் மனைவி) மற்றும் தன் மனைவி ருமாவுடன் அந்தப்புரத்திலேயே மிகவும் மகிழ்ச்சியுடனும், மதுபானம் போன்ற களியாட்டங்களில் மூழ்கியிருந்தமையால், ராமனுக்கு சீதையைத் தேடிக் கொடுக்கும் முயற்சி நின்று போனது. வஸந்த ருது சென்று, மழைக்காலமும் வந்து விட்டது. ராமனுக்கு சீதையைப் பிரிந்த தாபம் அதிகமானது. சரத் காலம் வந்ததும் 'எப்படியும் சுக்ரீவனுக்கும் மனம் வரும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறேன். வீரனுக்கு உபகாரம் செய்தால் அவன் அதற்கு பதில் செய்யாமல் இருக்க

மாட்டான். நன்றி மறந்து அப்படிச் செய்யாவிட்டால் சாதுக்களால் நிந்திக்கப்படுவான் என்று ராமன் லக்ஷ்மணனிடம் கூற, லக்ஷ்மணன் அதைக் கொண்டாடி கை கூப்பி **'ஸ்வாமி! சுக்ரீவன் தங்கள் இஷ்டம் போல் நடந்து கொள்வான். சரத் காலத்தை எதிர்பார்ப்போம்'** என்று பதிலுரைத்தார்.

சரத் காலமும் வந்தது. இப்படியிருக்க சுக்ரீவனும் வரவில்லை. ராமனுக்காக எந்த முயற்சியையும் செய்ததாகத் தெரியவில்லை. சீதையை பிரிந்த சோகம் ராமனுக்கு இந்த நான்கு மழைக்காலத்து மாதங்களும் பல நூறு வருஷங்கள் போல் கழிந்தன.

## இலக்குவன் இராமனைத் தேற்றுதல்:

சீதையைப் பிரிந்து வருந்துகிற இராமபிரானைத் தேற்றுவதற்காக அவனை நோக்கி **'பெரியோய்! உன்னை எத்தகைய தன்மை உடையவனாக எண்ணினாய்?** வேதங்கள் பிறழ்ந்தாலும், சந்திரன் நிலை தவறினாலும் வானும், ஆழ்கடல் சூழ்ந்த உலகமும் நம் நிலையில் தவறினாலும், நீ கலங்கலாமோ? தண்ட காரண்யத்து முனிவர்கள் நின்னிடம் அடைக்கலம் என்று வந்தபொழுது அவர்களை நோக்கி **'உங்களை வருத்தும் அசுரர்களை வேருடன் அழிப்பதாக வாக்குறுதி தந்தாய், அவர்களை அழிப்பதை விட்டு இங்ஙனம் வருந்தி நிற்பது சரியோ'** என்று கூறினான். இராமன் தேறுதல் கூறிய தம்பியான இலக்குவனின் சொற்களால் தெளிவு பெற்று கிடக்கை நீக்கி நடமாட்டம் கொண்டான்.

## இலக்குவன் கிட்கிந்தைக்குப் போதல்:

சுக்ரீவன் தான் கூறியபடி மாரிக்காலம் முடிந்ததும் சீதையைத் தேடாமல் தாமதித்ததனால் இராமபிரான் கோபம் கொண்டு இலக்குவனை நோக்கி **'சுக்ரீவன் நாம் செய்த உதவியை மறந்து விட்டு அருமையாகக் கொண்ட நட்பையும்**

**கட்டற ஒழித்தான். நீ சென்று அவன் எண்ணம் இன்னது என்று அறிந்து கொண்டு வருவாயாக' என்று கூறினான்.**

**வாலியின் மனைவியாகிய தாரை இலக்குவன் வழியை தடுத்து நிற்றல்:**

தன்னுடைய தமையனான இராமனின் ஒப்பில்லா அம்புபோல தடையில்லாமல் விரைவாகச் சென்று மிக உயர்ந்த கிட்கிந்தை மலையை அடைந்தவனான இலக்குவன் ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்கு பாயும் பொன்னிற பிடரி மயிரினையுடைய ஆண் சிங்கத்தைப் போலவும் விளங்கினான். இலக்குவன் மிகுந்த கோபத்துடன் வருவதை கண்ட வானர வீரர்கள் அஞ்சி நடுங்கினர். தாரை வானர மாதர்களை அழைத்துக்கொண்டு அவன் வழியைத் தடுத்தாள். அதைக்கண்ட உயர்ந்த தோள்களை உடைய வீரரான இலக்குவன் எவராலும் மாற்ற இயலாத தன் கோலம் மாறத்தன் முகத்தை மாற்றி திருப்பியதல்லாமல் அந்த மகளிரை கண்ணெடுத்துப் பார்க்கவும் அஞ்சினான். (இலக்குவனின் பிறர் மனை நோக்காத பேராண்மை இங்கு விளக்கப்பட்டது) தாமரை மலர்போன்ற தன் முகத்தைச் சாய்த்துக்கொண்டு வில்லைத் தரை மீது ஊன்றி கூச்சம் கொண்டு நின்றான். தாரையின் சொற்களினால் சினம் தணிந்த இலக்குவன் அனுமனை நோக்கி,

**'இராமன் முதலில் உன்னைக் கண்டதால் ஆபத்து உண்டானபோது உதவி செய்யும் தன்மையில் உம் அரசனான சுக்ரீவனை என்னைப் போலவே தம்பியாக பாவித்து இவ்வளவு நாள் உயிரைத் தாங்கியிருந்தான். இல்லையேல், தன் வில் ஒன்றாலே பகைதொலைத்து சீதையை மீட்க முடியும். சீதை எங்கிருந்தாலும் அவளைத் தேடி கண்டுபிடித்துக் கொண்டு வருதல் இராமனின் வில்லுக்கு பெரியதொரு செயலாகுமா? நீங்கள் சொன்ன சொல்லை நிறைவேற்றாது காலம் தாழ்த்தல் உங்களுக்கு அறம் ஆகாது'** என்று கூறினான்.

மஹா விருக்ஷங்களைப் பெருங்காற்றைப் போல் முறித்தும், மலைச் சிகரங்களைப் பெயர்த்தும் கற்பாறைகளைப் பொடி செய்து கொண்டும் கடும் வேகமாக மதயானையைப் போல் நடந்து போனார். காலாக்னியைப் போல் ஜ்வலித்துக்கொண்டும், நாகேந்திரனைப்போல் சீறிக்கொண்டும் வரும் லக்ஷ்மணனை அங்கதன் பார்த்து 'ஐயோ! இவர் வரும் சமயத்திலா சுக்ரீவன் மெய் மறந்திருக்க வேண்டும்! இப்போது இருக்கும் ஸ்திதியில் இளைய பெருமாளை இன்னாரென்று அறியாமல் அலக்ஷியம் செய்வாரே" என்று மிகுந்த துக்கத்தை அடைந்தான். பின் லக்ஷ்மணனின் வார்த்தைகளை சிரமேற்கொண்டு அந்தப் புரத்திலிருக்கும் சுக்ரீவனைக் காணச் சென்றான். அங்கதன் சீக்கிரம் திரும்பி வராததால் லக்ஷ்மணன் கடுங்கோபங்கொண்டு கோட்டைக்குள் நுழையப் போவதைக் கண்டு, அங்குள்ள வானரங்கள் நடுங்கினர். சிலர் ஸிம்ஹநாதம் செய்தார்கள். அனுமதி பெற்று லக்ஷ்மணனும் அந்தப்புரத்தில் நுழைந்தான். பெண்கள் பலர் அங்கு இருக்கக் கண்டு, தான் வந்ததை சுக்ரீவனுக்கு தெரியப்படுத்தவும் அந்தப் பெண்கள் அங்கிருந்து போகவும் திக்குகள் நடுங்கும்படி நாணோசை செய்தார். சுக்ரீவனால் அனுப்பப்பட்டதாரை லக்ஷ்மணன் முன் வந்து லக்ஷ்மணனை வரவேற்று உபசரித்து ஆனந்தித்தாள். லக்ஷ்மணனும் தான் வந்த விஷயத்தை சுருக்கமாக கூறி, வாலிக்கு நேர்ந்த கதி சுக்ரீவனுக்கு வரவேண்டுமோ? என கேட்டார்.

தாரை 'கோபப்படாதே லக்ஷ்மணா, சுக்ரீவமஹாராஜா முன்பே சீதையை கண்டு பிடிக்க என்று எல்லாதிக்குகளிலிருந்தும் பெரும் சைன்யத்தை வரவழைத்து விட்டார். நான்தான் அவரை அக்காரியத்தை தாமதப்படுத்த சொல்லி தடுத்து வைத்து இருந்தேன். இல்லாவிட்டால் லஷ்மணனான உன்பாத தூளிகள் இந்த கிஷ்கிந்தையின் அந்தப்புரம் வருமோ! அதற்காகவே காத்து இருந்தேன். இனி இந்த க்ஷணமே சைன்யங்கள் தயார் செய்து சீதையை தேடும் பணியை செய்வோம்.' என்றாள்.

**சுக்ரீவனுடன் உரையாடுதல்:**

அதன் பின் சுக்ரீவன் இலக்குவனைச் சிங்காதனத்தில் அமருமாறு வேண்டினான். ஆனால் இலக்குவனோ 'திருமகளின் தலைவனான இராமன் புல் தரையில் தங்கியிருக்க, அவனுடைய தம்பியான நான் இச்சிங்காதனத்தில் அமர்தல் தகுதியுடையதோ' என எண்ணினான். **'கல் போன்ற கடுமையான மனத்தை உடைய கைகேயியின் வரத்தால் மணி முடி துறந்து, காட்டுக்கு வந்த எம் தலைவனான இராமன் புல் தரையில் இருக்க, நான் பொன்னால ஆனதும் மலர்களால் அழகு செய்யப்பட்டதுமான மென்மையான ஆசனத்தில் தங்குதலும் எனக்கு வேண்டுவதோ'** என உரைத்து கல் தலையில் அமர்ந்தான். சுக்ரீவன் இலக்குவனை நோக்கி **'நீ நீராடி இந்த இனிய உணவை உண்டால் நாங்கள் நல்வாழ்க்கைப் பெற்றவராவோம்'** என்றான். அதற்கு இலககுவன் **'கீரைகளும், காய்களும் ஆகிய இவற்றில் இராமன் உண்ட மிகுந்ததையே நான் உண்பேன்'**. வேறொன்றையும் விரும்பி உண்ணமாட்டேன். ஒரு வேளை விரும்பினேன் என்றால் இராமன் உண்ட எச்சில் அல்லாது அது நாய் உண்ட எச்சிலேயாகும். இனி நான் சென்று கீரை முதலியவற்றைக் கொணர்ந்து வைத்தால் அதுவே இராமன் உண்ணும் உணவே ஆகும். அதனால் இங்கு ஒரு நொடி பொழுதும் தாமதித்திருப்பது தகுதியுடையதன்று' என்று உரைத்தான்.

**வால்மீகி இராமாயணம் யுத்த காண்டத்தில்,**

'யத்ர ராமோ ஸ **லக்ஷ்மண:**' என்றபடி விபீஷணனும், லக்ஷ்மணனை புருஷகாரமாக பற்றிக்கொண்டு இராமனை ஸேவித்தான் என்று கூறுகிறார்.

விபீஷணன் சக்கரவர்த்தித் திருமகனிடம் சரண் புகுந்த போது, சுக்ரீவன் 'இவன் கடும் தண்டனையால் ஹிம்ஸிக்கப் படட்டும்' (இரா.யுத்.காண்17.29) என்று சொல்ல, **'கருணையாகிற**

**புண்ணியலக்ஷணத்தோடு இருக்கும் லக்ஷ்மணன்'** (ரா.யு.18.7) என்கிற படி இவ்விபீஷணனைப் பெருமாள் கை கொள்ள வேண்டும் எனும் மனவிரக்கம் தோன்ற இருந்தானன்றோ புருஷாகார பூதனான லக்ஷ்மணன்.

ஸ்ரீராமாயணம் யுத்த காண்டத்தில்,

**'ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து புத்தி பூர்மிஹாகா:'**

(17-65 ஶ்லோகம்)

(மனப்பூர்வமாக ராஜ்யத்தை விரும்புகிறவனாகவே விபீஷணன் இங்கு வந்துள்ளனன்) என்று அனுமனும் **'ராஜ்யகாங்க்ஷீ சராக்ஷஸ ; (ரா.யு.18.13) (அரக்கனை விபீஷணைக் குறித்துச் சொல்லுகையாலே, விபிஷணன் ஐஶ்வர்யார்த்தி என்று தோன்றுகிறது. உற்றார், உறவினர், செல்வம் முதலிய எல்லா வற்றையும் விட்டு ஸ்ரீராமனை சரணம் புகுந்தமையாலே, வேறு பயன் கருதாத அநந்ய ப்ரயோஜனன் என்றும் தோன்றுகிறது. இவ்விரண்டும் கூடுமோ?'** எனில் நம்மை போன்றவர்கள் மோக்ஷத்தை விரும்பி சரணம் புகுந்தவர்களாயிருந்தபோதிலும், இந்த சரீரம் முடியும் வரையில் கொண்ட பெண்டிரையும் உண்ணும் சோறு பருகுநீர் முதலானவற்றையும் போக்யமாகக் கொள்வது போலே விபீஷணாழ்வானும் வேறு பயன் கருதாத அநந்யப்ரயோஜனனானாலும் தானிருக்கும் வரை பெருமாள் அளித்த லங்கா ஐஶ்வர்யதனையும் அநுபவிக்கிறான் என்று கொள்ளவேணும். இந்த இடத்தில்

**'தம்பி சொல் ஜீவியாத கோஷ்டியை விட்டு தம்பி சொல் ஜீவிக்கும் கோஷ்டிக்கு வந்தான்'** விபிஷணன் என்று பெரிய வாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் அருளிச்செய்கிறார். இதிலும் லக்ஷ்மணனான இளையாழ்வாரின் ஏற்றம் தெரிகிறதை காணலாம்.

நித்யசூரிகளில் ஆதிசேஷனும் ஒருவர், பிராட்டியைப் போல் **'அகலகில்லேன் இறையும் என, நீருளதெனின் உள மீனும் நிலமும்'** என்பது போல் எம்பிரானும் அடியாரும் நெருங்கிய உறவு உடையவர்கள். ஜீவன் போலே பரமன் போலே அடிமை உறவும் நித்தியமே. அயோமுகிப் படலத்திலே, சீதையைப் பிரிந்த நிலையிலே இராமபிரான் இலக்குவனைப் பற்றிய சிறப்பைக் கூறுவார். இது இலக்குவனைப் பற்றியது என்றாலும் அதற்குள் மறைந்துகிடக்கும் உணர்வு ஆதிசேஷனேயாகும்.

**கம்பன் தன் யுத்த காண்டத்தில்:**

இலக்குவன் இந்திரஜித் அம்பால் அடிபட்டு விழுந்தான். (பாடல்2587/88) **'இலக்குவனைப் பார்த்த இராமன் துன்பத்தோடு புலம்புகிறான்.' என் தந்தை இறந்து போனான் என்பதைக் கேள்வியுற்றதும் நான் உயிர் வாழ்ந்திருந்தேன். உலகம் அனைத்தும் பரதனுக்குத் தந்தேன் என்னும் கொள்கையை விட்டுவிட்டேன். நான் எப்போதும் தனிப்பட்டவன் அல்லன். நீ உயிரோடிருக்கிறாய் என்பதால் அவ்வாறு நான் இருந்தேன். இபபோது உன் பேச்சையும் கேட்கவில்லை. அதனால் நான் இனிமேல் உயிர் வாழ மாட்டேன். நானும், நீ இருக்கும் இடத்திற்கு வந்து விட்டேன்' என்று இராமன் ஏங்கி விம்மினான். 'எனக்குத் தாய் தந்தையே நீதான்! தவம் நீதான் ! தமையனும் நீ! தம்பியும் நீ! செல்வமும் நீதான் ! நீயோ புகழைப் பொருட்படுத்தாமல் என்னை விட்டுவிட்டுப் போனாய். நானோ இன்னும் உயிரோடு இருப்பதால் உன்னைக் காட்டிலும் கல் நெஞ்சன்' என்று இராமன் ஏங்கி விம்மினான். என்னைத் தவிர வேறு உறவு வேண்டியதில்லை என்று நினைத்து தர்மத்தையும், தாய், தந்தையையும், உறவினரையும் துறந்து விட்டவனே: எப்போதும் என்னை மறக்காதவனே! எனக்குத் துணையாக வந்து பிறந்தவனே! பின்பு காட்டுக்குப் பின்தொடர்ந்தவனே! என்னைப் பிரியாதவனே! நீ இறந்தாய்.**

**நீ இருந்ததைக் கண்டும் இறக்காமல் நான் உயிரோடு இருக்கிறேன்'** எனக் கலங்கி புலம்பினான் இராமன்.

இலக்குவன், இராமன் திருவடிகளிலே இந்திரஜித்தின் தலையை வைத்தான். இலக்குவனே தவிர தனக்கு என்று தனியாக ஒன்றும் இல்லாதவனான இராமன் கரிய மேகத்தை செவ்வானம் கூடியது போலவும், கரிய மலையில் காலை வெய்யில் போலவும் இளவலின் மார்பு, தோள் இவற்றின் மேல் இரத்தம் படிந்து செந்நிறமுடைய காயங்கள் தன் திருமேனியில் புலப்படத் தன் திருவடி வணங்கினவனைத் தழுவினான். இராமன் இலக்குவன் சுமந்த அம்புறாத் துணியைக்களைந்து விட்டு தோளையும், மார்பையும் இருக்கிக் கட்டிய கவசத்தினை ஒட்டிய கயிற்றினை அவிழ்த்து அக்கவசத்தினை வேகமாக நீக்கி, உடலைத் தாக்கிய அம்புகளின் கூரிய நுனிகள் வெட்டிய புண்களும் வடுக்களும் இல்லாமல் மாறும்படி இலக்குவனை பலமுறை பொன் போன்ற தன் அழகிய அகன்ற தோள்களாலே ஒற்றடம் கொடுத்துப் போக்கினான்

**கம்பன் உத்திர காண்டத்தில் சந்திர கேது நகர் படலத்தில்:**

இராமனை நோக்கி மாயவேடம் பூண்ட எமனாகிய முனிவன் குரலை உயர்த்திக்கூறுகிறான். ' **நாம் இங்கே தனித்து உரையாடுவதைக் கண்டவர் யாராக இருந்தாலும், ஒலிக்கும் வீரக்கழலை அணிந்தவனே! அவரைக் கொல்வாயாக'** என, வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் பசுமையான துளசிமாலை அணிந்த இராமனை நோக்கிக் கூறினான். இராமனும் முனிவனின் சொல் ஏற்று தம்பி இலக்குவனை நோக்கி 'எப்படிப்பட்ட மேலோராயினும் இங்கே வராதவாறு மணிகள் மிகுதியாகப் பதித்த வாயிலைக் காவல் புரிவாயாக' என்றார். சிறிது சமயம் சென்ற பின் துருவாச முனிவன் இராம, இலக்குமணர்களிடம் உறுதியாக சொல்லத்தக்க செய்தி ஒன்று உள்ளது இதை அவரிடம் கூறுதல் நின் கடமையாகும் என்றார். **'என் வருகையை உரையா ஓம்**

எனில் உன்தொல்குலம் அழிவதாகிய ஒரு பெரிய சாபத்தை அளிப்பேன்' என்றும் கூறினார். பின் இலக்குவன் இராமனைக் காணச் சென்றான். இராமனும் 'கருமையான கொம்புகளையும் தீயை உமிழும் கண்களையும் உடைய எருமைக்கிடாவை ஊர்த்தியாகக் கொண்டு இனிது உவந்து ஏறிய, தப்புதற்கு அரிய எமனை அனுப்பிவிட்டு வருவேன்' என்று இளவலியிடம் கூறி 'பிரம்மன் சொன்னதற்கு இணங்குகிறேன்' என்று எமனிடம் இயம்பி விடை கொடுத்தான் இராமன்.

கலைநுட்பம் செய்யப்பட்ட அணிகளை அணிந்த எமனது சொற்கள் கருத்தில் இருந்த போதிலும் அதைப் பொருட்படுத்தாது, முனிவனின் வருகையைத் தெரிவிக்க வந்த இலக்குவன் இவ்வுலகை விட்டுப் பிரியக் கருதியதை எண்ணி இராமன் துன்பக் கடலில் ஆழ்ந்தான். 'கருங்கூந்தலை உடைய கைகேயியின் வரமானது எப்படி தயரதன் தன் உயிரை எமனுக்கு அளித்த பிறகு நீ ஒருவாறு அத்துயரினை தாங்கியிருந்தாய்: அது போல இப்போதும் ஆற்றியிரு' என இலக்குவன் அறத்தால் ராவப்பட்ட வேலேந்திய இராமனின் திருவடிகளில் விழுந்து வணங்கினான், மேலும் 'என்னை எமனுக்குத் தருவதாகக் கொடுத்த வரங்கள், முன்பு தாய் கைகேயிக்கு வரமளித்து வாய்மைக் காத்த மைந்தன் நீ ஆதலாலும், நீ என்னிடம் இரக்கம் கொள்ளவேண்டாம், எமனிடம் ஒப்புக்கொண்ட வரங்களை என்கு அருள்க! விடை தருக!' எனக் கூறி உள்ளம் தளர்ந்தான்.

சித்திரப்பாவை போன்று பேசாது இராமன் இருக்க பேசா நிலையே விடைகொடுத்தது போலாகும் என்றெண்ணி அயோத்தியை விட்டு நீங்கிச் சென்றான். நவமணிகளை எங்கும் வாரி இறைத்து வளம் கொழித்துத் தனக்கு நிகரில்லாது விளங்கும் சரயு என்னும் பேராற்றினை சென்றடைந்தான். இலக்குவன் சரயு நதியில் முழ்கிய அளவில் அயோத்திநகர் மக்களும், பரதனும், இராமனும் துயரக் கடலில் மூழ்கினர்.

வராக அவதாரத்தின் போது நீண்ட கொம்பினால் துளைக்கப்பட்ட பூமியின் துயர் கெட, கடல் அலைகளினால் தாக்கப்பட்ட அந்த பூமியை மேன்மையுடன் ஆண்ட ஆற்றல் மிக்க இராமனின் தம்பியான இலக்குவன், பற்றியுள்ள முதுமை எனும் நோயும், பிற நோய்களும் உடைய பிறவியாகிய பெருங்கடலைக் கடந்து கரையேற, சரயு நதிக்கரையில் ஏறினான். இலக்குவனின் பிரிவைத் தாங்க சகியாது, பின்பு தன் பிள்ளைக்கு அரசை அளித்து விட்டு தேவர்கள் துன்பம் களைய இம்மண்ணு லகம் வந்த சரயு நதியில் நீர்த்து, தன் பின் பிறந்த பரத சத்ருக்கன் ஆகியோருடன் விண்ணுலகம் சென்றான்.

**உத்திரராமாயணம்:**

ராமர், லக்ஷ்மணர் இருவரும் அயோத்திக்கு திரும்பி யிருந்தார்கள். அப்போது, காலபைரவன், தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளாமல் முனி வேடம் பூண்டு, இராமனிடம் ஒரு முக்கியச் செய்தியை வெளியிட்டுப் பேசவேண்டும் என்பதற்காக தனது வரவை அறிவித்து, அனுமதி பெற்று வர லக்ஷ்மணனை கேட்டுக்கொண்டான். அவ்வாறே அனுமதிப் பெற்று முனிவேடத்திலிருந்த காலனை இராமனிடம் அழைத்துச்சென்றான். வந்தவரை தக்கவகையில் உபசரித்து, நலன் விசாரித்து, அவரது வருகைக்கு காரணம் வினவினார். முனிவரும் தான் கூறப்போகும் செய்தி, பரம ரகஸ்யமாக இருக்க வேண்டுமென்றும், அதை இராமனைத் தவிர மற்றவர் எவரும் அறியக்கூடாது என்றும் எதேச்சையாக யாரேனும் அறிய நேரிட்டாலும், அப்படி அறிய நேரிட்டவருக்கு மரணதண்டனை வழங்க வேண்டுமென்று கூறி இலக்ஷ்மணனை வெளியேற்றி ஒரு முகூர்த்தகாலம் யாரையும் உள்ளே அனுமதிக்காதபடி கட்டளையிட்டார்.

முனிவேடதாரி இராமனை நோக்கி, 'ஸ்வாமி அடியேன் காலன். பூவுலகில் தங்களது காலம் முடிந்து, ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளும் தருணம் வந்து விட்டது, தங்களிடம் தெரிவிக்க

பிரமதேவன் என்னை அனுப்பியுள்ளார் என்று பேசிக் கொண்டிருக்கும்போது துர்வாச மகரிஷியின் வரவைத் தெரிவிக்க இலக்ஷ்மணன் உள்ளே வந்தார்.

காலன் திரும்பியதும் துர்வாசரை அழைத்து உபசரித்து அவரது கோரிக்கையை நிறைவேற்றிய பிறகு அசந்தர்ப்பமாக உள்ளே வந்ததற்கு லக்ஷ்மணனை கடிந்து கொண்டார். லக்ஷ்மணன் அவ்விதம் நடந்து கொண்டது இன்றியமையாததாக போய்விட்டதென்றும் துர்வாசரை அனுமதிக்காவிடில் ரகு வம்சத்தையே நாசம் செய்து விடுவேன் என்று கோபமாக கர்ஜித்தார். குலநாசத்தை தடுக்க நான் ஒருவன் மரணதண்டனை பெற, துணிந்து இராமன் காலனோடு உரையாடிக்கொண்டிருந்தபோது உள்ளே வர நேர்ந்தது என்று கூறி பிழைபொறுத்து தனக்குரிய மரணதண்டனையை நிறைவேற்ற கட்டளை இடும்படி கேட்டுக் கொண்டாராம்.

கண்கள் இமைகள் காப்பதுபோல் இதுவரை கணப்பொழுது கூடத் தவறாமல் தனது குறிப்பறிந்து தொண்டாற்றி வந்த அருமைத் தம்பி லக்ஷ்மணனுக்கு தானே மரணதண்டனை வழங்கும்படி நேர்ந்துவிட்டதே என்று கடுந்துயரத்திலாழ்ந்த இராமர் செய்வதொன்று மறியாது, மஞ்சத்தில் சாய்ந்து விட்டார்.

தனக்கு மரண தண்டனை விதிக்க இராமனின் மனம் ஒரு பொழுதும் ஒவ்வாது என்றுணர்ந்து இளையபெருமாள் தானே தண்டனையை நிறைவேற்றிக் கொள்ளத் துணிந்து, சரயூ நதிக்கரைக்குச் சென்று, தெற்கு நோக்கி பத்மாசனம் இட்டு மூச்சை அடக்கி ஒரு கற்சிலை போல் அமர்ந்துவிட்டார். லக்ஷ்மண னின் வைராக்கியத்தைக் கண்ட இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தார்கள்.

மஞ்சத்தை சாய்ந்து யோஜனையில் ஆழ்ந்த இராமன் சில நேரம் கழித்து நோக்கிய போது எதிரே இலக்ஷ்மணனைக்

காணவில்லை. குலகுருவை கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வரலாம் என்று வசிஷ்டரை காணச்சென்ற போது இலக்ஷ்மணனின் துணிவை அறிந்த இருவரும் சரயூ நதிக்கரைக்குச் சென்று பார்த்தபோது லக்ஷ்மணனின் உடல் மட்டும் தான் கற்சிலை போல் உள்ளது. உயிரான அனந்தன் வெளிறேிவிட்டான்.

லக்ஷ்மணனின் தன்னிச்சை செயல் சுவாதந்திரியமானது என்றளவில், அறநெறிக்கோட்பாடுகளுக்குட்பட்டதல்ல. அரசன் தான் தண்டனையை விதிக்க வேண்டும். அப்போது தான் தர்மநெறி காக்கப்படும். தண்டனையைத் தானே நிறைவேற்றிக் கொள்வது குற்றம். அவசரப்பட்டு தன்னிச்சையாக செயல்பட்டமையால், சிலகாலம் லக்ஷ்மணன் கற்சிலைபோல் ஒரு அசையாப் பொருள் போல் நிற்கவேண்டும் என்று சாபமிட்டார்.

கலியுகத்தில அனந்தனுக்கு குருகாபுரியில் ஒரு புளிய மரமாக வளர்ந்து வாழும்படி கட்டளையிட்டார். எம்பெருமானின் கட்டளையை சிரசாவகித்து பொருநை நதிக்கரையில் உள்ள ஆதிநாதர் ஆலயத்தை அடைந்து ஒரு புளியமரமாக வளர்ந்து 'திருப்புளியாழ்வார்' என்ற சிறப்புப் பெயருடன் எழுந்தருளியிருந்தார்.

(103-104 ஶ்லோ.)

சிறிது சமயம் சென்ற பின் துர்வாஸர் என்கிற மஹரிஷி ஸ்ரீராமனை சந்திக்கும் பொருட்டு வெகு வேகமாக வந்தார். (துர்வாஸமுனியோ கோபக்காரர், உடனே சாபமும் கொடுத்து விடுவார்) முனிவரோ லக்ஷ்மணனிடம் தான் உடனே ஸ்ரீராமனைப் பார்க்க விரும்புவதாகச் சொன்னார். அண்ணனான ஸ்ரீராமனின் கட்டளையை மீறவும் கூடாது, துர்வாஸரின் சாபம் அண்ணனான ஸ்ரீராமனைத் தாக்கவும் கூடாது. என் செய்வது என க்ஷணமாத்திரம் யோசனை செய்து, முனிவரை தக்கபடி உபசரணைச் செய்து ஆசனத்தில் அமரவைத்துவிட்டு, தான் அபசாரப்பட்டாலும் பரவாயில்லை. ஸ்ரீராமனை முனிவர் சாபத்திலிருந்து காப்பதே

தம்பியான தன் தர்மம் என்று நினைத்து, ராமன், யமனுடன் ஸம்வாதனம் நடக்கும் அறைக்குள் உத்திரவு இன்றி, மிக வேகமாக சென்றான். தான் தவறு செய்து விட்டோமே என்று ஸ்தம்பித்து நிற்க, ராமன் 'என்ன லக்ஷ்மணா மரமாட்டம் நிற்கின்றாய்'? என்றதனால் லக்ஷ்மணனும் ராமன் தன் இடமான பரமபதத்திற்கு செல்லு முன்பாகவே கலியுகத்தில் அவதரிக்கும் நம்மாழ்வாருக்காக 'புளியமரமாக' அன்றே வந்து விட்டதாக வழக்கு.

**மத்பக்தோஹம் பவிஷ்யாமி நேதும் த்ராவிடதாம் சுருதீ:|**
**நிர்நித்ர திந்த்ரிணீஸத்வம் கத்வாத்ர புஜாகாதிப: ||**

- (ஆழ்வார்திருநகரி) குருகாபுரி ஸ்தலமாஹாத்மியம்

(வேதங்கள் எல்லாம் தமிழ் மொழியில் கொண்டு வருவதற்காக என்னுடைய பக்தனாக அவதரிக்கப்போகிறேன். எனக்குக் காவலாக ராமாவதாரத்தில் லக்ஷ்மணனாக உறங்காமல் இருந்து பாதுகாத்தார்போல் நம்மாழ்வாராக அவதரிக்கும்போது புளியமரமாக ஆதிசேஷன் அவதரித்து என்னைக் காத்து வருவான்.)

எம்பெருமானை விட்டு நொடிப் பொழுதும் பிரியாது இருந்த ஆதிசேஷன், இளைய பெருமாளாக அவதரித்து, கைங்கர்யங்கள் பலவும் ராமனுக்கு செய்தான். சேஷத்வம் என்பதை அனுஷ்டானத்தால் விளக்கிக் காட்டவேயன்றோ ஆதிசேஷன் அந்த அவதாரத்தை மேற்கொண்டான்! இராமனும், பிராட்டியை ஒரு வருஷ காலம் போல் பிரிந்து இருந்தான். பரதாழ்வானை பதினான்கு வருஷங்கள் பிரிந்து வாழ்ந்தான். ஆனால் திருவனந்தாழ்வானுடைய அவதாரமான லக்ஷ்மணனை கடைசியில் பிரிந்து இருக்க முடியாமல் தன் அவதாரத்தையே அல்லவா முடித்துக் கொண்டான்!

'புல்குமணையாம்'(முத-திரு-53) – பிராட்டியை பிரிந்து நெடு நாட்கள் இருந்தார். முதலில் இராவணேஶ்வரன் சீதையை

கவர்ந்து சென்று லங்காபுரியில் சிறையில் வைத்த போது ஒரு வருடம் போல் பிரிந்தார் பின் சீதை கர்பவதியான போது ஒரு ஈரம் கொல்லி (வண்ணான்) சொல்லும் சொல்லுக்காக மறுபடியும் நாடு கடத்தினார் கடைசியில் உத்திர காண்டத்தில் குச, லவர்களை அவர்களுடைய பிதாவான ராமனிடம் சேர்ப்பித்ததும் பூமியானது (பூமா தேவியால்) பிளந்து உள்ளே சென்றாள். ஆக இத்தனை தடவை சீதையை பிரிந்த போதும் அந்த லக்ஷ்மணனை பிரியவில்லை என்பது காண்க. கடைசியில் லக்ஷ்மணன் ராமனின் தண்டனையாக ஏற்று ஸரயு நதியில் இறங்கிய போதும் அந்த பிரிவாற்றாமையை தாங்காது ஸ்ரீராமனும் சென்று மறைந்தான். **'லக்ஷ்மணேந கதாம் கதிம்'** என்று தம்பி போன வழியே தானும் போனார் என்பதை காட்டுகிறபடி,

சிலர், லக்ஷ்மணன் அபராதத்திற்குத் தண்டனையாக ஸரயு நதியில் மூழ்கி மறைந்தான் என்றும், அந்த தம்பி லக்ஷ்மணனை (ஆதிசேஷனை) க்ஷணகாலமும் பிரிய தரிக்காமல் ராமரும் ஸரயு நதி தீர்த்தத்தில் மறைந்தார் என்றும் சொல்வதுண்டு. கைங்கர்யத்தை லக்ஷ்மணன் நடத்தி காட்டினான், லக்ஷ்மணனை **"நீக்கமில்லா அடியார்"** என்று நம்மாழ்வார் குறிப்பிடுகிறார்.



## 39.ஆழ்வார் அனுபவித்த இலக்குமணன்

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி 2-3-7 பாசுரத்தில்,

'பரதனும் தம்பி சத்ருக்கனனும்
இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நன் பகலும் துதி செய்ய நின்ற
இராவணாந்தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர் பொழிலூடு
குயிலோடு மயில்கள் நின்று ஆல,
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. என்கிறார்.

பரதாழ்வானும், அவனது தம்பியான சத்ருக்னாழ்வானும், லக்ஷ்மணனும், சீதாப்பிராட்டியும் இடைவிடாது ஸ்தோத்திரம் பண்ணும்படியாக எழுந்தருளியிருக்கிற ராவண ஸமஹாரியான பெருமாளை, குற மலர்களே பரிமளிக்கின்ற குளிர்ந்த சோலைகளிலே, குயில்களும், மயில்களும் ஆரவாரிக்க, சூரிய கிரணங்கள் உள்ளே நுழைந்தறியாத திருவல்லிக்கேணியில் ஆழ்வார் பாடியுள்ளார்.

**ஆண்டாள்:**

எப்படி - ஸ்ரீகுஹப்பெருமாள், சுக்ரீவமஹாராஜா, அனுமன், விபீஷணாழ்வான் எல்லோருக்கும் லக்ஷ்மணன் புருஷகாரம் ஆனதுபோல், எங்களுக்கு புருஷகாரமான, அவனை எழுப்பி நீயும் எழுந்திரு என்று ஆண்டாள் ஆயர்பாடி சிறுவர்களுடன் பாடுகிறாள்.



## 40.ஆசார்யர்கள் அனுபவித்த இலக்குமணன்

### 41.கூரத்தாழ்வான்

**ஸ்ரீவத்ஸ சிஹ்நமிச்ரேப் யோ நம உக்தி மதீ மஹி|**
**யது க்தயஸ்த்ரயீ கண்டே யாந்தி மங்கள ஸுத்ரதாம் ||**

(எவருடைய ஸ்ரீஸூக்திகள் வேதத்தின் கழுத்தில் கட்டப்பட்ட தாலிப்போல் விளங்குகின்றனவோ, அத்தகைய ஸ்ரீவத்ஸாங்க மிஸ்ரரைக் குறித்து "நம:" என்னும் சொல்லை ஓதுகிறோம்.)

எம்பெருமானாருடைய சிஷ்யர்களில் முதல்வராக எண்ணத்தகுந்த கூரத்தாழ்வான், எம்பெருமானார்அவதரிப்பதற்கு எட்டு வருஷம் முன்பே ஸௌம்ய வருஷத்தில் தை மாதம் ஹஸ்த நக்ஷத்திரம் வியாழக்கிழமையில் '**அநந்தர்**' என்னும் திருநாமமுடைய கூரத்தாழ்வாருக்கும், அவருடைய தேவியான பெருந்தேவி நாயகிக்கும் குமாரராய் யஜுஸ்ஸாகையில் ஆபஸ்தம்ப ஸூத்ரத்தில் ஹாரித கோத்திரத்தில், 'ஸ்ரீவத்ஸாங்கர்' எனும் திருநாமத்துடன் காஞ்சிக்கு அருகில் உள்ள '**கூரம்**' என்னும் அக்ரஹாரத்தில் ராமபிரானுடைய அம்சமாக அவதரித்தவர் என்பர்.

இவர் அருளிச்செய்த பஞ்சரத்நமென்று ப்ரஸித்தி பெற்ற பஞ்சஸ்தவத்திலே முதலாவதான ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்துக்கு அடுத்தஸ்தவம் அதிமாநுஷஸ்தவமாயிருக்கும். மூன்றாவது ஸுந்தரபாஹுஸ்தவம். நான்காவது வரதராஜஸ்தவம், ஐந்தாவது ஸ்ரீஸ்தவம். பஞ்சஸ்தவத்தின் பௌர்வாபர்ய க்ரமம் இதுவேயாகும்.

ஆழ்வான் எம்பெருமானார் திருக்கோலம் பூண்டு சோழராஜ ஸபைக்கு எழுந்தருளி ஸ்ரீமந் நாராயணனே பரத்வமென்று உபன்யஸித்தருளினது மன்றி '**சிவாத்பரதரம் நாஸ்தி**' என்பதற்குப் பரிஹாஸமாக '**த்ரோணமஸ்தி தத: பரம்**' என்று எழுத்திட்டது கண்டு கோபத்தினுடைய மேலெல்லையிலே நின்ற

வீரசைவனான அவ்வரசனுடைய கொடுமையினால் திருக்கண் களையிழந்து பெரியநம்பியைப் பறிகொடுத்து திருவரங்கம் பெரிய கோயிலேற மீண்டெழுந்தருளி அங்கே வஸிக்கப் பார்த்தவளவிலே, அப்போது எம்பெருமானார் சோழனுடைய உபத்திரவங்களைப் பொறுக்கமாட்டாமல் திருநாராயணபுரத்தேற எழுந்தருயிருந்த படியால் அவரைப் பிரிந்து கோயிலிலே வஸிக்கமாட்டாமையாலும், திருமாலிருஞ்சோலை மலையிலே சிலகாலம் வஸித்தருள்வதாக எழுந்தருளும்போது வழியிடையிலே பகவத் குணாதநுபவத்தாலே தம்முடைய நெஞ்சாறல்களை மறக்கக் கருதி ஸ்ரீவைகுண்டஸ்தவ மருளிச் செய்து தலைக் கட்டினவாறே அதிமாநுஷஸ்தவத்தை அயருளிச்செய்தார்.

## அதிமானுஷஸ்தவம்:

கூரத்தாழ்வான் பஞ்சஸ்தவத்தில் அதிமானுஷஸ்தவத்தில் இருபத்தி எட்டாவது ஶ்லோகத்தில் லக்ஷ்மணனைப் பற்றிக் கூறுகிறார்.

'யல்லக்ஷ்மணஸ் த்வநுஜோ ரிபுசக்தி முக்த:
ரத்ரோர் குருர் ஹநுமதஸ்து லகுர் பபூவ|
ஏதேநதே ஸ்வவிதிதோ பவதீந்த்ரசத்ரோ:
மாயாஸ்த்ர பந்தந நிபந்தநஜோ விமோஹ: ||

ஸ்ரீராமனே! சத்ருவான ராவணனுடைய சக்தி என்கிற ஆயுதத்தாலே மோஹித்தவனான உன் தம்பியான லக்ஷ்மணன் சத்ருவுக்கு அசைக்கவும் முடியாதபடி கனத்தவனாகவும் திருவடி (ஆஞ்சநேயனுக்கோ) வென்றால் பூமாலை போல் எடுக்கலாம்படி லேசாகவும் ஆனான் என்பது யாதொன்றுண்டு. இந்த விஷயத்தினால் உனக்கு இந்த்ரஜித்து மாயாஸ்திரத்தால் கட்டி வைத்ததால் உண்டான மயக்கமானது ஸ்பஷ்டமாகிறது. ராவணனு டைய சக்தி என்னும் மாயுத விசேஷத்தாலே புடையுண்டு மூர்ச்சித்த லக்ஷ்மணனை ராவணன் ஸபரிகரனாய்க் கொண்டு

எடுக்கப்புக்கவிடத்தில் எடுக்கமாட்டிற்றிலன்: திருவடி தனியனா யிருக்கச் செய்தேயும் கருமுகை மாலை போலே எடுத்து ஏறிட்டுக் கொண்டு போனான்.

லக்ஷ்மணன் மூர்ச்சித்தான் என்பது உண்மையாகில் சத்ருக்களுக்கு பேர்க்கவு மொண்ணாதபடி கனக்கவும், பக்தனுக்கு எளிதில் எடுக்கும்படியாகவும் வேண்டாவிறே. நெஞ்சில் சாத்திரமுடையார்க்கு அரியவனாகவும் பரிவுடையாருக்கு எளியனாகவும் ஆனான் என்னும் போது மாயாஸ்த்ர பந்தன ப்ரயுக்தமான மோஹமானது மனுஷ்ய பாவனைக்கு அநுகுணமான அபிநயமாத்ரம் என்னுமிடம் ஸுவ்யக்த மாய்த்திறே.

## 42.பிள்ளைலோகாசார்யர்

முமுக்ஷுப்படி என்பது பாமர மக்களும் உணரும்படி எளிய நடையில் அமைந்தது. திருமந்த்ர ப்ரகரணம் சூத்ரம் 105ல் **'ஆய'** என்ற கைங்கர்ய ப்ரார்த்தனைக்கு விளக்கம் அளித்த பிள்ளைலோகாச்சார்யர் ஆதிசேஷனுடைய கைங்கர் யத்தை பொய்கையாழ்வார் பாசுரமான **'சென்றால் குடையாம்'** மூலம் விவரித்துள்ளார். **'ஆய'** என்கிற இத்தால் எல்லா அடிமைகளும் செய்யவேணும் என்று அபேஷிக்கிறது. **'ஆய'** என்ற வேற்றுமை தெரிவிப்பது யாதெனில் **'நாராயணாய'** என்பதில் உள்ள **'ஆய'** எனும் வேற்றுமையானது, சேதனன், ஈஶ்வரனுக்கு எல்லாத் தொண்டுகளையும் புரியவேண்டும் என்பதை தெரிவிக்கிறது.

முமுக்ஷுப்படி 169 ஆம் சூத்திரத்தில் பிள்ளைலோகாசார்யர்

**இளைய பெருமாளைப் போலே இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை:**

இருவருமான சேர்த்தியிலே அடிமை செய்ய வேணு மென்கிற நிர்ப்பந்தந்தான் என்னெனில், இளையபெருமாள் சேர்த்தியிலே அடிமை செய்யப்பாரித்து அப்படியே அடிமை செய்து காட்டினா ராகையாலே, அவரைப்போலே, இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்கை இவ்வாதமாவுக்கு ஸ்வரூப ப்ராப்தம் என்கை. மிதுந சேஷத்வம் ஸ்வரூபமானால் மிதுந கைங்கர்யமன்றோ ஸ்வரூப ப்ராப்தம்.......

**அடிமை தான் ஸித்திப்பதும் ரசிப்பதும் அச்சேர்த்தியிலே**
**(170 - சூத்திரம்)**

இன்னமும், ஸ்வதந்தரனான ஈய்வரன் உபேக்ஷியாமல் கைங்கர்யம் கொண்டருளும்படி பண்ணும் பிராட்டியாகையாலே இவள் முன்னிலையாகத் தம்முடைய சொருபாநுருபமான அடிமையை அபேக்ஷித்துப் பெற்று களித்த இளைய பெருமாளுக்குப் போலே இவன் பிரார்த்திக்கிற அடிமை தான் ஸித்திப்பதும் ரஸிப்பதும் பிராட்டியுமவனுமான சேர்த்தியிலேயாம்.

**ஸ்ரீவசனபூஷணம்**

ஸ்ரீவசனபூஷணம் என்ற நூலின் பெருமையை ஸ்ரீமணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலை 53ஆம் பாட்டு தொடங்கி 59ம் பாட்டு ஈறாக ஏழு பாட்டுகளில் எடுத்துரைத் துள்ளார். **'முடும்பை குடியில் அவதரித்தவரான பிள்ளை லோகாச்சார்யர் அனைவரும் நற்பேற்றினை அடையும் பொருட்டு தம்முடைய மிக்க கருணையாலே அருளிச்செய்த நூல்கள் யாவற்றிலும் ஸ்ரீவசனபூஷணத்திற்கு ஒப்பானதொரு நூல் இல்லை. இந்த வார்த்தை புகழ்ந்து சொல்வதற்காக சொல்லப்பட்டதல்ல. உண்மையைத் தெரிவிப்பதாகும்'** என்று பொய்யில்லாத ஸ்ரீமணவாளமாமுனிகள் குறிப்பிட்டுள்ளார்.

**ஸ்ரீவசன பூஷணத்தில் இளையபெருமாள்**

**இளைய பெருமாளை ஸ்ரீகுஹப்பெருமளை அதிசங்கை பண்ண இருவரையும் அதிசங்கை பண்ணி, ஸ்ரீகுஹப் பெருமாளை பரிகாரம் பெருமாளை நோக்கிற்றிறே என்று** அருளிச்செய்துள்ளார். **'இளைய பெருமாளை ஸ்ரீகுஹப்பெருமாள் அதிசங்கை பண்ண'** என்றது, ஶ்ருங்கிபேரபுரத்திலே எழுந்தருளிய ஸ்ரீகுஹப்பெருமாளை அங்கீகரித்த அன்று பாங்கு அறிந்து, இளையபெருமாள் படுத்துக் கொடுத்த இலைப் படுக்கையிலே பெருமாளும் பிராட்டியும் பள்ளி கொண்டருளா நிற்க, இளமை பருவம் முதல் மிக்க அன்பினை உடையவனாகையாலே **'என் வருகிறதோ'** என்ற அஞ்சி, முதுகில் இட்ட அம்புறா துணியும் கட்டிய விரஹ் சாடும் நாண் ஏறிட்டு நடு கோத்து பிடித்த வில்லும் தாமுமாய் நடையாடும் மதிள் போலே வளைய வருகிற இளையபெருமாளைக் கண்டு, ஸ்ரீகுஹபெருமான், ஒரு தம்பியைக் கொண்டு இராச்சியத்தை வாங்கி கட்டின காப்போடே காட்டிலே தள்ளி விட்டான். இவனும் அவனை போன்று ஒரு தம்பியன்றோ, தனியிடத்தில் என்ன செய்ய நினைத்து இப்படி ஆயத்தமாய் நிற்கிறான் என அறியாது ஐயம் கொள்கிறான் என்கை.

இவருடைய திருத்தம்பியான அழகியமணவாளப்பெருமாள் நாயனார் தம்முடைய ஆசார்யஹ்ருதயம்என்னும் நூலில் இதே வ்ருத்தாந்தத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

**"கீழ்மகன் தலைமகனுக்கு சம சகாவாய்த் தம்பிக்கு முன் பிறந்து வேலும் வில்லும் கொண்டு, பின் பிறந்தாரைச் சோதித்து, தமையனுக்கு இளையோன் ஸத்பாவம் சொல்லும் படி ஏக குலமானமையும்."** (ஆசார்யஹ்ருதயம் -85)

சித்ரகூடத்தில் பெருமாள் பள்ளி கொண்டிருந்த அன்று பரிவாலே, கண்ணுறக்கமற்று கையும் வில்லுமாய் காத்துக் கிடக்கிற இளையபெருமாளையும் சந்தேகித்து குகன் ஆயுத பாணியாய் அவர் மேலே கண்ணாய் நின்றான்.

ராமனுடைய பிரிவாலே மிகுந்த வருத்தத்துடன் சித்ர கூடத்திற்கு வந்த பரதாழ்வானுக்கு இளைய பெருமாள் திருத்தமையனார் பக்கலில் அன்பும் பாரத்தந்த்ரியமாக இருக்கும் இருப்பினையும் குகன் கூறியதாக நாயனார் அருளிச்செய்துள்ளார்.

ஆகமங்களில் திருவனந்தாழ்வானுடைய அவதாரங்களுக் கெல்லாம் சேர பலபல மந்திரங்கள் த்யான ஶ்லோகங்கள் உள்ளன. அகஸ்தியர் தம் ஸம்ஹிதையில் இளையபெருமாளான திருவனந்தாழ்வானை திருமந்திரம், த்வயம், சரம ஶ்லோகம் முதலிய மந்த்ரத்தாலே ஆராதித்ததாகவும் அவைகளில் உத்திரவாக்கியமானது 'ஸ்ரீமதே ராமானுஜாய நம:' என்றும் வளங்கிற்று என்ற விஷயத்தை இராமானுச நூற்றந்தாதி வ்யாக்னத்தில் பிள்ளைலோகாச்சாரிய ஜீயர் கூறியுள்ளார்.

## 43.பலராமன்

### ஆதிசேஷன் பலராமனாக அவதரித்தல:

பூமா தேவியின் துன்பம் அசுரர்களால், (கம்ஸன், அரிஷ்டன், கேசி, தேனுகன், ப்ரலம்பன், நரகன் போன்றவர்களால்) ஏற்படுவது நீங்க வேண்டுமென்று எம்பெருமானை பூமாதேவி சரணடைந்து கேட்டுக் கொண்டதாகவும், அதற்கு பகவான்,

**' உஜ்ஜஹாராத்மந: கேசௌ ஸிதக்ருஷ்ணௌ மஹாமுனே,**
**உவாச சஸுராந் ஏதௌ மத் கேசௌ வஸுதாதலே,**
**அவதீர்ய புரோ பாரக்லேச ஹாநிம் கரிஷ்யத:**

(விஷ். புரா. 5-1-59/60)

தனது வெளுப்பும், கறுப்புமான இரண்டு கேசங்களை வாங்கி, இந்த என் தலை மயிர்கள் பலராமனும், க்ருஷ்ணனுமாக முறையே பூவுலகில் அவதரித்து பூமி தேவியின் சுமை, துன்பம்

நீங்கும் படி செய்யக்கடவன் என்று பிரம்மன் முதலிய தேவர்களிடம் கூறினான் என்பதும் அங்ஙனமே பலராமனும், க்ருஷ்ணனும் அவதரித்தனர் என்பதும் ஆகும்.

அசுரர்களை அழிக்க நோக்கம் உடையவரான, தேவர்களால் பிரார்த்திக்கப்பெற்ற எல்லா யுகத்திலும் பெருமை பெற்ற எம்பிரான், தன்னையே புகலிடமாக, கொண்டவருக்கு விரைவில் தரிசனம் அளித்தான். தேவர்களும் தரிசனம் செய்தனர். எவ்வாறெனில்,

**'ஆதிசேஷனில் பள்ளியில் விளங்குபவனை சரத் காலத்தில் வெண்மேகம் ஏறி விளங்கும் கரிய விசித்ரமேகம் போன்றதாய்'**

த்வாபரயுகத்திலே தேவகியின் ஏழாவது கர்ப்பத்தின் (ஆதிசேஷனானபலராமன்) ஒளி சந்திரனுக்கு ஒப்பானது. அந்த கர்ப்பம் இடையில் வெளிப்பட்டபோது, போனது போக மிச்சமாய் நின்றது மெதுவாக வெளிவந்ததோ என நினைக்க வாயிற்று தேவகியின் எட்டாவது கர்ப்பம்.

**'தேவக்யா ஜடரேகர்ப்பம் சேஷாக்க்யம் தாம மாமகம், தத்ஸந்நிக்ருஷ்ய ரோஹிண்யா உதரேஸந்நிவேசய'**

(ஸ்ரீமத் பாகவதம் 10-2-8)

என்னுடைய தேஜஸ்ஸாக ஆதிசேஷன் என்ற பெயர் பெற்றதால் தேவகியின் கர்ப்பத்தை இழுத்து சென்று, ரோஹிணியின் வயிற்றில் இருக்கும் திருமால் யோக மாயைக்கு உத்திரவு பிறப்பிக்க ரோஹிணியின் புதல்வனான ஆதிசேஷாவதாரமென்று தெரியப்படும். மேலும் மென்மையான மேனியுடையவனான கண்ணன் இம்மலையையே கையில் ஏந்துகிறானென்றான். இவனுக்கு அண்ணனான பலராமன் முழு பூமியும் தரிக்க வல்லவனென்று நினைக்கிறோமென்றார்கள் ஆயர்பாடிகள், (பலராமன்)

ஆதிசேஷனானதால் அவர்கள் நினைப்பு உண்மையாயிற்று. மேலும்,

**'பகவத் கௌரவ பட்டண ப்ரப்ருதய: ப்ராஸ்த ப்ரலம் பாதய: தலாங்கஸ்ய ததாவித விஹ்ருதயஸ் தந்வந்து பத்ராணி ந: |**
**க்ஷீரக் ப்ரபூதைர் குணை: ஆகௌ மாரக மர்ப**
**பதந்தஜகதே க்ருஷ்ண ஸ்யதா; கேளய:||**

கௌரவர்களின் நகரம் முதலியவற்றைக் கவிழ்த்தவனாய் பிரலம்பாசுரன் முதலியவர்களை ஒழித்தவனாய், இன்னும் அத்தகையனவான பலராமனுடைய லீலைகள் நமக்கு நன்மையைச் செய்யவேண்டும். எந்த பலராமனுடைய லீலைகளாலே சருக்கரை கலந்த பால் போல் இளம் பருவம் தொடங்கி பிரியாமல் கலந்தனவான கண்ணனுடைய அந்த லீலைகள் மிக அதிகமான குணங்கள்ால் உலகுக்கு சுவை மிக்க இருந்தனவோ!

எம்பெருமான் கண்ணனுக்கு தமையனாக ஓர் அவதாரம் செய்தான் ஆதிசேஷன். இதுவே பலராம அவதாரமாகும். இவன் தன் தம்பியான கண்ணனை விட்டு சிறு பொழுதும் பிரியாது கூடவே இருந்து அவனுக்கு பெரிய பாதுகாப்பாக இருந்தான். இவனுக்கு கலப்பையே ஆயுதமாகவும், பனைமரமே கொடியாகவும் இருந்தன. இனி பலராமனின் லீலைகளை தனித்தனியாக அனுபவிக்கலாம்.

க்ருஷ்ணனின் சகோதர பாசந்தான் எப்படிப்பட்டது? (பூர்வ ஜன்மத்தில் அவன் லக்ஷ்மணனாக அவதரித்தபோது, ராமனாகப் பிறந்த தனக்கு அவன் செய்த பணிவிடைகளுக்குப் பரமன் இந்தப் பிறவியில் பரிகாரம் தேடிக்கொண்டான் போலும்! க்ருஷ்ணனும், பலராமனும் அவர்களுடைய நண்பர்கள் குழாமும் இவ்விதமே ப்ருந்தாவனத்தில் தினமும் சஞ்சரித்துக் கொண்டும், விளையாடிக்கொண்டும் ஆனந்தமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

**தேனுகாஸுர வதம் :**

ஸ்ரீதாமன் என்பவன் ராம க்ருஷ்ணர்களின் ஒரு அத்யந்த ஸ்நேகிதன். அவன் ஒருநாள், தனது நண்பர்களுடன் ராம, க்ருஷ்ணர்களிடம் கூறினான்: "ராம! க்ருஷ்ணா! இங்கே பக்கத்தில் ஒரு தோப்பு இருக்கிறது. அது பனைமரங்களுக்குப் பிரசித்தம். அந்தப் பனம்பழங்கள் மிகமிக ருசியாகவும், இனிப்பாகவும் இருக்கும் என்று கேள்வி. ஆனால், அங்கு தேனுகாஸுரன் என்ற ஒரு அரக்கன் கழுதை உருவில், தனது கழுதைக் கூட்டங்களுடன் வசித்து வருகிறான். அந்த அரக்கர்கள் யாரையும் காட்டுப்பக்கம் அணுக விடுவதில்லை. பழுத்த பனம்பழங்களின் வாஸனை எங்களது நாவில் நீர் சுரக்கச் செய்கிறது. நீங்கள் மனது வைத்தால் அந்த அபூர்வமான பழங்களைப் பறித்து எங்களுக்குத் தரலாம்". ராமனும், க்ருஷ்ணனும் நண்பர்களின் விருப்பத்திற்கு இணங்கினார்கள். பலசாலியான ராமன் மரங்களைத் தனது கைகளினாலேயே உலுக்கி, பழங்களை உதிரச் செய்தான். நண்பர்கள் பழங்களைப் பொறுக்கி அவற்றை ருசித்து உண்டார்கள். அரவம் கேட்ட தேனுகாஸுரன் ஒரு பூதாகாரமான கழுதை உருவில் பலராமனைத் தாக்க முற்பட்டான். பலராமன் அவன் பின்னங்கால்களைப் பற்றி, அனாயசமாக அவனைச் சுழற்றிச் சுழற்றி, வெகுவேகமாக ஒரு பனைமரத்தின் மீது வீசியெறிந்தான். அடுத்த கணம், அஸுரன் உயிர் துறந்தான். அவன் தூக்கி எறியப்பட்ட வேகத்தில் பனை மரங்கள் ஒன்றின் மேல் ஒன்று சடசடவென்று சரிந்து விழுந்தன. காடு முழுவதும் ஒரே பனம்பழங்களாக வாரி இறைந்திருந்தன. அரக்கனின் தோழர்கள் கழுதை உருவில் கூட்டம் கூட்டமாக எதிர்த்து வந்தார்கள். அவர்கள் யாவரையும் ராமனும், க்ருஷ்ணனும் கொன்று குவித்தார்கள். தேவர்கள் பூமாரி சொரிந்தார்கள். பனந்தோப்பு சிறுவர்கள் வசமாறிற்று.

(மேலும் தேனுகாசுரன் என்கின்ற அசுரன் கண்ணனைக் கொல்லவர, கண்ணன் அவ்வசுரனைத் தான் கொல்லாமல்,

பலராமனான அண்ணனை விட்டு வதம் செய்யச் செய்தார். ஏனெனில்: தேனு என்றால் பசுவைக்குறிக்கும். பசுக்களைக் காப்பவர்களை ஸம்ரக்ஷிக்க வந்தவர் தேனு என்கிற பெயரை உடையவனைத் (அசுரனா இருந்தாலும்) தான் கொல்லாமல் ஆதிசேஷ அவதாரமான பலராமனை விட்டு அழித்தான் என்பதும் குறிக்கத்தக்கது.)

## காளிய நர்த்தனம்

மூத்த பிரானாக (பலராமனாக) அவதரித்து யோகேஸ்வரனாய் கண்ணனாய் இருந்த ஸ்ரீ க்ருஷ்ணனை அனுவர்த்தித்து வந்தவர். இவர் தீர்த்தயாத்திரைகள் பல செய்து பல திவ்ய தேசங்களை உத்தரித்தவர். நான்கு வியஹுங்களில் ஒருவரான ஸங்கர்ஷணருடைய அம்சமாய் பாஞ்சராத்திரங்கள் என்கிற ஸாத்வீக ஆகமத்தை உலகுக்கு எய்தவர். கண்ணனுக்கு அண்ணனாக அவதரித்த போதும். கண்ணனுக்குக் காப்பாகவே எப்போதும் உடன் இருந்தான் அன்றோ! ஒரே ஒரு நாள் பலராமன் கண்ணனுடன் கூட எழுந்தருளாத போது கண்ணபிரான் காளிங்கன் எனும் நச்சு நாகத்தின் வாயில் விழுந்திட, உலகமே அதிர்ச்சி அடைந்தது என்கின்றன புராணங்கள்.

ஒரு நாள் க்ருஷ்ணன் தனது தோழர்களுடனும், பசுமந்தைகளுடனும் ப்ருந்தாவனம் சென்று யமுனையாற்றங் கரையில் ஒரு மடுவுக்குச் சென்றான். **'அன்று பலராமன் உடன் வரவில்லை'**. அவர்கள் சென்ற மடுவில் காளியன் என்ற கொடிய விஷநாகம் வசித்து வந்தான். அவன் கக்கிய விஷத்தினால் யமுனையாற்றின் நீரே அந்த ப்ரதேசம் முழுவதும் விஷமாக மாறிற்று. நீர்ஜந்துக்கள் எதுவும் உயிருடன் வாழமுடியவில்லை. விஷக்காற்றின் நச்சுத் தன்மையினால் விண்ணில் பறந்த பறவையினங்கள் மடிந்துவீழ்ந்தன. ஆற்றங்கரையிலுள்ள மரங்கள்கூட கருகி விட்டன. அவ்விடம் வந்த பிராணிகள் யாவும் நச்சுக்காற்றை முகர்ந்து உயிரிழந்தன. கண்ணனுடன் வந்த

இடையர்களும், பசுக்களும் வெப்பம் தாங்காது காளியன் மடுவிற்கு வந்து தாகம் தணிய நீர் அருந்தினர். நச்சு நீரை உண்ட அவர்கள் மாண்டு வீழ்ந்தனர். உடனே கண்ணன் தனது அருட்பார்வையினால் அவர்கள் யாவரையும் உயிர்ப்பித்தான். உயிர் மீண்ட அவர்கள் ஆச்சரியமடைந்தனர்.

**ப்ரலம்பாசுர வதம்**

ஒரு சமயம் தோற்றுவிட்ட கண்ணன் தனது தோள்களின் மீது ஸ்ரீதாமன் என்ற நண்பனைத் தூக்கி நடந்தானாம். அவ்வாறே ராமனை ப்ரலம்பன் என்ற சிறுவனை தனது தோள்களில் தூக்கிக் கொண்டான். ஆனால், உண்மையில் ப்ரலம்பன் ஒரு அஸுரன். நயவஞ்சமாக இடைச் சிறுவன் போல் நடித்து கண்ணன் கோஷ்டியில் சேர்ந்து விட்டான். இதனையறிந்த பலராம, க்ருஷ்ணர்கள் ஒன்றும் அறியாதது போல பாசாங்கு செய்தார்கள். பலராமனைத் தூக்கிச் சென்ற ப்ரலம்பாஸுரன் விளையாட்டு மைதான எல்லையைத் தாண்டி வெகுதூரம் சென்று விட்டான். தனிமையில் பலராமனைக் கொன்று விடலாம் என்று அவன் எண்ணம். ஆனால் அஸுரனால் பலராமனின் பளுவைத் தாங்க முடியவில்லை. பூதாகாரமான தனது அரக்க வடிவை எடுத்து, பலராமனைத் தாக்க முற்பட்டான். ஆனால் பலராமன் தனது முஷ்டி பலத்தால் அரக்கனின் தலையில் அடிக்க, அவன் தலை நொறுங்கி, ரத்தம் கக்கி, தரையில் விழுந்து உயிர் நீத்தான். அரக்கன் மாண்டதைக் கண்ட கோபர்கள் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் ஒருங்கே அனுபவித்தார்கள்.

**சங்கசூடன் வதம்**

ராமனும் க்ருஷ்ணனும் ஓர் இரவு கோபிகைகளுடன் வனத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரும் மிக இனிமையாக கானம் செய்ய, கோபியர்கள் இன்னிசையில் மெய்மறந்து ஆடைகள் நழுவியதையும், புஷ்பங்கள் சிதறுண்டு

இறைந்ததையும் கூட கவனிக்க வில்லை. அப்பொழுது சங்கசூடன் என்ற குபேரனின் பணியாள் கோபியர்களைக் கடத்திக்கொண்டு வெகுதூரம் சென்று விட்டான். கோபியர்களின் கூக்குரலைக் கேட்ட, ராம க்ருஷ்ணர்கள் அவனைத் துரத்திச் சென்று கோபியர்களை மீட்டனர். பலராமன் கோபியர்களைக் காத்து நிற்க, க்ருஷ்ணன் ஓட்டம் பிடித்த சங்குசூடனைத் துரத்திப் பிடித்து, அவனைக் கொன்று, அவன் சிரஸ்ஸில் இருந்த ரத்னத்தை அறுத்தெடுத்து வந்து பலராமனுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தான்.

**ஸ்யமந்தகமணி :**

ஒரு சமயம் ஸத்ராஜித் என்ற அரசன் சூரியனிடம் மிகுந்த பக்தி கொண்டு இருந்தமையினாலே, சூரியன் பிரத்யக்ஷமாகி சியமந்தகம் என்ற மணியை அளித்தான். அது இருக்கும் இடம் எப்போதும் சுபீக்ஷமாக இருக்கும். பின் அவனிடமிருந்து அவன் சகோதரனான பிரசேனன் என்பவனுக்கும பின் விதிவசத்தால் அவனும் கொல்லப்பட்டு பின் ஜாம்பவான் தன் குகையில் குழந்தையின் தொட்டிலுக்குமுன்கட்டி தொங்கவிட்டார்.

சதன்வா, ஒருநாள் ஸத்ராஜித் தனது அரண்மனையில் தூங்கிக் கொண்டிருந்தபோது அவனைக் கொன்று அந்த அபூர்வ ஸ்யமந்தக மணியைத் திருடிச்சென்று விட்டான்.

இந்தச் சம்பவம் நடந்த போது க்ருஷ்ணன் த்வாரகையில் இல்லை. அந்த சமயம் அவன் வாராணாபுரத்திற்குச் சென்றிருந்தான். ஸத்ராஜித்தின் கொலைக்கு, தான் சதன்வாவைப் பழிக்கு பழி வாங்குகிறேன் என்று க்ருஷ்ணன் பாமாவிடம் சொல்லி, அவளைச் சமாதானப்படுத்தி, த்வாரகைக்கு அழைத்து வந்தான். பிறகு, க்ருஷ்ணன் பலராமனுடன் ஆலோசனை நடத்தினான். ஸத்ராஜித் இறந்து போனதால் அந்த மணி, தங்கள் இருவருக்கும் மட்டுமே உரிமை என்றும், அதைச் சதன்வா எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது என்றும் க்ருஷ்ணன் பலராமனிடம் எடுத்துச்சொல்லி,

சதன்வாவைக் கொன்று விட இருவரும் திட்டமிட்டார்கள். இதையறிந்த சதன்வா, க்ருதவர்மா, அக்ரூரர் இருவர்களிடமும் சென்று தனக்கு உதவி புரியுமாறு அழைத்தான். அவர்கள் இருவரும் இப்போழுது க்ருஷ்ணன்-பலராமர்களுடன் தாங்கள் விரோதம் வைத்துக் கொள்ள முடியாது என்று கூறி, கை விரித்து விட்டார்கள். அப்பொழுது சதன்வா, தன்னிடமுள்ள ஸ்யமந்தகமணியை பத்திரமாக அக்ரூரரிடம் கொடுத்து, எவருக்கும் தெரியாமல் ரஹஸ்யமாக அவரிடமே அதை வைத்துக்கொள்ளும்படி கூறி, அவரிடம் வாக்குறுதி வாங்கிக் கொண்டு, தான் உயிர் தப்ப ஒரு குதிரையின் மேல் ஏறிச்சென்று விட்டான்.

குதிரையின் மீது ஏறி ஓடிச் சென்ற சதன்வாவைத் துரத்திக் கொண்டு க்ருஷ்ணனும் பலராமனும் தங்கள் ரதத்தில் ஏறிச் சென்றனர். சதன்வாவை ஏற்றிச் சென்ற குதிரை நூறு காத தூரம் வேகமாக ஓடிய பிறகு, களைத்துச் சோர்ந்து இறந்து விழுந்து விட்டது. க்ருஷ்ணன் பலராமனிடம் அவரை அங்கேயே ரதத்தில், தங்கள் குதிரைகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் படியாகவும், தான் தனியாகவே கால்நடையாக சதன்வாவைத் துரத்திச் சென்று அவனைக் கொன்று, மணியை மீட்டுக் கொண்டு வருவதாகவும் சொல்லிப் புறப்பட்டுச் சென்றான்.

சதன்வாவைத் துரத்திச் சென்ற க்ருஷ்ணன், அவன் ஒரு க்ரோச தூரத்தில் ஓடிக்கொண்டிருந்த போது தனது சக்ராயுதத்தால் அவன் தலையை அறுத்து அவனைக் கொன்றான். எங்குத் தேடியும் ஸ்யமந்தகமணி கிடைக்கவில்லை.பிறகு க்ருஷ்ணனுக்கு அக்ரூரரின் மேல் ஸந்தேஹம் ஏற்பட்டது. 'அக்ரூரரின் மஹிமை, அவர் நல்ல பெற்றோர்களுக்குப் பிறந்ததனால் மட்டும் இருக்க முடியாது. அத்தகைய புண்ய ஆத்மாக்கள் எவ்வளவோ பேர் இருக்க, அவருக்கு மாத்திரம் ஒரு அஸாதாரணமான ப்ரபாவம் இருந்து விடமுடியாது. இந்த ப்ரபாவம் யாவும் ஸ்யமந்தகமணி அவரிடம் இருப்பதால்தான் ஏற்பட்டிருக்க முடியும்' என்று க்ருஷ்ணன் ஊகம் செய்து, அது சரியாகத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டான்.

எல்லார் முன்னிலையிலும் க்ருஷ்ணன் அக்ருரரைப் பார்த்துக் கூறினான்: **'அக்ருரரே! சதன்வா உம்மிடம் ஸ்யமந்தக மணியைக் கொடுத்துச் சென்றது எனக்கு எப்படியோ தெரிந்து விட்டது. உம்மிடமுள்ள அந்த ரத்னத்தைச் சபையோர்களுக்குக் காண்பிக்க உங்களை வேண்டுகிறேன்'** என்றான். இதை சதன்வா என்னிடம் கொடுத்துச் சென்றது உண்மைதான் என்று கூறி, தன் மடியில் வெகு ஜாக்கிரதையாக வைத்து வந்த ஒரு தங்கச் சிமிழை எடுத்துக் கீழே வைத்து, அதைத் திறந்து காட்டினார். அதிலிருந்து ரத்னம் பளீரென மின்னி, நாற்புறமும் ஒளியைச் சிந்தியது. ஆதன் ஒளியைக் கண்டு எல்லோரும் வியப்பில் ஆழ்ந்தனர். ரத்னத்தைப் பார்த்ததும், பலராமனுக்கே சபலம் ஏற்பட்டு விட்டது. க்ருஷ்ணன் ஏற்கனவே சொன்னபடி அதைத் தங்களிடமே வைத்துக்கொண்டால் என்ன என்று நினைத்தான். ஸத்யபாமாவோ அது தன் தந்தையின் சொத்தல்லவா, அது தனக்கே சேர வேண்டுமென்று எண்ணினாள். இருவர்களின் மனச் சஞ்சலத்தைப் புரிந்து கொண்ட க்ருஷ்ணன் ஸபையில் கூறினான்: **'அக்ருரரே! என் மீது ஏற்பட்ட வீண் பழியைத் துடைத்துக் கொள்வதற்காகவே நான் உம்மை இந்த மணியைக் காட்டச் சொன்னேன். ஒரு விதத்தில் நானும் என் அண்ணாவுமே இதை எங்களிடம் வைத்துக் கொண்டு விடலாம். இருந்தாலும், சொந்தம் என்று பார்க்கையில் ஸத்ராஜித்தின் சொத்தான இது, அவர் பெண்ணான ஸத்யபாமாவிற்கே உரிமை உண்டு'**. ஆனால் நாங்கள் ஒருவரும் இதை எங்களுடன் வைத்துக்கொள்வதற்கில்லை. ஏனெனில், இதை வைத்துக் கொள்பவன் பரம சுத்தனாக, ப்ரம்மச்சரிய வ்ரதத்தை அனுஷ்டிப்பவனாக இருக்க வேண்டும். எனக்கோ பதினாறாயிரம் மனைவிகள். ஆகையால், நான் தகுதியற்றவன். ஸத்யபாமாவோ எனது ஆசை மனைவி. ஆதனால் அவளும் தகுதியற்றவள். ஒருக்கால் எனது அண்ணா பலராமன் இதை வைத்துக்கொள்ளலாம். ஆனால் அதற்காக அவர் தனக்குப் பிரியமான மதுபானத்தை அல்லவா கைவிட வேண்டி வரும்? இவற்றையெல்லாம் யோசித்துப்

பார்க்கையில் அக்ரூரர் ஒருவரே இந்த மணியை வைத்துக்கொள்ளத் தகுதியானவர் என்று எண்ணுகிறேன். **'உலகத்தின் க்ஷேமத்திற்காகவாது அவர் தொடர்ந்து இந்த மணியை வைத்துப் பாதுகாத்து வரவேண்டும்'** என்று ஒருவித புன்னகையோடு கூறினான். ஸபையில் எல்லோரும் க்ருஷ்ணனின் கருத்தை ஏற்றனர். அக்ரூரரும் க்ருஷ்ணனின் ஆஜ்ஞையை ஏற்பதாகச் சொல்லி, ஸ்யமந்தக மணியைத் தனது கழுத்தில் அணிந்து, பகிரங்கமாகவே அதுமுதல் பயமின்றி உலவி வந்தார்.

கம்ஸன், க்ருஷ்ணன் உயிர் உள்ளளவும் தன் உயிருக்கு ஆபத்து என்பதால் அக்ரூரரை விட்டு தான் நடத்தும் தனுர் யாகத்திற்கு அழைப்பு விடுத்து ராமகிருஷ்ணர்களை அழைத்துவர அனுப்பிவைத்தான்.

**அக்ரூரர் ஆற்றில் கண்ட அற்புதக் காட்சி (மதுரை மாநகர் பட்டண ப்ரவேசம்):**

அக்ரூரர் பலராம, க்ருஷ்ணர்களை கம்ஸனின் உத்திரவின் பேரில் அழைத்துக்கொண்டு பட்டிணப்ரவேசம் செய்தார். அவர்கள் எல்லோரும் யமுனைக் கரைக்கு வந்து சேர்ந்தபோது நடுப்பகல் ஆயிற்று. கண்ணனும் பலராமனும் கை கால்கள் கழுவி, நீர் அருந்திவிட்டு தேரில் அமர்ந்தார்கள். அக்ரூரர் மாத்யான்னிக வழிபாடு செய்ய யமுனைக்குள் சென்று நீரில் மூழ்கினார். அப்பொழுது நீருக்குள் அதே க்ருஷ்ணனையும், பலராமனையும் கண்டார். தேரில் அமர்ந்திருந்த இருவரும் எப்படி நீருக்குள் வந்தார்கள் என்று அவருக்கு ஆச்சரியம். நீருக்கு வெளியே தலைதூக்கிப் பார்த்தபோது அதே **'க்ருஷ்ணனும், பலராமனும்'** தேரில் அதே விதமே காட்சியளித்தனர். ஆச்சரியம் தாளாமல் அக்ரூரர் மறுபடியும் நீரில் மூழ்கியபோது அதனுள் **'ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்க'**, ஸர்வாபரணபூஷிதராய் ஸநகாதி மஹரிஷிகள் துதிபாட, க்ருஷ்ணனே மஹாவிஷ்ணுவாய் வீற்றிருக்க, திவ்யதர்சனம் கண்டு புளகாங்கிதமடைந்தார்.

பலவாறாக அக்ரூரர் பகவானை ஸ்தோத்திரம் செய்தார். 'எல்லா வற்றிற்கும் ஆதிகாரணமான நாராயணனே, உனக்கு நமஸ் காரம். இந்த உலகங்களுக்கெல்லாம் படைப்புத் தேவனான ப்ரம்மா உன் நாபி கமலத்திலிருந்து தோன்றினவன். ராமன், க்ருஷ்ணன் இப்படி பல்வேறு அவதாரங்கள் எடுத்த பரம்பொருள் நீ ஒருவனே. வாஸுதேவனே, ஹ்ருஷீகேசா! உனக்கு நமஸ்காரம். உன்னையே நாடி வந்த என்னை நீ ரக்ஷித்தருள வேண்டும்'. அக்ரூரர் தனது மத்தியான்ன கர்மாக்களை முடித்துக் கொண்டு கரையேறி ரதத்திற்கு வந்தார். கண்ணன் புன்னகைத்து, 'என்ன அக்ரூரரே! ஏதோ அற்புதத்தைக் கண்டவர்போல் தோன்றுகிறதே, என்ன விசேஷம்?' என்று வினவினான். ஆதற்கு அவர், 'ப்ரபஞ்சம் முழுவதிலும் என்ன அற்புதங்கள் உண்டோ, அவை யாவும் உன்னுள் அடக்கம். உன்னைத் தவிர இவ்வுலகில் பார்க்க வேண்டிய அற்புதம் எதுவுமில்லை' என்று அடக்கத்துடன் பதில் கூறினார்.

## கம்ஸவதம்:

கம்ஸனை சந்திக்க அரண்மனையை நோக்கி கிருஷ்ணன் பலராமனுடன் செல்லும் சமயம் குவலயாபீடம் என்கிற மதம் பொருந்திய யானை உலக்கையை ஏந்தி நின்றது. யானையை சாமர்த்தியமாக அதன் கால்கள் நடுவே புகுந்து விளையாடி அதன் தந்தத்தை பலராமனும் கிருஷ்ணனும் ஆளுக்கொன்றாக கையில் ஏந்தி ராஜநடை போட்டு வந்தனர். எதிர்த்து வந்த சாணுரனோடு க்ருஷ்ணனும் முஷ்டிகனோடு பலராமனும் மல்யுத்தம் செய்து அவர்களையும் கொன்றனர். மல்லர்கள் உயிரிழக்கவே கம்ஸன் ஒடுங்கிவிட்டான். அசரீரி கூறியவாறு எமன் அருகில் வந்து விட்டான் என்று பயந்தான். க்ருஷ்ணன், கம்ஸன் தலையை தரையில் மோத பயங்கரமாக அலறியபடியே உயிரை விட்டான். தேவர்கள் மலர்மாரி பொழிந்து பகவானைத் துதித்தனர். வசுதேவர், தேவகி, உக்கிரசேனர் அனைவரும் சிறையினின்று மீட்கப்பட்டு மகிழ்ந்தனர்.

## கோகுலத்தில் பலராமன்

கோகுலத்தை விட்டு வெகு நாட்கள் ஆகிவிட்டதால் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பலராமனை அனுப்பி அங்குள்ளோருடைய க்ஷேம சமாச்சாரங்களை விசாரித்து வருமாறு சொன்னார். பலராமனும் ஆய்ப்பாடி வந்து கோபியரையும் கோபாலரையும் சந்தித்து அவர்களுடைய சுகதுக்கங்களை அன்புடன் விசாரித்தான். பலராமனைக் கண்டதும் கோபியர்கள் பலவாறாக புகார் கிளப்பத் தொடங்கினார். 'கிருஷ்ணன் எங்களையெல்லாம் மறந்து விட்டானா? எங்களைப்பற்றி நினைக்கின்றானா? எங்களுடன் ஆடிய ஆட்டங்கள் அனைத்தும் மறக்கக்கூடிய அளவுக்கு மதுராபுரியில் ஐக்கியமாகிவிட்டானா?' என்றெல்லாம் கோபியர் வேதனையுடன் பேசினர். பலராமனோ அவர்களின் மனநிலையை நன்குணர்ந்து அவர்கள் திருப்திப்படும் நிலையில் பேசினார். கோகுலத்தில் சிறிது காலம் தங்கி அவர்களின் வேதனை நீங்கும் வகையில் அவர்களுடன் பழகியும் வனங்களில் சுற்றித்திரிந்தும் இருந்து வந்தான். அச்சமயம் பலராமனுக்கு வருணன் அன்புப் பரிசு கொடுக்க விரும்பினான். வாருணி தேவியை அழைத்து **'ஹே மதிராதேவி, மகானுபாவனான அனந்தனுக்கு நீ மிகவும் ப்ரியமானவளாகையால் அவருடைய திருப்திக்கு அவர் இருக்குமிடம் போகவேண்டும்'** என்றான்.

வாருணி தேவியும் பிருந்தாவனம் வந்து பலராமன் கோபாலர்களுடன் ஆனந்தமாக விளையாடிக்கொண்டிருந்த இடத்துக்கு அருகாமையில் கடம்ப மரம் ஒன்றில் பொந்தில் சானித்யம் கொண்டாள். அவள் வாசனை மிகவும் மனோகரமாக அந்த வனத்திலே வீசத்தொடங்கியது. அதில் விருப்பம் கொண்ட பலராமன் வாசனையைத் தொடர்ந்து கடம்ப மரத்தை அடைந்தான். மரத்தின் பொந்திலிருந்து மதுதாரையாய் ஒழுகிக் கொண்டிருந்தது. பலராமன் அதைத் தாமும் பருகி மற்றவர்களையும் பருகுமாறு சொன்னார். அந்த நேரத்தில் பலராமன் நீராட விரும்பினான். சற்று தொலைவில் ஓடிக்கொண்டிருக்கும் யமுனையை நோக்கி, **'ஹே யமுனை, நான் நீராட வேண்டும். இப்படி அருகில்**

வா' என்று அழைத்தான். மதுபான மயக்கத்தில் உளறுகிறான் என்று பேசாதிருந்தாள் யமுனை. கோபம் வந்தது பலராமனுக்கு. கலப்பையைக் கையில் எடுத்தான். 'துஷ்டை, நான் அழைத்தும் வராமலிருக்க துணிவு வந்துவிட்டதா?' இப்போது உனக்குச் சக்தியிருந்தால் விலகிச் செல் பார்க்கலாம்' என்று கோபித்தபடி கலப்பையால் அதை இழுத்தான். யமுனையின் போக்கு திசைமாறி வனத்தின் அருகில் வந்தது. பெண் வடிவு கொண்டு யமுனையும் அவன் முன் தோன்றி நமஸ்கரித்து மன்னிக்க வேண்டினாள். 'என் வார்த்தைக்கு கட்டுப்படவில்லையேயானால் உன்னை ஆயிரம் துண்டாக்கி விடுவேன்' என்று அவளை எச்சரித்து போகவிட்டான் பலராமன். யமுனையும் அவர்கள் இருந்த வனத்தின் நடுவே பாய்ந்து செல்லலாயிற்று. பலராமனும் கோபியர்களும் யமுனையில் நீராடிக் களித்தனர். அனந்தருடைய சிரஸிலே தரிக்கத்தக்க அழகிய தாமரைப் பூவும் காதுகளில் தரிக்கத்தக்க திவ்ய குண்டலங்களும் வருணனால் கொடுக்கப்பட்டன. நீல நிறப்பட்டாடைகளை எடுத்துவந்து மஹாலக்ஷ்மி அவருக்கு அளித்துச்சென்றாள். பலராமனும் விருப்பத்துடன் அவற்றை ஏற்றுக்கொண்டார். இவ்விதமாக இரண்டு மாதங்கள் ஆயர்பாடியில் ஆனந்தமாக கழித்துவிட்டு துவாரகைக்குத் திரும்பினார்.

## இராம கிருஷ்ண திருமணம்:

க்ருஷ்ணனும் பலராமனும் துவாரகை திரும்பியதும் ரேவதராஜன் அவர்களைத் தேடி வந்தான். தன் குமாரத்தி ரேவதியை பலராமனுக்கு விதிப்படி திருமணம் செய்து கொடுத்தான். துவாரகையிலிருந்த கிருஷ்ணனுக்கும் விதர்ப்பன நாட்டிலிருந்த ருக்குமிணிக்கும் அன்பு ஏற்பட்டதால் சுயம்வரத்தின் போது கண்ணனால் கடத்தப்பட்டு பின் துவாரகையில் திருமணம் முடித்தனர்.

## சூதாட்டத்தில் எழுந்த சச்சரவு :

ஒரு சமயம் ருக்குமி, பலராமனுடன் சொக்கட்டான் ஆட்டம்

ஆட இருமுறை தோற்று அதனால் பரிகாசத்துக்கு உள்ளானார். மூன்றாம் முறைஆடி எப்படியும் ஜெயிப்பதாக ருக்மியிடம் சொல்லி ஆடத் தொடங்கினார். ருக்குமியும் வாய் திறவாமல் ஆடலானான். இந்த ஆட்டத்தில் பலராமன் ஜெயித்து விட்டார். 'நீ ஜெயித்து விட்டதாக சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும். நீ பந்தயத்தொகை சொன்னதை நான் ஏற்றுக்கொள்ள வில்லையே. அப்படியிருக்க நீ ஜெயித்துவிட்டதாக சொன்னால் நானும் ஜெயித்துவிட்டதாக்ச் சொல்கிறேன்' என்றான் ருக்குமி. அப்போது அசரீரீ ஒன்று கூறியது. 'பலராமன் தர்ம மார்க்கப்படி ஜெயித்தவராக ஆகிறார். ருக்குமி பொய் சொல்கிறான். வாய் திறந்து எதுவும் சொல்லாவிட்டாலும் ஆடத் தொடங்கி விட்டால் பந்தயத்தை ஏற்றுக்கொண்டதாக ஆகும்'. அசரீரீ வார்த்தைகளைக் கேட்ட பலராமன் கண்கள் சிவக்க கோபத்தினால் கையில் வைத்திருந்த பாசிகளால் ருக்குமியை அடித்தார். அந்த இடத்திலேயே விழுந்து உயிரை விட்டான்.

## பலராமனுடைய கோபம்

அஸ்தினாபுரத்தில் துரியோதனனுடைய பெண்ணுக்குச் சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவளிடம் பிரேமை கொண்டிருந்த கிருஷ்ண புத்திரன் சாம்பன் சுயம்வரத்திற்குச் சென்று அவளைப் பலத்காரமாகக் கவர்ந்துகொண்டு துவாரகை நோக்கி ரதத்தில் சென்று விட்டான். அவனை தொடர்ந்த பீஷ்மர், துரோணர் முதலியவர்களுடன் ஒருவராகவே போரிட்டு முடிவில் களைத்து கட்டி இழுத்துச் சென்று காவலில் வைக்கப்பட்டான். செய்தி கேட்ட யாதவர்கள் அஸ்தினாபுரம் புறப்பட்டுச்சென்று துரியோதனனை தக்கபடி தண்டித்து சாம்பனை மீட்டுவர வேண்டு மென்று துடித்தனர். பலராமன் அவர்களுடைய கோபவேசத்திற்குத் தடைபோட்டார். 'யாதவர்களே, என் பேச்சை கௌரவர்கள் ஒரு போதும் தட்டமாட்டார்கள். நான் போய் அவர்களுக்குத் தகுந்த புத்திமதிகள் சொல்லி சாம்பனை அழைத்து வருகிறேன்' என்றார். அஸ்தினாபுரம் அடைந்து அவர் வருகையை

அறிந்த துரியோதனன், பீஷ்மர், துரோணர் முதலானோர் நந்தவனத்திற்கு வந்து அர்க்கியம் கொடுத்துக் கௌரவித்துப் பலவாறாக உபசரித்தனர். பலராமனும் 'உங்களால் நான் திருப்தியாக உபசரிக்கப்பட்டேன். உக்ரசேன மஹாராஜன் உங்களுக்கு ஒரு சேதி அனுப்பியுள்ளான். சாம்பனை உடனடியாக விடுவிக்க வேண்டும்' என்றார். துரியோதனன், பீஷ்மர், கர்ணன் முகம் சிவந்தனர். 'சாம்பன் செய்தது மன்னிக்கக் கூடிய காரியமல்ல. ஆகவே அவனைத் தண்டித்தோம். யாதவர்கள் எங்களுக்கு அடிபணிந்து வணக்கம் செய்யவேண்டும். உமக்கு அர்க்கியம் கொடுத்து உபசரித்தது அன்பினால் கௌரவிக்க வேண்டுமென்று செய்யப்பட்டதே தவிர மரியாதையால் அல்ல என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்று கோபத்துடன் சொல்லிவிட்டு திரும்பிவிட்டனர்.

பலராமன் கோபாவேசப்பட்டவராய் உலக்கையால் ஓங்கி அடித்தார். நான்கு திக்கும் அதிர அந்த இடத்தில் பூமி இரண்டாக பிளந்தது. 'ஆணவத்தோடு பேசிய கௌரவர்களை கூண்டோடு அழித்து சாம்பனை மீட்டுத் துவாரகைக்குச் செல்வேன்' என்று கலப்பையின் நுனியை பட்டணத்து மதிலில் உள்ள அலங்கத்தில் மாட்டி இழுத்தார். அந்த வேகத்தில் அஸ்தினாபுரி பட்டணமே சாய்ந்து ஆடியது.

நகரம் முழுவதும் ஆடுவதும் எந்த நேரத்திலும் கங்கையில் கவிழ்ந்து விடுவதையும் கண்ட கௌரவர்கள் பயந்து தங்கள் தவற்றை உணர்ந்து பலராமனிடம் ஓடி வந்து கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டு சாம்பனையும் அவன் பத்தினியுடன் திரும்ப அவர் வசம் ஒப்படைத்தனர். கோபம் நீங்கப் பெற்றவராய் கலப்பையை அலங்கத்திலிருந்து எடுத்தார். பலராமன் தன்னுடைய கலப்பையின் நுனியை பட்டணத்து மதிலுள்ள அலங்கத்தில் மாட்டி இழுத்த தால் அஸ்தினாபுரநகரம் சிறிது சாய்ந்தே இருந்து வருகிறது.

## நகரையே பெயர்த்த கலப்பை

நரகாசுரனுக்கு மிகவும் நெருங்கிய வானரத்தலைவன் ஒருவன் இருந்தான். துவிவிதன் எனும் பெயருடைய அவன் மைந்தன்

என்பவனுடைய சகோதரன் ஆவான். நரகாசுரனைக் கிருஷ்ணன் கொன்றதைக் கண்டு அவன்பெரும் கோபம் கொண்டான். அந்த கிருஷ்ணனைக் கொன்று விடுவது என்று வைராக்கியத்தோடு கோவர்த்தன மலையை அடைந்து அங்கு தவம் செய்து கொண்டிருந்த மகரிஷிகளை அடித்தும் உதைத்தும் இம்சை செய்து வந்தான். ரைவத மலையில் பலராமன் கோபியருடன் ஆனந்தமாக இருந்து வந்தார். அங்கு வந்து அவர் மீது பாய்ந்து அவர் வஸ்திரத்தை கிழித்து எறிந்து கோபியர்களை விரட்டினான். கோபம் கொண்ட பலராமன் வானரனை கைமுஷ்டியால் ஓங்கி அடித்தார். அந்த க்ஷணமே அவன் மூக்கிலும் வாயிலும் இரத்தப் பெருக்கெடுத்தோட பூமியில் விழுந்து இறந்தான்.

## பலராமனுடைய தீர்த்த யாத்திரை:

கிருஷ்ணனும் பலராமனும் துவாரகையிலிருந்து வருகையில் பாண்டவர்களுக்கும் துரியோதனாதியருக்கும் விரோதம் முற்றி யுத்தத்துக்குத் தயாராய் இருப்பதாகச் செய்தி எட்டியது. இதைக் கேட்ட பலராமன் குழம்பினார். இருவருமே வேண்டப்பட்டவர்கள். யுத்தத்தில் இருவருமே அவர் உதவியை எதிர்பார்ப்பார்கள். யாருக்கு உதவுவது என்ற சங்கடத்திலிருந்து மீள அவர் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டுவிட்டார். தீர்த்த யாத்திரையில் பலராமனைக் கண்டதும் எல்லா முனிவர்களும் அவரை வரவேற்று உபசரித்தனர். சூதர் மட்டும் தான் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கவில்லை. அதைக் கண்ட பலராமருக்குக் கோபம் வந்தது. பதினெட்டு புராணங்களை உபதேசிக்கிறதால் தாம் மற்றவர்களை விட உயர்ந்தவர் என்ற எண்ணத்தாலேயே இவ்வாறு அமர்ந்திருக்கிறார் என்பதை உணர்ந்தார். தம் கையிலே வைத்திருந்த தர்ப்பையை மந்திரித்து அஸ்திரமாக ப்ரயோகம் செய்து விட்டார். அது அவருடைய சிரசைத் துண்டித்து எறிந்தது. அதைப்பார்த்த முனிவர்கள் மனம் கலங்கி ப்ரார்த்தித்தனர். 'ஹே பிரபோ, தாங்கள் இவ்விதம் கோபம் கொள்ளலாகாது. எங்களைக் கிருதார்த்தர்களாக்க

பதினெட்டு புராணங்களையும் உபதேசிக்க, சூதரைக் கௌரவித்து வந்தோம். அவர் பிழை பொறுத்து உயிர் பெற அனுக்ரஹிக்க வேண்டும்' என்று கூறினார்கள். பலராமனும் அவர்கள் பால் பரிவு கொண்டு சூதரை உயர்வு பெற செய்தார். தூக்கத்திலிருந்து எழுபவர் போல் எழுந்த சூதர், பலராமனை வலம் வந்து நமஸ்கரித்து தன் அறியாமையை மன்னிக்க வேண்டினார்.

அந்த முனிவர்களுக்கு பல்லவன் என்னும் அசுரன் பல கொடுமைகளைச் செய்து வந்தான். பலராமன் அவனை ஸம்கரித்து, முனிஸ்ரீசிரேஷ்டர்களுக்கு ஏற்பட்டுவரும் கஷ்டத்தைப் போக்கினார். பின் அங்கிருந்து புறப்பட்டு நாடெங்கிலும் சுற்றிக் கொண்டு குருக்ஷேத்திரத்தை வந்தடைந்தார்.

அப்போது பாண்டவர்களுக்கும், துரியோதனாதிகளுக்கும் இடையே நடந்து வந்த யுத்தம் முடியும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. துரியோதனன் ஒருவனே மிஞ்சியிருந்தான். அவனும், பீமனும் கதையைக் கொண்டு பயங்கரமாக சண்டை யிட்டுக்கொண்டிருந்தனர். தர்மர், அர்ச்சுனர் ஆகியோர் பலராமனை வரவேற்று அவர் திருவடிகளை பூஜித்து கௌரவித்தார்கள். பீமனும், துரியோதனனும் ஒருவருக்கொருவர் சளைக்காது போரிடுவதைக் கண்ட பலராமன், அவர்கள் இருவருரையும் சண்டையை நிறுத்தி சமாதானமாகப் போகுமாறு கூறினார். அவர் வார்த்தையை அவர்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. பீமன் துரியோதனனைத் தள்ளி அவன் துடையில் கதையால் அடித்தான். துடையில் இரத்தப்பெருக்கு ஓடியது. அவனும் உயிரைவிட்டான். பீமன் செய்கையை பலராமன் அங்கீகரிக்க வில்லை. 'அடே பீமா, என்ன காரியம் செய்தாய், தர்மத்துக்கு விரோதமாக இடுப்பின் கீழ் துடையில் அடித்து விட்டாயே? இதை என்னால் அனுமதிக்க முடியாது. உன் சாமர்த்தி யத்தை என்னிடம் காட்டு பார்க்கலாம்!' என்று கண்கள் சிவக்க கதையை கையில் எடுத்தார்.

**'அண்ணா, இது என்ன கோபம்? கதையை கீழே போடுங்கள். துரியோதனனுக்கு ஏற்ற செய்கைதான் இது. நீங்கள் ஊரில் இல்லாததால் உங்களுக்கு இங்கு தர்மத்துக்கு விரோதமாக செய்கைகள் நடந்ததும், மேலும் த்ரௌபதியை நடுச்சபையில் அவமானம் படுத்தினானே அப்போது நீங்கள் இருந்திருந்தால் அப்போதே நீங்கள் துரியோதனாதிகளை ஸம்ஹரித்து இருப்பீர்கள். அன்றைய தினம் த்ரௌபதியின் சாபம் இன்று பீமன் நிறைவேற்றினான். நீங்கள் சாந்தம் கொள்ளவேண்டும்'** என்றான் கிருஷ்ணன். பலராமன் சாந்த மடைந்து துவாரகை திரும்பினான்.

**ராமகிருஷ்ணர்கள் அவதார பூர்த்தி**

முனிவர் சாபத்தினால் கடைசியில் யாதவ குலம் அழிந்து போனது. கிருஷ்ணருடைய சாரதியான தாருக்கன் பார்த்துக் கொண்டிருக்கையிலே பகவானுடைய ரதம் குதிரைகளால் இழுத்துச்செல்லப்பட்டு கடலினுள் சென்று மறைந்தது. சங்கு சக்கரம், கதை முதலான ஆயுதங்களும் க்ருஷ்ணனை பிரதக்ஷிணம் செய்து அவரை நமஸ்கரித்து வானிலே சென்று மறைந்தன. ஒரு மரத்தடியில் பலராமன் யோக நிஷ்டையில் எழுந்தருளினார். அவருடைய முகமண்டலத்திலிருந்து கோடி சூரியப்ரகாசத்துடன் ஜொலித்துக்கொண்டு ஒரு ஸர்ப்பம் எழுந்தது. அப்போது சமுத்திரத்தினுள்ளிலிருந்து சித்தர்களும் நாகர்களும் பலவித தோத்திரங்கள் செய்தவாறு எழுந்தனர். அவர்களும் சமுத்திர ராஜனும் தோன்றி அந்த ஸர்ப்பத்துக்கு அர்க்கியம் முதலான கொடுத்து உபசரித்தனர். பின்னர் அவர்களுடன் அந்த சர்ப்பமும் சமுத்திரத்திலே சென்று மறைந்து விட்டது. கிருஷ்ணன் தாருக்கனை அழைத்து தானும் யோக நிஷ்டையால் இவ்வுடலை விடப் போவதாகவும்; துவாரகையை சமுத்திரம் விழுங்கப் போவதாகவும்; அதனால், ஒருவரும் துவாரகையில் இருக்க வேண்டாம் என்றும் அர்ஜுனனுக்கு செய்தி சொல்லி அனுப்பினார்.

பின், க்ருஷ்ணரும் ஓர் அஶ்வத்த வ்ருக்ஷத்தின் அடியில் அமர்ந்து, சதுர்ப்புஜங்களுடனும், திவ்ய ஆபரணங்களுடனும், பீதாம்பரதாரியாய் வலது தொடை மேல் இடது பாதத்தை வைத்து யோகாஸனத்தில் உட்கார்ந்து த்யானத்தில் ஈடுபட்டிருந்த திருக்கோலத்தை தூரத்தே கண்ட ஒரு வேடன் அவரை விலங்கென்றெண்ணி பாணத்தினால் க்ருஷ்ணனின் திருவடியில் அடிக்க அவரும் இவ்வுலகைத் துறந்து தன் இருப்பிடம் சென்றான்.

## 44.பரிபாடலில் பலராமன்

**நீயே,'வளையொடு புரையும் வாலியோற்கு அவன்**
**இளையன்,' என்போர்க்கு இளையை ஆதலும்,**
**'புதை இருள் உடுக்கைப் பொலம் பனைக் கொடியோற்கு**
**முதியை' என் போர்க்கு முதுமை தோன்றலும்,**
**வடுஇல் கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த**
**கெடு இல் கேள்வியுள் நடு ஆடுதலும்,**
**இன் நிலைத் தெரிபொருள் தேரின், இந்நிலை**
**நின்நிலைத் தோன்றும் நின் தொல் நிலைச் சிறப்பே.**

(முதுமைக்கு ஊழியாவரும் உணரா ஆதி முதல்வனான நீயே சங்கத்தையொத்த நிறத்தையுடைய பல தேவனுக்கு இளையவனாகத் தோன்றி நின்றாய்.) வலிமை மிக்க பல தேவன். அவதாரத்தில் அவனுக்கு இளையவனாக பிறந்தததை கருதி உள்ளன. அவனுக்கு இளையவன் என்பவர்களுக்கு இணைய வனாகவும் காட்சி தருகிறாய். பொருள்களை மறைக்கும திணிந்த இருள் போன்ற கரிய நிறமுடைய ஆடையை அணிந்தவனும், அழகிய பனை மரச்சின்னத்தைக் கொடியாக உடையவனுமான அந்த பலதேவன் உண்மையில் உன் கிங்கரனான ஆதிசேஷ னின் அவதாரமாயிருப்பதைக் கருதி, உன்னை அவனிலும் முதியவன் என்பவர்களுக்கு நீ முன்னவனாகவும் காட்சி தருகிறாய். வியூஹத்தில் நீ முன் தோன்றிய வாஸுதேவனாகவும்

அவன் பின் தோன்றிய ஸங்கர்ஷணனாகவும் உள்ளமையைக் கருதி உள்ளன. முதியவன் என்பவர்களுக்கு முதியவனாகவும் ஆகின்றாய் என்றுமாம். மேலும் ;

**சேவல் ஓங்கு உயர் கொடியோ யே? சேவல் ஓங்கு உயர் கொடி, நின்ஒன்று உயர்கொடி பனை, நின்ஒன்று உயர் கொடி நாஞ்சில் நின்ஒன்று உயர் கொடியானை, நின்ஒன்றா உயர் கொடி ஒன்று இன்று? நடயமடை அரவின் உடல் உயிர் உருங்கு உவணம் அவன் மடிமேல்**

**வலந்தது பாம்பு;**

**பாம்பு கொடி ; பாம்பு முடிமேலன ; பாம்பு பூண், பாம்பு தலை மேலது, பாம்பு சிறை தலையன பாம்பு படி மதம் சாய்த்தோய்! பசும்பூணவை கொடி மேல் இருந்தவன் தாக்கு இறையது பாம்பு ;**

இந்த அடிகள் திருமாலின் கொடியான கருடனின் சிறப்பைக் கூறுகிறது. வாஸுதேவனாயிருக்கும் போது கருடனாகிற உயர் கொடியை உடைய உனக்கு பலராமனாயிருக்கும் போது **'பொலம் பனைக் கொடியோற்கு முதியை'** என்கின்றபடியே, பனைக்கொடியை உள்ளவனாக இருக்கிறாய், உன்னுடைய மற்றொரு உயர் கொடி **'நாஞ்சில்'** எனப்படும் கலப்பையாகும். உன்னுடைய மற்றொரு உயர்கொடி யானையாகும். இதிலிருந்து கண்ணனுக்கு கருடகொடியும், பலதேவனுக்கு பனை, கலப்பை, யானை ஆகியவைகள் எழுதப்பெற்ற கொடிகள் உண்டென அறியலாம். பகைவரைக் கொல்லும் சேனையை மிகுதியாக உடையவர்களாய் அறநெறியை மீறியவர்களாய் எதிர்த்து வரும் எதிரிகளின் உயிரை உடலிலிருந்து பிரிக்கிறவனாய், வெற்றியில் மிகுந்தவனாய், பலத்தாலும், ஒலியாலும் பொலிகின்றவனாய் புழுதி சேற்றை உழுவது போல் பகைவரின் மார்பை உழுகிற வளைந்த வாயையுடைய கலப்பையை ஆயுதமாகக் கொண்ட பலராமனும். நால்வகை நிலங்களில் உள்ளோர் அனைவரும் நடுக்கம் தீரும்படியாக, அடிபகுதி வரை குத்திய கொம்புடையவன், பொன்னால் செய்யப்பட்டதும், தகடுகளில் ரத்னங்கள் பொறிக்கப்பட்ட **'கிம்புரி'** எனும் ஆபரணத்தாலே ஒளி விடும்

தந்தத்தையுடைய வராகமும் ஆகி மூன்று வ்யூகமூர்த்திகளாகவும் இருப்பவன் நீயே. வியூஹ மூர்த்திகளின் சிறப்பை வேதமே அடையாளம் காட்டி புகழ்கிறது. பின் தேன் பொருந்திய பசுமையான துவளமாலையை அணிந்துள்ளன. 'ஸர்வகந்த ஸர்வரஸ:' என்கிற நறுமணமும் நற்சுவைகளும் நிறம்பியது திருமேனி என்று உணர்த்தப்படுகிறது.

இந்த கண்ணனுக்கு உடையதைப் போலவே பலதேவனும் வெண்ணிறம் பொருந்தியவன். பால் நிறவண்ணனன்றோ நம்பி மூத்தபிரான், ஒரு காதில் குழை எனப்படும் குண்டலத்தை யுடையவன். கூர்மை பொருந்திய வளைந்த கலப்பை ஆயுதத்தை உடையவன். அசுரர்களிடம் சினம் பொருந்திய கதையாகிற ஆயுதத்தை உடையவன், நித்யசூரிகளே என உணர்த்தப்படுகிறது.

திருமால் துவாபரயுகத்தில் கண்ணனாக அவதாரம் செய்த போது பலராமனே ஆதிசேஷனாக அவதரித்ததை அறிந்தோம். காளியனின் கர்வத்தை கண்ணன் அடக்கிய ஒரே ஒரு சமயம் தவிர மற்ற எல்லா சமயங்களிலும் கண்ணபிரானை விட்டு பிரியாமல் கூடவேயிருந்து அவனைக் காத்து தொண்டு செய்தான் பலராமன். காளியனுச்சியில் நட்டம் பாய்ந்த சமயத்தில் கண்ணபிரான் பலராமனை விட்டுத் தனியே சென்றதாக ஸ்ரீ விஷ்ணு புராணம் தெரிவிக்கிறது. இது **'ஏகதாது விநா ராமம் க்ருஷ்ணோ ப்ருந்தாவநம் யயௌ'**(ஸ்ரீ விஷ்ணு புராணம் 5-7) (ஒரு சமயம் பலராமனை விட்டு கண்ணன் ப்ருந்தாவனம் சென்றான்) என்று தொடங்கி காளியனை அடக்கி கடலுக்கு ஓட்டிய கதை கூறப்பட்டுள்ளதனால் தெரிகிறது. மேலும் கண்ணனிடம் ஊடல் கொண்ட கோபியர்களுக்கு தூதாக பலராமன் சென்று கண்ணன் கூறிய தூதுமொழிகளைச் சொல்லி அவர்களின் ஊடலை தீர்த்து கண்ணனிடம் அவர்களுக்கு அன்பை வளர்த்தான் என்று விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

**'ஸந்தேசைஸ் ஸாம மதுரை: ப்ரேம கர்பை ரகர் விதை: ராமேணாச்வாஸிதா கோப்ய: க்ருஷ்ண ஸ்யாதிம நோஹரை:**
(வி.புரா.5-24)

தேற்றுகிற நல்வார்த்தையாகையாலே இனியவையும் காதலை தம்முள் அடக்கி கொண்டவையும், கருவத்தோடல்லாமல் பணிவோடு கூறப்பட்டவையும் கேட்டவர் மனதை வசீகரிக்குமவையுமாய் கண்ணன் சொல்லியனுப்பிய தூது மொழிகளை சொல்லி பலராமனால் ஆய்ச்சியர் தேற்றப்பட்டு கண்ணனிடம் அன்பை பெருகப் பெற்றார்கள் என்பதைக் காண்க.

**அகநானூறு :**

..........வடா அது
வண் புனல் தொழுநை வார் மணல் அகன் துறை
அண்டர் மகளிர் தண்அழை உடீஇயர்
மரம் செல மித்தா மாஅல் போல (அகம் 59)

(தொழுநை – யமுனை. அண்டர் மகளிர் - ஆயர் மகளிர். மா அல் - கண்ணன்) என்று கிருஷ்ணாவதார லீலைகளில் ஒன்று பேசப்பட்டது. ஆயர் மகளிர் குளிக்கும்போது கண்ணன் அவர்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு குருந்தமரத்து ஏறியிருந்தான் என்னும் செய்தி புராணங்களிலும், நாச்சியார் திருமொழியொன்றிலும் காணப்படுகிறது. அவ்விடங்களில் இல்லாத ஒரு செய்தி இங்குக் கூறப்படுகிறது. அதாவது, இப்படி ஆயர் மகளிர் குளித்துக்கொண்டிருக்கும்போது பலதேவன் அங்கு வந்தானாம். அவன் அவர்களை இந்நிலையில் காணில் பழியாகும் என்று, கண்ணன் தான் ஏறியிருந்த மரக்கொம்பொன்றைத் தாழ்த்துக்கொடுக்க, ஆயர் மகளிர் அதன் இலைகளால் தம்மை மறைத்துக்கொண்டு நம்பி மூத்தபிரானின் பார்வையிற்படாமல் தப்பினாராம்.

## 45. ஆழ்வார்கள் அனுபவித்த பலராமன்

பலத்தோடு கூடிய அநந்தன் **'அமிதௌ ஜா: பர்யங்க'**: (கௌஷீதகி உபநிஷத்) சொல்லியபடி அளவற்ற பலத்தையுடைய அநந்தன் படுக்கை என்று வேதம் உரைத்தது. ஸர்வ தாரனான அவனுக்கும் ஆதாரமாயிருக்கவல்ல பலமன்றோ. முழு முதல்வனுடைய முதன்மையைக் காட்டும் முடியின் மேல் குடையாக உயர்ந்து விளங்க ஸர்வலோக சக்ரவர்த்திக்கு வெண் கொற்றக்குடையாயிருக்கிறபடி,

**'முன்நல் ஓர் வெள்ளி பெருமலைக்**
**குட்டன் மொடு மொடு விரைந்து ஓடப்**
**பின்னைத் தொடர்ந்தது ஓர் கருமலைக்குட்டன்**
**பெயர்ந்து அடியிடுவது போல்,**
**பன்னி உலகம் பரவி ஓவாப்**
**புகழ்ப் பலதேவன் என்னும்**
**தன்நம்பி ஓடப் பின் கூடச் செல்வான்**
**தளர்நடை நடவானோ'** (பெரியா. திரு. 1-7-5)

முன்னே அழகிய ஒப்பற்ற பெரிய வெள்ளிமலை பெற்ற குட்டி திடுதிடென்று வேகங்கொண்டு ஓடிக்கொண்டிருக்க (அந்தப் பிள்ளையின்) பின்னே (தன் செருக்காலே அப்பிள்ளையைப் பிடிப்பதற்காக) தொடர்ந்ததாகிய ஒப்பற்ற கருநிறமான மலை பெற்ற குட்டி தானிருக்குமிடத்தை விட்டு புறப்பட்டு அடியிட்டு போவது போலே, லோகமெல்லாம் கூடி ஆராய்ந்து ஸ்தோத்திரஞ்செய்தும் முடிவு காண முடியாத கீர்த்தியையுடைய பலராமன் என்கிற தன்னுடைய தமையன், ஓடிக்கொண்டிருக்க பின்னே உடன் செல்பவரான கண்ணனை வர்ணிக்கிறார்.

மிக உயர்ந்த மூங்கிலை உண்ணும் அழகிய யானையைக் கொடியாக ஏந்திய பலராமனாக அவதரித்தான் இப் பரமபுருஷன்.

ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை 17ம் பாசுரத்தில்,

**அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்**
**எம்பெருமான் நந்தகோபாலா! எழுந்திராய்**
**கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!**
**எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய் ;**
**அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த**
**உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய் ;**
**செம்பொற்கழலடிச் செல்வா! பலதேவா!**
**உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்**

**'ஆக்யாதி ஹ்ருதயம் ஹ்ருதா'** என்றும், பார்த்தாலே புரிந்து கொள்பவர்கள் 'கோஸலா: என்றும் நினைவும் பார்வையும் அறியுமவர்களாகையாலே (க்ரமம் தப்பாமல் நம்பி மூத்த பிரானை எழுப்புகிறார்கள். செம்பொற் கழலடிச்செல்வா: தேவகி கர்ப்பத்தில் நீ உதித்ததும் உனக்கு பின் தோன்றிய எவருக்கும் சாவு இல்லை. உனக்கு முன் தோன்றிய அறுவருமே கல்லில் அறையப்பட்டு இறந்தனர். இங்கு **'மக்கள் அறுவரை கல்லிடை பிறந்த'** என்ற பெரியாழ்வார் பாசுரத்தையும் நினைவு கொள்ளலாம். நீ பிறந்ததால் நந்தகோபருக்கு செல்வம் தழைத்தது. த்வாபரயுகத்தில் நீ முன் பிறந்து கைங்கர்யத்தை ஏற்றாய். த்ரோதாயுகத்தில் நீ பின் பிறந்து கைங்கர்யபரனானாய். நந்த கோபன் இருக்குமிடத்தில் கிருஷ்ணன் பின்னே பிறக்க, முன்னே பொற்கால் பொலிய விட்டு பிறந்தவனே! இளைய பெருமாள் பின் பிறந்து பெற்ற ஸம்பத்து (கைங்கர்யத்தை) முன் பிறந்து பெற்றவனன்றோ நீ, **'லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந'**: என்று அவரைப்போல் உறங்காதிருக்கவும் வேண்டாவோ? பெருமாளும், பிராட்டியும் கண் வளரும் போது (ராமனும், சீதையும்) எப்படி புறம்பே மதிளாய் நின்று காத்தாயோ அது போன்றே கண்ணனுக்கும் நடையாடும் மதிளாக இருப்பாயன்றோ! பலதேவா! உம்பியும் நீயும் உறங்கேல்.......உனக்கு பவ்யனான தம்பியும் அவனுக்கு பவ்யனான நீயும் உறங்கா தொழிய வேணும், அவனும்

பிறப்பாலே பாரதந்த்ரியம் கொண்டாட, நீ உன் ஸ்வருபத்தாலே பாரதந்த்ரியம் கொண்டாடி (திருவனந்தாழ்வானுக்கு ஸ்வருபமே பாரதந்த்ரியம்) இதை முதல் திருவந்தாதி 53ம் பாசுரத்தில் **'சென்றால் குடையாம்'** என்பதில் நிருபணம்.

**'ஸ்ரீநந்த கோபரையும் க்ருஷ்ணனையும் விடாத யசோதைப் பிராட்டியைப் போலே'** என்று திருமந்த்ரத்தின் ப்ரகாரம் **'முமுக்ஷுப்படியில்'** விவரிக்கபடுகிறது. ஆதை அநுசரித்தே 'அ'கார ஸ்தாநத்தில் உள்ள நந்தகோபரையும் 'உ' கார ஸ்தாநத்தில் உள்ள யசோதைப்பிராட்டியையும் 'ம'கார ஸ்தாநத்தில் உள்ள ஸ்ரீகிருஷ்ணரையும் எழுப்புகிறார்கள். நமக்கு பாகவத சேஷத்வமே நிலை நின்றது என்கைக்காக நம்பி மூத்தபிரானையும் எழுப்புகிறார்கள். பாகவத சேஷத்வத்தோடு கூடிய திருமந்த்ரத்தை எழுப்புகிறார்கள்.(அநுஸந்திக்கிறார்கள்)

உன்னுடைய பாம்பணை என்கிற ஸ்பரிஸத்திலே உறங்குகிற அவனும், அவனுடைய ஸ்பர்ஸத்தாலே உறங்கும் நீயும், அவன் பாரதந்த்ர்யமும் இவன் ஆற்றாமையும் கட்டி கொண்டு கிடக்கும். மேலும் **'மாலே மணிவண்ணா'** என்கிற பாசுரத்தில் **'கொடியே விதானமே'** என்கிறாள் ஆண்டாள். திருப்பாவை நோன்பு நோற்ற கோபிமார் கண்ணனிடம் வந்து தங்கள் நோன்புக்காக வேண்டியவைகளைப் பிரார்த்தித்தார்கள். அவர்களுக்குக் கொடியாக பெரியதிருவடியை கொடுத்தவன், மேல் கட்டியாக திருவனந்தாழ்வானைக் கொடுக்காமல் தன்னுடைய அத்த வாளத்தை (உத்தரியம்) கொடுத்தான் என்கிறார். பெரியவாச்சான்பிள்ளை தன் வியாக்யானத்தில் **'விதானத்துக்கு திருவவதரித்தவன்று பணத்தையிட்டு கவிழ்த்துகொடு போந்த திருவனந்தாழ்வானை கொடா தொழிவான் என்னென்னில்? எல்லோரையும் போகச் சொன்னாலும் தன்னை விட்டு ஓரடியிட மாட்டாதவனாகையாலே அத்தாளத்தைக் கொடுத்தான்'** என்கிறார். பெரியதிருவடிக்கு இல்லாத பெருமையன்றோ திருவனந்தாழ்வானுக்கு!

வளைந்த வாயினையுடைய கலப்பையை ஆயுதமாகக் கொண்டு 'ஒற்றை குழல்' அணிந்தவனாக அவதாரம் செய்தது ஒப்பற்ற பரமபுருஷனே என்று விளிக்கிறது. மேலும்,

உம்பியும் நீயும் உறங்கேல் - நீயே ஒரு படுக்கை, படுக்கையிலே சாய்ந்தார் உறங்குமத்தை போக்கி, படுக்கைக்கு எங்காவது உறக்கமுண்டோ? அவனுடைய படுக்கையான நீ உணர்ந்து, எங்கள் படுக்கையுமுணர்த்தி எங்களுக்குத் தரவேணும்.

பெரிய திருமொழி 6-9-3 திருமங்கையாழ்வார் பாசுரத்தில்:

**சுளை கொண்ட பலங்கனிகள் தேன் பாயக் கதலிகளின்**
**திளை கொண்ட பழம் கெழுமித் திகழ் சோலைத் திருநறையூர்**
**வளை கொண்ட வண்ணத்தன் பின் தோன்றல், மூவுலகோடு**
**அளை வெண்ணை உண்டான் தன் அடி இணையே அடை நெஞ்சே.**

திருநறையூரானது சுளைமிக்கிருந்துள்ள பலாப்பழமானது தேனொழுக, வாழைகளில் பருத்த பழங்களானவை நெருங்கி விளங்கா நின்றுள்ள சோலையாலே சூழப்பட்ட க்ஷேத்திர மாகும்.வளைகொண்ட வண்ணத்தன் - நம்பி மூத்த பிரானுக்குப் பின் பிறந்தவன். பூமிப் பரப்போடே கூட தயிரையும், வெண்ணை யையும் அமுது செய்தவனுடைய திருவடிகளை அடை என்பதாக அனுபவித்துள்ளார்.

**'ஒற்றைக் குழையும் நாஞ்சிலும்**
**ஒரு பால் தோன்றத்தான் தோன்றி**
**வெற்றித் தொழிலார் வேல் வேந்தர்**
**விண்பால் செல்ல, வெஞ் சமத்துச்**
**செற்றகொற்றத் தொழிலானை**
**செந்தீ மூன்றும் இல் இருப்ப,**
**கற்றமறையோர்' கண்ணபுரத்து**
**அடியேன் கண்டு கொண்டேனே -**

(பெரிய திருமொழி 8-8-8)

ஒற்றைக்குழை - ஒரு காதில் தொங்குகிற திருக்குண்டலமும் ஒரு பக்கத்தில் கலப்பையும் விளங்க (பலராமனாய்) திருவவதரித்து ஜெயம் பெறுவதையே இயல்பாக உடையவரும், வேற்படையை யுடையவருமான அரசர்கள் வீரசுவர்கத்திற்குச் சென்று சேரும்படி, வெவ்விய போர்க்கலத்தில் (அவ்வரசர்கள்) அழியச் செய்ததனால் உண்டான வெற்றியைத் தொழிலாக உடைய பெருமாளை திருக் கண்ணபுரத்தில் கண்டேனே என ஆழ்வார் கூறுகிறார்.

பெரிய திருமொழி 10-7-4ல்

**மைந்நம்பு வேல்கண் நல்லாள்**
**முன்னம் பெற்ற வளை வண்ண நல்மா மேனி**
**தன் நம்பி நம்பியும் இங்கு வளர்ந்தது;**
**அவன் இவை செய்தறியான்**
**பொய்நம்பி புள்ளுவன், கள்வம் பொதி அறை,**
**போகின்றவா தவழ்ந்திட்டு**
**இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க்கு உய்வு இல்லை,**
**என் செய்கேன்? என் செய்கேனோ?**

மையணிந்த வேற்படை போன்ற கண்களை உடைய வளான யசோதா பிராட்டியானவள் பெற்ற சங்கு போல் வெண்ணிறத்ததாய் மிகச் சிறந்த திருமேனியையுடைய பலராமனும் முன்பு திருவாய்ப்பாடியில் வளர்ந்ததுண்டு. அந்த பலராமன் இப்படிப்பட்ட தீம்புகள் செய்ததில்லை: பொய்யே வடிவெடுத்தவனாய் வஞ்சகனாய் கள்ளத் தனத்துக்குக் கொள்கலமாய் இருப்பவனான இக்கண்ணபிரான் தவழ் நடை கற்று போகிற படி என்னே! என்கிறார்.



## 46.ஆசார்யர்கள் அனுபவித்த பலராமன்

### ஸ்ரீபராசரபட்டர்

**'யுத்த் யூதே விஜயாபதா நகண நாகாலிங்க நந்தாங்குரை: யத் விஸ்லேஷலவோபி காலியபுவே கோலாஹலாயாபவத் | தூத்யேநாபி சயஸ்ய கோபவநிதா: க்ருஷ்ணாகஸாம் வ்யஸ்மரந் தம்த்வாம் ஷேமக்ரு நீலம் ஹலதரம்ரஹ்கேஸ! பக்தாங்மஹே ||**

(உத்ரசதகம் 70வது சூர்ணிகை)

ஏ ரங்கநாதரே! பலராமனான தேவரீருடைய சூதாட்டத்தில் இத்தனையாட்டம் ஜெயித்தோம் என்கிற கணக்கானது கலிங்க தேசத்தரசனுடைய பல் முளைகளினாலாயிற்றே. யாவரொரு பலராமர் க்ஷணமாத்திரம் பிரிந்து இருந்ததால் காளிய நாகத்தினால் நேர்ந்த தடபுடலின் பொருட்டு ஆயிற்றோ, அன்றியும் யாவரொடு பலராமனுடைய தூதினால் இடைப் பெண்கள் கண்ணனுடைய குற்றங்களை மறந்தார்களோ அப்படிப்பட்டவரும், ஆஸ்ரித க்ஷேமத்திற்காக க்ருஷி (பயிர்) செய்பவரும், கலப்பையை தரித்திருப்பவருமான தேவரீரை அடைவோம், என்று பெருமானை அனுபவித்துள்ளார்.

## 47.பதஞ்சலி முனிவர்

**'ஆபாஹு புருஷாகாரம் சங்கம் சக்ராதிதாரணம், ஸகஸ்ர சிரஸம் ஸ்வேதம் ப்ரணமாமி பதஞ்சலிம்'**

என்பது பதஞ்சலியின் த்யான ஸ்லோகம். யோக வழியை மனித இனத்துக்கு தந்தவர் **'ஹிரண்யகர்ப்பர்'**. அதை சூத்திரங்களாக்கி வைத்தவர் மஹரிஷி பதஞ்சலி ஆவார். இந்த பதஞ்சலி முனிவரை ஆதிசேஷனின் அவதாரமாக சொல்லுவர். ஐந்து தலைநாகப்படத்துள் பாதிவரை கைகூப்பிய மனித வடிவமும், இடுப்பிலிருந்து பாம்பு உடலும் கொண்டவர். இவர்

தந்தை **'அத்திரி'** முனிவர், தாய் கோணிகா. ஆத்திரேயர், கோணிகா புத்ரர் என்றும் பெயர்கள் உண்டு.

கலியுகத்தில் அயோனிஜராய் ஒரு புற்றில் சமாதி யோகத்தில் மூடப்பட்டு இருந்தார். சங்கராஜனான புஷ்யமித்ரனுடைய யஜ்ஞ பூமியில் புற்றிலிருந்து எழுந்து வந்து அவனுடைய யஜ்ஞத்தைப் பலனோடு விளக்கிச் சொன்னார். **'பதஞ்சலி'** என்கிற பெயரைப் பெற்ற இவர் பாணினியினுடைய வடசொல் இலக்கண நூல்களுக்கு பாஷ்யம் எழுதி **'சொல் நூலைக் காப்பாற்றிய மஹா பாஷ்யக்காரர்'** என்ற நாமம் பெற்றவர். யோகத்துக்கு தலைவராய் யோக சாஸ்திரத்தை உலகிற்கு அளித்து **'ஆசார்யாபிமானமே உத்தாரகம்'** என்கிற உட் பொருளைக் காட்டியவர். இவருடைய இந்நூலுக்கு ப்ரஹ்ம ஸூத்திரம் அருளிய வ்யாஸரும் பாஷ்யமிட்டருளினார். பதஞ்சலியான இவர் அகத்தியருடைய ஆயுர்வேத சாஸ்திரத்துக்கு **'வார்த்திகம்'** என்ற ஆராய்ச்சி நூலிட்டு காப்பாற்றினார். இப்படித் தன்னுடைய யோக நூல்களுக்கு வேதவ்யாஸர் பாஷ்யமிட்டதனால் விசேஷமான நன்றியினாலே, அவருடைய ப்ரஹ்ம ஸூத்திரத்திற்கும் பாஷ்யமிட வேண்டும் என்று அவாக் கொண்டு, பதஞ்சலியாக இருந்து **'மஹாபாஷ்யக்காரர்'** எனப் புகழ்பெற்ற திருஅனந் தாழ்வான் பின் கலியுகத்தில் **'எம்பெருமானாராக'** அவதரித்து **'ஸ்ரீபாஷ்யகாரராக'** உலகினரை வாழ்வித்தார். இவரே பின்பு மணவாளமாமுனிகளாகவும் சில ஆண்டுகள் உலகுய்ய ஜீவித்தார் என்பதும் காணலாம்.

ஒரு சமயம் பதஞ்சலி முனிவர் தமது ஆயிரம் மாணவர்களுக்கு **'வித்யை'** சொல்லி கொண்டு இருந்தார். மாணவர்கள் ஆயிரம் ஆதலால் தன்னுடைய ஆயிரந்தலை அனந்த வடிவத்தோடு பாடம் சொல்லிக் கொடுத்தார். மூச்சுக்காற்றாலும் பார்வையாலும் மாணவர் மாண்டு விடாது இருக்க, நடுவே ஒரு திரையை இட்டுக் கொண்டார். யாரும் திரையை விலக்கித் தம்மைப் பார்க்கக் கூடாது என்றும், பாடம் நடுவே சொல்லாமல் வெளியே

செல்லக்கூடாது என்றும், நிபந்தனைகள் இட்டார். மந்தமான புத்தியை உடைய ஒரு மாணவன் பாடம் சலிப்பாக இருக்கவே எழுந்து யாருமறியாமல் வெளியே சென்று விட்டான். ஆஶ்சர்யமான முறையில் பாடம் போதிக்கும் குருவை பார்த்திடும் ஆவலில் ஒருவர் திரையை விலக்க, பதஞ்சலி முனிவரின் பார்வை, மற்றும் மூச்சால் அங்கிருந்த அனைவருமே மாண்டு விட்டனர். அச்சமயம் வெளியே சென்ற மாணவன் திரும்பி வரவே, வித்யையைக் காக்க ஒருவராவது எஞ்சினரே என்று அந்த எஞ்சிய மாணவனுக்கு தமது வித்தையைச் சொல்லிக் கொடுத்த பின், சொல்லாமல் பாடம் நடுவே வெளியே சென்ற காரணத்தினால் ப்ரஹ்ம ராக்ஷசாகப் போகும்படி சபித்து விட்டார்.

திருச்சித்ர கூடத்தில் (சிதம்பரம்) பதஞ்சலி உருவத்தை சேவிக்கலாம்.



# 48. ஸ்ரீராமாநுஜர்

## 49.ஆதிசேஷன் ஸ்ரீராமாநுஜராக அவதரித்தல்:

தென்னரங்கச் செல்வம் முற்றும் திருத்தி வைக்கவும். மறையதனில் பொருளனைத்தும் வாய் மொழியவும், மாறனுரை செய்த தமிழ் மறை வளர்க்கவும் அழகாரும் அனந்தாழ்வான் அறமிகுநற் பெரும்பூதூரில் இங்ஙனே ஏழ்பாருமுய்யவுதித்தருளின நன்னாளானது ஆழ்வார்கள் தாங்களவதரித்த நாட்களிலும் வாழ்வானநாள் நமக்கென்று நாற்றிசையும் கொண்டாட நின்றது. இத்திரு நன்னாளில் சிறப்பை மணவாளமாமுனிகள் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளினார். அதாவது,

**"சங்கர பாக்கர யாதவ பாட்டப்ரபாகரர் தங்கள் மதம்**
**சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடு நாள்**
**வெங்கலியீங்கினி வீறுநமக்கிலையென்று மிகத் தளர்நாள்**
**மேதினி நஞ்சுமைமாறு மெனத்துயர் விட்டு விளங்கிய நாள்**
**மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திரு நாள்**
**மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்று முவந்திடு நாள்**
**செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுற்சிறந்த பெரும்பூதூர்ச்**
**சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே"**
என்பதாம்.

இங்ஙனம் தோன்றிய பேராசிரியர் ஆதிசேஷனுடைய அபராவதாரமென்றும் பஞ்சாயுதாழ்வார்களின் ப்ராதுர்ப்பாவ மென்றும் விஷ்வக்ஸேனருடைய தோற்றமென்றும் இப்படி பலவறாக பெரியோர் பணிப்பர். நூற்றந்தாதியில் **'அடையார் கமலத்தலர் மகள் கேள்வன் கையாழியென்னும் படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்க வில்லும் புடையார். புரிசங்கமுமிந்தப் பூதலங் காப்பதங்கென்றிடையேயிராமானுச முனியாயினவிந்நிலத்தே'** என்ற பாசுரத்திலும் **'ப்ரத்யந் விமதேஷு........வவ்ருதே பஞ்சபிராயுதைர்** முராரே: என்கிற யதிராஜ ஸப்ததிஸூக்தியிலும் ஸ்வாமி பஞ்சாயுததாழ்வார்களின்

திருவவதாரமென்னும் விஷயம் காட்டப்பட்டு உள்ளது. **'விஷ்வக் ஸேநோயதிபதிரபூத்'** என்கிற யதிராஜ ஸப்ததி ஸூக்தி யொன்றில் விஷ்வக்ஸேநாவதாரமென்னும் விஷயம் கூறப்பட் டுள்ளது. திருவனந்தாழ்வானுடைய திருவவதாரமென்றும் விஷயத்தை பற்பல ஆசிரியர்கள் போற்றியுள்ளனர். ஸ்வாமியின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவரான திருமலை அனந்தாழ்வான் தாம் அருளிய **'வேங்கடாசல இதிஹாஸமாலா'** எனும் திவ்யக்ரந்தத்தில் திருவனந்தாழ்வனே இராமானுசராக திருவவ தரித்தார் என்பதை மிக விரிவாக அருளியுள்ளார். **'ஸ்ரீமத்யாம் பூதபர்யாம் அதிதரணிதலம் சேஷ ஆவிர்பபூவ'** இத்யாதி. எம்பெருமான் தனது அத்தாணிச் சேவகனும் படுக்கையுமான திருவனந்தாழ்வானை நோக்கி நீ நிலவுலகத்திற்குச் சென்று பிறந்து எவ்வுயிரையும் **ஸம்ரக்ஷிக்க கடவை'** என நியமித்தருள அந்த நியமனத்தை சிரமேற்கொண்ட ஆதிசேஷன் சித்திரை மாத திருவாதிரையன்று ஸ்ரீகேசவஸோமயாஜிகளுக்கு புதல்வராக பிறந்தானென்பது அவ்விடத்து ஸ்ரீஸூக்திகளின் பொருள். இதன் படியே மற்றொரு சிஷ்யரான வடுகநம்பியருளிசெய்த ஶ்லோக ரூபமான யதிராஜ வைபவ ப்ரபந்தத்தில் **'சேஷாம்சக: கேசவ யஜ்வதேவ்யாம்'** என்றுள்ளது. வேதாந்த தத்துவப்பொருள்களை நிலைநாட்டு வதற்காகவும், துர்மதங்களைத் தொலைப்பதற்காகவும் திருவனந்தாழ்வானுடய அம்சபூதராய் தேஜோந்தியான ஒரு மஹான் கேசவஸோமயாஜிகளின் தேவியாரிடத்தில் அவதரித்தார் என்பது ஶ்லோக சுருக்கம். இவ்வடுக நம்பிகள் தாமே அருளிச் செய்த ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரத்தில் **'பௌத தத்வாந்த ஸஹஸ்ராம்சு: சேஷரூபப்ரதர்சக:'** என்பது 23ஆம் ஶ்லோகம். எம்பெருமானுடை பூர்ண கடாக்ஷபாத்ரரூபதராய் அவர் பிறந்துத் தேவுமற்றறியாதேயீடுபட்டிருந்த மஹாப்ராஜ்ஞரான கருடவாஹன பண்டிதர் பணித்த **'திவ்யஸூரிசரித'** மெனும் மஹாகாவ்யத்தில் 17ஆவது ஸர்க்கத்தில் ஸ்ரீராமாநுஜ வைபவம் சொல்லுமிடத்து **'பௌஜங்கம்: வபுரபஹாய சேஷபோகியத்ரூபம் திரிபுவநவந்திதத் ஜகாம'** (திருவனந்தாழ்வான் தனது உரக உடலை விட்டொழிந்து ராமானுஜமுனியான திருவுருவத்தை யடைந்தான் என்பதாகும்.

திருமகள் கேள்வனாய், ஸர்வவ்யாபியாய் அலர்மேல் மங்கை மார்பனாய் சார்ங்கம் எனும் வில்லாண்டவனாய் உலகை காப்பாற்றுவதற்காக ஸ்ரீதேவியால் உயர்த்தப் பெற்றவனான ஸ்ரீஹரிக்கு நிர்ஹேதுமாக சிந்தனையொன்று ஏற்பட்டது. அதாவது 'இந்த ஜீவராசிகளை எந்த உபாயத்தாலே வைகுண்டத்துக்கு அழைத்து செல்லலாம், என்பதை 'இதுவரை எடுத்த அவதாரங்களில் ஜனங்கள் என்னை ராமனாகவும், கிருஷ்ணனாகவும் தான் பார்த்தார்களோ ஒழிய பரமபுருஷனாக என்னை கண்டு அறிவதில்லை எனப் பெரிதும் துயறுற்றான். தனக்கு ஆட்பட்டு அடிமை செய்யும் பரிவாரங்களில் சீரியோனான திருவனந் தாழ்வானையும், பறவைகளுக்கு இறைவனான திருவடியையும் பார்த்து பின் வருமாறு அருளிச்செய்தான்'. 'நம் லீலா விபூதி யான திருவிளையாட்டு செல்வத்தின் எல்லை நிலமான பாரத நாட்டில் ஆட்சி செலுத்தும் கலியும் கெடும் படி பண்ணி 'தர்மத்தை உலகில் நிறுத்தவும் வைதீக விரோதிகளான பாஷாண்டிகளை (புறசமயிகள்) ஒடுக்கவும் நீங்கள் இருவரும் இருள் தருமா ஞாலத்தில் உடற்பிறவி எடுக்கக்கடவீர்' என்றார். பேசுவதில் வல்லவனான ஆதிசேஷன் ஸ்ரீஹரியின் வார்த்தைகளை கேட்டு பின் வரும் வார்த்தைகளை கூறலுற்றார். 'நீரே உலகனைத்தும் தரித்து நிற்பவர். ஸ்ருஷ்டி, ஸம்ஹாரங்களை செய்பவன், உனக்கு இயலாதது ஏதுமில்லை. அப்படியிருந்தும் அடியேனுக்கு ஓர் பெருமையளிக்க எண்ணி, ஜீவராசி ரக்ஷணத்தில் என்னை நியமிக்கின்றீர். என்னால் ஆராயாமல் உம் வாக்யம் மிக முயன்று செய்யத் தக்கதே. இவ்வுலகினி லுள்ளோர் உன மாயையாலே மயங்கிநிற்கின்றனர். ஆகையால் உம்முடைய உபயவிபூதியையும் நான் யாருக்கும் கொடுக்கலாம்படி எனக்கு உரிமையளித்து விட்டீராகில், ஏதோ ஓர் வழியில் அவ்வுலகினரை வைகுந்தம் புக வைக் கிறேன்' என்றான். தேவர் தலைவனான ஸர்வேஶ்வரன் திருவனந்தாழ்வானின் அவ்வார்த்தையைக் கேட்டு விபூதித் வயத்தையும் பேரானந்தத்தோடு அனந்தனுக்கு உரிமையாக அளித்தான். திருவனந்தாழ்வானும், திருவடியும் எம்பெருமான்

திருவுள்ளத்தை பின்பற்றி அவதரிப்பதற்கான இடம் பார்த்து நின்றனர்.

அந்நாளிலே வேதத்துக்கு புறம்பான மதங்களை அழியச் செய்து தம்முடயதான வைதீக மதத்தை ஸ்தாபனம் பண்ணிக்கொண்டு ஆளவந்தார் எழுந்தருளியிருந்தார். அவருடைய திருவடிகளைப் பற்றியிருந்த முதலிகளில் முதன்மை பெற்ற பெரியதிருமலைநம்பி **'கானமும் வாநரமும் வேடுமுடைய'** (நான்முகன் திருவந்தாதி 47) திருவேங்கடமுடையானை **'அடிக்கீழ் அமர்ந்து'** (திருவாய்மொழி 6-10-10) ஸேவித்துக் கொண்டு எழுந்தருளியிருந்தார். அவருடைய ஸகோதரிகளான ஸ்ரீபூமிபிராட்டியார் என்றும், பெரியபிராட்டியார் என்றும் பெயர் களுடைய இருவரும் முறையே ஆஸூரிவம்சத்தில் கேசவ தீக்ஷிதர்க்கும் கமலநயனப்பட்டருக்கும் வாழ்க்கைப்பட்டார்கள்.

புத்ரபாக்யத்தை விரும்பிய அவர்களுக்கு ஆதிசேஷன் கலி பிறந்து 4118 வருஷங்களுக்கு பிறகு, பிங்கள வருஷம் சித்திரை மாச ஶுக்ல பக்ஷத்தில் பஞ்சமி வியாழக்கிழமை திருவாதிரையில் சுபமுகூர்த்தத்தில் கர்கடக லக்னத்தில் பூமி பிராட்டியாருக்கு (காந்திமதி) ஸ்ரீராமாநுஜன் அவதரித்தருளினார். அதனை அடுத்து பெரியதிருவடியும் அதே வருஷம் தை மாதம் திங்கட்கிழமை புனர்பூச நக்ஷத்திரத்தில் பெரியபிராட்டியார் திருவயிற்றில் அவதரித்தருளினார். பஞ்சாயுதங்களின் ஆவேசாவ தாரமாக இவர்க்கு பஞ்சாயுத – ஆபரணங்களையும் எம்பெருமான் ரக்ஷையாகச் செய்தான். இச்செய்தியை திருமலைநம்பிக்கு விண் ணப்பம் செய்து போகவிட அவரும் ஸ்ரீபெரும்புதூருக்கு விரைந்து வந்து கேசவ சோமையாஜியாரைஸத்காரம் செய்து கௌர வித்தார். குழந்தையின் முகத்தின் ஒளியைக் கண்டு **'இவன் மங்கள வடிவுடையவன் ஸர்வலக்ஷண ஸம்பந்த! லக்ஷ்மணோ லக்ஷ்மி வர்தந:'** என்கிறபடி **'இளையாழ்வார்'** என்ற திருநாமம் சாற்றியருளினார். அதற்குப் பத்து மாதம் கழித்து பிறந்த பெரியபிராட்டியார் புத்தரனுக்கும், இளையாழ்வாரைப்போலே உச்சிமோந்து **'இவன் ஆத்மகுணங்களை உடையவன்**

**ஆவான், வைதிக பக்ஷத்தில் நிலை நிற்பவனாவன்'** என்று திருவுள்ளம் பற்றி **'கோவிந்தன்'** என்ற திருநாமமும் சாற்றியருளினார்.

முறையே அன்னப்ராசனமும், சௌளகர்மமும், உபநயனமும் இளையாழ்வாரின் எட்டாவது நக்ஷத்திரத்திலே முறைப்படி செய்வித்து மகிழ்ச்சி அடைந்தனர். இளையாழ்வாரும் **'பொங்கி லங்கு புரிநூலும் தோலுமான வடிவும்'** (பெரிய திருமொழி4-4-7) வடுவான வடிவுக்கு ஏற்றபடி அரைஞாண் என்ற கௌபீன கடிசூத்ரமும் முஞ்சியாலே அஞ்சிதமான திருவரையும் பலாச தண்டத்தை ஏந்திய திருக்கையும் திருமண்காப்பும் திருக் குண்டலங்களும் அணிசெய்யும் திருமுகம் கூடிய வினயமான தோற்றத்துடன் விளங்கி நின்றார். அவருடைய திருமேனியின் திருவடிவைக்கண்ட எல்லோரும் அவரைக் கொண்டாடினர்.

பின்னர் **'ஸ்வாத் யாயோத்யேத்வய:'** என்கிற விதியின்படி வேதாத்யயநம் ஆரம்பித்து நடத்த ; கிருஷ்ணன் சாந்திபிநீ பக்கலிலே அல்ப காலத்தில் அதிவிஸ்தாரமான வேதத்தை அதிகரித்தாற்போல், இளையாழ்வாரும் அங்க உபாங்களோடு கூடி சதுர்வேதத்தையும் 'ஶ்ருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெறிந்தவன்' (இராமானுச நூற்றந்தாதி – 44) என்னும்படி திருத்தகப்பனார் ஸந்நிதியிலே அதிகரித்து எல்லாம் பகவத் தத்வ வெளிப்பாடுகளாகையாலே எப்போதும் எக்காலமும் உருச்சொல்லிக் கொண்டிருந்து **'ஸமிதாதானம்'** முதலிய ப்ரஹ்மசர்ய விரதத்திலே ஊன்றியிருந்தார். பின்பு பதினாறு ப்ராயம் நடக்கும்போது திருக்கல்யாணமும் ஆகி, இளையாழ் வாரும் க்ருஹஸ்த தர்மத்திற்கு ஏற்ப வஸ்திரம் உடுத்தி மகிழ்ச்சிப் பெருக்குடன் மனைவியோடு கூடிய இல்லற தர்மத்தை மேற்கொண்டார்.

அக்காலத்தில் எம்பெருமானிடம் இயல்பாக அடிமை பூண்டிருந்தவராய் பூவிருந்தவல்லிக்கு வேந்தனாக விளங்கிய திருக்கச்சிநம்பி, பெருந்தேவியார் நாயகனான பேரருளாளரை ஸேவிக்க எண்ணி காஞ்சி மாநகருக்குப் பலகாலும் எழுந்தருள்பவராய்

இருந்தார். அவரைக்கண்ணுற்ற இளையாழ்வார் அவரை ஸ்ரீபெரும்புதூரில் ஓர் இரவு வசிக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தார். இதனால் இருவரும் பக்திபண்ணிக்கொண்டு ஆதரித்துப் போந்தனர்.

பெருமாள் கோயில் சமீபத்தில் யாதவப்ரகாசன் என்கிற ஒரு ஏக தண்டி வேதாந்த வியாக்கியானம் பண்ணுவதை அறிந்து, தாமும் அவரிடம் வாசிக்கத் தொடங்கினார். இளையாழ்வாரின் அறிவையும், தேஜஸ், ரூபம் முதலான லக்ஷணங்களைக் கண்டு **'இவர் ஆதிசேஷனே'** என்று யாதவப் பிரகாசர் நினைப்பர். யாதவர் சொல்லும் சில அர்த்த விசேஷங்களில் மனம் கொள்ளாமல் அதற்கு மேல் தன் மனதில் தோன்றும் ஸப்தார்த்தங்களை விவாதிப்பதும் உண்டு. இதனால் யாதவ ப்ரகாசருடன் கருத்து வேற்றுமை ஏற்படலாயிற்று. இளையாழ்வாரை எப்படியேனும் கொன்று விட எண்ணியிருந்த யாதவரிடமிருந்து கோவிந்தனால் காப்பாற்றப்பட்டு, காட்டில் வேடுவதம்பதியாக வந்த பெருமாளும், பிராட்டியும் வழிகாட்ட காஞ்சிபுரம்(கச்சிமாநகர்) வந்து சேர்ந்து சாலை கிணற்றிலிருந்து பெருமாளுக்குத் தீர்த்த கைங்கர்யம் செய்து வந்தார். மறுபடி யாதவ ப்ரகாசரை ஆஸ்ரயித்தார். யாதவர் இளையாழ்வானாக் கண்டு வியந்து மீண்டும் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக் கொண்டு க்ரந்த ப்ரவசநம் நடத்தி வாரா நின்றார்.

யாத்திரையடைவாகக் காஞ்சிபுரியில் நின்றும் நம் பெருமாள் ஸந்நிதிக்கு இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் சென்று பெருமாளை தொழுது ஆளவந்தார் திருவடிகளிலே ஸேவித்து நிற்க, அவரும் வார்த்தாப்ரஸங்கத்திலே பெருமாள்கோயிலில் விசேஷங்கள் என்னென்று கேட்க, அவர்களும் இளையாழ்வாருடைய ஞானப் பெருமை முதலிய வைபவங்களையும் **'கப்யாஸஸ்ருதி'** முதலானவற்றிலே யாதவப்ரகாசரை மேலிட்டுப் பொருள் பணித்த வகைகளையும் எடுத்துரைக்க, ஆளவந்தார் உள்ளம் பூரித்து, இந்தளத்திலே தாமரை பூத்தாற்போல் இவ்விருள்தரு மாஞாலத் திலும் இப்படி ஒரு மஹானுபாவர் தோன்றப் பெறுவதே! என வியந்து அப்போதே அவரைக்காண ஆவலுடன் திவ்யதேசங் களை மங்களாசாஸனம் செய்து கொண்டே கச்சிப்பேரருளான்

ஸந்நிதிக்கு எழுந்தருளி திருமலையிலே மங்களாசாஸனம் செய்து கீழே திருப்புற்றினருகே திருவனந்தாழ்வானையும் கரியமாணிக்கப் பெருமாளையும் ஸேவியா நிற்க, அங்கே யாதவப்ரகாசர் தம் திரளுடனே பெருமாளை ஸேவிக்க வரக் கண்ட ஆளவந்தார், திருக்கச்சிநம்பியிடம் 'இத்திரளிலே இளையாழ்வார் யார்?' எனக் கேட்க அவரும் '**அதோ சிவந்து நெடுகி ஆஜானுபாகுவாய் வருகிறவர்**' எனக் காட்ட ஆளவந்தாரும் திருவுள்ளம் பூரிப்பக் குளிர நோக்கியருளி '**ஆம்முதல்வனிவன்**' என்று விசேஷ கடாக்ஷம் செய்து, இளையாழ்வாருக்கு நல்வார்த்தை சொல்ல அவசரம் காணாமையிலே மீண்டும் முதலிகளுடன் கோயிலேற எழுந்தருளினார்.

## ப்ரம்மராக்ஷஸு காட்டின ஸ்ரீராமாநுஜர் பெருமை:

அக்காலத்தில் கச்சிநகர் மன்னனுடைய பெண் பிள்ளையை ப்ரம்மராக்ஷஸு பிடிக்க, அதற்கு ஒருபடியாலும் பரிகாரம் காணாமல் யாதவ ப்ரகாசர் சிறந்த மந்த்ரவாதியென்று கேட்டு, மன்னனும் அவரை அழைத்து வர நியமிக்க, யாதவர் மந்திரங்கள் ஜபிக்க, ப்ரம்ம ராக்ஷஸ்ஸும் முடக்கின காலை நீட்டி அடா யாதவா! நீ ஜபிக்கும் மந்திரம் நானறியேனோ? உன் பூர்வ ஜன்மமும் யான் அறிவேன். ஒரு ஸ்ரீவைஷ்ணவன் அமுது செய்த இடத்தில் சிந்தின ப்ரஸாதத்தை சாப்பிடதனால் இந்த வித்வானாகப் பிறவி பெற்றாய். நானோ அந்தணனாயிருந்து வேள்வி நிகழ்த்தியவன். உன்னால் என்னை ஒன்றும் செய்ய இயலாது. உன் பக்கலில் இருக்கும் '**ஆதிசேஷாம்ஸமான**' இளையாழ்வார் போகச் சொன்னால் போவேனத்தனை என்று சொல்லிற்று. யாதவருக்கு முகத்தில் தேசு குன்றி இளையாழ்வாரை நீர் தாம் போகச் சொல்லும் என்று கூற அவரும், ப்ரம்மராக்ஷஸு வின் விருப்பபடி தன் திருவடி தாமரைகளை அதன் தலை மேல் வைக்க, அதற்கு ஜன்ம சாபல்யமானது, அரசகுமாரியையும் விட்டு சென்றது. யாதவரும் இளையாழ்வாரைப் புகழ்ந்து கொண்டாடிக் கொண்டே மடம் போய் சேர்ந்தார்.

ஆளவந்தாருக்கு, 'நமக்குப் பின்பு இத்தர்ஶனம் நிர்வஹிப்பாரொருவரையும் காணப் பெற்றிலோமே!' என்கிற விசாரம் அதிகமாகி இளையாழ்வாரிடத்திலே திருவுள்ளம் சென்றது. பேரருளாளனை குறித்து திக்கு நோக்கி அஞ்சலி செய்து 'ஏற்கனவே அடியேன் பண்ணின ப்ரபத்தியை ஸபலமாக்கியருள வேணும்' என மிகவும் வேண்டினார்.

யாதவரிடம் இளையாழ்வார் விசிஷ்டாத்வைத ஸித்தாந்த கோட்பாட்டை மிக அற்புதமாக எடுத்து உபந்யஸிக்க, யாதவரும் சீற்றங்கொண்டு 'இனி எம்மிடம் வாசிக்க வர வேண்டாம்' எனக் கூறி விடவே திருக்கச்சிநம்பிகளையடைந்து அவரின் நியமனத்தில் சாலை கிணற்றிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் தேவப் பெருமாளுக்கு ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தைச் செய்து வந்தார். ஆளவந்தார் விசிஷ்டாத்வை ஸ்தாபநார்த்தமாக செய்தருளின எட்டு பிரபந்தங்களில் திவ்யப்பொருளை விளங்கச்சொல்வதான ஸ்தோத்ரரத்தினத்தை பெரியநம்பி திருக்கையிலே கொடுத்து இளையாழ்வாருக்கு அனுப்பினார். இளையாழ்வார் ஒரு தினம் குடத்தில், தீர்த்தத்துடன் வரும் போது பெரியநம்பி அனுஸந் தானத்திலிருந்த 'ப்ரம்மா சிவச் சதமக:' என்ற ஸ்லோகத்தை திருச்செவிசாத்தி இது யாருடைய திவ்யஸூக்தி' என்று நம்பியை கேட்க அவரும். இது 'ஆளவந்தாருடைய திவ்யஸூக்தி' என 'ஆகில்' அவரை அடியேன் ஸேவிக்க வேணும்' என்று இளையாழ்வார் கூற 'நம்மோடே வந்து சேவிக் கலாம்' என்று பெரியநம்பி பணிக்க திருக்கச்சிநம்பியின் அனுமதி பெற்று பெரியநம்பியுடன் திருவரங்கம் பெரிய கோயிலை செல்லா நிற்க'.

**ஆளவந்தார் ஆசார்யன் திருவடியை அடைதல்:**

அதற்குள் ஆளவந்தார் திருநாட்டுக்கு எழுந்தருளி விட்டார் என்கிற சேதி கேட்டு விக்கித்து, இளையாழ்வார் அந்த தூயத்திருமேனியை ஆபாத சூடமாக ஸேவித்து வர, திருக்கையில் மூன்று விரல்கள் முடங்கியிருக்கக்கண்டு அவருக்குக் குறையிருப்பதை அறிந்து முதலிகளும் ப்ரஹ்மஸூத்திரத்திற்கு

விசிஷ்டாத்வைத மதாநுசாரியான பாஷ்யம் அவதரிக்க வேணும் என்ற விருப்பமும், நம்மாழ்வாருடைய திருவாய்மொழிக்கு வியாக்யானமவதரிக்க வேணுமென்பதும், வ்யாஸ பராசர்களிடத்திலே க்ருதஜ்ஞதாநுஸந்தானம் நெடுகச் செல்லும்படியான காரியமொன்று நடைபெற வேணுமென்கிற விருப்பமும் ஆளவந்தார் திருவுள்ளத்தில் இருந்ததை அறிந்தோம் என்றார்கள். இளையாழ்வாரும் இதை கேட்டு **'இவ்வுடல் திடமாய் ஆசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பரிபூர்ணமாயிருந்து ஸர்வேச்வரன் அடியேன் நினைந்தபடி கூட்டுவானாகில் இம்மூன்றையும் நிறைவேற்றக் கடவன்'** என்ன, முடங்கிய விரல்கள் நிமிர்ந்தன. அதை கண்ட அனைவரும் அவருக்கு மங்களாசாஸனம் கூறினர்.

ஆளவந்தாருடைய சரம கைங்கர்யங்கள் குறையற நடைந்தேறின. இளையாழ்வாரும் பெருமாள் கோவில் வந்து திருக்கச்சிநம்பிக்குச் செய்தி அறிவிக்க அவரும் க்லேசித்து ஸ்ரீசூர்ண பரிபாலநாதிகள் நடத்தினார். இளையாழ்வார் முன்பு போலவே பேரருளாளனுடைய திருமஞ்சன கைங்கர்யத்தில் நிரதராயிராநின்றார்.

## '<u>திருக்கச்சி நம்பியிடம் இளையாழ்வாருடைய ப்ரதிபத்தி விசேஷம்</u>':

திருக்கச்சிநம்பிகளிடம் பக்தி கொண்டு அவர் திருவடிகளிலே ஆச்ரயிக்க வேண்டும் என்று கருதி அவரிடத்திலே விஜ்ஞாபிக்க **' இது வர்ணாச்ரமத்துக்கடுத்த வைதீக மரியாதைக்கு போராது'** என்று அவர் மறுத்திட்டார். அவர் போனகஞ்செய்த சேடமாவது பெற்றுப் புனிதராவோம் என்றெண்ணி ஒரு நாள் நம்பியிடம் சென்று **'அடியேன் குடிசையிலே அமுது செய்ய எழுந்தருள வேணும்'** எனறு வேண்ட அவரும் இசைந்தருள, இளையாழ்வார் இல்லாத தருணத்திலே நம்பிகள் ஸ்வாமி திருமாளிகைக்கு வர அவரை ஸ்வாமியின் பத்தினி ஒரு மூலையிலே உட்கார வைத்து அமுதுசெய்ய பண்ணுவித்து பின் அவ்விடத்தையெல்லாம் கோமயத்தாலே ஸுத்திபண்ணி தீர்த்தமாடி

நிற்கையிலே, நம்பியை அழைத்துவரச் சென்ற இளையாழ்வார் நடந்த நிலைமையையறிந்து, எம்பெருமான் திருவுள்ளம் இருந்தபடிக்கு நாமென் செய்வதென்று மனம் தளர்ந்திருந்தார்.

## திருக்கச்சிநம்பி ஆறு வார்த்தை

மறுநாள் திருக்கச்சி நம்பி பக்கலில் சென்று '**அடியேன் சில நினைவுகள் நினைத்திருந்தேன்! அவை விஷயமாக நிர்ணயத்தை தேவரீர் பேரருளாளன் பாடே தெரிந்து கொண்டு அடியேனுக்கு நியமித்தருள வேண்டும்**' என்று ஸ்வாமி ப்ரார்த்திக்க, நம்பியும் '**அப்படியே**' என்றிசைந்து பெருமாளிடம் விண்ணப்பம் செய்து மறுமாற்றம் பெற்று அடுத்த நாள் இளையாழ்வாருக்கு அறிவித்த ஆறுவார்த்தைகள், **1.பரத்வம் நாமே, 2.சித் அசித் ஈஶ்வர பேதமே தர்ஶனம், 3. ப்ரபத்தியே தஞ்சம், 4.அந்திமஸ்ம்ருதி வேண்டா, 5.சரீராவஸானத்திலே மோக்ஷம், 6.பெரிய நம்பி திருவடிகளிலே ஆச்ரயிப்பது** என்பன. இங்ஙனம் ஆறுவார்த்தைகளும் அருளிச்செய்யக் கேட்ட இளையாழ்வார் இவ்விஷயமான நிர்ணயமே தாம் அறிய விரும்பி உவந்து பெரியநம்பி திருவடிகளிலே ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்ப தாக அறுதியிட்டு கோயிலுக்குப் புறப்பட்டருளினார்.

## இளையாழ்வார் மதுராந்தகத்தில் பெரிய நம்பிகளை ஆச்ரயித்தல்

அக்காலத்திலே கோயிலில் தர்சன நிர்வாகத்திற்காக இளையாழ்வாரை அங்கே வரவழைத்து நிலை நிறுத்த வேண்டுமென்று ஆவல் கொண்ட முதலிகள் பெரியநம்பியை இது உம்மால் ஆகக்கூடிய காரியம் ஆதலால் நீரே காஞ்சிபுரிக்குச் சென்று காரியம் பார்க்கக் கடவீர் என்று நியமிக்க, அவரும் குடும்ப சமேதராய் நம்பெருமாளிடம் விடைபெற்று, தேவபெருமாள் சன்னதியை நோக்கி எழுந்தருளா நிற்கையில் மதுராந்தக க்ஷேத்திரத்திலே ஏரிகாத்த ராமன் சன்னதியிலே யாத்ருச்சிகமாக சேவிக்க, '**எண்ணின பலன் எதிரே வந்து வாய்த்தது போலே இப்படியும் நமது பாக்கியம் பரிபக்குவமாவதே!**' என்று

உகந்து இனிகால விளம்பம் பொறுக்கலாதென்று அப்போதே திருவிலச்சினை சாதித்து தம்மை உய்விக்குமாறு வேண்ட பெரியநம்பியும் இவருடைய ஆர்த்தியின் கனத்தைக் கண்டு அப்போதே அவ்விடத்திலேயே பஞ்ச சமஸ்காரங்களை சாதித்து ஆளவந்தார் திருவடிகளே தஞ்சம் என்று கொண்டிருக்கும்படி நியமித்தருளினார்.

இடையே இளையாழ்வாருடைய தேவிகளும் பெரியநம்பி தேவிகளும் மனப்பொருத்தமின்றிக்கே வயிரஸ்யம் உண்டாகத் தொடங்கியது. ஸ்வாமி தேவிகளிடம் மூன்று அபசரிதங்களைக் கண்டார். 1. திருக்கச்சி நம்பி பக்கலிலே தமது திருவுள்ளத்திற்கு மாறாக நடந்து கொண்டது. 2. ஒரு நாள் ஒரு வைஷ்ணவருக்கு பிரஸாதமிடும்படி நியமிக்க உள்ளே பிரஸாதமிருந்தும் இல்லை என்று சொல்லி மறுத்தொழிந்தது. 3. ஆசார்ய தேவிகளோடே அபசாரப்பட்டது. உடனே அன்றே தேவிகளை பிறந்த இடத்திற்கு போக விட்டு ஸந்யாஸாஶ்ரமம் ஸ்வீகரிக்க திருவுள்ளமாய் பேரருளாளன் திருமுன்பே உலகெல்லாம் போற்ற மடத்தே வாழ்ந்து கொண்டு அத்தாணிச் சேவகம் புரிந்து வந்தார். ஸந்யஸிக்க ஸங்கல்பம் கொண்டு **'தொழுதெழு தொண்டர்கள் தமக்குப் பிணி யொழித்து அமரர் பெரு விசும்பருளும் பேரருளாளர்'** (பெரி.திரு-1-4-4) ஸந்நிதிக்கு எழுந்தருளி **'தேவரீர் திருவடி தாமரைகளில் கைங்கர்யம் வேண்டுவது ப்ரதிகூலங்களான இந்த ஸம்ஸார ஸம்பந்தம் வேண்டா. த்ரிதண்ட காஷாயாதிகளை தேவரீர் அடியேனுக்கு ப்ராஸிதிக்க வேணும்'** என்று விண்ணப்பிக்க, பேரருளாளரும் உகந்து இவ்வுலகில் வாழ்கின்றவரை த்ரிதண்ட காஷாயம் தரித்துக் கொள்வீர் என்றும் **'ஸ்ரீராமாநுஜம்'** என்றும் பெயர் பெற்றார்.

## ஆழ்வானும் ஆண்டானும் வந்து பணிதல்:

ஸ்வாமி ஆஶ்ரம ஸ்வீகாரம் செய்தருளி நின்றபடியை முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் கேள்விப்பட்டு ஸ்வாமி திருவடிகளிலே ஆஶ்ரயித்து பஞ்ச ஸமஸ்காரங்களும் பெற்று வாழ்ந்திருந்தார்கள். இந்த கோஷ்டியில் அன்வயித்து வாழ

வேண்டிய கோவிந்தபட்டர் காளஹஸ்தியிலே விபரீத வ்ருத்தராயிரா நின்றாரே என்று திருவுள்ளம் நொந்து இக்குறையை திருமலைநம்பி பக்கலிலே தெரிவித்து அவனைத் திருத்திப்பணிக் கொள்ள வேண்டியது உம்முடைய பாரமென்று விஜ்ஞாபித் திருந்தார் ஸ்வாமி.

ஸ்வாமிகள் ப்ரபாவம் நாள்தோறும் வளர்ந்து செல்லா நின்றது. யாதவப்ரகாசனின் தாயார் 'நம்முடைய குமாரனும் இவரை அடிபணிந்து வாழலாமே' என்று நினைத்து இந்த மனோர தத்தை மகனிடம் பலகாலும் தெரிவித்து வந்தாள். அதன்படி இதுவரையில் சிகாயஜ்ஞோபவித த்யாகம் பண்ணியிருந்த பாபத் திற்கு ப்ராயசித்தமாக பூ ப்ரதக்ஷிணம் பண்ண வேண்டியிருந்ததால் தேவப்பெருமாள் சொப்பனத்தில் சொன்னபடியே **'நம்மிரா மானுசனை ஒரு ப்ரதக்ஷிணம் பண்ணுவது பூ ப்ரதக்ஷிணத் திலும் மேம்பட்டது'** என்று நியமிக்க, திருக்கச்சி நம்பிகள் மூலமாக இனியாகிலும் இவ்வாத்மா உஜ்ஜிவிக்கும்படி நல் விரகு பார்த்தருள வேண்டி உடையவரை ஆஶ்ரயித்து ஸ்ரீவைஷ்ணவ எதி வேஷம் பூண்டு வாழ்ந்து போனான். இவ்விஷயத்தை வேதாந்த தேசிகனும் தன் எதிராஜ ஸப்ததியில் **'ஸ்வபலாத் உத்தருத** யாதவப்ரகாச:' என்றருளினார்.

**ஊமையைப் பேசவைத்தது:**

சில காலம் சென்ற பின் சன்யாசத்தை ஏற்றார். திருமகள் கேள்வனாய் இருக்கும் ஈர்ப்பாலும் கல்யாண குணங்களின் சேர்த்தியானாலும் ஸௌந்தர்யம் முதலான குணங்களாலும் தோற்று பெருமாளுடைய எண்ணங்களைப் பின் பற்றித்தொடர்ந்து பின் சென்று அடிமைகள் செய்ததால் இளையபெருமாளுக்கு **'ராமானுஜன்'** என்று திருநாமம் ஏற்புடையதாய் விளங்கிற்று. முன்பு கோதண்டபாணியாய்ப் பின் சென்று அடிமைசெய்தது போல் பின்பு த்ரிதண்டபாணியாய் அடிமை செய்யும்படி நேர்ந்தது. சேஷாசநர் என்ற சேனைமுதலியார் தாமே பாஷண்டிகளை தண்டிப்பதற்கு யானை மலை மீதுள்ள பேரருளாளன் கடாக்ஷத்

தால் த்ரிதண்டியானார் என்று ப்ரமாணங்களில் புகழ்ப்பெற்ற தன்றோ இளையாழ்வாருடைய அவதார விசேஷத்தை காஞ்சி மாநகரில் பாகவத புத்திரனாய் பாலனாயுமிருந்த ஓர் ஊமையும் **'சேஷாசநர் அவதாரம்'** என்று கோஷித்து பேசி வெளியிட்டது.

உலகப் பெருமை படைத்தவரான இராமானுசன் ஸந்யாஸ ஆஶ்ரம தர்மங்களையும் பகவத் கைங்கர்யத்துடன் சேர்த்து அனுஷ்டித்துக் கொண்டு வாழ்ந்து வரும் காலத்தில் ஆளவந்தார் விசேஷ கடாக்ஷம் பண்ணிப் பேரருளாளரை நோக்கி ப்ரபத்தி பண்ணியதற்கு ஈடாக விரோதிகளும் கழிந்து அனுகூலமான காலம் கை கூடியது. நம்பெருமான் ஒரு காலத்திலே வைகாநஸ ரீதியில் திருவாராதனம் கொண்டருளியதை நீக்கி முன் போலே பாஞ்சாராத்ர விதிப்படி நடக்கச்செய்தார்.

## திருவரங்கப்பெருமாளரையும் தேவப்பெருமாளும்:

ஸ்வாமி காஞ்சிபுரியிலே ஆழ்வான் ஆண்டான் முதலான சிஷ்யர்களுக்கு உபயவேதாந்த க்ரந்த ப்ரவசம் செய்து போரா நிற்கையில், நம்பெருமாள் ஸந்நிதியில் தர்மஞ நிர்வாககர் ஒருவரும் இல்லாத குறை தீர இவரை அவ்விடத்திற்கெழுந்தருளச்செய்ய வேணும் என்று பாரித்துக் கொண்ட கோயில் முதலிகள், அக்காலத்தில் இசைபாடி விண்ணப்பம் செய்வதில் ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பேரருளாளப் பெருமாள் ஸந்நிதிக்கு விடை கொண்டு இக்காரியத்தை செவ்வனே தலைக்கட்டிக் கொண்டு வரும்படி பெரியபெருமாள் நியமித்தருள அந்த நியமனத்தை சிரஸாவஹித்த அரையர் பேரருளாளன் ஸந்நிதிக்கு வந்து சேர்ந்து, அங்குள்ள வரம் தரும் பெருமாளரையரையும் திருக்கச்சி நம்பி யையும் முன்னிட்டுக்கொண்டு தேவப்பெருமாளைத் திருவடி தொழுது **'அத்தியூரான் புள்ளையூர்வான்'** **'எந்நெஞ்ச மேயான்'** துணிவினியுனக்குச் சொல்லுவன்' **'உறந்தரு மெல்லணைப் பள்ளிகொண்டான்'** முதலான பாசுரங்களை தேவகானத்திலேயிட்டு பாடிக்கொண்டிருக்கையில் தேவபிரானும் திருவுள்ளம் பூரித்து, வாரீர் அரையரே! உம்முடைய பாட்டுக்கு போரவுகந்தோம் ; **'நீர்**

**எது கேட்டாலும் தரக்கடவோம்'** என்று உறுதியருளிச் செய்ய, அரையரும் அருகேயிருந்த இளையாழ்வாரைக் காட்டி நம் **'இராமானுசனை நம்பெருமாளுக்குத் தந்தருளவேணும்'** என்று ப்ரார்த்திக்க **'அரையரே ஸர்வஸ்வமும் கொள்ளை கொள்ள வந்தீர்போலும் ; இனி என் செய்வது?'** விரும்பின படியே கொண்டு போக **கடவீர்'** என்று விடைக்கொடுத்தருள அரையரை முன்னிட்டுக்கொண்டு நம்பெருமாள் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார் இராமானுஜர்.

தெண்ணீர்ப் பொன்னியிலே ஆஹ்னிகங்களை முடித்துக் கொண்டு அரவணைமேல் பள்ளி கொண்ட முகில்வண்ணனைக் கண்ணாரக்கண்டு **'அடியேன் மீது இப்படியும் அருள்வெள்ளம் பெருகுவதே!'** என்று ஈடுபட்டு நிற்கையில், பெரியபெருமாள் தமது திருப்பொலிந்த ஸேவடியை இவரது சென்னி மேல் பொறித்து இளையாழ்வீர் பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மென்ற உபயவிபூதிச் செல்வத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்தோம். இனி நம்முடைய கோயிலைத் திருத்திப் பணிகொள்ளக் கடவீர் என்று நியமித்தருளியாயிற்று. அன்று முதலாக ஸ்வாமிக்கு **'உடையவர்'** என்ற திருநாமம் வழங்கி வந்தது. **(உடையவர்- உபயவிபூதியையும் தம் கையிலேயுடையவர் என்கிறபடி)** இங்ஙனே பெரியபெருமாளுடைய பேரருளைப்பெற்றதும் அருகே யிருந்த பெரியநம்பியை நோக்கி பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன்பெறுமாறு வரிவாய்வாயரவணைமேல் நம்பெருமாள் காட்டினாரே என்று பாசுரஞ்சொல்லி தேவரீருடைய திருவடி ஸம்மந்தம் பெற்ற கோளின்மையால் பெரியபெருமான் அடியேனை இப்படி விஷயீகரித்தருளினார் என்று ஆனந்தக் கண்ணீர் பெருக நின்று விண்ணப்பஞ்செய்ய, **'பெரியநம்பியும் கலியுங்கெடுங் கண்டு கொண்மினென்று'** அன்று **'ஆழ்வாரருளிச்செய்த எதிர்காலத்து பணிகளெல்லாம் பாங்காக பார்த்தருளீர்'** என்று அருளிச்செய்ய அன்று முதலாக **'தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே'** என்கிற வாழ்த்து அந்வர்த் தமாம்படி அனைத்தும் ஆராய்ந்தருளி நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸ்வங்களெல்லாம் குறையற

நடைபெறுமாறு சேமஞ்செய்து வந்தார்.

**திருவரங்கத்தமுதனாரை திருத்திப் பணிகொள்ளுதல்:**

திருவரங்கத்தமுதனார் என்பவர் கோயில் கொத்திலுள்ள வர்கட்குக் தலைவராக இருந்தார். அவர் ஒருநாள் உடையவரை வந்து பணிந்து 'பாவங்கள் கூடி பூரித்துக் கிடக்கும் அடியேனைத் திருத்தி ஸ்வாமிக்கு சேஷமாக்கும்படி தேவரீர் திருவடிவாரத்திலுள்ளாரில் ஒருவருக்கு நியமித்தருளவேணும்' என்று விண்ணப்பம் செய்ய, உடனே ஸ்வாமி ஆழ்வானை அழைத்து அமுதனாரைக் காட்டி 'இவர் நம்முடைய வாழ் முதலான நம்பெருமாளுடைய ஸ்ரீகாரியத்துக்கு பரிவராயிருப்பர்; இவரது தாழ்வுகளை பாராமல் இவரை அநுவர்த்தித்து அனுகூலராக்கி நம் பக்கலிலே கொண்டு வந்து சேரும் என நியமித்தருள, ஆழ்வானும் ஆறுமாதம் அநுவர்த்தித்து அவரைப் பரிபக்குவராக்கி உடையவர் திருவடிகளிலே கொண்டு சேர்த்தார்.

அமுதனார் ஆழ்வார் திருவடிகளில் அந்தரங்கராய் கால க்ஷேபம் செய்து வருகிறநாளிலே அவருடைய தாயார் ஆசார்யன் திருவடி அடைந்தாள். தசாஹம் கடந்த பின்பு ஏகாஹத்துக்கு நிமந்த்ரண ஸ்வாமியாக ஆழ்வான் அமுது செய்து முடிவில் 'ஸகலம் ஸம்பூர்ணம்' என்று சொல்லவேண்டிய தருணத்தில் ஸந்நிதி திறவுகோலைப் பெற்றுக்கொண்டு பிறகு புக்திருப்தி என்று ஶ்ராத்த பூர்த்தி செய்து ஸ்வாமியின் திருவடியில் திறவுகோலை ஸமர்ப்பிதித்தார். அன்று முதல் 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று கடல் சூழ்ந்த மண்ணுலக முற்றும் போற்றும்படி எமபெருமானார் நம்பெருமாள் ஸந்நிதி கைங்கர்யங்களை பரிஷ்கரித்தருளினார் என்பார்கள்.

**எம்பார் திருந்தின செய்தி கேட்டு மகிழ்தல்:**

சிவ பக்தரான எம்பாரை திருத்திப் பணிகொள்ளும்படி ஸ்வாமி தம் மாதுலாரான திருமலை நம்பியை வேண்டிக் கொண்டிருந்தார். திருமலைநம்பி சில சிஷ்யர்களுடனே

காளஹஸ்திக்கெழுந்தருளி நாடோறும் கோவிந்தபட்டரைத் திருத்தி ஆட்கொண்டார். இச்செய்தி கேட்டு உடையவர் பேரின்பம் அடைந்தார்.

**உடையவருடைய பஞ்சாசார்ய பதாச்ரித்வம்:**

தேசிகர் பணித்த குருபரம்பரா ஸாரத்தில் '**எம்பெருமானார் திருக்கோஷ்டியூர் நம்பி திருப்பாதத்திலே ரகசியார்த்தங்கள் சிக்ஷித்தார்; திருமலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய் மொழிக்கு அர்த்தம் கேட்டருளினார். ஆளவந்தார் ஆழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி ஸ்தோத்ராதிகள் அருளிச் செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலைநம்பி ஸ்ரீபாதத்திலே ஸ்ரீமத்ராமாயணம் கேட்டருளினார்**' என்றுள்ளது இங்கே அறியத்தக்கது.

**ஸ்வாமியும் திருக்கோஷ்டியூர் நம்பியும்:**

பெரியநம்பி பரம ப்ரீதியோடே உடையவருக்கு ரகசியார்த் தங்களை அருளிச்செய்து போருகையில் '**திருக்கோஷ்டியூர் நம்பி பக்கலிலே சில அர்த்த விசேஷங்கள் உண்டு; ஆளவந்தாருடைய விசேஷாபிமானத்திற்கு இலக்காக இருந்தபடியாலே அவரிடத்திலே நிதிபோல நின்றிருக்குமர்த்த விசேஷங்களையும் கேட்டு உய்யக்கடவீர்**' என்று அருளிச் செய்ய, ஸ்வாமி அதுகேட்க ஊற்றமுடையவராய் திருக்கோஷ்டியூருக்கு எழுந்தருளி நம்பி திருவடிகளிலே தண்டனிட்டு '**தேவரீர் அடியேனுக்கு ரகசியார்த்த விசேஷங்களை பிரசாதித் தருளவேணும்**' என்று கூப்பிய கையராய் பிரார்த்திக்க, அவரும் திருவுள்ளம் மகிழ்ந்து அவர் விருப்பப்படியே உபதேசிக்கத் தொடங்கினார். ரகசியார்த்தங்களை மிக எளிதாகவும் தெளிவாகவும் விளக்கியருளினார். ப்ரணவாகாரமான விமான மத்யத்திலே சேஷசாயியாய் கண் வளர்ந்தருளிகிற நல்ந்திகழ் நாராயணனான பெரியபெருமாள் விஷயத்தில் சகலவித கைங்கர்யங்களையும் செய்து போம்படி அதிலே உடையவரை ஈடுபடுத்தி நம்பி தாமும் மிகவும் பிரீதியுடன் எழுந்தருளியிருந்தார்.

அவ்வளவில் திருக்கோஷ்டியூர் நம்பி உடையவரை அருகில் வைத்துக்கொண்டு அவரைப்பார்த்து **'மேலும் சில அர்த்த விசேஷங்களை கேட்கவேணும் என்கிற அபேக்ஷை தோன்றும்படி இருக்கிறீர்'** என்று கேட்க உடையவரும் சரமஶ்லோகம் கேட்கவேணும் என்ற பெருவிருப்பம் இருப்பதைத் தெரிவித்தார். நம்பியும் அவருடைய ஆஸ்திக்ய ஆதரங்களை பரிக்ஷிப்பதற்காகவும் உபேக்ஷித்து **'இந்த முறைக்கு மீண்டும் திருவரங்கம் போய்ச் சேரும்'** என்று நியமிக்க இப்படி உடையவர் பதினேழு முறைகள் வந்து போக, பதினெட்டாம் முறையில் நம்பியும் மனமிரங்கி **'ஆகில் அவரை தண்ட ஜல பவித்ரத்துடன் வந்து கண்டு போக்கடவர் என்று தெரிவிப்பீர்'** என்று அருள்பாடிட்டு அனுப்பியருளினார்.

ஒரு சமயம் உடையவர், கூரத்தாழ்வான், முதலியாண்டான் முதலிய முதலிகளுடன் அருளாளப்பெருமாள் எம்பெருமானாரையும் தம்முடைய திருவருளால் கூட்டிக்கொண்டு வர்ணாஶ்ரம பேதமின்றி திருவாய்மொழிக்கு அர்த்தமளித்து விற்றிருக்க, ஆசார்யர்கள் எல்லோரும் உடையவர் அடிபணிந்தனர். இந்த வைபவங்களைக் கேட்ட அனந்தாழ்வானும் தொண்டனூர், மருதூர் நம்பியும் அவர் திருவடியில் ஆஶ்ரயித்து நிற்க, உடையவர் அவர்களை அருளாளப்பெருமாள் எம்பெருமானர் திருவடிகளில் ஆஶ்ரயிக்க அவர் நியமனபடி திருவிலச்சினையும் ப்ரஸாதித்து, உடையவர், குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினாரைப் போல் உங்களை இவ்விடம் சேர்ப்பித்தருளினார். ஆனால் நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிருங்கள்' என்று நல் வார்த்தை கூறினார்.

உடையவர் திருவாய்மொழிக்கு அர்த்தம் அருளிச் செய்து வருகிற போது ஒழிவில்காலமெல்லாம் (3-3-1) என்கிற திருவாய்மொழிக்கு அர்த்த நிர்ணயம் செய்து கொண்டு இருந்தபோது 'சிந்து பூ மகிழும் திருவேங்கடம்' என்கிற இடத்தில், உடையவர் முதலிகளைப் பார்த்து 'பெரிய திருமலையின் திருநந் தவனம் செய்து திருவேங்கடமுடையானுக்கு திருமாலைகட்டி

ஸமர்ப்பிப்பார் இல்லையோ? என்று கேட்டருள, அவ்வளவில் அனந்தாழ்வான் எழுந்து **'அடியேன் விடை கொள்கிறேன்'** என்று திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பித்து மகிழ்வுடன் நிற்க, உடையவரும் அப்போதே விடை கொடுத்தனுப்ப, அனந்தாழ்வானும் திருக்கோவிலூர் வழியாக எழுந்தருளிய பிறகு, திருமலையை அடைந்து உடையவர் திருவுள்ளபடி அங்கே **'இராமானுசன்'** என்கிற நந்தவனம் செய்தருளி புஷ்ப கைங்கர்யம் பண்ணிக் கொண்டு இருந்தார்.

கூரத்தாழ்வான் தம்முடைய ஸர்வ சொத்துக்களையும் அறவே துறந்து உடையவரே எல்லா செல்வமுமாக நினைத்து வந்தார். ஸ்ரீமதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமாள் கோயிலுக்குச் சென்று பெருமாளை ஸேவித்து அங்கே திருமகிழ் அடியிலே எழுந்தருளி **'த்வயம்'** விளைந்த இடம்' என்று மனம் மகிழ்ந்தார். அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள திருப்பதிகளையும் ஸேவித்து கோவில்களுக்கு எழுந்தருளி மடத்திலே புகுந்து **'இராமனுசன் என்றன் மாநிதியே'**(இராமாநுச நூற்றந்தாதி 13) **'இராமனுசன் என்றன் சேம வைப்பே'** (இராமா். நூற். 22) என்று உறுதி பூண்டு உடையவர் திருவடிகளில் அடிமைகள் செய்து கொண்டிருந்தார். அதன் மற்றை நாள் உடையவர் முதலிகளோடே திருமலைக்கு ஸ்ரீநிதியாகிற **'பொருள் படைப்பான்'** (திருவிரு.8) என்று போக முயற்சி செய்தார். அந்நிலையில் ஸ்ரீவைஷ்ணவர் தம்முடைய மடத்திலே தளிகைக்கு நெல் அளந்து தரவேணும் என விண்ணப்பம் செய்ய, எம்பெருமானாரும் தம்முடைய திருவிரலிலே சாற்றிக்கொண்டிருந்த முத்திரை மோதிரத்தை அளித்து **'இதனை பிள்ளையுறங்காவில்லிதாஸர் கையிலே கொடுத்து உமக்குண்டான நெல்லை வாங்கிக்கொண்டு போவீர்'** எனக் கொடுக்க, தாஸரும் மகிழ்ந்தார். திருவிருத்தம் 9ம் பாட்டில் . பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானத்தில் இந் நிகழ்ச்சி எம்பெருமானார் திருமலைக்குப் போவதாக பிறந்தபடி கேட்டு பிள்ளையுறங்காதாஸர் தம்மகத்தே போய் மூடிக்கொண்டு கிடந்து **'காண்கின்றகளும்'** என்கிற பாட்டை அநுசந்திக்க

**'அங்கு செய்கிற அளவென்னென்று பார்க்க ஒரு வைஷ்ண வனைப் போக விட, இப்பாட்டை அநுஸந்தித்து மோஹித்துக் கிடந்தார் என்ன! வண் பூ மணிவல்லி யாரே பிரிபவர்தாம் என்று சொல்லி போறமாட்டாற்றிலையோ என்று அருளிச்செய்தார்'** என்று விவரிக்கப்பட்டுள்ளது. இப்படி ஆச்சார்யரை பிரியில் ஆற்றாதவராய் பகவத்பாகவத விஷ யங்களில் அளவுகடந்த ஈடுபாட்டையுடையவரான இவரை உடையவர் பகவதாராதன சமயத்தில் திருமேனி ஸுத்திக்காக திருக்கைகளைப் பற்றிக்கொண்டு எழுந்தருளுவர்.

**உடையவரின் திருவேங்கட யாத்ரா வைபவம்:**

உடையவர், முதலிகளும் தாமுமாக திருவேங்கடமுடையானை ஸேவிக்க வேணுமென்று பேரருளாளனின் அநுமதி பெற்று, திருப்பதியிலே எழுந்தருளி **'விண்ணோர் வெற்பு'** என்கிறபடியே நித்யஸூரிகள் வந்து பரிமாறுமிடத்து நாட்காலால் கொண்டு செல்லலாகாது எனறு திருத்தாழ்வாரை அடியிலே எழுந்தருளி யிருந்து **'தானே தொழுமத்திசையுற்று நோக்கியே'** என்கிறபடியே திருவேங்கடமுடையான் திசை நோக்கி ஸேவிக்க, அனந்தாழ்வான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாம், **'தேவரீர் ஏறாவிடில் நாங்களும் ஏறோம்'** என விண்ணப்பிக்க உடையவரும் திருமேனி சோதனையும் பண்ணிக் கொண்டு **'பாதெநாஅத்யோஹதி'** என்ற ஸ்ரீவைகுண்டநாதனுடைய நியோகத்தினாலே பாத பீடத்தில் அடியிட்டு ஏறுமாப்போலே திருவேங்கடமுடையான் அருளப் பாடிட் டருளத் திருமலையிலே ஏறியருளித் திருப்பரியட்ட பாறையளவாக எழுந்தருளாநிற்க, **'முடியுடையவானவர் முறைமுறை எதிர்கொள்ள'** என்கிறபடியே, பெரியதிருமலை நம்பி, திருவேங்கட முடையானுடைய தீர்த்த ப்ரஸாதமும் கொண்டு ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே எதிர்கொள்ள, உடையவரும் தண்டம் சமர்ப்பித்து, தீர்த்த ப்ரஸாதமும் ஸ்வீகரித்து, **'தேவரீர் எழுந்தருள வேணுமோ? சிறியாரில்லையோ'**? என்ன, **'நாலு திருவீதியிலும் ஆராய்ந்ததில் என்னிலும் சிறியோனைக் கண்டிலேன்'** என அருளிச்செய்ய, உடையவரும் உகந்து அவருடன் திருவேங்கட

முடையானின் ஸந்நிதியிலே எழுந்தருளி தண்டம் ஸமர்ப்பித்து நிற்க, அர்ச்சகமுகேந அருளபாடிட்டருளி **'நாமுமக்கு முன்பே நம் தெற்கு வீட்டில்தானே உபய விபூத்யைய்வர்யங்களையும் தந்து ஜகத்தையடையத் திருத்தி வாழ்வித்திடும் என நியமித் தோமே, என் குறையாக வந்தீர்? என்ன – நாயின்தே!' 'கிடந்தோர் கிடக்கை'** என்றும் **'பிரானிருந்தமை'** என்றும் **'நிலையார நின்றான்'** என்று சொல்லுகிறபடியே தேவரீர் நிற்றல், கிடத்தல், இருத்தல் செய்தால் அது மிகவும் ஆகர்ஷணமாயிருக்கும். அதில் கிடையழகு கோயிலிலே, நிலையழகு ஹஸ்திகிரியிலே, காட்டியாயிற்று ; **'அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங் கடத்தானே'** என்கிறபடியே திருமலையிலே குண நிஷ்டருக்கும், கைங்கர்ய நிஷ்டருக்கும் காட்டியருளும் நிலையழகைக் கண்டு அனுபவிக்க வேணுமென்று விடை கொண்டேன் என்ன,

'இங்கு வாருமென்று திருவடிகளிலே திருமுடியை படுக்க சொல்லி, இத்தை மறவாதே நெஞ்சிலே கொண்டு தர்மனத்தை நடத்திவையும், உபய விபூதிக்கும் நீரே கடவீர் உம் அபிமானத்தில் ஒதுங்கியவர்களே, நமக்கு வேண்டியவர் கள், ஜகத்தைத் திருத்தவே நாமும்மை முதன்மையில் நின்றும் அழைப்பித்தது. உம்முடைய ஸம்பந்தமுடை யாருக்கு ஒரு குறைகளுமில்லை. 'சூழல் பல, பல' என்கின்ற படி நாம் அநேக அவதாரங்கள் செய்தவிடத்தில் ஒருவரும் அகப்படாமல் இழவோடே போனோம். அந்த இழவை நீர் தீர்ப்பீரென்று ஆறியிருக்கிறோம். அப்படியே செய்யயிரும்' என்றருளிச்செய்தார். இத்தால் திருவேங்கடமுடையானும் இவருடைய உத்தாரகத்வத்தை வெளியிட்டாராய்த்து.

**ஸ்ரீராமாயணத்தைப் பூர்த்தி செய்தார் பெரியதிருமலைநம்பி:**

உடையவருக்கு பெரியதிருமலைநம்பி ஸ்ரீராமாணய விவர ணத்தை விசதமாக அருளிச்செய்தார். ஸ்ரீராமாயணத்தை பூர்த்தி செய்து கொண்டு எம்பெருமானார் திருமலைநம்பி திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பித்து திருவரங்கம் விடை கொள்ள திருமலை

நம்பியும் **'இத்தகைய தூரம் எழுந்தருளின உமக்கு நாம் ஒன்றும் தரப்பெற்றிலோம்'** என குறைபட்டுக்கொள்ள உடையவரும் கோவிந்தப்பெருமாளை அடியேனுக்கு தந்தருள வேணும் என விண்ணப்பம் செய்தார். உடையவர் வயலாளி மணவாளனையும் பரகாலனையும் மங்களாசாஸனம் செய்தார். கோவிந்தப் பெருமாளுக்கு த்ரிதண்ட காஷாயங்களை வழங்கினார். எம்பெருமானாரும் தம்முடைய திருநாமத்தை சுருக்கி **'எம்பார்'** என்ற திருநாமத்தை சாற்றியருளினார். முதலிகள் எல்லோரும் எம்பாருடைய ஞானபக்தி வைராக்கியங்களையும் ஆசார்ய நிஷ்டையையும் கொண்டாடினர். திருவரங்கத்தமுதனார் இராமானுச நூற்றந்தாதி செய்தருளினார். அத்தை உடையவர் தம் திருவடிகளில் சம்பந்தமுடையவருக்கு நித்யானு சந்தேய மாம்படி நியமித்தருளினார். பிறகு திருமாலிருஞ்சோலை கூடலழகர் ஆண்டாளையும் ரங்கமன்னாரையும் வழி நெடுக திருக்கோவில் களில் மங்களாசாஸனம் செய்தருளினார். உடையவர் திருக் குறுங்குடி நின்ற நம்பிக்கு த்வயத்தை உபதேசித்து **'ஸ்ரீவைஷ்ணவ நம்பி'** என்ற திருநாமம் சாற்றியருளினார். திருவண் பரிசாரத்திலும் திருவாட்டாற்றிலும் திகழ்கின்ற திருமாலையும் மங்களாசாஸனம் செய்தருளினார். இப்படியே தென் திசையிலும் மலையாள நாட்டி லும் வடதேசத்தையும் அடைந்து திவ்ய ஸ்தலங்களை தரிசித்து மங்களாசாஸனம் செய்துவந்தார். துவாரகையிலும் மதுரையிலும் ஸ்ரீகிருஷ்ணபகவானை நெஞ்செனும் உட்கண்ணால் ஸேவித்து மகிழ்ந்தார்.

**சாரதா பீடம் சென்றது:**

உடையவர் காஷ்மீர தேசத்து ராஜாவை மத்திய ஸ்தானாக வைத்துக்கொண்டு அங்குள்ள அத்வைதீகளோடு வாதம் செய்து விசிட்டாத்வைதத்தை ஸ்தாபித்ததார். சாரதா பீடமானது மாயாபுரியான ஹரித்வாருக்கு வடமேற்கே 200 காதம் தூரத்தில் உள்ளது. அவ்விடத்தில் குத்ருஷ்டிகளான மாயாவாதிகள் உடையவரின் ப்ரபாவத்தைப் பொறுக்கமாட்டாது க்ஷுத்திர மந்திரங்களால் சில பூதங்களை ஏவிவிட்டனர். நாத ரூபமாய் விளங்கிய உடையவர் ஏவிவிடப்பட்ட பூதங்கள் மாய்ந்து

**போகும்படி அவற்றை விலக்கியும் அழித்தும் பிறல்பெற்று விளங்கியபடியை மாயாவாதிகள் கண்டு தம்மைச் சேர்ந்தவர்களைத் திரட்டிக்கொண்டு வந்து சங்கர மதஸ்தரான அவர்கள் ஒருசேர** நின்று வாதப்போர் செய்தனர். அப்போது ராமாநுஜ மததகஜம் **'இராமானுச முனிவேழம் மண்டிவந்தேன்றது'** (இராமா.நூ-64) என்கிறபடி மஹா கோஷத்துடன் வாதம் பண்ணுகிறவேளையில்:

**ஸாரதையினுடைய வரப்ரஸாதத்தால் அறிவு வரப் பெற்றவனான காஷ்மீர தேசாதிபதி உடையவரின் வாதத் திறமையை நேரில் கண்டு நடுநிலை வஹிக்க:**

அப்போது ஸத்வித்யை முதலிய சாஸ்திரங்களைக் கொண்டே அத்வைத வாதிகளாகிற அஜங்களை (செம்மறியாடுகளை) ஜயித்து ராமாநுஜ மத்தகஜம் கர்ஜித்து : விசிஷ்டாத்வைதமே வேதாந்தத்தின் முடிவான அரும்பொருள் என்று நிலைநாட்டியருளினார்.

வெற்றிகொண்டிருந்த எதிராஜரை அரசன் பார்த்து **'தேவரீர் ஸ்தாபித்தருளிய விசிஷ்டாத்வைத பக்ஷத்திற்கு பிரமாணம் யாது?'** என வினவினான். ஸர்வஜ்ஞரான வேத வ்யாஸ பகவானால் இயற்றப்பட்டதான வேதாந்த சூத்திரத்திற்கு வ்யாக்கியானமாய் போதாயன பகவான் இட்டருளிய இவ்விருத்தியை அநுசரித்து அதன் சுருக்கமாக செய்த டங்க, த்ரமிட குகதேவர் என்ற பெரியோர்களின் பாஷ்யமே இதற்கு ப்ரமாணம் என்றார். அரசனும் நடுநிலை எடுத்துக்காட்டுதற்காக வித்வான்களான குருமார்களை கூட்டிக்கொண்டு சாரதா தேவியின் ஸந்நிதியிலுள்ள புஸ்தகசாலையிலுள்ள மண்டபத்திற்கு விரைந்தான்.

சுவடிகளை சோதித்துப்பார்த்ததில் எதிராஜர் அருளிச செய்த விசிஷ்டாத்வைதமே எங்கும் சொல்லப்பட்டு விளக்க முற்றிருந்தபடியே காட்டினார். அவ்வரசனும் எதிராஜ விஜயத்திற்கு தோற்று அவருடைய திருவடிகளில் சரண் அடைந்தார். சங்கர மட அத்வைத வித்வான்கள் முன்பு பாணாசுர யுத்தத்தில் சங்கராதிகள் ஸ்தம்பித்து அழிவுற்றது போல் விருத்திகிரந்தம் மற்றும் முண்டான சாஸ்திரங்களாகிற ஸ்ரங்களால் அழிவடைந்தனர்.

போதாயன விருத்திக்ரந்தம் இருபது லக்ஷம் க்ரந்த எண்ணிக்கை கொண்டது. இத்தகைய கிரந்தத்தை ஒரு முறை பார்த்து அநுசந்திக்கும்படி தம்மிடம் தரவேணும் என்று அரசனைக் கேட்டுக் கொண்டார். அவர்களும் உடையவருடைய திவ்ய ஜ்ஞானத் தையும் மஹாயோகியாருக்கிற படியையும் அவர்கள் அறியாத தால் ஒரு முறை கிரந்தத்தைக் காண்பதால் அவர் பயனேதும் அடையப் போவதில்லை என்று எண்ணி அந்த க்ரந்தத்தை ஒருமுறை படிக்கக் கொடுத்தனர். அதிலுள்ள சீரிய அர்த்தங்களை எல்லாம் தம் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு அந்த கிரந்தத்தை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து பகவத் போதாய னருடைய க்ரந்தத்தை முற்றிலுமாக திருவுள்ளத்தில் தேக்கிக் கொண்டு சாரதாதேவி பாராட்டி பூஜிக்கும்படியாக ஒரு பாஷ்யத்தை இயற்றுவேன் என்று சங்கல்பித்துக்கொண்டார்.

## உடையவரின் க்ரந்தத்தை சாரதை சிரஸில் ஏந்தியது

உடையவர் செய்தருளிய வேதாந்தசாரத்தின் ஏற்ற மறிகைக்காக அதை அரசன் சாரதாதேவி கையில் வைக்க அது சிரசிலே ஏறி இருக்கக் கண்டு வித்வான்கள் அவரைக் கொண்டாடியது: அரசனும் வித்வான்களும் உடையவரைப்பார்த்து **'உம்முடைய சித்தாந்தத்தை ப்ராமாணங்களால் நிருபித்தாற் போல் ப்ரத்யக்ஷத்தாலும் நிருபித்துக்காட்ட வேண்டும்'** என்று வேண்டி நின்றனர். மேலும் **'உம்முடைய தர்ஶன க்ரந்தத்தை சாரதாதேவியருடைய கையில் வைத்தால் அவள் ஆதரித் தும் அநாதரிப்பதும் தெரிந்து விடும். ஆகையால் நீர் அப்படியே செய்யக் கடவீர்'** எனத் தெரிவித்தனர். வேதாந்தசாரத்தை தம்முடைய திருக்கைகளால் 'தெறித்து எழுதி (நான்மு.திரு-63) அரசன் கையிலே கொடுக்க வேதாந்தசார சுவடியை சரஸ்வதியின் கரத்திலே வைத்து ஸந்நிதி கதவுகளை மூடி முத்திரை வைத்து மறுதினம் விடிந்ததும் வேந்தரும் மாந்தரும் வந்து கதவுகளை திறந்துப் பார்க்க சரசுவதியின் கையிலே வைத்த வேதாந்தசார க்ரந்தம் சரஸ்வதியின் ஶிரஸிலே சிரோபூஷணமாக இருக்கக் கண்டனர்.

**ஸ்வத்யஸ்து சாரதாதேவீ காச்மீர புரவாஸிநீ '
அவிக்நம் குருமே தேவீ வித்யா தாநஞ்ச தேஹிமே "**

(காஸ்மீரத்தில் வஸிப்பவளான சாரதாதேவிக்கு மங்களம் உண்டாகுக. ஹே! ஸரஸ்வதீ தேவி வித்யாதானத்தை எனக்குக் கொடு. நான் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு யாதொரு தடையுமின்றி பலனைத்தந்திடு) என ஆதரவுடன் நின்றருளினார். சாரதாதேவி அசரீரிணியாக உடையவரைக் கொண்டாட அரசன் சரஸ்வதி பண்டாரத்திலிருந்து வ்ருத்தி சங்கரஹத்தை அவருக்கு ஸமர்ப்பித்தருளினார். அங்குள்ள பொறாமை மிக்க வித்வான்கள் வ்ருத்தி சங்கரஹத்தைப் பறித்துக்கொள்ள அதன் அர்த்தங்களை நெஞ்சில் தேக்கிக்கொண்டிருந்த கூரத்தாழ்வானை உடையவர் கொண்டாடினார்.

## பத்ரிகாஶ்ரமத்தை மங்களாசாசனம் செய்தல்:

உடையவர் பத்ரிகாஶ்ரமத்தில் பத்ரிநாராயணனை மங்களாசாஸனம் செய்தருளினார். அஷ்டாக்ஷரத்தின் உருவமாகத் திகழும் நாராயணனுடைய திவ்ய ஸ்தானத்தில் அஷ்டாக்ஷர மந்த்ர சித்தரான உடையவர் மிகவும் திருவுள்ளம் உகந்து எம்பெருமானைக் கண்ணாரக்கண்டு ஸேவித்தார். திருவெட்டெழுத்தின் உட்பொருளை உடன் வந்த முதலிகளுக்கு உபதேசித்தருளினார். மேலும் அங்கு சிங்கப்பிரான் என்ற ஸ்ரீவைஷ்ணவரை கடாக்ஷித்து அவருக்கு திருவதரியில் சேனாதிபத்யம் வஹிக்கும்படி நியமித்தருளினார். வழியில் உடையவர் ஸாலக்ராம மலையை ஸேவித்து சக்ரவர்த்தித் திருமகன் திருஅவதார ஸ்தலமான திருவயோத்தியையும், பிராட்டி திருவவதாரஸ்தலமான மிதிலா நகரையும் ஸேவித்தருளினார்.

## கூர்மமாக கண்டருளினார்:

தம்முடைய திருவடி ஸம்பந்தத்தாலே கங்காதீர்த்தங் களை எல்லாம் மங்களமாகப் பண்ணிக்கொண்டு **'கங்கையின் கரைமேல் கைதொழ நின்ற கண்டம் எனும் கடிநகரை'**

(பெரியாழ்வார் திருமொழி: 4-7-1) என்ற கண்டமென்னும் கடி நகரைத் திருவடிதொழுது காசி மாநகரைக்குறித்துப் பிரயாணப் பட்டார். காசியிலே மாதவனை ஸேவித்து புருஷோத்தமம் என்னும் ஜகந்நாதத்திற்கு செல்ல அத்தேசத்து அரசனால் கௌரவிக்கப் பட்டார். பிறகு உடையவர் ஸ்ரீகூர்மத்திலே எம்பெருமானை மங்களாசாஸனம் செய்தார். கேசவாதி பன்னிரண்டு திருமண் காப்புகளையும் அணிந்து கொண்டு ஶ்வேத குண்ட தீர்த்தத்தை யும் ஸ்வீகரித்து கரையேறி வணங்கி தொழுவதற்கு உரிய விஷயம் யாது? என சந்தேகித்து நின்றார். அப்போது அவரது சந்தேகம் தீரும்படி திருக்கரங்கள் முதலான அவையவங்களை வெளியே நீட்டி கூர்மமான திருவடியை காட்டி தன் முதுகிலே சங்கு சக்கர அடையாளத்தையும் திருத்தமுற காட்டியருள **'அங்கோர் ஆமையதாகிய ஆதி நின்னடிமையை அருள் எனக்கு'** (பெரிய.திரு.5-3-6) என பிரார்த்தித்து நின்றார். ஸ்ரீஜகந்நாதத்தில் உடையவரைக் காணாது அலமந்த முதலி களுக்கு ப்ராஹ்மண ரூபியாய் வந்த புருஷோத்தமன் நியமனப்படி ஸ்ரீகூர்மத்தில் அவரைக் கண்டுகளித்தார். சிம்ஹாசலத்தில் ஸ்ரீவராகநரசிம்மனை மங்களாசாஸனம் செய்தார். சீகாகுளம் என்கிற பட்டணத்தில் பாஞ்சாலராயன் என்கிற எம்பெருமானை உடையர் ப்ரதிஷ்டை செய்தார். வழி நெடுக ஸ்ரீஅகோபிலம் என்று ப்ரஸித்தமான சிங்கவேள்குன்றிலே அழகியசிங்கரையும் மங்களாசாஸனம் செய்தார். பின்பு திருமலைநம்பியை முன்னிட்டுக் கொண்டு திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது **'அந்தரா தித்ய வித்தையில்'** வர்ணிக்கபட்ட வேதாந்தவேத்யனான வடிவை திருமலையில் நின்ற நிலையில் அநுசந்தித்து தியானத்துக்குரிய வஸ்து திருவேங்கடமுடையானே என்று அறுதியிட்டு பெரிய பிராட்டியோடு உண்டான ஸேர்த்திக்கு திருப்பல்லாண்டை அநுசந்தித்தார்.

**பாஷண்டிகளை நிர்த்தாரணம் செய்தல்:**

பாஷண்டிகள் தங்கள் நாயனார் என்று விவாதம் கொண்டாடின திருவேங்கடமுடையானை விஷ்ணுவாக

நிர்த்தாரணம் செய்ய அருளினார். இளையாழ்வாரும் அப்போதே புறப்பட்டருளித் தொண்டமானாற்றூர் வழியாக திருமலையிலிருந்து இறங்கத் தொடங்கினார். அவ்வளவில் உடையவருடனே **'தாழ்சடையும்'** என்ற பாசுரத்தில் (மூன்றாந்திருவந்தாதி – 63) ஆழ்வார் அனுபவித்த ஹரிஹராகாரம் (ஹரியும் ஹரனும் இசைந்த வடிவு) ஒத்திருக்கையால் சைவர்கள் அதனைக் கண்டு, **'நம்நாயனார்'** என்று வணங்கி வந்தனர். உடையவரும் அவர்களுடன், **'உங்கள் தம்பிரானுக்கு அஸாதாரண சிஹ்நமான (சிறப்பான அடையாளமான) திரிசூலத்தையும் உடுக்கையையும் : எங்கள் பெருமாளுக்கு அஸாதாரணமாக திருவாழி திருச் சங்குகளையும் பண்ணித் திருவேங்கடமுடையான் திருமுன்பே வைத்தால், அவர் எவற்றை எடுத்துத் தாங்குகிறாரோ அவற்றைக் கொண்டு அவருடைய ஸ்வருபத்தை நிர்ணயம் பண்ணக்கடவோம்:'** என்று நியாயம் பேசி அவ்வாறே அவ்வாயுதங்களை அவர் ஸந்நிதியிலே வைத்துக் கருவறையைச் சோதித்துத் திருக்காப்பைச் சேர்த்துப் புறப்பட்டு வெளியே வந்து மறுநாள் விடியற்காலைத்தில் திருக்காப்பை நீக்கி ஸேவித்தபோது **'கூராராழி வெண்சங்கேந்தி'** (திருவாய் மொழி 6-9-1) த்ரிசூல டமரகங்களை (சூலமும் உடுக்கையும்) காற்கடை கொண்டு எம்பெருமான் நிற்கக் கண்டனர்.

உடையவரும் மகிழ்ச்சிக் கண்ணீர் பெருக்கி சைவர்களைத் தம் திருவடியைத் தொட்டு வணங்கச் செய்து எம்பெருமான் திருவேங்கடமுடையானிடம் **'க்ஷமஸ்வ புருஷோத்தம'** என்று அநுசந்தித்திக்கச் செய்து க்ஷமை கொண்டு விடைகொண்டார். திருவல்லிக்கேணியில் ஸ்ரீபார்த்தசாரதியையும் மயிலை நகரில் பேயாழ்வார் திருவவதார ஸ்தலத்தையும் திருநீர்மலை, திருநின்றவூர் முதலிய திவ்யதேசங்களையும் மங்களாசாஸனம் செய்தருளியது. காஞ்சி மாநகரில் அத்திகிரி அடியில் அழகிய சிங்கரையும் அதன் உச்சியில் பேரருளாளனையும் கச்சிவெ:. காவில் சொன்னவண்ணம் செய்த பெருமாளையும் மங்களா சாஸனம் செய்து திருக்கடல்மல்லை, திருவிடவெந்தை, மதுராந்தகம், திருவயீந்திரபுரம், திருக்கண்ணபுரம் முதலிய திவ்ய

தேசங்களில் எம்பெருமான்களையும் மங்களாசாஸனம் செய்தார். திருப்புல்லாணியில் தர்ப்பசயனமழகியாரையும் கருணாகரப் பெருமாளையும் சேவித்து, சேது மூலத்தில் சீதா பிராட்டியின் முகமலர்ச்சிக்குக் காரணமாயிருந்த சேதுவின் மேல் பெருவழி உண்டாக்கி தம்முடையாரை நடைக்கொண்டு சென்று கிட்டி **'அடைத்து உடைத்த'** (முதல் திருவ-2) இடத்திலே படிந்து குடைந்து நீராடி **'மஹாதீர்த்தம்'** என்ற அதன் பெயரை பொருள் படும்படி செய்து முதலிகளும் தாமும் பெரிய ஆரவாரத்துடன் தநுஷ் கோடியைக் கடாக்ஷித்தருளி கங்கை முதல் ஸேதுவரை தம்முடைய தரிசனத்தை நிலைநாட்டி அங்குண்டானவர்களாய் தரிசனத்துக்குப் புறம்புள்ளார்களாய் எதிரிட்டு வந்த வித்வான் களை ஸமுத்ரம் கோஷிக்குமாபோலே சாஸ்த்ர கோஷத்தினால் குலை நடுங்கச் செய்து, அதன் பிறகு, **'தேவதேவனைத் தென்னிலங்கை எரியெழச்செற்ற வில்லியைப் பாவநாசனைப் பங்கயத் தடங்கண்ணனைப் பரவுமினோ'** (திருவாய்மொழி 3-6-2) என்று அவர்களுக்கு உபதேசம் பண்ணினார். மேலும் **'கல்லாதவர் இலங்கை கட்டழித்த காகுத்தனல்லால் ஒரு தெய்வம்யானிலேன்'** (நான்முகன் திருவந்தாதி -53) என்றும், **'சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்'** (திருமாலை-7) என்றும் தம்முடைய ஸித்தாந்தத்தை வெளியிட்டார். மேலும், அநேக ப்ரமாணங்களைக் காட்டியும் அவர்களைத் திருத்தியருளினார்.

## திருவரங்கம் திரும்புதல்:

பெரியகோயிலான கோவிலுக்கு எழுந்தருளவேணும் என்று அவா ஏற்பட குதூகலத்துடன் புறப்பட்டருளினார். உடையவர் தென்திருக்காவிரிக் கரையிலே எழுந்தருளியதைக் கண்டு முதலி யாண்டான் முதலியோர் அவரைக் கொண்டாடினர். அவ்வளவில் **'வேதாந்தாசார்யார் பட்டர் வந்தார் ; காலைப் படித்தான், வாசாவிஜயித்கிவிஜயத்திலே கிருஷ்ணாராயன் வந்தான் நாலு கவி பெருமாள் வந்தார்'** என்று விருதுகள் ஊதி வரும்

முறைபோல், இராமானுசனுடையாரும் **'எதிராஜன் வந்தான், எதிராஜன் வந்தான், எதிராஜன் வந்தான், எதிராருமில்லா தான் வந்தான்'** என்கிறபடி ஆரவாரித்துக் கொண்டு ஆனந்தத்துடனே புறப்பட்டு, நந்திகிராமத்திலிருந்து ஸ்ரீபரதாழ்வான் ஸ்ரீசத்ருக்நாழ்வான் தொடக்கமானவர்கள் ஆனந்தத்துடன் எதிர்கொண்டு பெருமாளை வரவேற்பது போல், முதலியாண்டான் தொடக்கமானவர்கள் அப்படியே புறப்பட்டு இராமானுசனை எதிர்கொண்டு திருவடிகளிலே தங்கள் முடியை மடுத்து ஸேவித்து தொழுவது எழுவதாய் தம்முடைய பிரிவாற்றாமை தீரும்படியாக அவரை கண்களாரப் பருகி நின்றனர். உடையவர் திருக்காவிரியில் நீராடி திருமண்காப்பு சாற்றியருளி பெரியபிராட்டியார் தொடக்கமாக நம்பெருமாள் அளவும் மங்களாசாஸனம் செய்தருளினார். பெருமாள் தாமும் தேசாந்திரம் சென்று மீண்ட மகனைக் கண்ட மாதாவைபோல் (திருவரங்கத்துள் ஓங்கும் ஒளியுலார் தாமே தந்தையும் தாயும் ஆவர்' (திருமாலை – 37) என்னும்படி திருவருள் செய்து திருக்கண்களால் நோக்கி அருளி தீர்த்தப் ப்ரஸாதங்களும் ஸ்ரீசடகோபனும் ப்ரஸாதித்தருளி **'எம்பெருமானார் தரிசனம்'** என்று நாம் கட்டளை இட்டபடியே **'எங்கும் தெரிந்து'** (பெரியா.திரு.2-6-2) **'நன்றாக நிலைநாட்டி வந்தீரோ'** என்று அன்புடன் வினவி அருளினார். இவ்வாறு எங்கும் தெரிந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழித்து அரங்கன் அம்மானுக்கே காதல் செய்து தாமும் அரங்கன் கழல் சென்னி வைத்துத்தானதில் மன்னியமர்ந்தார். அத்யயன உத்ஸவம் முதலியவற்றை சிறப்புறச் செய்தார். வருடந்தோறும் மாதந்தோறும் நடக்க வேண்டிய உற்சவ கைங்கர்யங்களை முறைப்படுத்தி அதன்படி நடப்பித்தார். ஒரு நாள் பெருமாள் ஆயிரக்கால் திருமண்டபத்தின் மேலே கோடை கொண்டாடி உலாவிவரும்போது முதலியாண்டானும் கூரத்தாழ் வானும் உடன் கூடி பெருமாளை அநுபவித்து சேவித்து நின்றனர். ஆழ்வான் முதலியாண்டானைப் பார்த்து **'நம்பெருமாள் அநுபவத்தின் வெளிப்பாட்டில் தேவரீருக்குத் தோற்றும் உபாயஉபேயங்கள் இருக்குமாறு எங்ஙனே'?** என்று கேட்க முதலியாண்டானும் **'பொருந்தவிட்டு திருவடி மலர்கள் உபாயம், திருமேனி உபேயம்'** எம்பெருமானாரை ஒழிந்தபோது,

உசாத்துணை ஏத்தின ஆழ்வார்கள் என்று அறுதியிட்டு இருப்பேன். அநன்ய ப்ரயோஜனரா இருப்பார், இக்கரையில் கிடையாமை யாலே அது எங்ஙனம் எனில் ப்ரபன்னனுடைய அத்யவஸாயம் க்ஷாமகாலத்தில் காணலாம். ப்ரபன்னனுடைய அநுஷ்டானம் விசேஷ திவஸங்களில் காணலாம். அநன்ய ப்ரயோஜனரை விரஜைக்கு அக்கரையில் காணலாம் என்று கேட்டிருக்கை யாலே இப்படி அநுசந்திப்பேன்' என்று அருளிச்செய்தார். எம்பெருமானையும் எம்பெருமானாரையும் பற்றி இருப்பர் இருகரையர் ஆன கூரத்தாழ்வானும் முதலியாண்டானும் எம்பெரு மானார் ஒருவரையே பற்றி இருப்பர் வடுகநம்பி. ஆசார்ய அபிமானமே உத்தாரகம் என்ற வார்த்தைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர் வடுகநம்பி.

**ஆழ்வானைத் தம்முடை தாளிணைகளாகவும்,**
**ஆண்டானைத் திருவடி நிலைகளாகவும்**
**கருத்தறிந்து பிரியாதிருந்த எம்பாரைத் திருவடி நிழலாகவும்**
**அருளாளப் பெருமாள் எம்பெருமானாரை உயிர் நிலையாகவும்**
**பிள்ளையுறங்கா வில்லிதாஸரை திருத்தோள்களாகவும்**

பெரியநம்பி, பெரியதிருமலைநம்பி, திருக்கோஷ்டியூர் நம்பி, திருமாலைஆண்டான், திருவரங்கப் பெருமாள அரையர் ஆகிய ஐந்து ஆசார்யர்களை ஐந்து திருவடிகளாகவும், ஆசார்யர்கள் ஐவரும் உடையவர் திருவனந்தாழ்வானுடைய அவதாரமாக வந்ததால் அவருடைய ஐந்து தலைகளாக இருப்பார்கள். திருக் குருகைப்ரான்பிள்ளானைப் பிள்ளையாகவும் மற்றுமுண்டானவர் களை சிஷ்யர்களாகவும் எம்பெருமானார் அபிமானித்திருந்தார்.

ஆழ்வார் திருநாமத்தை உடையவர் தமக்கு சிஷ்யராயும் புத்திர ஸ்தானத்திலிருந்த திருக்குருகைபிரான் பிள்ளான் மிகவும் அநுவர்த்தித்து வேண்டிக் கொண்டதால் எம்பெருமானார் **'எதிராஜர் பேரருளால்'** (உபதேச ரத்தின–73) எனும்படி அவரை அருள்செய்து அனுமதித்து திருவாய்மொழிக்கு ஸ்ரீவிஷ்ணுபுராண ஶ்லோக எண்ணிக்கையிலே ஆறாயிரம் க்ரந்தங்களில் ஒரு வியாக் யானம் இடச்செய்தார். ஒன்பதினாயிரம் க்ரந்த ஸங்க்யையான

ஸ்ரீபாஷ்யத்திற்கும் திருக்குருகைப்பிரான் பிள்ளானே ப்ரவர்த்தகராக அநுமானிக்கப்பெற்றார்.

**உடையவர் இரண்டாவது தடவை ஸ்ரீபாஷ்யம் தொடங்கி தலைக்கட்டியருளியது:**

சேஷத்வாதிகளே ப்ரதான நிருபகமாக ஆத்மாவுக்கு அறுதியிட்டு மற்றும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு ஸூத்ர வாக்கியங்களை ஒருங்க விட்டு இப்பண்முகவாக ஸமன்வயாத்யாயம், அவிரோதாத்யாயம், ஸாதனாத்யாயம், பலாத்யாயம் ஆகிய நான்கு அத்தியாயங்களிலும் வேதாந்தார்த்த நிருபணமான பாஷ்யத்தை அருளிச்செய்து அதனை சாரதா பீடத்திற்கு அனுப்பி உலகோரறிய அதை நன்கு வெளிப்படுத்த வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். சரஸ்வதியும் ஸ்ரீ கோசத்தை தன் முடிமேற்கொண்டு உடையவருக்கு **'ஸ்ரீபாஷயக்காரர்'** என்று திருநாமம் சாத்தி மகிழ்ந்தாள். அப்படியே வருகிறபோது தும்பையூர் கொண்டி என்பார் ஒரு இடைக்குல மூதாட்டி அவர்களுக்கு தயிர் விற்று அதற்கு விலையாக பொருள்வேண்டி நின்றவளுக்கு கிடாம்பியாச்சான் ஸ்ரீபாத தீர்த்த தளிகை ப்ராஸாதங்களும் ப்ராஸாதித்தார். அதனால் அவளுக்கு சீரிய ஞானம் கைவரப்பெற்று **'அடியேனுக்கு தயிருக்காக விலைபொருள் ஒன்றும் வேண்டாம், பரமபதம் வேண்டுகிறேன்'** என்று உரைத்தாள். அதற்கு கிடாம்பியாச்சான் 'பரமபதத்தை **திருவேங்கடமுடையான அன்றோ கொடுக்க வேண்டும்**' என்ன அவளும் **'திருவேங்கடமுடையானுக்கு தேவரீர் ஒரு சிறு முறிச்சீட்டு கொடுத்தருள வேண்டும்**' என்று ப்ரார்த்திக்க அவரும் அவ்வாறே எழுதிக்கொடுத்து, அதை எடுத்துக்கொண்டு திருமலை நோக்கிச்செல்ல, திருவேங்கடமுடையான் அவள் எதிரே வந்து முறியை வாசித்துப்பார்த்து அங்கேயே திருநாட்டை அவளுக்கு நல்கி அருளினான். திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய் மொழிக்கு ஆறாயிரப்படி வியாக்யானம் செய்தருளினார். உடையவர் எழுபத்தி நான்கு ஸிம்ஹாசனாதிபதிகளும் ஒன்பது ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸேவிக்க வாழ்த்தி அருளினார். இவ்வாறு

ஸமஸ்க்ருத வேதம் திராவிட வேதம் என்ற உபயவேதாந்தங் களிலும் விளக்கப்படுபவனாய் எம்பெருமானாருடைய ப்ராபாவம் இருக்கும்படி.

எம்பெருமானார் ஏகாந்தமாக ஸேவித்துக்கொண்டு **'அடிமை செய்வர் திருமாலுக்கே'** (திருவா.மொ.6-5-11) என்கிற படி இருவருமாக சேர்த்தியிலே தாமும் இராமானுசன் என்பது வெளிப்படும்படி **'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி'** என்று எடுத்து கைநீட்டிக் கொண்டு கைங்கர்யபரராய் நிற்கிறவராய். தம்முடைய முற்பட்ட வாழ்க்கையை அநுசந்தித்து மிகவும் ஆர்த்தராய் **'பகவந்நாராயணாபிமதாநுரூப'** என்று தம்முடைய அபராதங் களைப் பார்த்து வெறுக்காதபடி எம்பெருமான் திருமார்பில் உறைபவளான பிராட்டியைப் பற்றித் தான் பண்ணுகிற சரணாகதி அமையவேண்டிய முறையில் அமையும்படி அபேக்ஷிக்க அவளும் அதை எடுத்து அவள் முன்னாக **'அகில ஹேய ப்ரத்யநீக'** என தொடங்கும் சூர்ணிகையாலே **'சொருப குண விபூதிகளாலே பரிபூர்ணனாய் இருக்கிற ஸ்ரீமந்நாராயணனை சரண வரணம்'** பண்ணி அதை அடுத்த உத்திரவாக்கியத்தில் பெரிய பெருமாள் தேற்றியருளிய சரணாகதி கத்யத்தையும் தம்முடைய தோஷங்களை நினைவுபடுத்தி அதனை முன்னிட்டு பெரிய பெருமாள் திருவடிகளிலே சரணம் புகுந்து தம்முடைய நிலையைப் பேசுகிற ஸ்ரீரங்க கத்யத்தையும் ப்ரபத்தியாலே பெறுவதாகத் தலைக் கட்டுகிற ஸ்ரீவைகுண்ட கத்யத்தையும் அருளிச்செய்து தேவர்களுக்கும் எட்டாத மறைநிலமாய் இருக்கும் பரம ரகசியத்தை ப்ராகாசிப்பித்தருளினார்.

## உடையவர் முதலியாண்டானை த்ரிதண்ட ஸ்தானியராக அபிமானித்தது:

உடையவர் ஆஶ்ரம ஸ்வீகாரம் பண்ணியருளின பின்பு ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்த முதலிகள் எல்லாரும் **'சரீர சம்பந்தி களை விட்டு விட வேண்டிற்றே'** என்று விண்ணப்பம் செய்ய உடையவரும் **'நம் முதலியாண்டானைத் தவிர ஸந்யஸித்தோம்'**.

**என்று அருளிச்செய்தார். இப்படி அருளிச் செய்யாலாமோ? என்று முதலிகள் விண்ணப்பம் செய்ய உடையவரும் 'கையில் த்ரிதண்டத்தை கைவிடிலன்றோ முதலியாண்டானைக் கைவிடுவது!'** என்று அருளிச்செய்தார்.

உடையவர் நம்பெருமாள் அவப்ருதம் கொண்டாட எழுந்தருளும்போது முதலியாண்டான் திருக்கைத் தலத்தை பற்றி எழுந்தருளி மீண்டும் எழுந்தருளும்போது பிள்ளையுறங்கா வில்லிதாஸர் திருக்கையைப் பற்றி எழுந்தருளுவார். (ஜன்மம் உயர்ந்திருக்க தாழ நின்றோமே என்கிற அபிமானம் முண்டிரே நமக்கு எல்லோருக்கும் அக்குறையும் இல்லாதவாறே இவர்).

பெரியநம்பியும் மாறநேரி நம்பியும் ஆளவந்தாருடைய சீடர்களாவர். மாறநேரிநம்பி கடைசி காலத்தில் நோய்வாய்ப் பட்டு மிகவும் துன்புற்றார். மரணத்தருவாயில் எம்பெருமானை நினைப்பதற்கும் சக்தியற்றதாய் இருந்ததால் கலக்கமுற்றார். இதைக் கண்ட பெரியநம்பி பயப்பட்டபோது, எம்பெருமானார் வராகபெருமாள் அருளிய சரமஶ்லோகங்கள் இரண்டையும் அவருக்கு நினைவுபடுத்தினார். மாறநேர்நம்பி த்வயாநு சந்தானத் துடனே திருநாட்டுக்கு எழுந்தருள பெரியநம்பி அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார்.

**உடையவர் ஓர் ஊமைக்கு அருளிச்செய்தது:**

ஒரு நாள் உடையவர் ஓர் ஊமையை கடாக்ஷித்து ஏகாந்தத்திலே வைத்துக்கொண்டு தம்முடையதிருமேனியை ரக்ஷகமாக காட்டியருளினார். யாருக்கும் எளிதில் கிடைக்காத விசேஷ கடாக்ஷத்தை கூரத்தாழ்வான் கதவின் புரையிலே கண்டு மூர்ச்சித்துத் தெளிந்து **'ஐயோ! ஒன்றும் அறியாதே பிறந்திருந்தேனாகில், இப்பேற்றை அடியேனுக்கும் இரங்கி அருள் செய்திருப்பர். கூரத்தாழ்வானாகப் பிறந்து சாஸ்திரங் களைக் கற்கையாலேயன்றோ தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை அடியேனுக்குக் காட்டித் தந்தருளாமல் ப்ரபத்தியை உபதேசித்து விட்டார். ஆகையாலே எம்பெருமா**

**னார் திவ்யமங்கள விக்ரஹும் அடியேனுக்குத் தஞ்சம் என்கிற நிஷ்டைக்கு தகுதியற்றவனாகி விட்டேனே!'** என்று ஆழ்வான் வெறுத்துக் கொண்டார். திருக்கோஷ்டியூர் நம்பி உடையவருக்கு **'ஸதாசார்ய விக்ரஹமே'** (திருமேனியே) **'ஸதாத்யேயம்'** (எப்போதும் த்யானிக்கக்கூடியது) **'தந்நாமமே ஸதாஜப்யம்'** (அவருடைய நாமமே எப்போதும் ஜபிக்கத்தக்கது) என்று அருளிச் செய்தார். உடையவர் வேதாந்தார்த்தத்தை விளக்கி அருளிக் கொண்டு அறுபது ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தார்.

ராஜமஹேந்த்ர பெருமாளரையருக்கு அரங்கமாளிகை என்ற ஒரு குமாரருண்டாய், அவர் பித்ரு வசனாத்யுல்லங்கநம் பண்ணி அவிநீதராய் திரிகின்ற நாளிலே உடையவர் அறிந்தருளி, ஸ்ரீபாதத்திலுள்ளவர்களை அழைத்தருளி வலிய பிடித்துக்கொண்டு வரச்சொல்லி அருளிச்செய்ய, அவர்களும் அரங்கமாளிகையை அபிமதஸ்தலத்தில் நின்றும் பிடித்துக்கொண்டு வந்து திருமுன்பேவிட, உடையவரும் 'பிள்ளாய்! நம்மோடு ஒட்டற்று நீ திரிந்தாலும் நாம் உன்னை விட்டுக் கொடுப்பதில்லை காண்' என்று பேருளாளர் ஸந்நிதியிலே அழைத்துக் கொண்டெழுந் தருளி திருக்காப்பை அடைத்து திரிய ஒரு வட்டம் பகவத்ஸம் பந்தம் பண்ணியருளி, ரஹஸ்யார்த்தத்தையும் ப்ரஸாதித்தருளி, தம்முடைய திருவடிகளிரண்டையும் அவர் தலையிலே வைத்தருளி 'நீ பற்றிப் போந்த காலுக்கும் நம்முடைய காலுக்கும் ஏதேனும் வாசி கண்டாயோ? அது நரகாவஹம், இது மோக்ஷாவஹம்.

இத்தையே தஞ்சமாக நினைத்திடும்' என்று பூர்ணமாக கடாக்ஷித்து திருவடிகளைக் காட்டியருளினார். அன்று தொடங்கி அப்படியே ப்ரபத்தி பண்ணி போந்தாரவர். இந்த ரஹஸ்யத்தை பிள்ளை அடியேனுக்கு அருளிச்செய்து, உடையவர் திருவடிகளையே தஞ்சமாக காட்டி அருளினார். அன்று தொடங்கி அப்படியே ப்ரபத்தி பண்ணிப்போறாவன். உடையவருடைய உத்தாரகத்வ விஸிஷ்டமான க்ருபா மாதர ப்ரஸந்தா சார்யத்வத்துக்கு இந்த இரண்டு விருத்தாந்தமும் ப்ரமாணமாக அந்யவஸிக்கபோரும் அறிவுடையார்க்கு. இன்னமும் இவ்வர்த்தத்தை ஸத்கரிக்கைக்காக

உடையவர்க்கு முன்புள்ள முதலிகளுடைய திவ்ய ஸூக்திகளும், ஸ்வப்ன வ்ருத்தாந்தங்களும் பரக்க ப்ரதிபாதிக்கப்படுகிறது மேல்.

**கூரத்தாழ்வான் கண்பார்வை இழந்தது:**

சோழராஜன் தன் வித்வான்களிடம் **'சிவாத்பரதரம் நாஸ்தி'** என்று கையெழுத்திட்டு வாங்கிக்கொண்டான். ராஜமந்திரியான நாலூரான் ராமானுஜர் ஸ்ரீரங்கஸ்தலத்தில் ஆறுதரிசனங்களையும் ஆழமாக அறிந்தவராய் உலகோர் அனைவரும் **'இவர் பகவானுடைய அவதாரமே'** என்று நிச்சயிக்கும்படியான வைப்வத்தை உடையவர். அவரே பரத்துவத்தை அறிந்தவர். ஆகையினால் அவரை கையெழுத்திடச் செய்யவேண்டும் என கூறினான். இச்செய்தியை கூரத்தாழ்வான் திருச்செவியிலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தெரிவிக்க கூரத்தாழ்வான் விண்ணப்பித்ததன் பேரில் உடையவர் தம்முடைய த்ரிதண்ட காஷாயங்களை ஆழ்வானுக்குக் கொடுத்து தாம் வெள்ளைச் சாற்றிக் கொண்டு திருநாராயணபுரம் எழுந்தருளினார். இச் சம்பவத்தால் ஆழ்வானும் பெரியநம்பியும் கண்பார்வை இழந்தனர். கொங்கில்பிராட்டி உடையவர் திருவடிகள் சம்மந்தம் பெற்றபடியும் உடையவர் அவளுடைய அனுஷ்டானத்தை ஆராய்ந்து முதலி களை அமுது செய்ய நியமித்தருளினார். கொங்கில்ப்பிராட்டி என்பது அந்த அம்மையாருக்கு ஸ்ரீராமானுஜர் அளித்த தாஸ்யநாமம். உடையவரும் முதலிகளும் அமுது செய்ய தளிகை ப்ராஸதத்தை ஸ்வீகரிக்கப் பெற்றதால் கொங்கில்பிராட்டியின் பர்த்தா உடை யவர் திருவடிகளில் ஆஸ்ரயித்து உடையவருக்கு த்ரிதண்ட காஷாயங்களைக் கொடுத்தருளினார்.

**பன்னிரெண்டாயிரம் சமணர்களை வாதில் வென்றது:**

அங்கிருந்து தொண்டனூர் வழியாகச் செல்லுகையில் சோழ மன்னனின் ராஜகுமாரியை புத்திஸ்வாதீனத்திலிருந்து மீட்கச்செய்தார். அரசனும் அரசியும் மற்றும் அரண்மனையிலுள்ள பலரும் ஸ்ரீவைஷ்ணவதாஸர்களாகி ஸ்ரீராமானுஜரின் சீடர்கள் ஆனார்கள். இதைக்கண்ட சமண குருமார்கள் கொதிப்

படைந்தார்கள். மன்னன் மீது கோபம் கொண்டு இராமனுஜனை வாதில் வென்று அடிமை கொள்வோம் என்று சூளுரைத்தார்கள். சமண குருமார்கள பனிரெண்டாயிரம் பேர்கள். சமணத் தலைவன் இராமானுசரை சந்தித்து 'தங்கள் ஒவ்வொருவருடனும் தனித் தனியே வாதம் செய்ய வேண்டும்!'' என்று கேட்டார். அதற்கு இராமானுசர் 'நீங்கள் அத்தனைபேரும் ஒட்டு மொத்தமாக ஒன்று சேர்ந்து வாதத்திற்கு வாருங்கள்' என்று கேட்டுக் கொண்டார். போட்டியன்று ஸ்ரீராமானுஜர் மண்டபத்தின் ஒருபுறம் தம்மை எவரும் காணாதபடி திரைகட்டி அமர்ந்து கொண்டார். திரை மறைவிற்கு முன்புறம் பன்னிரெண்டாயிரம் சமணர்களும் ஏககாலத்தில் கேள்விகளைத் தொடுக்க, அனந்தனின் அவதார மான இராமானுஜரும் ஆயிரம் நாக்குப் படைத்த ஆதிசேஷ னானார். அயிரக்கணக்கான சமணர்களின் கேள்விக்கும் அக்கணமே பதில் கொடுத்தார். சமணர்கள் தங்கள் தோல்விகளை ஒப்புக் கொண்டனர். எண்ணற்ற சமணர்கள் வைணவத்தில் சேர்ந்தனர்.



## செல்லப்பிள்ளையும், திருமண்காப்பையும் ஸ்வப்னத்தில் காணல்:

தொண்டனூரில் உடையவரும் வேதாந்தவ்யாக்யானம் பண்ணிக்கொண்டிருந்தபோது திருக்கையில் திருமண் செலவழிந்து போக சாத்துகைக்கு திருமண் பெற்றிலோம் என்று கவலையுடன் மூன்று தினங்கள் அமுது செய்யாமல் கிடந்தார். திருநாராயணப் பெருமாள் உடையவர் கனவிலே எழுந்தருளி 'எதுகிரி

சிகரத்திலே' திருமண் உண்டு என்று அருளிச்செய்ய உடையவரும் விஷ்ணுவர்த்தனராயனை அனுப்பித்து தாம் கண்டபடியினை அறிவிக்க உடையவரின் நியமனப்படி காடுகளை வெட்டச்செய்து வழி உண்டாக்கினான். மறுபடி ஸாதித்த கனவுப்படி திருத்துழாய் கொழுந்துகள் அடையாளமாக கல்யாண ஸரசின் கரையில் திருநாராயணன் எழுந்தருளி இருக்கும் ஓர் புற்றைக் கண்டு களித்தார். உடையவரும் சொப்பனம் கலைந்து விழித்தெழிந்து திருத்துழாய் கொழுந்துகளை குறியாகப் பற்றி மண்புற்றை நீக்கின அளவில் திருப்புற்றின் அடியிலே ஸேவை ஸாதித்த திருநாராயணனுக்கு திருப்ரதிஷ்டை பண்ணி வைத்து 'ஒரு நாயகம்' என்கின்ற திருவாய்மொழியை அவருக்கு ஸமர்ப்பித்தார். கல்யாண ஸரசிலே வடமேல் மூலையில் இராமானுசரும் த்ரிதண்டத்தாலே கீற பாலாறு போலே பொங்கி குழம்புகிற திருமண் குழியிலே கண்டு தண்டனிட்டு அந்த வெள்ளை நிறமான மண்ணை கையில் எடுத்து திருமண்காப்பு சாத்தியருளி திருக்கரத்தில் பிடித்த முக்கோலுடன் ஸ்ரீபாஞ்சராத்ர ஸாத்வத ஸம்ஹிதையாலே ஸ்ரீரங்கராஜபட்டர் திருக்கையாலே ப்ரோக்ஷணம் தொடக்கமான திருப்ரதிஷ்டையும் பண்ணிவித்தருளினார். கனவிலே காட்சி யளித்து 'நம் உற்வச மூர்த்தியான ராமப்பிரியர் இப்போது டெல்லி புரத்திற்கு எழுந்தருளி 'எம்மாடுராயன்' என்பான் ஒருவன். அகத்தில் தங்கியிருக்கிறான். அங்கே சென்று எழுந்தருளப் பண்ணிக்கொன்று வருவீர் என்று அருளிச்செய்தார்.

## <u>முன்பு சதுர்முகனான ப்ரம்மா, சக்கரவர்த்தித் திருமகனான பெருமாளுக்கு ஸமர்ப்பிக்க:</u>

பெருமாளால் ஆதரிக்கப்பட்டதால் 'இராமப்பிரியர்' என்று திருநாமம் பெற்று பின்பு பெருமாள் தன் குமாரரான குசனுக்கு தன் திருவாராதமான அந்த ராம பிரியரை ஆராதனப்பெருமாளாகக் கொடுக்க குசனும் அப்படியே தன் குமாரத்திக்கு ஸீதனமாகக் கொடுக்க: குமாரத்தியின் வழியாக உண்டான யாதவ வம்ச பரம்பரையிலே அவதரித்த ராமகிருஷ்ணர்கள் ஆராதித்துக் கொண்டு போந்த திருவாராதனத்தை நாராயண கிரியிலே

நாராயண சந்நிதியில் சேர்த்தியாக எழுந்தருளினான். எதுகுல நாதனான கிருஷ்ணன் யாதவர்களோடு ஆதரித்து எழுந்தருளி யிருந்த ஸ்தலமாகையால் அதுவே 'யாதவாத்ரி' என்று திருநாமமாய் வழங்கியது.

## ராமப்பிரியரை எழுந்தருளச் செய்தல்:

உடையவர் உடனே புறப்பட்டு அவனிருப்பிடம் சேர்ந்து அவனை சந்தித்து 'நம் குலதெய்வமான ராமப்பிரியர் உன் அரண்மனையில் இருக்கிறார். அவரைத் தரவேணும்' என்று கேட்டார். உடையவரும் அந்த சிறைச்சாலைக்குச் சென்று சோதனையிட ஒருவரும் திருநாராயணன் வடிவுக்கு ஒத்திராததால் கவலையிற்று இருப்பிடம் சேர்ந்து கண்ணுறங்கினார். அவர் கனவில் 'நாம் அவனுடைய மகளின் ஆராதானத்தை ஏற்றுக்கொண்டு அவள் அந்தப்புர அறையில் தங்கியிருக்கிறோம். அங்கே வந்து நம்மைக் கொண்டு போவீர் என' கூறியருளினான். ஸ்ரீராமானுஜரும் 'என் ராமப்பிரியன் என் குரல் கேட்டால் கண்டிப்பாக வருவான்' என்று திவ்ய ப்ரபந்தத்திலிருந்து பெரியாழ்வாரின் பாசுரமான 'வருக வருக வருக இங்கே வாமன நம்பி!' என பாடிய மாத்திரத்திலேயே 'ஜல்! ஜல்!' என சதங்கை ஒலி எலலோரும் கேட்க இளவரசியின் பஞ்சணையிலிருந்து ஸ்ரீராமப்பிரியன் இறங்கி வந்த அழகை குருப்பரம்பரை அழகாக வர்ணித்துச் சொல்கிறது. 'இட்ட சட்டையும், கட்டின சிறு சதங்கையும், இட்ட கஸ்தூரி திருநாமமும், முடித்த மைவண்ண நறும் குஞ்சியும், தன் முகத்துச் சூட்டி தூங்கத் தூங்க, ஸஞ்ஜையிலும் குதித்து, தன்னியலோசை சலன் சலன் என்றிட செம்பொன் சதங்கைகள் சல சலவென்று ஒலிக்க அகிலமும் காணும்படி நவாப் இட்ட ஆசனத்தில் உட்கார்ந் திருந்த பெருமாள் உடையவர் மடியில் வந்தமர்ந்தார்'. உடையவரும் விம்மல் பொருமலாய் தோளும் மார்பும் பூரித்து, 'என்னுடைய செல்லப்பிள்ளையன்றோ!' என்று சொல்லி அணைத்துக்கொண்டாட அன்று முதல் 'செல்லப்பிள்ளை' என்று திருநாமம் ஏற்பட்டது. செல்லப்பிள்ளை தம்மைப் பிரிந்ததால்

தெரியாத எம்மாடுராயன் புத்ரியை தமக்கு ஆளாக்கிக்கொண்டான் செல்லப்பிள்ளை. உடையவர் திருநாராயணபுரத்திலே செல்லப் பிள்ளையை திருநாராயணனுடனே எழுந்தருளப் பண்ணி சகல உத்ஸவங்களையும் நடத்திக் கொண்டு பன்னிரண்டு ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்தார். மன்னன் ஸ்ரீராமானுஜரிடம் **'ஸ்வாமி! தீண்டத்தகாதவர் என்று ஒதுக்கப்பட்டவர்களுக்கு திருக் குலத்தார்'** என்ற நாமம் சூட்டி சமுதாயத்தில் அவர்களுக்கு நல்ல அந்தஸ்தைக் கொடுத்தீர்கள். அவர்களும் கொடிமரம் வரை வந்து பெருமாளை ஸேவிக்கும் பேர் பெற்றவர்கள் ஆயினர் என்றான்.

**பெரிய திருமந்திரத்தில் வைபவம்:**

பக்தர்களான பரம ரிஷிகளும் சொற்களாலும் பகவானே அருளிச்செய்த வாக்கியங்களாலும், பாக்யவான்களான பாகவதர் களுக்கு பக்தியை ஊட்டுவதாகவும் முக்தியைக் காட்டுவதாகவும் அமைந்து எம்பெருமான் தன்னாலே வெளியிடப்பட்ட திருமந்திரத் திற்கு பொருளாக விளங்குபவன் திருநாராயணனே என்பதை உடையவர் உலகுக்கு உணர்த்தினார்.

**உடையவர் காஷாயம் தரித்தல்:**

சோழன் கிருமிகண்டனாய் புழுத்து புரண்டான் என்கிற செய்தியை கொண்டு வந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உடையவர் மீண்டும் த்வயத்தை உபதேசித்தார். உடையவர் பெரிய நம்பிக்கு ஸ்ரீசூர்ண பரிபாலனமும் திருவத்யயனமும் நடத்தித் தனியனும் அருளிச்செய்தார். திருநாராயணபுரத்திலுள்ளவர்களுக்குத் தமக்குப் பிரதிநிதியாக ஒரு உடையவர் விக்ரஹம் ஏறியருளப் பண்ணிக் கொடுத்து, திருநாராயணன் செல்லப்பிள்ளை இவர்களுடைய கைங்கர்யங்களை ஆராய்ந்துபோகும்படி கட்டளையிட்டருளினார். அந்த விக்ரஹத்தை அவர்கள் மகாநிதியாக கைக்கொண்டு உடையவர் திருவடிகளை தங்கள் திருமுடியிலும் திருமார்பிலும் திருவுள்ளத்திலும் தரித்துக்கொண்டு நின்றனர். பின்பு தமக்கு இருப்பிடமான திருவரங்க பெருநகருக்கு எழுந்தருளத் திருவுள்ளம் பற்றினார் உடையவர். உடையவரும் திருநாராயணன் நியமத்தை

ஏற்று ஒரு நாயகம் திருவாய்மொழிக்கு வியாக்யானம் அருளி அது நடந்து செல்கிற நாளிலேப் புறப்பட்டு ஸஹ்ய பருவத்திலிருந்து திருக் காவேரியானது ஸ்ரீரங்கநகரை நோக்கி பெருக்கெடுத்து பரவுமாறு போன்று யாதவாத்ரியிலிருந்து சிஷ்யப் பெருக்குடன் ஸ்ரீரங்கநகரை நோக்கி விரைந்தார். வெள்ளை் களைந்து காஷாயம் உடுத்தார்.

## மறுபடியும திருவரங்கம் சேருதல்:

கோயிலையும் பெருமாளையும் ஸேவிப்பது எப்போதோ? என மனம் மகிழ்வுடன் திருக்காவிரியில் சகல தாபங்களும் ஆறும்படி திருமண்காப்பு சாத்தியருளி மீண்டும் **'அண்டர்கோன் அமரும் சோலை அணி திருவரங்கத்திலே நுழையப்பெறுதே!'** என மகிழ்வுடன் எழுந்தருளினார். உடையவர் மீண்டெழுந்தருளின செய்தி கேட்டு கோயிலிலுள்ளோர் மகிழ்ச்சியில் மூழ்கினர். கோயிலிலுள்ளார் அரங்கன் திருச்செல்வம் குறைவர நடந்து வருகிறது என்று உடையவரிடம் விண்ணப்பம் செய்ததில் மனம் மகிழ்ந்து உடையவர் ஸ்ரீரங்கநாயகியையும் அழகியமணவாளனையும் சகல ஸ்ரீவைஷ்ணவர்களுடன் ஸேவித்து மங்களாசாஸனம் செய்தார். பின்பு பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு அங்கிருந்து புறப்பட்டு பிராட்டி புருஷகாரத்தை முன்னிட்டே எங்கும் ஸேவித்துக் கொண்டு ஸ்ரீபலிபீடத்தின் அருகே சென்று ஸேவித்தனர். பின் எம்பெரு மானாரும் பெரியதிருமாளிகை எழுந்தருளி ஸேவித்தருளினார். பதினான்கு ஆண்டு காலமாக திருவரங்கத்து அரவணையிற் பள்ளி கொள்ளும் கடல் விளங்கு கருமேனி அம்மான் தன்னைக் காணாமல் பட்ட கஷ்டங்களை எல்லாம் மறந்து புளகாங்கிதம் அடைந்தார். தீர்த்த ப்ரஸாதம் பெற்று ஸ்ரீமடம் எழுந்தருளினார்.

## கூரத்தாழ்வானை வரதராஜபெருமாளிடம் ஒளி வேண்டச் சொல்லுதல்:

ஸ்ரீராமானுஜர் மடத்தில் எழுந்தருளியதும் தாய் பசுவைக் கண்ட கன்று போல் ஓடிச்சென்று அவருடைய பாதங்களில் தண்டம் ஸமர்ப்பித்து கிடந்தனர். உடையவர் கூரத்தாழ்வானிடம் **'கூரேசா! நீங்கள் எனக்குச் செய்த இந்த மகத்தான தியாகத்**

திற்கு நான் என்ன கைமாறு செய்யப்போகிறேன்? காஞ்சி வரதராஜன் கேட்பவர்க்கு கேட்ட வரம் தரும் பேரருளாளர். நீர் அவரிடம் கண் ஒளிகிட்ட வரம் பெற்றால் என்ன?' என்று அன்புக் கட்டளையிட கூரத்தாழ்வான் தன் புதல்வன் வியாஸனுடன் காஞ்சி நோக்கிப் புறப்பட்டார். அவர் வரதராஜ ஸ்தவத்தில் 'எப்போதும் காண்பதற்கு தகுதியான உலக இயற்கைக்கு அப்பாற்பட்ட திவ்ய கண்களை அடியேனுக்குத்தந்தருள வேணும்' என ப்ரார்த்திக்க வரதராஜப் பெருமாளும் 'ஸ்ரீவைஷ்ணவத்திற்காக கண்களையே பிடுங்கி எறிந்த உத்தமனே! உமக்கு என்ன வரம் வேண்டும?" என்று கேட்டார். கூரத்தாழ்வான் தமக்கு கண் வேண்டும் என்று கேட்கவில்லை. மாறாக தான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேண்டும் என்று கேட்டார். மஹாபாரதத்தில் ஏகலைவன் ஆசார்யனுக்காக கடடைவிரலைக் கொடுத்தான். இங்கு ஆசார்யனுக்காக கண்ணை இழந்து நிற்கின்றார். பெருமாளும் வரம் தருகிறேன் என்று திருவாய் மலர்ந்து புறத்தே நடப்பதனை பார்க்கும்படியான இயற்கைக்கு அதீதமான மூன் றாவது கண்ணைக் கொடுத்தார்.

## கூரத்தாழ்வான் உயிர் நீத்தல்:

பின் புறப்பட்டு வந்து நடந்த வ்ருத்தாந்தத்தை உடையவரிடம் கூற உடையவர் கூரத்தாழ்வானை ஆரத்தழுவி 'கூரேசா! நீ என்னினும் மேம்பட்டவன். எல்லோரிலும் மேம்பட்டவன். உலகம் உள்ளவரை உனது தியாகமும் கீர்த்தியும் நிலைத்து நிற்கும். நீ எமக்கு மட்டுமல்ல ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத் திற்கே பவித்திரமானவன' எனப் போற்றினார். கூரத்தாழ் வானுக்கு பூத உடலை விடுத்து பரமனடி சேரவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அதன் படி கூரத்தாழ்வான் அரங்கனை மீண்டும் மீண்டும் தொழுது பணிந்து குடில் வந்து சேர்ந்தார். இச்செய்தி கேட்ட இராமானுசர் புறப்பட்டு வந்து கூரத்தாழ்வானைத் தழுவி அவரது செவிகளில் த்வயம் மந்திரோபதேசம் செய்தார். அக்கணமே கூரத்தாழ்வான் ஆவி பிரிந்து ஒரு ஜோதி புறப்பட்டு திருவரங்கம் கோவில் பக்கமாக சென்று மறைந்தது. ஸ்ரீராமாநுஜர் நூறு

வயதினைக் கடந்தார். நித்யபூஜையையும் அரங்கன் கோவில் தரிசனமும் திவ்யதேச யாத்திரைகளையும் தவறாமல் மேற்கொண்டார். எஞ்சியிருந்த ஸ்ரீபாஷ்யத்தில் மூன்றில் ஒரு பகுதியான பாஷ்யத்தையும் தலைக்கட்டி அருளினார். ஸ்ரீபாஷ்யக்காரரும் அரவணைத்துயிலும் பெரியபெருமாள் திருமுன்பே சென்று பல படிகளாலும் ஸ்ரீபாஷ்யத்தால் நிலை நாட்டப்பட்ட அறுதிப் பெரும் பொருள் அரங்கனே என்பதை உபந்யஸித்துக் காட்டினார். நம்பெருமாள் நியமனப்படி உடையவருக்கு சதகலசாபிஷேகம் பண்ணி அலங்கரித்து ப்ரஹ்மரதத்தில் திருவீதி வலம் வரச்செய்து **'உபயவிபூதிநாதர்'** என்று பட்டாபிஷேகமும் கூரத்தாழ்வான் பிள்ளையான பட்டருக்கு யுவராஜ பட்டாபிஷேகமும் செய் தருளினர்.

**விக்ரஹப் ப்ரதிஷ்டை:**

உடையவர் தன் சீடர்களுக்கு **'பிறப்போர்க்கு இறப்பு என்பது திண்ணம்'** என்பதை விஸ்தாரமாகச் சொன்னார். எதையும் ஏற்க முடியாமல் சீடர்கள் ஏங்கித் தவித்தனர். சீடர்களைத் தேற்றுவதற்கு ஸ்ரீராமானுஜர் ஓர் முடிவு பூண்டார். திருநாராயணபுரத்து அன்பர்களுக்கு அளித்தாற் போல் தமது விக்ரஹம் ஒன்றை செய்து தமது ஜன்ம பூமியான ஸ்ரீபெரும்புதூரில் ப்ரதிஷ்டை செய்யப் பணித்தார். அந்த விக்ரஹத்தில் தமது சானித்யம் நிறைந்திருக்கச் செய்தார். இந்த விக்ரஹம் இவரது இரண்டாவது ஆத்மா. கந்தாடையாண்டானிடம் அந்த விக்ரஹத்தை ஸ்ரீபெரும்புதூருக்கு எடுத்துச்சென்று ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் ப்ரதிஷ்டை செய்யக் கட்டளையிட்டார். தமக்குப் பிறகு ஸ்ரீவைஷ்ணவப் பீடத்தின் தலைமைப் பதவியை கூரத்தாழ் வானின் குமாரரான பராசரர் ஏற்று நடத்தவேண்டும் என்று அறிவித்தார். ஸ்ரீராமாநுஜர் எம்பார் மடியிலே தலை வைத்து வடுகநம்பியின் மடியிலே ஸ்ரீபாதம் நீட்டி சோர்ந்து போய் படுத்தி ருந்தார். மடத்தின் ஸ்ரீபாஷ்யம் திவ்யப்ரபந்தம் ஒலித்துக்கொண் டிருந்தது. ஸ்ரீராமானுஜர் ஆளவந்தார் ஸ்வாமிகளை மனதிலே த்யானித்துக்கொண்டு த்வய மந்திரத்தைச் சொல்லிக் கொண் டிருந்தார். ஸ்ரீராமானுஜர் கண்வளர்ந்தருளி,

**'மாக ஸு்த்ததசம்யாம் துமத்யாஹ்நேமந்தவாஸரே|**
**யோகி ராஜஸ் ஸ்வபோகீ ஸபாவம் ஸ்வே பே ஸம் யகாத்||**

என்னும்படியான திவசத்திலே தம்முடைய பூர்வவதாரமான ஆயிரஞ்சுடர் வாய் அரவணையோடே நம்பி மூத்தபிரானைப் போலே எம்பெருமானாரான இவரும் கூடியருளினார். (ஸ்ரீராமாநுஜர் திருநாடு ஏகினார். அந்தநாள் சக ஆண்டு 1059 (கி.பி.1137) மாசி மாதம் சனிக்கிழமை ஶுக்ல பக்ஷ தஶமி!

திருக்குருகைப்பிரான் பிள்ளான் உடையவருக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் நடந்தது.

அரங்கன் அர்ச்சகர் உடம்பிலே ஆவிர் பவித்து **'எதிராஜன் எம்முடன் கலந்து விட்டான். அவனுக்கு வசந்த மண்டபத்தை திருப்பள்ளி படுத்துவதற்கான அங்கீகாரம் அளிக்கின்றோம்'** என திருவாய் மலர்ந்தார். எம்பெருமானின் அருளாணையை ஆலய அதிகாரிகள் தலைமேல் சுமந்து நிறை வேற்றினர். ஸ்ரீபராசாபட்டர் ஸ்ரீராமானுஜரை திருவுள்ளத்திலே கொண்டு ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நாடெங்கும் பரவச் செய்தார்.

**இளையாழ்வாரின் திருநாமங்கள்**
**அளித்தவர்கள்**

1. மாதாபிதா - இளையாழ்வார்
2. பெரியநம்பி - இராமானுசன்
3. திருக்கோட்டியூர்நம்பி - எம்பெருமானார்
4. பெரிய திருமலைநம்பி - கோயில் அண்ணன்
5. திருவரங்கப்பெருமாளரையர் - லக்ஷ்மணமுனி
6. திருமலையாண்டான் - சடகோபன்
7. ஸாரதை - ஸ்ரீபாஷ்யகாரர்
8. ஆதிகேசவபெருமாள் - பூதபுரீசர்
9. தேவப்பெருமாள் - யதிராஜர்
10. திருவேங்கடமுடையான் - தேஶிகேந்திரர்
11. ரங்கநாதன் - உடையவர்

**உடையவருடைய அவயவ ப்ரபாவம்:**

திருமகள் மணவாளனாகத் திருவரங்கனை முதல் ஆசார்யனாகவும், ஸ்வாமி எம்பெருமானானரை நடுநாயகமாகவும் மணவாளமாமுனிகளை ஈறாகவும் கொண்ட ஸ்ரீவைஷ்ணவ பூர்வசார்ய ரத்னஹாரத்தில் இளையாழ்வாரான இராமானுசருக்கு மற்றொவருக்குமில்லாத தனிச்சிறப்பு உண்டு. இவர் தம் திருமுடி ஸம்பத்தத்தாலும் திருவடி ஸம்பத்தத்தாலும் மற்றையோருக்கு ஏற்றம். எண்ணற்ற வைபவங்கள் படைத்த ஸ்வாமியெம் பெருமானாருடைய திவ்யமங்கள விக்ரஹம் ஒப்பற்ற வடிவழகுடன் ஸேவிக்கத்தக்கது என்பது ஸ்வாமியின் அவதார ஸ்தலத்தில் (ஸ்ரீபெரும்புதூரில்) அர்ச்சாத்திருமேனியை ஸேவித்தவர்களுக்கு சொல்லத் தேவையில்லை. இப்பேற்பட்ட பெருமை வாய்ந்த ஸ்வாமி யின் திருமேனியின் எவ்வெவ்வுறுப்புக்கள் அவயவபூதர்களான எவ்வெவ்வாசார்யர்களை வர்ணிக்கின்றன என்பதை இனிவரும் அட்டவணையில் காணலாம். அதன்படி உடையவரை ஸேவிக்கும் போது இராமானுசனடியார்கள், அதை நினைவில் கொண்டு, உடையவரைத்தொழும் பெரியோர்கள் உய்த்துணர வேண்டுகிறோம்.

| ஸ்வாமி எம்பெருமானாருடைய திருமேனி உறுப்புகள் | அவ்வெம்பெருமானாருடைய திருமேனியில் அவயவ பூதர்களாக வர்ணிக்கப்படும் பூர்வாசார்யார்கள் |
|---|---|
| திருமுடி (தலை) | நம்மாழ்வார் |
| திருமுக மண்டலம் | ஸ்ரீமந்நாத முனிகள் |
| திருக்கண்கள் | உய்யக்கொண்டார் |
| திருக்கன்னங்கள் | மணக்கால் நம்பிகள் |
| திருமார்பு | ஆளவந்தார் |
| திருக்கழுத்து | பெரிய நம்பிகள் |

| | |
|---|---|
| திருதோள்கள் | திருக்கோஷ்டியூர் நம்பிகள் |
| இரண்டு மார்புகள் | பெரியதிருமலை நம்பிகள் |
| திரு வயிறு | திருவரங்கப்பெருமாள் அரையர் |
| திருமுதுகு | திருமாலையாண்டான் |
| இடுப்பு | திருக்கச்சி நம்பிகள் |
| இடையின் பிற்பகுதி | எம்பார் |
| இரு இணைக்கால்கள் | நஞ்சீயாரும், பராசரபட்டரும் |
| திருத் தொடைகள் | நம்பிள்ளை |
| திருமுழந்தாள்கள் | வடக்குத் திருவீதிப்பிள்ளை |
| திருவடி தாமரைகள் | பிள்ளைலோகாசார்யர் |
| திருவடி ரேகைகள் | திருவாய்ப்மொழிப்பிள்ளை |
| திருவடி நிலைகள் | மணவாளமாமுனிகள் |

இனி ஸ்வாமியின் காஷாயம், த்ரிதண்டம் முதலியவற்றால் ஆசார்யர்கள் சம்பந்தத்தை நோக்கலாம்.

திருமண்காப்பு - ஸ்ரீசேனைமுதலியார், யஜ்ஞசூத்ரம் - கூரத்தாழ்வான், த்ரிதண்டம் - முதலியாண்டான், காஷாயம் - வடுகநம்பிகள், தாமரை துளசி மாலை – திருக்குருகைப்பிரான் பிள்ளான், சாயை – பிள்ளையுறங்காவல்லி தாஸர்.

இதை மனதில் கொண்டு த்யானம் செய்பவர்கள் இவ்வுலகச் செல்வங்களையும் இறுதியில் உயர்ந்த ஸ்தானமாகிய பரமபதத்தையும் அடைவார் என்பது திண்ணம்.

## 50. அநந்தாழ்வான்

**அகிலாத்மகுணாவாஸம் அஜ்ஞாநதிமிராவஹம் |**
**ஆய்ரிதாநாம் ஸுசரணம் வந்தேऽநந்தார்யதேசிகம் ||**

(எல்லா ஆத்ம குணங்கட்கும் இருப்பிடமானவரும், அஞ்ஞானவிருளைப் போக்குகின்றவரும், அடியார்க்கு நல்ல உபாயமானவருமான அநந்தாழ்வான் எனும் ஆசார்யரை வணங்குகிறேன்.)

ஆதிசேஷ பகவான் கலியில் இராமனுசராக அவதரித்து எல்லா சாஸ்திரப் பொருள்களையும் உபதேசிப்பதில் உத்வேகம் கொண்டவராய், அவற்றை உபதேச மூலமாக அல்லாமல் அனுஷ்டான மூலமாகவும் தெரிவித்து உலகோரை உய்விக்க எண்ணி, இந்த இரண்டு செயல்களையும் ஒரே உருவமெடுத்து செய்ய முடியாது எனக் கருதி, ஸ்ரீபத்ரிகாஶ்ரமத்தில் நரன், நாராயணன் என்று இரு உருவமெடுத்த பகவானை போல் தானும் இரண்டு உருவம் ஏற்க, ஆசைப்பட்டார். தம்முடைய அம்ஸமாகவே **'அனந்தாழ்வானை'** அவதரிக்கச் செய்தார்.

ஆதிசேஷனை ஸ்வப்னத்தில் கண்டதனால், தன் குமாரரின் அவதார உண்மையை ஊகித்து கேசவாச்சாரியார், அவருக்கு அனந்தாழ்வான் எனப் பெயரிட்டார். உடையவர், ஆழ்வானையும், ஆண்டானையும், அருளாளப் பெருமானாரையும் க்ருபை பண்ணிக் கொண்டு வித்வத் கோஷ்டியாக நடக்குங்காலத்திலே, ஆசார்யர்கள் எல்லோரும் உடையவர் திருவடியிலே ஆஶ்ரயித்து இருப்பதைக் கேட்டு, அனந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மருதூர் நம்பியும் உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிக்க வேணுமாய் எழுந்தருள, அவர்களை அருளாளப்பெருமாளெம் பெருமானார் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயிப்பித்தருளினார். பின் உடையவர் திருவாய் மொழிக்கு அர்த்தமருளிச்செய்து கொண்டு வரும் தினம் திருவேங்கடமுடையானுக்கு எல்லாக் காலத்திலும் எல்லா கைங்கர்யங்களையும் செய்ய வேண்டும் என்ற தமது ஆசையை

இப்பதிகத்தில் நம்மாழ்வார் வெளியிடுகிறார் என்று மிகவும் ஈடுபாடுடன் இதை விளக்கிய எம்பெருமானார் **"இப்படி நம்மாழ்வார் ஆசைப்பட்டபடியே திருவேங்கடமுடையானுக்கு ஒழிவில் காலமெல்லாம் கைங்கர்யம் செய்ய இந்த கோஷ்டியில் யாரேனும் முன் வருவார் உண்டோ?"** என வினவினார். யாரும் இதற்கு முன்வரவில்லை. **"குளிரருவிவேங்கடம்"** என்றும் **'ஆளியும், கோளரியும், கானமும், வானரமும் வேடுடமுடை வேங்கடம்'** என்று ஆழ்வார்கள் அருளிச்செய்தபடியே திருவேங்கட மலை அப்போது இருந்தது. ஒருவரும் கிடைக்க மாட்டார்களா? என்று அஞ்சிய எம்பெருமானாரின் செவியில் கணீர் என்று ஒரு குரல் ஒலித்தது. அவ்வளவிலே அனந்தாழ்வான் எழுந்திருந்து **'அடியேன் விடை கொள்கிறேன் என்று விண்ணப்பம் செய்ய இவ்வளவு பெரிய கோஷ்டியில் நீர் ஒருவர் தான் ஆண் பிள்ளை"** என்றார். அன்று முதல் **அனந்தாண்** பிள்ளை என்பதே அனந்தாழ்வாருக்கு திருநாமம் ஆயிற்று. ஆசார்யனை தண்டம் ஸமர்ப்பித்து திருமலைக்கு எழுந்தருளித் திருவேங்கடமுடை யானையும் திருவடி தொழுது, திருநந்தவனஞ் செய்து, அத்திரு நந்தவனத்திற்கு **'இராமனுசன்'** என்று திருநாமம் சாற்றித் திரு மாலை கட்டி திருவேங்கடமுடையானுக்கு ஸமர்ப்பித்து உகந்தருளி, திருவாய்மொழி ப்ரபந்தார்த்தத்தை தீவிரமாக நடத்தியருளினார்.

ஒரு சமயம் அனந்தாழ்வான் **'ஸ்ரீராமநுஜன்'** எனும் தன் தோட்டத்தில் மலர்களைக் கொய்து கொண்டு இருக்கும்போது ஒரு பாம்பு அவரை தீண்டியது.'**எம்பெருமானார் திருவடிகளே சரணம்**' என்று சொல்லி அக்கையைத் துடைத்துவிட்டு புஷ்கரி ணியில் தீர்த்தமாடி கோயிலுக்குச் சென்றார். பெருமாளையும் சேவித்தார். இதைப் பார்த்து கொண்டு இருந்த சீடர்கள் கையில் விஷத்தைப் போக்க முயற்சி செய்ய வந்ததையும் தடுத்தார். பெருமாளும் விஷம் தீர்க்கும் முயற்சியிலிருந்து மீண்டது ஏன்? என்று கேட்க, ஆதிசேஷ அம்ஸமாக தன்னை நினைத்த அனந் தாழ்வான் **'கடித்த பாம்பு வலிதாகில் விரஜையில் நீராடி பாபம் நீங்கப் பெற்று ஸ்ரீவைகுண்ட நாதனுக்குத் தொண்டு செய்யலாம். கடியுண்ட பாம்பு வலிதானாலோவெனில்**

**இங்கேயே ஸ்வாமி புஷ்கரிணியில் ஸ்நாநம் செய்து தேவரீருக்கே அடிமை செய்யலாம். இது போன்ற இரு வகையிலும் தீங்கு ஏதுமில்லாததால் விஷம் தீர்க்க முயலாமல் வெறுமே கிடந்தேன்!'** என்று அனந்தாழ்வான் கூறினாராம் என்னே! ஆதிசேஷனின் அம்சமான அனந்தாழ்வனின் பெருமை!

அனந்தரம் அனந்தாழ்வான் ராமநுஜப்புத்தேரி கட்டி வைக்கும் போது மண் சுமவா நிற்க, பிள்ளைகளிலேயொருவர் சென்று கூடையை வாங்கபுக,**'நான் அத்தை விடில் இளைப்பன் நீ இத்தைத் தொடில் இளைப்புதி'** என்று அருளிச்செய்து, இளைப்பாகாது என்று பின்னை பிள்ளையுங் கூடையை வாங்கப்புக, ஆகில் நான் ஜீவிக்கிற ஜீவனத்தை வாங்க வேணுமோ? நீயும் வேண்டுமாகில் ஒருகூடையை சுமக்க மாட்டாயோ? என்று அருளினார். பின்னையும் ஒரு நாள் காப்பவதியான தம் தேவிகள் மேலே மண் சுமக்கா நிற்க, இது கண்டு திருவேங்கடமுடையான் ஒரு பிள்ளையாய் எதிரே வந்து வாங்கி கொண்டு போக, தேவிகள் கடுக வருமது கண்டு **'இதுவென்? கடுக வருகிறாய்?** என அவளும் **'ஒரு பிள்ளை எதிரே வந்து கூடையை வாங்கிக் கொண்டு போகிறான்'** என்று சொல்லக் கேட்டு, உடனே சென்று கண்டு **'கைங்கர்யவிக்நகாரீ! நீ கூடையை தொடாதே கொள்'** என்று கொட்டெடுத்து அடிக்கப்புக, திருவேங்கடச் செல்வன் ஓடிசென்று கோயிலிலே புகுந்தான் என்பர்.

**அகிலாத்மகுணாவாசம் அஜ்ஞாந திமிராபஹம் |**
**ஆஶ்ரிதாநாம் ஸுஶரணம் வந்தேऽநந்தார்ய தேசிகம்||**

அனந்தாழ்வான் கோசல ராஜ்யத்திற்கு எழுந்தருளின போது கட்டுத் திருப்போனகம் கட்டிக்கொண்டு போய் அமுது செய்யப் புக்கவாறே பட்டையடங்கலும் சிற்றெறும்பாய் கிடக்க, அத்தைக் கண்டு துணுக்கென்று தம் முதலிகளைப் பார்த்து **'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே'** என்னு மவர்களிலே சிலராய்த்து இவர்கள் ; இப்படியே கொண்டு போய் திருமலையிலே வைத்து வாருங்கோள் என அருளிச்செய்தார்.

அனந்தாழ்வான் யமுனைத்துறைவனிலே திருமாலை கட்டாநிற்க, திருவேங்கடமுடையான் அருள்பாடிட பேசாதேயிருந்து திருமாலை சேர்த்துக்கொண்டு உள்ளே புக்கவாறே, திருவேங்கட முடையானும் நாம் அழைக்க அனந்தாழ்வான்! நீர் வராதிருந்து ஏன்? என்று திருவுள்ளமாக, இவரும் **'கருமுகை மொட்டுவெடியா நிற்க எனக்குத் தேவரீரைக் கொண்டு கார்யமென்?'** என்றார். திருவேங்கடமுடையானும் **'ஆகில் நாம் உம்மை இங்கு நின்றும் போகச் சொன்னோமாகில் நீர் செய்வதென்'!** என்று திருவுள்ளமாக. இவரும் **'பரன் சென்று சேர் திருவேங்கடம் என்கிற படியே தேவரீரன்றோ வந்தேறிகள், இவ்விடம், தேவரீரை ஆஸ்ரயித்தவர்களதன்றோ?'** தேவரீர் ஒருகிழமை முற்பட்டீரித்தனை; இருவரும் திருமலையாழ்வாரை ஆஸ்ரயித்தோ மித்தனையன்றோ' என்று விண்ணப்பம் செய்தார்.

ப்ரபத்தியாகிய வளர்ச்சியைப் பெற்றவனுக்கு அப்பிரபத்தியின் பலனாகிய கைங்கர்யத்தின் கண் ஊற்றத்தை - இந்த ஜீவாத்மா **'ஸ்ரீமதே நாராயணாய நம:'** என்ற த்வயத்தின் உத்திர சப்தத்தினால் இத்தகைய கைங்கர்ய நிஷ்டையை இவனுக்கு மிகமிக முக்கியமாக கருதுகின்றனர் சப்தாதி விஷயங்களில் உண்டாகும் ஊற்றத்தை அன்று. அதனால்தான் துறவறம் பூண்ட நஞ்சியரைக் கண்ட அனந்தாழ்வான் -, **'திருமந்திரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைக நிஷ்டராவீர்'** என்று வாழ்த்தினாராம். துறவறத்தினால் உமக்கு மோக்ஷம் கிடைப்பதரிது. உம்முடைய ஆசார்யராகிய பட்டர் உபதேசித்தபடியே – திரு மந்திரத்தினால் பிறப்பை அடைந்து த்வய பூர்வ கண்டத்தினால் வளர்ச்சியைப் பெற்று அதன் உத்தர கண்டத்தினால் கைங்கர் யத்தின் கண் ஊற்றத்தை உண்டாக்கிக் கொண்டு இரும். பட்டர் திருவருளாலே மோக்ஷப்ராப்திக்கு ஒரு குறையுமில்லையென்று அனந்தாழ்வான் நஞ்சீயருக்கு கூறிய வாக்கியத்தின் கருத்து கொள்ள தக்கது.

## 51. ஸ்ரீமணவாளமாமுனிகள்

உடையவர் ஆதிசேஷ ஸ்வரூபமாக அவதரித்து பரம பதத்துக்கு எழுந்தருளிய பிறகு பரமபுருஷனான ஸர்வேஶ்வரன், ஆதிசேஷனை நோக்கி **'நீர் மறுபடியும் முன்போல் பூவுலகத்தில் அவதரித்து திராவிட வேதத்தை உலகுக்குப் பரப்ப வேண்டும்'** என்று நியமிக்க, அனந்தாழ்வாரும் உலகம் உய்யும் வகையில் ஐப்பசி திருமூலத்தில் மாமுனிகளாக திருவவதாரம் செய்தார் என அறியப்படுகிறது. பாண்டிய நாட்டில் திருக்குருகூர் எனும் ஆழ்வார் திருநகரியில் ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்த மனரான திருநாவீறுடையபிரான் தாதரண்ணர் என்பவர்க்கும் ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் திருக்குமாரராய் கலி நாலாயிரத்து நானூற்று எழுபத்தொன்றாம வருஷமான (கி.பி1370)ல் அவதரித்தார். ஆதிசேஷன் அவதாரத்துக்கு சேர, திருமேனி பொலிவு மிக்கவராய் நிலவு போல் மிளிர்ந்து பிரகாசித்தார் என்றும் கூறப்படுகிறது. **'அழகியமணவாளர்'** எனத் திருநாமமிட்டு பெரியோர்களால் ஆசிர்வதிக்கப் பெற்றார். கூடியிருந்த பெரியோர் கள் அவர் திருமேனி அழகைக் கண்டு வியந்து இக்குழந்தை ஆதிசேஷனின் திரு அவதாரமே எனக் கொண்டாடினர். அந்தந்த காலங்களில் அன்னப்ராஶனம், சௌளம், உபநயனம் முதலான ஸம்ஸ்காரங்களை முறைப்படி செய்து ஸகல வேதாந்த நுட்பங் களையும், திராவிட வேத-ஸாரங்களையும் அச்சிறுவயதிலேயே கற்றறிந்தார். அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் எப்போதும் **'சகலகலா பூர்ணனாய்'** நிர்மலான பூர்ண சந்திரன் என்னலாம்படி விளங்கினார். அக்காலத்தில் ஆழ்வார்திருநகரி தர்ஶன ப்ரவர்த்த கராய் எழுந்தருளியிருக்கிற திருமலை ஆழ்வாரும், **'இனி தர்ஶன ப்ரவர்த்தகரராக ஆவார் யார்? என்று சிந்தித்துக் கொண்டிருந்தார். தொண்டர்க் கமுது உண்ண சொல் மாலை களான திருவாய்மொழி நிலத்தேவரேயான'** ஸ்ரீவைஷ்ண வர்களுக்கும், பக்தாம்ருதம் எனும்படி பரம போக்யமாக அவதரித்த தாகையாலே திருவாய்மொழியையே எல்லா நேரங்களிலும் அநுசந்தித்து அதனுடைய ஶப்தரசம், அர்த்தரசம், பாவரசம்

என்கிற இவற்றையே நினைத்து நினைத்து நைந்துருகி போதெல் லாம் அதிலேயே ஈடுபட்டு இருந்தார். அதனால் திருமலைஆழ்வாரும் **'திருவாய்மொழிப்பிள்ளை'** என்ற விசேஷ திருநாமம் பெற்று வாழ்ந்து வந்தார். நம்மாழ்வார் திருவடிகளிலே கைங்கர்யம் அநவரதமும் செய்து வந்தார். அழகியமணவாளப் பெருமாள் நாயனாரும் தாம் அவதரித்த ஆழ்வாதிருநகரிக்கு எழுந்தருளினார். திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளை ஆஶ்ரயித்து தமிழ் வேதமான திருவாய்மொழி அதன் அங்க உபாங்கங்களாக உள்ள மற்ற பிரபந்தங்கள் இவற்றின் தாத்பரியங்களையும் உபதேச முகத்தாலே பெற்று **'மிக்க வேதியர் வேதத்திலுட் பொருளான'** சரம பர்வத்திலே நிஷ்டராய், சேஷித்வ, ஶரண்யத்வ, ப்ராப்ய த்வயங்கள் மூன்றையும் திருவாய்மொழிப்பிள்ளை விஷயத்தி லேயே அநுசந்தித்து ததேக நிஷ்டராய் எழுந்தருளியிருந்தார். அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும், தன் ஆசார்யர் காட்டிக் கொடுத்த எம்பெருமானாரையே தமக்கு தஞ்சமாகக் கொண்டு, அவர் விஷயமாக **'யதிராஜ விம்சதி'** என்கிற ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார்.

திருவாய்மொழிப்பிள்ளை (திருமலை ஆழ்வார்) அவரிடம் தனி அபிமானம் கொண்டு, அவரிடம் தனி பரிவு காட்டியதை கண்ட மற்ற ஸ்ரீவைஷ்ணவ அடியார்கள், அழகியமணவாளனிடம் பொறாமையோடு நடந்து கொண்டு பேசினார்கள். இதை அறிந்த ஆசார்யனான திருமலையாழ்வார் பெரியவர்களை அழைத்து **'மணவாளர் ஆதிசேஷனின் அவதாரம்'** என்பதை பல கட்டங்களில் எடுத்துரைத்து அவர்கள் உணரும்படி பலகாரணங் கள் மூலம் நிரூபித்தார். அதன் பின்னே மற்றவர்கள் யாவரும் அவரை ஆதிசேஷனின் அவதாரம் என்று நம்பி உணர்ந்து, தங்கள் அபிமானத்தை வெளிப்படுத்தினர்.

அழகியமணவாளரும், யதீந்தரரான எம்பெருமானாரிடத்தில் அன்பானது விஞ்சி கிடந்ததாலே, யதீந்தர ப்ரவணர் என்று அழைக்கப்பட்டார். திருவாய்மொழிப்பிள்ளை அழகியமணவாளரின் சௌகுமாரியத்திற்கு அனுகுணமாக அமுது செய்தருளுகை

தொடக்கமான எல்லா உபசாரங்களையும் ஆராய்ந்து செய்தருளப் பண்ணுவித்துக் கொண்டு அவருடைய திருமேனி சௌந்தர்யத்திலும் ஆத்ம குணாதிசயங்களிலும் லயித்து தம்முடைய பரிவைக்காட்டி வந்ததால் பிள்ளையை ஆஶ்ரயித்தவர்கள் அழகியமணவாளரி டத்தில் அஸூயை அடைந்தனர். இதை சர்வஜ்ஞரான பிள்ளை அறிந்தார் அவர்கள் அபசாரப்படாதபடி இவருடைய சேஷாதிப்பதி (ஆதிசேஷன்) என்கிற மற்றொரு தோற்றத்தை எல்லோரும் ப்ரத் யக்ஷிக்கும்படி வாக் சாதுர்யங்களாலே காட்டியருளி அவர்களுக்கு இவரிடத்தில் விசேஷ ப்ரதிபத்தியை உண்டாக்கினார். ஒரு நாள் திருவாதிரை நக்ஷத்திரத்திலே பிள்ளையும் முதலிகளும் அமுது செய்து கொண்டிருந்தனர். அப்போது '**இன்றோ வெதிராஜரிவ் உலகிற் தோன்றிய நாள். இன்றோ கலியுருள் நீங்கு நாள்**' என பல காலும் சொல்லி மேலொன்றும் சொல்லமாட்டா திருக்க அழகியமணவாளரும், '**இன்றே தான் வேதியர்கள் வாழ விரை மகிழோன் தான் வாழ வாதியார்கள் வாழ் வடங்கு நாள்**' என்று அப்பாட்டை நினைவு செய்தார். ஸ்ரீபராங்குசதாசரான பெரியநம்பியை ஆஶ்ரயித்த ஏற்றம் எம்பெருமானாருக்கு உண்டார் போலே, சடகோபதாசரான திருமலையாழ்வார் (திருவாய்மொழிப் பிள்ளை) ஆஶ்ரயித்த ஏற்றம் அழகியமணவாளப் பெருமாள் நாயனாருக்கு உண்டாயிற்று என்று எல்லோரும் இவரை உடை யவர் அவதாரம் என்று தங்களுக்குள் கூறி ஆதரித்துப் போற்றிப் போந்தனர்.

## திருவாய்மொழிப்பிள்ளை மணவாளமாமுனிகளுக்குச் செய்தருளிய கட்டளை:

இப்படி ஜ்ஞான, பக்தி, வைராக்கியங்களில் இருந்த ம□ா ப்ரபாவத்தையுடையவரானதிருவாய்மொழிப்பிள்ளை '**கைங்கர்ய ஸ்ரீயோடே**' நெடுங்காலம் வாழ்ந்தருளி, பின்பு திவ்ய விபூதியிலே நித்ய கைங்கர்யம் செய்ய ஆசை உடையவராய் அதற்குத் தடையாக உள்ள சரீர ஸம்பந்தம் நீங்க, தம் ஆசார்யரான பிள்ளைலோகாச்சாரியரைப் ப்ரார்த்திக்கொண்டு தன்னுடைய திருமேனியில் நோவு ஸாத்தி மிகவும் தளர்ந்தார். மணவாளரும்

பெரியோர்களும் **'இது என்ன எனக் கேட்டருள அதற்குப் பிள்ளையும் காலம் கலிகாலம் ஆகையாலே ஆழ்வார்கள் திவ்ய ஸூக்திகளான அருளிச்செயலிலே ருசி விஶ்வாஸங் களை உடையவராய் இத்தை வளர்த்துப் போவார் யார்? என்ன மிகவும் க்லேசமாய் இருக்கின்றது'** என்ன, உடனே அழகியமணவாளரும் அவர் திருவடிகளிலே ஸேவித்து **'அடியேன் அப்படியேசெய்கிறேன்'** என்ன, **'கேவலம் வார்த்தை போறாது'** என்ன அழகியமணவாளரும் அவர் திருவடிகளிலே ஸேவித்து சபத பூர்வமாக, **'அப்படியே செய்கிறேன்'** என்று அருளிச் செய்தார். பின் ஸம்ஸ்க்ருத சாஸ்திரங்களில் அதிக கவனம் செலுத்தாமல் எம்பெருமானார் உள்ளத்திற்கு உகப்பாக இருக்கும் படி ஸ்ரீபாஷ்யத்தை ஒருக்கால் கேட்டு நமக்கும் எம்பெருமா னாருக்கும் உகப்பாக திருவாய்மொழி முதலான அருளிச் செயலிலே ஆழ்ந்து அனவரதம் பரிசீலனம் செய்து கொண்டு, பெருமாளுக்கு மங்களாசாஸனம் செய்துகொண்டு திருவரங்கத்திலேயே நித்ய வாசமாக எழுந்தருளி இருக்குமாறு நியமித்தார். பின்பு திருவாய் மொழிப்பிள்ளை இவ்வுலகை நீத்தார்.

## அழகிய வரதரும் சேனை முதலியாரும் மணவாள மாமுனிகளை ஆச்ரயித்தது:

நாயனாரும் ஆசார்யன நியமித்தருளினபடியே திருவாய் மொழி முதலான செயல்களை வ்யாக்யானங்களுடன் அநுஸந் தித்து திருநகரியிலேயே தர்ஶனத்தை வளர்த்துக்கொண்டு போரு கிற காலத்தில், அழகியவரதர் சேனைமுதலியார் தொடக்க மானவர்கள் இவர் வைபவத்தைக் கேட்டு திருவடிகளியே ஆஶ்ர யித்தார்கள். அழகிய வரதர் ஸந்யசித்து **'ராமாநுஜஜீயர்'** என்கிற திருநாமத்தை உடையவராய் மணவாளமாமுனிகளுக்கு நிழல் போல் பிரியாது இருந்துகொண்டு, நித்யஸேவை செய்து கொண்டு இருந்தார். மாமுனிகளுக்கு சிந்தை ஒன்று எழுந்தது, ஆழ்வார்திருமுன்பே சென்று ஸேவித்து **'நண்ணாவசுரர் நலிவெய்த நல்லமரர் பொலிவெய்த எண்ணாதனகள் எண்ணும், நன் முனிவரின் பந்தலைசிறப்ப பண்ணார் பாடலின்**

கவிகளை பாடிய தேவரீர் மங்களாசாஸன பலத்தாலே, பெருமாளு டைய இடர் நீங்கி நித்ய ஆராதனம் கண்டருளுகிறார். **'அடியேனும் அங்கு சென்று சரீரம் விழும்வரை நித்யவாஸம் செய்ய விடை கொள்கிறேன்'** என விண்ணப்பஞ்செய்ய அப்படியே நம்மாழ்வாரும் விடை கொடுத்தருளினார்.

அழகியமணவாளரும் தம் குழாங்களுடன் திருவரங்கப் பெருநகருக்கு எழுந்தருளும் வழியில் பல திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்து பின் திருவரங்கம் சென்றடைந்தார். மாடமாளிகை சூழ் திருவீதியும், மன்னு சேர்திரு விக்கிரமன் வீதியும், ஆடல் மாறன் அகளங்கன் திருவீதியும், ஆலினாடன் அமர்ந்துறை வீதியும் கூடல் வாழ் குலசேகர வீதியும் வலம் வந்தார். கோவில் அதிபதியான திருமாலை சுந்தப்பெருமாள் பட்டர் அனும திக்காத அவர் திருமாளிகையிலே எழுந்தருள, அவரும் உபசாரங் களை செய்வித்து 'திருவாய்மொழியிலே ஒரு பாட்டுக்கு **அர்த்தம் அருளிச்செய்யவேணும்** என ப்ரார்த்திக்க **அழகிய மணவாளரும் நம்மாழ்வாருடைய வைபவத்தை உபதேச** மாக எடுத்துக்காட்ட கூடிய ஈடு முப்பத்தாறாயிரப்படி' அர்த் தத்தை வெள்ளம் போல் உபந்யஸிக்க, இவர் **'ஈடு முப்பதா றாயிரப்படிப் பெருக்கர்'** என ப்ரேமையுடன் அழகியமணவா ளருக்குப் பெயர் சூட்டினார்.

அழகியமணவாளரும் கோயிலண்ணரோடு சேர்ந்து கூடி சடகோபரையும் ஸேவித்து ப்ரதக்ஷிணம் செய்து பின் ப்ராகாரத் திலுள்ள திருமண்டபத்தில் எழுந்தருளி **'ஆழி வண்ண! நின் அடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம் மானே'** என்று தண்டம் சமர்ப்பித்து, பெரியதிருவடியையும் திருவடி தொழுது துவார பாலகர்கள் அனுமதியுடன் உள்ளே புகுந்து, திருமணத் தூணருகே சென்று மாயோனை வாயார வாழ்த்தி, அரங்கமாகோவில் கொண்ட கரும்பினைக் கண்டு கண்ணினை களித்து **'அமலனாதிபிரானின் படியே பாதாதிகேசாந்தமாக அனுபவித்தருளி, பழுதே பலபகலும் போயின'** என்று ஸேர்த் தியைக் கண்டு, படுத்தபைநாகணைப் **பள்ளிக்கொண்டானுக்கு**

**பல்லாண்டு கூறுதுமே** என்கிறபடியே **'திருப்பல்லாண்டை'** அநுஸந்தித்து மங்களாசாஸனம் செய்தருளினார். பின் சிம்ஹாஸ னத்திலே நாச்சிமாருடன் சேர எழுந்தருளி இருக்கிற நம்பெருமாளை ஸேவித்து, **'திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்து அஞ்சலென்ற கையும் கவித்த முடியும் முகமும் முறுவலும் ஆசனபத்மத்திலே அழுத்திய திருவடிகளுமாய் நிற்கிற நிலையே நமக்கு தஞ்சம்'** என்று அநுஸந்தித்தருளி, ஸ்ரீநிதியான பெருமாளைக் கண்டுகொண்டு சிவந்த திருமுகமண்டலத்தையும் கஸ்தூரி திருநாமத்தையும் வைத்த கண் வாங்காதே கண்கள் இமைக்காமல் அநுபவித்துக்கொண்டிருந்தார்.

## பிள்ளைலோகாசார்யர் திருமாளிகையைக் கண்டு களித்தல்:

அண்ணவரும் பூர்வாசார்யர்கள் போதம் (ஞான) அனுஷ்டானம் முதலிய அருளிச்செய்யக் கேட்டு திருவுள்ளந்தேறி, மணவாள மாமுனிகளும் அவருடன் புறப்பட்டு பூர்வர்கள் எழுந்தருளியிருந்த திருமாளிகை முன் ஸேவித்து பின்பு பிள்ளைலோகாசாரியர் திருமாளிகை நோக்கிச் சென்று அத்திருமாளிகை முன் சென்று வாசலிலே தண்டம் ஸமர்ப்பித்து **'ரகஸியம் விளைந்த மண்அன்றோ'** என மிகவும் பாராட்டி பிள்ளைலோகாசார்யருடைய வைபவங் களையெல்லாம் அண்ணன் அருளிச்செய்யக் கேட்டு இவ்வளவா கிலும் பெற்றோமே! என அண்ணனை ஸேவித்து ஆசார்யர்களுக்கு இருப்பிடமான திருவரங்கத்திலேயே எழுந்தருளி இருந்தார்.

## நம்பெருமாள் ஆணை:

ஒரு நாள் அழகியமணவாளர் நம்பெருமாளை ஸேவிக்கச் செல்லும்போது நம்பெருமாள் தீர்த்தம் திருமாலை பரியட்டத்துடன் சடகோபனையும் சாதித்தருளி **'நம் உடையவரைப்போல நீரும் நம் ஐஶ்வர்யங்களை எல்லாம் திருத்திக்கொண்டும், நம் தர்ஶனத்தை நடத்திக்கொண்டும் இறுதிகாலம் வரை இங்கேயே இரும்'** என்று ஆஜ்ஞை செய்தார். அவ்வாறே பெருமாளுடைய செல்வங்களை எல்லாம் பார்வையிட்டு சேகரித்து அவற்றை

ஒருங்குபடுத்தி கைங்கர்யங்களை எல்லாம் செம்மையாக நடைபெற செய்து ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்தார். ஒரு சமயம் பெருமாள் கைங்கர்யம், திருவாராதனத்தையும் நடத்திக் கொண்டு வருகிற உத்தமநம்பி என்பவர் அவைகளை குறைபட நடத்தி வருவதைக் கண்டு **'இவனை நீக்கி அனுகூலரானவர்களை கொண்டு கைங்கர்யங்களை குறைவர நடத்த வேணு'** மென்று ஸ்ரீவானமாமலை ஜீயர் அருளிச்செய்ய, அதைக் கேட்ட மாமுனியும், நம்பெருமாள் பக்கலில் **'தேவரீருடைய கைங்கர்யம் திருவாராதனம்குறைவர நடக்கும் படி இவனையே அனுகூலனாக திருத்திப் பணிகொண்டருள வேணும்'** என ப்ரார்த்தித்து தானும் அவ்வாறே மங்களாசாஸனம் செய்து அவரைத் திருத்தி குறைவர நடக்கும் படி செய்தருளினார்.

**ஸ்தலங்களில் மங்களாசாசனம் செய்தல்:**

பின்பு பெருமாள் அனுமதிபெற்று திருமலை செல்லும் வழியில் பூங்கோவலூர் கடிகை முதலான ஸ்தலங்களுக்கு மங்களாசாஸனம் செய்து வரும்போது **'எறும்பி'**யிலுள்ள பெரியோர்கள் ஸேவித்து நிற்க அவர்களை ஆதரித்து புறப்பட்டருளினார். திருமலையில் பெரியகேள்வி ஜீயர் ஸ்வப்னத்தில் **'இவர் முப்பத்தாறாயிரப்படி பெருக்கராகிய அழகியமணவாளப் பெருமாள்நாயனார் அவர் பொன்னடிக் கால்ஜீயர்'** என்று பெருமாள் சொல்ல கண்ணை விழித்து எழுந்தார். மணவாள மாமுனிகளும் திருமலை போன்ற பல திவ்ய தேசங்களை வட தேசத்திலிருந்து தென்தேசம் வரை கண்ணாரக்கண்டுகளித்து மங்களாசாஸனம் செய்தார். ஸ்ரீபெரும்புதூரில் உடையவர் சன்னதியில் மங்களாசாஸனம் செய்தருளினார்.

**மணவாள மாமுனிகள் தம்முடைய நிஜாகாரத்தைக் காட்டல்:**

கிடாம்பி நாயனாரிடம் **'ஸ்ரீபாஷ்யம் கேட்டுக்கொண்டு எழுந்தருளியிருந்தார். கிடாம்பி நாயனார் சிஷ்யர்களை தர்க்கத்தில்'** வென்றார். மணவாளமுனிகளின் ஒப்பற்ற வ்யாக்யானங்களைக் கேட்ட கிடாம்பி நாயனார் **'தேவரீர் அவதார**

**விசேஷம் என்று நிச்சயமாக அறிந்தேன் எனக்கு அத்தைக் காட்டவேணும்'** என்றருளிச்செய்ய **'ஆசார்யாராயிருக்கிற தேவரீருக்கு ஒளிக்க ஒண்ணாதே,** பெரியபெருமாளுடைய **ரகசிய ஆணையை ஒருவரும் அறிய வேண்டா'** என்று விண்ணப்பஞ்செய்து ஏகாந்த ஸ்தலத்திலே மங்கள தீபத்தை ப்ராகாசப்படுத்தி அஞ்சாமல் இருக்கவென்று விண்ணப்பஞ்செய்து தாம் ஆதிசேஷன் என்கிற நிஜ ரூபத்தைக் காட்ட கிடாம்பி நாயனாரும் கண்டருளி பீதியடைந்து, **'இந்த தோற்றத்தை மறைத்துக்கொள்ளும்'** என்று விண்ணப்பித்தார்.

தக்க வயது வந்ததும் க்க்ஹஸ்தாஶ்ரமத்தை விலக்கி துறவறத்தை ஏற்று பெரியஜீயராக ஆன பிறகு பல திவ்ய தேஶங்களைச் சென்று ஸேவித்துக் கொண்டும் ஓராண் வழியாக விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை உடையவருக்கு பிறகு நன்கு நிலை நாட்டினார். ஆசார்யபரம்பரையாகிய ஹாரத்தின் கீழே தொங்கும் ரத்ன பதக்கம் போன்றவராய், எம்பெருமானுடைய அபராவதாரமாகக் கீர்த்தி பெற்றவராய், பரமஸாத்விகராய், ஜ்ஞாநபக்தி, வைராக்யபக்தி முதலிய குணங்களுக்கு ஓர் கடலாயிருப்பவராய், 'வி **தவாக்ஸிகாமணி'** யென்ற விருது பெற்றவராய், ஸ்ரீஶைலேஸராம் திருவாய்மொழிப் பிள்ளையிடம் சரம பர்வநிஷ்டையை உடையவராய், யதீந்த்ர ப்ரவணராய் சரமாசார்யராய், ப்ரதமாசார்யனுக்கும் ஆசார்யனாக விளங்கினார்.

பெருமாளும் போர உகந்து இவரை ஆதரித்து தம்முடைய திருநாமமான இவருடைய முந்திய திருநாமத்தாலே **'அழகிய மணவாள ஜீயர்'** என்று திருப்பெயரிட்டு **'உமக்கு பல்லவராயன் மடத்தை அளிக்கிறோம். உமது இறுதி காலம் வரையில் எம்பெருமானாரைப்போலே இங்கேயே இரும்'** என்று நியமித்தருளினார். உத்தமநம்பி முதலான பெரியோர்கள் உடன் செல்ல மடத்திலே ஜீயரை எழுந்தருளப்பண்ணி **'அடியார்கள் வாழ அரங்கநகர் வாழ, சடகோபன் தண் தமிழ்நூல் வாழ கடல் சூழ்ந்த மண்ணுலகம் வாழ மணவாளமாமுனியே இன்னுமொரு நூற்றாண்டிரும்'** என்று மங்களாசாஸனம் பண்ணி

ஸேவித்து விடைபெற்றுப் போனார்கள். இப்படி திருமலை ஆழ்வாருடைய அடி நிழலிலே எழுந்தருளி இருக்கிற காலத்தில் பெருமானின் நியமனத்தாலே தமக்கு திருவாராதனமான ஸ்ரீரங்க ராஜனை எழுந்தருளப் பண்ணிவைத்து பிள்ளைலோகாசாரி யருடைய திருநக்ஷத்திரமான ஐப்பசி மாத திருவோணத்தில் திருப்பிரதிஷ்டை செய்தருளி, பிள்ளைலோகாசார்யர் மற்றும் உள்ள ஆசார்யர்கள் திருநக்ஷத்திரங்களும் அக்கார வடிசலாலே அமுதுபண்ணி, அநுஷ்டாநங்களையும் ப்ராகாசித்துக்கொண்டு **'ஸ்ரீரங்கஸ்ரீக்கு'** மங்களதீபம்போல் விளங்கினார். கந்தாடை அண்ணனுக்கு ஸ்வப்னத்தில் அழகியமணவாள ஜீயரே அனந் தாழ்வான் அவதாரம் என்பதை காட்டியருளினார். அண்ணன் ஜீயரிடம் பஞ்சமஸ்காரத்தையும் பெற்று அருளினார்.

குறுகிய காலத்தில் அவர் புகழ் எங்கும் பரவியது. இப்படி திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்து கொண்டு வரும் சமயம் ஆழ்வார்திருநகரி எழுந்தருளி அருளிச்செயல் உரைகளைப் பலர் கேட்டு அறிய ஸாதித்து வந்தார். இப்படி நிகரிலா பெருமை களை யுடையவரைக் கண்டு சகியாத சிலர், மணவாளமாமுனிகள் உறங்கிக் கொண்டு இருக்கும் போது அவர் எழுந்தருளியுள்ள குடிலுக்கு தீ வைத்து கொளுத்தினர். குடிசை தீக்கிரையானதும் நல்லோர் அனைவரும் காணும் வண்ணம் எரிந்த குடிசையினின்று ஆதிசேஷ வடிவத்தில் வெளியேறி, மாமுனிகளாய் எல்லோருட னும் வந்து தானே கலந்து கொண்டார். இவ்வதிசயத்தை பார்த்த அனைவரும் வியந்தனர். இக்கொடிய செயலைச் செய்த அனைவரும் அவர் திருவடி பற்றி தங்கள் தவறுகளை மன்னிக்க வேண்டினர். இந்த செய்தி கேட்ட மன்னன் தகாத செயலைச் செய்தவரைத் தண்டிக்க எண்ணும்போது, மாமுனிகள் அவர்களை மன்னித்து விடுமாறு பணித்தார். இந்நிகழ்ச்சியின் மூலம் பெரிய ஜீயர் ஆதிசேஷ அவதாரமே எனப் போற்றி பலர் அவர் திருவடி பணிந்தனர். திருக்குறுங்குடியில் திருவேங்கடமுடையான் எனும் பிராஹ்மணர் ஒருவருக்கு விசேஷ கடாக்ஷம் பண்ணி ஐந்து நம்பிகளுக்கும் கைங்கர்யங்களை அவனைக்கொண்டு சிறப்பாக செய்வித்தருளினார். பிறகு

**‘ பிறந்தகத்திற் சீராட்டு பெற்றாலும் தன்னைச்**
**சிறந்து காக்கும் சீர்க் கணவன் தன்னை – மறந்திருக்கப்**
**போமோ? மணவாளர் பொன்னடியை விட்டிருக்க**
**லாமோ? கலவியறிந்தாய்’**

என்று நினைத்து மீண்டும் திருவரங்கம் எழுந்தருளினார்.

திருக்குருகூர் திருக்குறுங்குடியில் திருக்கோயில்களில் திருப்பணிகள் பலவும் செய்வித்தார். பின்னர் திருவரங்கம் வந்து நம்பெருமாளை ஸேவித்துக்கொண்டு பிற மதங்களை கிள்ளிக் களைவதற்கு ஏதுவாக ஸ்வமதத்தை ஸ்தாபகம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

கோயில்கந்தாடை அண்ணன் புருஷகாரமாக **‘தேவராஜர்’** என்னும் எறும்பியப்பா, ஜீயர் திருவடியை ஆஶ்ரயித்தார். எறும்பியப்பா, வானமாமலை ராமானுஜ ஜீயர் ஆகிய இருவர் புருஷகாரமாக அப்புள்ளார், அப்பிள்ளை முதலானோர் ஜீயர் திருவடியை ஆஶ்ரயித்தனர். எறும்பியப்பா மஹாவித்வான் அவர் பெரியஜீயர் திருவடிகளை அடையாமல் ஊருக்குத் திரும்பினார். ஸ்ரீராமனை ஆராதிக்க வேண்டி திருகாப்பு நீக்க, கதவுகள் திறக்க முடியவில்லை. எறும்பியப்பா வருத்தப்பட்டு உபவாசத்தோடு உறங்க, கனவில் எம்பெருமான் தோன்றி பெரிய ஜீயரே திரு அனந்தாழ்வான் என்பதை காண்பிக்க. உடனே திருவரங்கம் சென்று தான் கனவில் கண்டதை எல்லோரிடமும் கூறி மாமுனியிடம் அடிமை புகுந்தார்.

மற்றைய நாள் விடியற்காலையில் ஜீயர் பள்ளி யுணர்ந்தெழுந்து குருபரம்பரையை ஆரம்பமாகக் கொண்டு ரஹஸ்ய த்ரயத்தையும் அநுசந்தித்தருளி, பரம், வியூகம், அந்தர் யாமி குணங்களை திருமந்திரத்தாலும் விபவ, ஸௌலப்யாதி குணங்களை சரமஶ்லோகத்தாலும், அர்ச்சாவதார குணபூர்த்தியை த்வயத்தாலும் அநுசந்தித்தருளி பின் அர்ச்சாவதாரத்திற்கு வேர்பற்றான பெரியபெருமாளுடைய விக்கிரஹ குணங்களை விசேஷித்துச்சொல்லி அதன் எல்லையான யதீந்தருடைய

திருஇணை அடிகளை த்யானித்துக்கொண்டே நீராடி, நித்யா னுஷ்டாங்களையும் செய்து திருமண்காப்பு ஸாத்தியருளி தம்முடைய திருவாராதனப் பெருமாளான ஸ்ரீரங்கராஜன் திரு முன்பே தண்டனிட்டு ப்ரீதியுடன் திருவாராதனம் செய்தருளினார்.

ஒரு தினம் அரங்கன் ஸந்நிதியில் பெரியஜீயர் கால க்ஷேபம் முடித்து மடத்துக்கு எழுந்தருளினார். அன்றைய தினம் காலக்ஷேபம் கேட்கமுடியாத ஒரு அம்மையார், அவரை நேரில் ஸேவிக்க எண்ணி மடத்துக்கு சென்றாள். சாத்தப்பட்ட கதவு துவாரத்தின் வழியே மாமுனியை சேவிக்க முயற்சித்த போது பெரிய ஜீயர் தம் அவதார விசேஷத்துக்கு தக்கபடி வெள்ளை திருமேனியையுடையவராய் (ஆதிசேஷனாய்) சயனித்து இருப்பதை கண்டு பிரமித்தாள். உடனே மாமுனிகளே கதவைத் திறந்துகொண்டு பெரிய ஜீயராக எழுந்தருள, அம்மையாரும் பக்தியுடன் ஸேவித்து சென்றதாக வரலாறு.

ஜீயர் பெருமாளை மங்களாசாஸனம் பண்ண எழுந்தருளின வளவிலே, ஏகாந்த ஸேவையாய் ஜீயரும் திரைக்குள்ளே சென்று திருவடி தொழுது நிற்க, அச்சமயம் திருவாலட்டம் செய்து கொண் டிருந்த உத்தமநம்பி வெள்ளிப் பெருமலையொத்த ஜீயருடைய பாலின் தன்மை போலிருந்த சரீர சௌந்தர்யத்தைக் கண்டு பாபவாஸனையாலே அன்னியதா சந்தேகித்து, ஜீயரை **'நெடும் போதிருக்க வேண்டா'** என ஜீயரும் மண்டபம் எழுந்தருளினார். திருவாலவட்டம் வீசிக்கொண்டிருந்த உத்தமநம்பியும் தூங்கி பலகணி கதவிலே சாய்ந்திருக்க அரவினணை மிசை மேய மாயனான **'பெரியபெருமாள்'** இவர் கனவில் வந்து **'அணி விளங்கு முயற் வெள்ளையணையான திருவனந்தாழ்வானை தொட்டுக்காட்டி இவரே ஜீயராக வந்தவரித்தருளினார். அவரு டைய நிறம் வெளுப்பு: ஆகையால் ஜீயரை விஸ்வஸித்து அருளும்'** என்று அருளிச்செய்ய உத்தமநம்பியும் கண் விழித்து அப்போதே விரைந்து ஜீயர் திருவடிகளிலே அபராத க்ஷாமணம் பெற்றார். அது முதல் உத்தமநம்பியும் ஜீயருக்கு அந்தரங்கராய் வாழ்ந்து வந்தார். அது பற்றி **'அநந்தாவதாரர் வரயோகி**

**என்பது தென்னரங்கன் மனந்தானறியும் மற்றார் அறிவார்'** என்று பின் புள்ளாரும் சொல்லும் படியாயிற்று.

ஒரு சமயம் மாமுனிகள் **'விசதவாக்ஶிகாமணி'** எனும் சிறப்பை உறுதிப்படுத்துவதற்காக நம்பெருமாளும் தான் நேரில் திருவாய்மொழி வியாக்யானமான ஈடுமுப்பதாயிரத்தை மாமுனிகள் மூலம் கேட்டு ஆனந்தித்து, நேரில் அனுபவிக்கத் திருவுள்ளம் கொண்டு பரிதாபிஸம்வத்ஸரத்தில் திருப்பவித்ர உத்ஸவ சாற்று முறை தினம் ஜீயருக்கு அருளபாடிட்டு **'நாளை முதல் பெரிய திருமண்டபத்தே நாம் கோஷ்டியாக இருந்து கேட்டு ஆநந்திக்கும் படி திருவாய்மொழி வ்யாக்யானமான ஈடுமுப்பதாயிரத்தை உபந்யஸிக்கனும்'** என்று நியமிக்க மாமுனிகளும் நியமனத்தை தலையால் வணங்கியேற்று உபந்யஸித்தார். அடுத்த வருடம் (ப்ரமாதீச) ஆனி திருமூலத்தில், பகவத் விஷய காலஷேப சாற்றுமுறையன்று நம்பெருமாள் அர்ச்சக குமாரனான அரங்கநாயகம் எனும் ஐந்து வயது குமாரிடம் ஆவிஷ்டராய், மாமுனிகள் எதிரே நின்று,

**'ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$ கு$_3$ணார்ணவம் |**
**யதீந்த்$_3$ர ப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ||**

என்று அனுஸந்தித்து விட்டு மறைந்தார். ஸ்ரீசேனை முதலியார் மூலம் தம் திருவாணையாக எல்லா திவ்யதேஶங்களிலும் இந்தத் தனியனை முதலில் அநுஸந்தித்தப் பிறகே மற்ற அநுஸந்தானங்கள் தொடங்கவேணும் என்றும், முடிவில் ஜீயரின் சிஷ்யரான அப்பிள்ளை அனுவர்த்தித்த **'வாழிதிருவாய்மொழிப் பிள்ளை'** என்று தொடங்கி **'மணவாளமாமுனியே இன்னுமொரு நூற்றாண்டு இரும்'** என்று மணவாளமாமுனி வாழி திருநாமங்களை அநுஸந்திக்கவேணும் என நியமனம் அனுப்பியருளினார். இன்றும் கோயில் மணவாளமாமுனி ஸந்நிதியிலே அண்ணன் புருஷகாரமாக உத்தமநம்பிக்கு ஆதிசேஷ அவதாரமாக ஸேவை சாதித்தபடி ஸந்நிதி மேல் ஜன்னல் வழியே ஸேவிக்கலாம். சுவரில் ஆதிசேஷ வடிவத்தோடே பெரியஜீயர் எழுந்தருளியிருப்பதும், அண்ணனும், உத்தமநம்பியும் பக்கம்

ஒருவராக சித்ர ரூபத்தில் கைகூப்பி நிற்பதையும், இவர்களுக்கு நித்யதிருவாராதனத்தோடே கூடின தளிகை கண்டருளப் பண்ணு கிறார்கள். இன்றும் லோகத்தார் அண்ணன், உத்தமநம்பி இவர் களுக்கு ஆதிசேஷ ரூபமாய் ஸேவை ஸாதித்த படியை ஜன்னல் பக்கலில் இருந்து ஸேவிக்கப் பெறலாம்.

மாமுனிகள் 73 வருடங்கள் வாழ்ந்தவர். அவரே ஆதிசேஷ அவதாரம் என நம்பூர்வர்களால் ஏகோபித்து நிருபணம் செய்யப் பட்டு ஸ்ரீவைஷ்ணவ அடியார்களால் போற்றப்பட்டு கொண்டாடப் படுகிறார். இவர் இயற்றிய க்ரந்தங்களில் ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானமே தலைசிறந்தது. இதில் **'யமேவைஷ வ்ருணுதே தேநலப்ய:' 'ப்ரஜா பதிஸ் த்வம் வேத, ப்ரஜாபதிம் தவோ வேத, யம் ப்ரஜஸதிர்வேத ஸபுண்யோபவதி'** (பரமன் ஒருவனை தேடி அடைகிறான், பரமனை ஒருவன் தேடி அடை கிறான், எவனை பரமன் தேடி அடைகிறானோ அவனே மஹா பாக்யசாலி) என்று வேதத்திலும் புகழப்பட்ட ஸ்வீகார நிஷ்டர்கள் இவர்களே; ஸ்ருதி ஸ்ம்ருதிகளிலும் மற்ற பூர்வாசார்ய க்ரந்தங் களிலும் தேடிக் கண்டுபிடிக்க வேண்டி இருக்கும். ஸாரதமமான, ப்ரதாநப்ரதிதந்த்ரமான இவ்வர்த்தம் இந்தக் க்ரந்தத்தில் மிகத் தெளிவாக முழங்கப்பட்டுள்ளது. இப்படியே தெளிவுகளை விளக்கும் இந்த க்ரந்தத்தை குருமுகமாக கற்க வேண்டியது ஸ்ரீவைஷ்ணவர் அனைவருக்கும் கடமையாகும்.

எம்பெருமான் தம் திருவான தாளிணையை மாமுனிகள் திருமுடியிலே வைத்து ஸாக்ஷாத்கரிக்க அந்த ஒப்பில்லாத அனுபவத்திலேயே திருமேனியை விடுத்து, அங்கீகரிக்கப்பெற்று ஸ்ரீய: பதியான பெரியபெருமாள் பரம க்ருபையினாலே ஸுஷும் நையாகிற வாசலினாலே புறப்பட்டுச் சிரக் கபாலத்தை பேதித்து ப்ரஹ்மாரந்த்ரத்தாலே ஜீயர் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

அஷ்டத்திக்கஜங்கள் முதலானோர் மாமுனிகளின் பிரிவுக்கிரங்கி, பிறகு சிறிது ஆறுதலடைந்து ஜீயர் நாயனாரைக்க கொண்டு மாமுனிகளுக்குச் சிறப்பாகத் திருவத்யயனம் செய்தருளினார்கள்.

**'பாராரு மங்கை திருவேங் கடமுனி பட்டர் பிரான்**
**ஆராமஞ் சூழ்கோயிற் கந்தாடை யண்ணனெறும்பியப்பா**
**ஏராரும் பிள்ளையைப் பிள்ளார் பரவாதி யண்ண னென்னும்**
**பேராந்த திக்கயஞ் சூழ்வர யோகியைச் சிந்தியுமே'**

என்னும் பாட்டு மாமுனிகள் திருவடிகளில் ஆஶ்ரயித்த அஷ்டதிக் கஜங்களை அநுஸந்திக்கிறது.

ஸ்ரீவசந பூஷண வ்யாக்யானம் மாமுனிகளருளிய க்ரந்தங்களில் தலைசிறந்தது. மற்ற ஆசார்யர்களின் கிரந்தங்களில் காணப்படாத பலபல ஆழ் பொருள்கள் இந்த க்ரந்தங்களில் உள்ளது. **'யமேவைஷ வ்ருணுதே தேந லப் ய:' 'ப்ரஜா பதிஸ் த்வம் வேத ப்ரஜாபதிம் த்வோ வேத யம் ப்ராஜாயதிர் வேதஸ புண்யோ பவதி'** (பரமன் ஒருவனைத் தேடி அடைகிறான். பரமனை ஒருவன் தேடி அலைகிறான், எவனைப் பரமன் தேடி அலைகிறானோ அவனே மஹாபாக்யசாலி) என்று வேதத்திலும் புகழப்பட்ட பரகத ஸ்வீகார நிஷ்டர்கள் இவர்களே, ஸ்ருதி ஸ்ம்ருதிகளிலும் மற்ற பூர்வாசார்ய க்ரந்தங்களிலும் தேடி கண்டுபிடிக்க வேண்டியிருக்கும் ஸாரதமமான ப்ரதா நப்ரதிதந்த்ரமான இவ்வர்த்தம் இந்த க்ரத்தந்தில் மிகத் தெளிவாக முழுங்கப்பட்டுள்ளது. இப்படி பல தெளிவுகளை விளக்கும் இந்த க்ரந்தத்தை குரு முகமாகக் கற்க வேண்டியது ஸ்ரீவைஷ்ணவர் அனைவருக்கும் கடமையாகும்.

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே ।
ஸ்ரீரங்கவாசிநே பூயாந்நித்யஸ்ரீர் நித்யமங்களம் ॥

**ஜீயர் திருவடிகளே சரணம்**



## 52.மாமுனியின் ஏற்றம்

பூலோகத்தில் ஆதிசேஷன் முதலில் லக்ஷ்மணனாகவும், பின்பு பலராமனாகவும், இராமனுசராகவும், திருமலை அனந்தாழ் வானாகவும் நான்கு பிறவிகள் எடுத்தும் ஒளி போதாதென்று நினைத்து, ஆதிசேஷன் எல்லையான பேரொளி படைப்பதற்காக கடைசியாக மணவாளமாமுனிகளாக திருவவதரித்தார். கடல் போன்ற அளவிடற்கரிய ஜ்ஞானபக்தி வைராக்யங்களுக்கு கொள்கலமானவர் என்றும், எம்பெருமானார் திருவடிகளில் பேரன்பு உடையார் என்றும் குலாவத்தக்கபடி தன் ஆசார்யனான திருவாய் மொழிப்பிள்ளையின் திருவருளுக்கு பாத்திரமாகிய அம்மணவாள மாமுனிகள் திருவரங்கத்தில் தம்மைத் தஞ்சம் அடைந்தோர்க்கு தத்வத்தை உபதேசித்தும், ஸ்ரீரங்கநாதனுக்கு கைங்கர்யம் செய்துக் கொண்டும் 'திருவாய்மொழி முதலிய தமிழ் வேதங்களைக் கொண்டே நீர் போது போக்கிக்கொண்டும் அவற்றையே பிரசாரம் செய்து கொண்டும் இருக்க வேண்டும்' என்கிறபடி தம் ஆசார்யரின் உத்திரவை இம்மியளவும் நழுவாமல் பரிபாலனம் செய்தும், காலத்தை மிகவும் மதுரமாக கழித்து வருங்காலத்தில், ஒரு நாள் ஸ்ரீரங்கநாதன் தம்மை ஆசார்யராக வரித்து 'நாளை முதல் திருவாய் மொழியை ஈடு முப்பதாயிறப்படி என்று பேருரையுடன் நம் சந்தன மண்டபத்தில் ப்ரவசனம் செய்யும்' என்று அர்ச்சக முகேன நியமித்தனுப்ப, 'தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே' (திருவாய்மொழி 2-9-4) என்று ஆழ்வார் அருளிய நம ஸப்தார்த்தம் திருவாய்மொழிப் பிள்ளையின் இன்னருளினால் நெஞ்சில் ஊறியிருக்கப் பெற்ற மணவாளமாமுனிகள் 'ஸர்வ ஜ்ஞனான ஸ்ரீரங்கநாதன் சிஷ்யனாம், அல்பஜ்ஞானரான நாம் ஆசார்யனாம்: அடியேனால் முடியாது' என்று அவ்வாணையை அலட்சியம் செய்யாமல் 'போக தசையில் ஈஶ்வரன் அழிக்கும் போது நோக்க வேணுமென்று அழியாதொழிகை (முமு க்ஷுப்படி 92) எனும் பிள்ளைலோகாசார்யார் ஸ்ரீஸூக்தியின் படி, ஸ்வதந்த்ரனான அழகியமணவாளன் தன்னை சேஷ னாக்கி, தம்மை சேஷியாக்கியும் அனுபவிக்க எண்ணி

நமது சேஷத்வத்தை அழிக்கும் இத்தருணத்தில் நம்முடைய சேஷத்வத்தை நாம் காப்பாற்றிக் கொள்ள வேணுமெனக் கருதி அவனுடைய அனுபவத்தை அழித்தால் அது நம் முடைய பகவத் பாரதந்த்ரியம் எனும் ஸ்வருபத்துக்கு சேராததாகும். அப்படி செய்யக் கூடாதென அறுதியிட்டு அரங்கனின் அந்தரங்கத்தையே பின் சென்று தம்முடைய ஸ்வருபத்துக்குத் தக்கபடி அவனாணை என இசைந்து 'இப்புவியில்' அரங்கேசற்கு ஈடளித்தான் வாழியே' என்று அனைவரும் தம்மை வாழ்த்தும் படி, தாம் ஆசார்யனாய் இருந்து அழகியமணவாளப்பெருமாளுக்கு, ஈட்டுரையுடன் திருவாய்மொழிப் பொருளை உபதேசித்து, தம்முடைய பகவத் பாரதந்த்ர்யத்துக்கு உகந்த அப்பெருமானால் சிஷ்ய கிருத்யமாக 'ஸ்ரீசைலேச தயாபாத்ரம்' எனும் தனியன் அருளி துதிக்கப் பெற்றார் என்பது யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம் முதலிய நூல்களில் போற்றப்பட்டது.

எம்பெருமானாராக திருவனந்தாழ்வானை அவதரிக்கச் செய்யும்போது எம்பெருமான் 'நீ போய் 200 ஆண்டுகள் பூமண்டலத்தில் வாழ்ந்து கொண்டு உலகை திருத்தி விட்டு வரவேண்டும்' என்று நியமித்து விட்டார். ஆனால் எம்பெருமானார் 120 ஆண்டுகள் மட்டுமே இப்பூவுலகில் இருந்தார். எம்பெருமான் இருநூறு வருடங்களின் மீதமுள்ள எண்பது வருடங்களையும் மற்றொரு அவதாரமெடுத்து உலகைத் திருத்திவிட்டு வரவேண்டும் என்று நியமித்துவிட்டான். அந்த நியமனத்தை நிறை வேற்று வதற்காகவே திருவனந்தாழ்வான் மணவாளமாமுனிகளாள அவதரித்தான். மணவாளமாமுனிகளால் நியமிக்கப் பெற்ற அஷ்ட திக் கஜங்களில் ஒருவரான அப்பிள்ளார் என்னுமாசார்யர் தமது ஸம்ப்ரதாய சந்திரிகை எனும் நூலில் இதுபற்றி அழகாகக் கூறுகிறார்.

**ஆதியிலே அரவரசை அழைத்தரங்கர்**
**அவனியிலே இருநூறாண்டிரு நீரென்ன**
**பாதியிலே உடையவராய் வந்து தோன்றிப்**
**பரமபதம் நாடியவர் போவேனென்ன**

**நீதியாய் முன்போல நிற்கநாடி**
**நிலுவைதனைநிறைவேற்றிவாரு மென்னச்**
**சாதாரண மெனுமாவருடந்தன்னில்**
**தனித்துலாமூலநாள்தான் வந்தாரே!**

பரமபதத்திலும் ஒரு திருமேனியைக் கொண்டு எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்தபோதிலும், இப்பூமண்டலத்தில் வேறொரு திருமேனியுடன் அவனைப் பிரிந்து இருப்பது திருவனந்தாழ்வானுக்கு பொறுக்கவில்லை. எனவே ஆர்த்தி தலையெடுத்து ஆர்த்தி ப்ரபந்தம் அருளிச்செய்தார் மணவாளமாமுனிகள் - அப்பேற்பட்ட ஆர்த்தியைக் கண்ட எம்பெருமானும் அவ்வதாரத்தை எழுபத்தி மூன்று திருநக்ஷத்திரத்திலேயே முடித்துக் கொண்டு தன்னிடம் வந்து சேர பணித்தான். ஆக இந்த விஷயத்திலும் திருவனந் தாழ்வானுடைய தனிச் சிறப்பே கூறப்பட்டுள்ளது தெரிகிறது.

நித்ய முக்தரில் ஒருவர் ஆழ்வாராக இருந்தால் ஆர்த்தி தலையெடுத்து **'சீக்கிரம் என்னை அழைத்து செல்'** என கதற வேண்டியதில்லை. எந்த காரியத்துக்காக அவன் அனுப்பினானோ அந்த காரியம் முடிந்ததும் அவனே அழைத்து கொள்வான் என்று ஆறியிருக்கலாம் என்பது நம்பிள்ளை திருவுள்ளம். இதை நோக்குங்கால், ஆசார்யர்களை மட்டும் எப்படி நித்யஸூரியான திருவனந்தாழ்வானுடைய அவதாரமாகக் கொள்ள முடியும்? திருவனந்தாழ்வானின் அவதாரமாக மணவாள மாமுனிகள் இதே போல் ஆர்த்தி தலையெடுத்து பாசுரங்கள் அருளியிருக்கிறாரே! அப்பாசுரங்கள் ஆர்த்திப்ரபந்தம் என்றே வழங்க படுகின்றனவே! **'நாம் வந்த காரியம் முடிந்தவாறே போகிறோம்'** என்று மணவாளமாமுனிகள் கூறியிருக்க வில்லையே! என்கிற கேள்விதான் வரும்.

சமாதானமாக: திருவனந்தாழ்வான் அவதரிக்கும் போதெல்லாம் எம்பெருமானும் கூட அவதரிப்பதால் அவன் ஆறியிருக்ககூடும். இளையபெருமாளான இலக்ஷ்மணனாகவும், பலராமனாகவும் அவதரிக்கும்போது எம்பெருமானும் கூடவே இராமனாகவும்,

கிருஷ்ணனாகவும் அவதாரம் செய்தார். இந்த அவதாரங்களில் அனந்தாழ்வான் அவர்களை நொடிப் பொழுதும் விட்டுப் பிரியாமல் கைங்கர்யம் செய்து கொண்டு இருந்தான். ஆனால் திருவனந் தாழ்வான் கருத்மானை போலவோ, நித்ய சூரிகளைப் போலவோ, எம்பெருமானை விட்டு பிரிந்து கைங்கர்யம் செய்யும் சுபாவம் உடையவர் அல்லன். ஒரு நொடிப் பொழுது பிரிந்தாலும் மூச்சு அடங்கும்படியான சுபாவத்தை உடையவன் என்பதை லக்ஷ்மணனாக அவதரிக்கும் போது நிருபித்து விட்டான். ஆயினும் எம்பெருமானாராக அவதரிக்கும்போது எம்பெருமான் நியமனத்தின் காரணமாக பிரிவை சகித்து கொண்டிருந்தானே யாகிலும், 200 வருடங்கள் அவனால் பொறுத்திருக்கமுடியாமல் 120 திருநஷத் திரங்களில் தன் அவதாரத்தை முடித்து கொண்டான். எம்பெருமான் மீதி உள்ள எண்பது வருடங்கள் மற்றுமொரு அவதாரம் எடுத்து உலகைத் திருத்தி வரவேண்டும் என நியமித்தான். அந்த நிய மனத்தை ஏற்று அனந்தாழ்வான் மணவாள மாமுனிகளாக அவதாரம் செய்தார்.

ஸம்ஸாரிகளைப்போல் கர்மாதீனமாகப் பிறக்காமல் எம்பெருமானுக்கு கைங்கர்யம் செய்வதற்காக தன்னுடைய இச்சையடியாக யுகங்கள் தோறும் அவதரித்து பெருமை துஞ்சப்பெற்றவன் ஆதிசேஷன்.

## V.53. முடிவுரை

ஆதிசேஷன் தானும் எம்பெருமானைப் போலவே அடிக்கடி பிறந்து தனது அடிமைக்குறும்பான நற்குணங்களினால் ஒளிமல்க வேண்டுமென்று நினைத்து, லக்ஷ்மணன், பலராமன், இராமனுசன், அனந்தாழ்வான், மணவாளமாமுனிகள் என்ற பெயர் கொண்டு முறையே அவதரித்து, த்ரதாயுகத்தில் திருமால் ஸ்ரீராமனாக திருவ வதரித்த போது ஆதிசேஷன் இலக்குமணனாக தோன்றினான். குழந்தைப் பருவம் முதல் திருமாலான ஸ்ரீராமனுக்கு தம்பியாய்ப் பிறந்தது மட்டுமன்றி, அன்புடன் பவன வாஸத்திலும், பின் வனவாஸத்திலும் வாசியேதுமின்றி இராமனுக்குச் செய்யவேண்டிய அடிமைப் பணியில் ஊன்றியிருந்து ஒளி மிகப் பெற்றானென்னும விஷயம் ஸ்ரீராமாயணத்தில் ப்ரசித்தமானதே. சீதையானவள் இரண்டு தடவைகள் இராமனை விட்டுப்பிரிந்த போதிலும் லக்ஷ்மணன் பிரியாதிருந்து அடிமை செய்தது குறிக்கொள்ள தக்கது.

திருமால் த்வாரபாயுகத்தில் கண்ணனான அவதரித்த போது, பலராமன் மூத்தவனாக பிறந்து பின் பிறந்த கிருஷ்ணனுக்கு எப்போதும் கூடவே இருந்து அடிமை செய்தான். ஒரு சமயம் பலராமன் ப்ருந்தாவனம் சென்றான். அவ்வமயம் கண்ணன் காளியனை அடக்கி கடலுக்கு ஓட்டிய கதை கூறப்பட்டுள்ளது தெரிகிறது. தம்பியாகப் பிறந்து அண்ணனான ராமனுக்கு அடிமை செய்த லக்ஷ்மணனைக் காட்டிலும் அண்ணனாகப் பிறந்து தம்பிக்கு தொண்டு புரிந்த பலராமன் ஒளிமிக்கவனன்றோ? கலியுகத்தில், விபவமான ராம, க்ருஷ்ண அவதாரங்களில் கூடப் பிறந்து அடிமைசெய்த லக்ஷ்மண, பலராமனைக்காட்டிலும், விபவா வதாரத்தை விட பெருமை பெற்ற அர்ச்சாவதாரங்களில் அடிமை புரிந்த ராமாநுஜ முனியின் பெருமை பரந்ததல்லவா?

இப்பேற்பட்ட இராமானுசனையே திருவுள்ளத்தில் கொண்டு அவர் இட்ட கட்டளையின் படி திருமலையில் மாலை கட்டிப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்து வந்தார். திருவேங்கடமுடையான் அழைத்தும் அதைச் செவி சாய்க்காமல் ஆசார்யன் இட்ட

கட்டளையை திருவுள்ளத்தில் கொண்டு திருமாலை கட்டுவ திலேயே ஊன்றியிருந்தார். ஆசார்யரான திருகோஷ்டியூர் நம்பி களின் ஆணையை மீறி ஆசையுடையோருக்கெல்லாம் சரமஶ்லோ கத்தின் அர்த்தத்தை உபதேசித்த இராமானுசமுனியைக் காட் டிலும், ஆசார்யனான இராமானுசனின் ஆணையைக் கடவாமல் பகவத் கைங்கர்யம் செய்த திருமலையனந்தாழ்வான் ஒளிமல்கப் பெற்றவன் அன்றோ?

இப்படி பூவுலகில் பல பிறவிகள் எடுத்தும் ஒளி போதா தென்று நினைத்த ஆதிசேஷன் எல்லையான பேரொளி படைப் பதற்காக கடைசியாக மணவாளமாமுனியாக திருவவதரித்தார். எம்பெருமானார் திருவடிகளில் பேரன்பு உடையவர். ஜ்ஞான பக்தி வைராக்கியங்களுக்கு கொள்கலமானவர். 'இப்புவியில் அரங்கேசற்கு ஈடளித்தான் வாழியே' என்று அனைவரும் தம்மை வாழ்த்தும்படி தாம் ஆசார்யனாய் இருந்து அழகிய மணவாளப் பெருமாளுக்கு ஈட்டுரையுடன் திருவாய்மொழிப் பொருளையும் உபதேசித்து, தம்முடைய பகவத், பாரந்த்ர்யத்துக்கு உகந்த அப்பெருமானால் சிஷ்யக்ருத்யமாக ஸ்ரீஶைலேஶதயயா பாத்ரம் எனும் தனியன் அருளித்துதிக்க பெற்றார் என்பது, யதீந்த்ர ப்ரவணப்ரபாவம் முதலிய நூல்களில் போற்றப்பட்டது. ஸ்ரீரங்கநாதருடையவும் திருவாய்மொழிபிள்ளையினுடையவும் நியமனத்தை சிறிதும் தவறாது நிறைவேற்றிய மணவாளமாமுனி கள் முதல் இருவரையும் விஞ்சிய பெருமை பெற்று பேரொளி படைத்தார் என்பது சொல்லவும் வேண்டுமா?

'தூய தென்னரங்கராசர் துயில் கொள்ள அணையாய்
ஆயிரம் கடிகை ஓங்கியர் திருவனந்தன் வாழி'

ஆதிசேஷன் தன்முடிமீது உலகை ஓர் அணுவெனத் தாங்குவது நிருபணம் ஆகிறது. அனந்தனாகிய ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் உண்டு என்பதை வீரராகவய்யங்கார் பாகவதத்தில் கூறி உள்ளார்.

சேடன் என்பதற்கு மிஞ்சியிருப்பவன் என்கிற பொருளும் ஆகும். யுகம் முடிவில் எல்லா பொருள்களும் அழிந்த போது மிஞ்சி இருப்பவனாகையாலே ஆயிரம் தலையுடைய அனந்தன் **'சேடன்'** என்றொரு பெயர் பெற்றான்.

ப்ரளய காலத்திலும் (யுக முடிவில்) ஸ்ரீமன் நாராயணன் தன் உதரபந்தத்தில் உலகை வைத்துத் தாங்கும் போது ஒரு குழந்தையாய் ஜலத்தில் மிதக்கும் போதும் **ஆதிசேஷனே, அந்த குழந்தையான திருமாலுக்கு பள்ளி கொள்ள ஆலி லையாக இருக்கிறான். திருமால் சயனிக்கும் ஆலிலையும் ஆதிசேஷன்தான். யாகங்களுக்கு உத்தேஶ்ய தேவதை யாகவும், ஆதிசேஷன் விளங்குகிறான் என்பதை ஸ்வாமி தேசிகன் ஆனந்தமாக அருளிச்செய்திருக்கிறார்.**

முதற்பரிபாடலில் ஆதிசேஷனை முன்னிட்டுக் கொண்டு பாடிய சங்க சான்றோர்கள், பரிபாடற்திரட்டின் கடைசியில் ஆதிசே ஷனை புருஷகாரமாகப் பற்றிக் கொண்டு சோலைமலைக் கரசனாகிய திருமாலைத் தொழுது ஆதிசேஷன் ஏற்றத்தை உலகினுக்கு உணர்த்துகிறார்கள்.

அமுதம் வேண்டி அமரரும், அவுணரும் அலைகடலைக் கடைந்த காலத்தில் உலகத்தை ஆபரணமாக தாங்கியவனே ஆதிசேஷன். விடைப்பாலகனாகிய சிவபெருமான் திரிபுரத்தை அழித்த காலத்தில், மேருமலையாகிய வில்லுக்கு நாணாகவும் இருந்து சிவபெருமானுக்கு புகழ் ஏற்படுத்தியவன் ஆதிசேஷனே.

'ராமாநுஜம் லக்ஷ்மண பூர்வஜஞ்ச'

என்கிறபடியே ராமலக்ஷ்மணர்களிருவரில் ஒருவரை மற்றவரையிட்டு என்கிறபடியே நிருபிக்கவேண்டும் படியன்றோ! அவர்களுடைய சேர்த்தியிருப்பது **'ஸலக்ஷ்மண:** என்றதால் நிருபகமான **'கடத்வம்'** (கடமாயிருக்கும் தன்மை) நிருப்யமான கடத்தை விட்டு நிற்க மாட்டாதது போலே.

ஆஶ்ரிதனான லக்ஷ்மணன், ஆஶ்ரயணீயனான ராமனை விட்டு நிலை நிற்க மாட்டான் என்பதாயிற்று. அன்றிக்கே **'ஸலக்ஷ்மண:'** என்கிறதாலே பகவானை பற்றுமவனுக்கு **'பரமபுருஷன் விஜாதீயனாயிற்றே'** எனும் பயம் வேண்டியதில்லை. ஸஜாதீயரான லக்ஷ்மணன் முதலிய புருஷாகார பூதர்கள் அருகிலுள்ளனர் எனும் சாஸ்த்திரத்தை வெளியிடுவதாகவும் கொள்ளலாம்.

சக்ரவர்த்தித் திருமகனிடம் சரணம் புகுந்த பொழுது, ஸுக்ரீவன் **'இவன் கடுந்தண்டனையால் ஹிம்ஸிக்கப்படட்டும்'** (இராமாயணம்.யுத்த.காண்17-29) என்று சொல்லி 'கருணையாகிற புண்ணிய லக்ஷணத்தோடு இருக்கும் லக்ஷ்மணனை (ரா-யு.18-7) என்கிறபடி இவ்விபீஷணனை பெருமாள் கைக்கொள்ள வேண்டும் எனும் மனவிரக்கம் தோற்ற இருந்தானன்றோ புருஷகார பூதனான லக்ஷ்மணன்.

ஸ்ரீ வைகுண்டத்தில் (சூர்ணிகை3) நித்ய விபூதியையும் அங்குள்ள பிரகாரங்களையும் சொல்லும்போது 'பெரிய திருப்பள்ளிக் கட்டிலாயிருக்கிறதில் திருவனந்தாழ்வானாகிற படுக்கையில் நாச்சியாருடன் எழுந்தருளியிருக்கிறபடியை வர்ணிக்கிறார். **'சேஷசேஷாசநாதிபரிஜனம்'** என்று பரிஜனங்களுக்குள் முதலில் ஆதிசேஷனனைக் குறிப்பிடுகிறார். மேலும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் சேஷன் என்ற சொல்லுக்கு – மற்றவனிடத்தில் இருக்கும் ஒரு மேன்மையை உண்டு பண்ண வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கீகரிக்கப்படுகை எவனுக்கு ஸ்வருபமோ அவனே சேஷன் என்று அருளிச்செய்துள்ளார்.

**எம்பெருமானாரை ரிஷிகளும்,**

**'வ்யா ஸோவா பகவாந் பராஶரமுநி :**
**ஸ்ரீஸௌநகோ வா(அ) தவா**
**ஸாக்ஷாத் நாரத ஏவ வா ஸடாரிபுர்**
**வாகிஶ்வரோ ஸ்வயம்**
**லோகேஸ: புருஷோத்தம: ஸ்சேஷீ**
**ஜகதாம் ஹிதாய ஸமபூத் ராமானுஜார்யோ முநி:'**

முனிவரான ஸ்ரீராமானுஜர் பகவான் வ்யாஸரோ என்றும், பராசர முனிவரோ என்றும், ஸ்ரீஸௌநகரோ என்றும், ஸாக்ஷாத் நாரதரோ என்றும், சடகோபனோ என்றும், ப்ருஹஸ்பதியோ என்றும் ஆதிசேஷனோ என்றும், உலகுக்கு சேஷியான பெரியபிராட்டியார் தானோ என்றும் யாவரும் புகழலாம்படி உலகங்களுக்கு நன்மை யின் பொருட்டு அவதாரம் செய்தருளினார் என்றார்கள்.

ஆதிசேஷன் திருமாலின் கைங்கர்யபரர்களில் முதன்மை யானவர் என்பதை பகவத்கீதையில் **'நாகங்களுக்குள் நான் அனந்தன்'** என்பதை (10-29 ஶ்லோ.)

ராமானுஜர்அஷ்டபதியில் அனந்தாழ்வான் அர்ஜுனனுக்கு ரதமாக இருந்தது தெரிகிறது.

பரமபதத்தில் எல்லோருமே கைங்கர்யம் செய்வதில் ஊன்றி இருக்கிறார்கள்.இப்படி கைங்கர்ய நிரதர்களாய் இருக்குமவர்களுக்கெல்லாம் முதல்வராய்த் திகழ்பவர் ஆதிசேஷன். இப்படி திருநாமமே இவர் தம் பெருமையை விளக்குவது போல் மற்றொருவர்க்கும் அமையவில்லை. எப்படி ஆழ்வார்களுக்குள் **'தொண்டரடிபொடியாழ்வார்'** என்ற திருநாமம் மற்ற ஆழ்வார் களின் திருநாமங்களைக் காட்டிலும் வேறுபட்டு, அவர் தம் கைங்கர்ய ஸ்ரீயைக் காட்டுவதாக அமைந்துள்ளதோ அது போன்று **'ஆதிசேஷன்'** என்ற இத் திருநாமமும். இதனை பொய்கையாழ்வார் **'சென்றால் குடையாம்'** இருந்தால் சிங்காசனமாம் (முதல் திருவ.53) என்ற பாசுரத்தாலும், ஆளவந்தார் இதனை வடமொழியில் 'நிவாஸ சய்யாஸன'.... என்ற ஶ்லோகத்தாலும் அருளிச்செய்தனர்.

ஸ்ரீகஜேந்தராழ்வானை காப்பாற்ற ஸ்ரீமந்நாராயணன் நேரில் வந்து, கஜேந்திரனின் கால் புண்ணை அத்தவாளத்தலையாலே ஒத்தி, புண் ஆற்றியபோது அத்தவாளமாய் (கைக்குட்டைபோல்) இருந்தது அனந்தாழ்வானே.

திருப்பாவை நோம்பு நோற்ற கோபிமார், கண்ணபிரானிடம் வந்து தங்களுக்கு நோம்புக்காக வேண்டியவைகளைப் பிரார்த் தித்தபோது, அவர்களுக்குக் கொடியாக பெரியதிருவடியைக்

கொடுத்தவன், மேல் கட்டியாகத் திருவனந்தாழ்வானைக் கொடுக்காமல் தன்னுடைய அத்தவாளத்தை (உத்தரியத்தை) கொடுத்தான் என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

எம்பெருமான் அவதாரங்கள் செய்து காப்பாற்றுவது போல் திருவனந்தாழ்வானும் அவதாரங்களான செய்து மாதவனை உகப்பித்து, மக்களையும் காப்பாற்றுகிறார். இதன்படி கலியுகத்தில் **'கலியும்கெடும்'** என்ற நம்மாழ்வாரின் வாக்குபடி ஸ்ரீபெரும்பூதூரில் ராமாநுஜராய் அவதரித்து நன்னெறி ஞானம் தலைக்கொண்டு நாரணர்க்காக்கியருளினார். பதஞ்சலியாய் மஹாபாஷ்யமும், யோக சூத்ரமும், வைத்ய சாஸ்திரமும் செய்தருளினார் என்பர் பெரியோர். எம்பெருமானுடைய புனரவதாரமாக ஸ்ரீமணவாளமாமுனியாகத் தோன்றி, இன்னும் என்றும் இன்னுமொரு நூற்றாண்டு இரும் என்று மங்களாசாஸன வைபவத்தைச் செய்து கொண்டு திருவனந்தாழ்வார் போல் திவ்யதேசம் தோறும் ஆதிசேஷ பீடத்தில் எழுந்தருளி அனைவரையும் காத்து வருகிறார். புறப்பாடுகளில் ஊக்கங்களில் திருவனந்தாழ்வான் (குடையாக) சேர்ந்த பிறகே அருளிச்செயல் தொடக்கம் நடப்பது அனந்தாழ்வானின் சிறப்பையே காட்டுகிறது.

நின்றால் மரவடியாக அனந்தாழ்வான் இருக்கிறார். இவரைத்தான் **ஸ்ரீசடாரியாக** தினமும் நாம் பக்திப்பண்ணிக் கொண்டு ஶிரஸில் வைத்து ஸாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட அனந்தனின் நான்கு வித யூகங்களிலும் நான்கு விதமாக பகவானுடன் அவதரித்து பகவானது கைங்கர்யத்தை நிரவதிகரமாகச் செய்கிறார் என்று ஸ்ரீமந் நாராயணனே ஈஶ்வர ஸம்ஹிதையில். 'ப்ரதமம் சேஷம் ரூபோ மே.....கச்சித்பூத்வா....என்று யாதவாசல மஹாத்மியத்தில் கலியுகத்தில் எம்பெருமானார் அவதாரம் ஸாக்ஷாத் பகவானாலே சொல்லப்பட்டது! கச்சித்பூத்வா என்கிறபதம் கண்டு கொள்வது.

## முனிவாஹான போகம் - தேசிகர் அனுபவித்தது:

அரங்கத்தரவிணையான் - ப்ரளய காலத்திலே பாலனாய்க் கொண்டு ஆலிலை மேலே கண் வளர்ந்தருகிற போதோடு,

ஸர்வகாலத்திலும், கோயிலாழ்வாருக்குள்ளே ஸூரிகளுக்கு தலைவனான திருவனந்தாழ்வான் மேலே, **'உலகுக்கோர் தனியப்பன்'** எனும்படி தன் ப்ரஜைகளான ப்ரஹ்மாதிகள் ஆராதிக்க கண் வளர்ந்தருளுகிற போதோடு வாசியறக் காரணத்வ ரக்ஷகத்வாதிகள் காணலாம்படியாயிருக்கிற பெரியபெருமாள் என்கிறார்.

பாண்டவர்களுக்கு எதிரிகளான கௌரவர்களுக்கு தலைநகர் அஸ்திநாபுரம். ஒருகால் பலராமன் தன் கலப்பையைக் கொண்டு அந்த நகரத்தையே பிடித்து இழுத்து யமுனை நதியில் கவிழ்த்து நின்றான். கண்ணனது சிறுவயதில் அவனைக் கொல்ல வந்த பிரலம்பன் போன்ற அசுரர்களையும் கொன்று போட்டான். இவன் புரிந்த லீலைகளும், கண்ணனுடைய பால்யலீலைகளும் தனித்தனியே சுவைமிக்கனவாகும். கண்ணனுடைய பால்ய லீலைகள், பலராமனுடைய லீலைகளுடன் பிரியாது சேரும்போது தான் கண்ணனுடைய எளிமை, அன்பு முதலிய குணங்கள் உலகுக்கு நன்கு வெளிப்பட்டு உலகம் 'முழுதும்' அனுபவிக்க வாய்ப்பு வந்து கண்ணனுடைய லீலைகளின் சுவை எல்லையற்ற தாகிறது. பாலும், சக்கரையும் கூடிய பின் பாலின் சுவை மிகுந்து நிற்குமன்றோ!

இவ்விதம் ஆதிசேஷ அவதாரங்களிலே (ஐந்திலும்) மணவாளமாமுனிகளே மற்ற நால்வரில் மேம்பட்ட எல்லையில்லாமல் பெருமை படைத்தவராதலால் 'பெரிய ஜீயர்' என்று பொருத்தமான பெயருடன் விளங்கினார். ஆதிசேஷனின் ஒளி நிரம்ப பெற்றானென்பதை இவ்வைந்து அவதாரத்தில் கண்டோம்.

மஹாவிஷ்ணு தான் ஸர்வேஶ்வரன் அவனுக்கு வகுத்த அணையாய் இருப்பவர்தான் திருவனந்தாழ்வான். பதினான்கு உலகையும் தம் தலையிலே தரிப்பவர். உலகத்தின் ஸகல பூதங்களுக்கும் இவர் தாம் தலைவராய், ஆசார்யராய் நின்றவர். தூசி அளவும் களங்கமில்லாமல் சுத்த ஸத்வமாய் உள்ளது. ஸகலவிதமான பாவங்களையும் ஆஶ்ரிதரித்தில் அருளாலே கழித்து வைத்து நிற்பவர். ஸர்வேஶ்வரனைப் போலவே ஸர்வஜ்ஞத்வம் முதலான எட்டு குணங்களாலே நித்யஸூரியாய்

நின்றவர். உலகில் அவ்வவ சரீரங்கள் தோறும் ஸங்கர்ஷண சக்தியாலே வியாபித்து நின்று 'குண்டலினி'யின் மூலமாக ஸகல விதமான ஜீவர்களுடைய சிறுசிறு நடைகளுக்கும் சாக்ஷியாய் நினறவர். இவரே நம்முடைய உட்புறங்களில் உண்டாகிற அஹங்காரமமகாராதி விஷயங்களையும் பௌதிகமான கிருமிகிட ஸரீரஸருபாதி விஷயங்களையும் அன்வயமில்லாமல் செய்து அதனால் வரும் பயத்தையும் போக்குவித்து, நித்யானந்தமான மோக்ஷ ஐஶ்வர்யமாகிற பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங் களை செய்வித்து நியமிக்க வேணுமாய் பிரார்த்திக்கிறோம்.

ப்ரளய காலத்தில் பகவான் ஓர் ஆலிலையின் மேல் பாலக் கிருஷ்ணனாக ஶயனிக்கிறான் அல்லவா: அந்த ஆலிலையும் ஆதிசேஷன் தான். யாகங்களுக்கு உத்தேஶ்ய தேவதையாகவும் ஆதிசேஷன் விளங்குகிறான். முக்தி நிலை அடைந்த பெரியோர் களால் எப்போதும் ஸேவிக்கப்படுகிறது ஆதிசேஷனுடைய வடிவமான பாதுகை.

'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும்' என்கிற பாரிப்பினால் ஆதிசேஷன் எம்பெருமானுடைய எல்லாநிலைகளிலும் எல்லா அடிமைகளையும் செய்து பெருமை பெற்றார்.

## காயத்ரி

ஓம் ஸஹஸ்ஸ்ர பணாய வித்மஹே விஷ்ணுதல்பாய தீமஹி | தந்தோ அநந்தப்ரசோதயாத் ||

ஓம் ஹம் ஸஹஸ்ர பணாத்ருத சதுரஸ்ரீ பூமண்டலாய அனந்தாய நம:
(பாத்மஸமஹிதை)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே மஹாதேசிகாய நம:

## 54. ஆழ்வார்கள் அனுபவித்த நாலாயிர திவ்யப்ரபந்தங்களில் ஆதிசேஷன் அரவணையாகவும், ஆலிலையில் துயில்கின்றவருமாக வரும்பாசுர அடைவுகள்.

### பெரியாழ்வார் திருமொழியில் அனுபவித்தவை

| | | | |
|---|---|---|---|
| 'உடுத்துக்களைந்த' | 1-1-9 | 'வாய் ஒரு பக்கம் வாங்கி' | 4-5-9 |
| 'எந்நாள் எம்பெருமான்' | 1-1-10 | 'குறள் பிரம்மசாரியாய்' | 4-9-7 |
| 'மெய் திமிரும்நானப் பொடியோடு' | 1-4-9 | 'துப்புடையாரை அடைவது' | 4-10-1 |
| 'பாலகன்என்று'(ஆலிலை) | 1-5-7 | 'சாம் இடத்து என்னை' | 4-10-2 |
| 'செக்கரிடை நுனிக்கொம்பில்' | 1-8-2 | 'எல்லையில் வாசல் குறுகச்சென்றால்' | 4-10-3 |
| 'அரவு அணையாய்' | 2-2-1 | 'ஒற்றை விடையனும் நான்முகனும்' | 4-10-4 |
| 'மன்னன் தன் தேவிமார்' | 2-5-9 | 'பை அரவினணைப் பாற்கடலுள்' | 4-10-5 |
| 'ஆலத்து இலையான்' (ஆலிலை) | 2-6-6 | 'தண்ணனவு இல்லை நமன் தமர்கள்' | 4-10-6 |
| 'அண்டத்து அமரர்கள்' (ஆலிலை) | 2-7-9 | 'செஞ்சொல் மறைப்பொருள்' | 4-10-7 |
| 'படங்கள் பலவும் உடை' | 3-5-7 | 'நான் ஏதும் உன் மாயம் ஒன்று' | 4-10-8 |
| 'அரவில் பள்ளிக் கொண்டு' | 3-5-11 | 'குன்று எடுத்து ஆநிரைகாத்த | 4-10-9 |
| 'புவியுள் நான் கண்டது' | 3-6-7 | 'மாயவனை மதுசூதனை' | 4-10-10 |
| 'ஐயபுழுதி உடம்பு' | 3-7-1 | 'வெள்ளை வெள்ளத்தின்' | 5-1-7 |
| 'ஞாலம் முற்றும்'(ஆலிலை) | 3-7-11 | 'நெய்க் குடந்தை பற்றி' | 5-2-1 |
| 'ஆயிரம் தோள் பரப்பி' | 4-3-10 | 'அரவத்து அமளியோடும்' | 5-2-10 |
| 'உரகமெல் அணையான்' | 4-4-4 | 'பனிக்கடலில் பள்ளி' | 5-4-9 |
| 'அங்கம் விட்டு அவை' | 4-5-6 | 'அனந்தன்பாலன்' | 5-4-8 |

## திருப்பாவை

(ஆண்டாள் அருளிச் செய்தவை)

| | |
|---|---|
| 'வையத்து வாழ்வீர்காள்' | 2 |
| 'புள்ளின் சிலம்பினகாள்' | 6 |
| 'தூமணி மாடத்துச்சுற்றும்' | 9 |
| 'குத்துவிளக்கெரிய' | 19 |
| 'மாலேமணி வண்ணா,?' | 26 |

## நாச்சியார் திருமொழி

| | |
|---|---|
| இன்று முற்றும் முதுகு (ஆலிலை) | 2-2 |
| 'கோழி அழைப்பதன்' | 3-1 |
| 'மதயானைப்போல்' | 8-9 |
| 'நாகத்தின் அணையானை' | 8-10 |
| 'காலை எழுந்திருந்து' (ஆலிலை) | 9-8 |
| 'கோவை மணாட்டி நீ' | 10-3 |
| 'கணமாமயில்காள்!' | 10-6 |
| 'கடலே கடலே' | 10-9 |
| 'நல்ல என் தோழி!' | 10-10 |
| தாம் உகக்கும் தம் | 11-1 |
| பொல்லாக்குறள் | 11-5 |
| 'பால் ஆலிலையில் (ஆலிலை) | 13-2 |

## பெருமாள் திருமொழி

(குலசேகராழ்வார்)

| | |
|---|---|
| 'இருள் இரியச்' | 1-1 |
| 'வாய் ஓர் ஈரைஞ்' | 1-2 |
| 'எம்மாண்பின் அயன்' | 1-3 |
| 'மாவினை வாய்பிளந்து' | 1-4 |
| 'இணையில்லா இன்னிசை' | 1-5 |
| 'அளிமலர்மேல்' | 1-6 |
| 'மறம் திகழும் மனம்' | 1-7 |
| 'கோல்ஆர்ந்த' | 1-8 |
| 'தூராத மனக்காதல்' | 1-9 |
| 'வன் பெரு வானகம்' | 1-10 |
| 'திடர் விளங்கு கரை' | 1-11 |
| 'பையரவின் அணை' | 6-3 |
| 'ஆலின் இலைபால' (ஆலிலை) | 8-7 |

## திருச்சந்த விருத்தம்:

திருமழிசையாழ்வார்

| | |
|---|---|
| 'நாகமேந்தும் மேரு' | 6 |
| 'அங்காமாறும் வேதம் நான்கும்' | 15 |
| 'ஏக மூர்த்தி மூன்று மூர்த்தி' | 17 |
| 'விடத்தவாய் ஓராயிரம்' | 18 |
| 'பண்டும் அன்றும்' (ஆலிலை) | 22 |

| | |
|---|---|
| 'பரத்திலும் பரத்தை' | 29 |
| 'வானகமும் மண்ணகமும்' (ஆலிலை) | 30 |
| 'மண்ணுளாய் கொல்?' | 45 |
| 'காரொடு ஒத்த மேனி' | 47 |
| 'நிற்பதும் எந்தை' | 65 |
| 'சோர்வு இலாத' | 78 |
| 'எத்திறத்தும் ஒத்து' | 82 |
| 'நச்சு அறா அணை' | 85 |
| 'வேள்ளை வேலை' | 88 |
| 'கரும்பு அரங்குதண்' | 93 |
| 'அச்சம் நோயோடு' | 117 |

திருமாலை:
தொண்டர் அடிபொடியாழ்வார்

| | |
|---|---|
| 'பாயும் நீர் அரங்கன்' | 20 |

அமலனாதிபிரான்
திருப்பாணாழ்வார்

| | |
|---|---|
| 'மந்திபாய் வடவேங்கட' | 3 |
| 'கையினாற் சுரி' | 7 |
| 'ஆலமரத்தின் இலை' (ஆலிலை) | 9 |

பெரிய திருமொழி:
திருமங்கையாழ்வார்

| | |
|---|---|
| 'பணங்கள் ஆயிரம்' | 1-2-6 |

| | |
|---|---|
| 'எண்திசைகளும்' (ஆலிலை) | 1-8-6 |
| 'பாலனாகி' (ஆலிலை) | 2-2-5 |
| 'பாய்ந்தானை' (ஆலிலை) | 2-5-5 |
| 'கிடந்தானை' | 2-5-6 |
| 'பெண்ணாகி இன்' | 2-5-8 |
| 'படநாகத்து அணை' | 2-5-10 |
| 'உரம் தருமெல்லணை' | 2-9-3 |
| 'மஞ்சு ஆடுவரை' (ஆலிலை) | 2-10-1 |
| 'கொந்தலர்ந்த' | 2-10-2 |
| 'வையம்ஏழும்' (ஆலிலை) | 3-1-3 |

திருவாய்மொழி:
நம்மாழ்வார்

| | |
|---|---|
| 'கோட்பட்ட சிந்தையை' | 2-1-2 |
| 'நைவாய் எம்மேபோல்' | 2-1-6 |
| 'பள்ளி ஆல் இலை' (ஆலிலை) | 2-2-7 |
| 'பலபலவே' | 2-5-6 |
| 'பாம்புஅணைமேல்' | 2-5-7 |
| 'உய்ந்து போந்து' | 2-6-5 |
| 'அணைவது அரவு' | 2-8-1 |
| 'வைத்தநாள்வரை' | 3-3-10 |
| 'பரவி வானவர்' | 3-6-3 |

| | | | |
|---|---|---|---|
| 'கடல் வண்ணன்' | 3-6-10 | 'மனந்த பேர் ஆயர்' | 8-1-8 |
| 'அடியார்ந்த'(ஆலிலை) | 3-7-10 | 'வைத்தேன் மதியில்' | 8-7-10 |
| 'குறைவுஇல் தடங்கல்' | 3-10-2 | 'சுடர் பாம்பணை' | 8-7-11 |
| 'குணம் கொள் நிறை' | 4-1-8 | 'மடல்வரல் அன்னை' | 8-9-8 |
| 'பாலன்'(ஆலிலை) | 4-2-1 | 'தொழுது மாமலர்' | 9-3-8 |
| 'ஏகமூர்த்தி இருமூர்த்தி' | 4-3-3 | 'அரியாய அம்மானை' | 9-4-5 |
| 'கோமளவான்' | 4-4-5 | 'மாலை'(ஆலிலை) | 9-10-1 |
| 'மடநெஞ்சால் நிறைவு' | 4-8-3 | 'இடர்கெட எம்மை' | 10-1-4 |
| 'மேகலையாய்' | 4-8-9 | 'கெடும் இடர் ஆய' | 10-2-1 |
| 'சாமி ஆறும் கெடும்' | 4-9-2 | 'துடைத்த' | 10-2-7 |
| 'கூட்டுதி நின் குறை' | 4-9-9 | 'சுடுவினை களை' | 10-2-8 |
| 'ஊரெல்லாம் துஞ்ச' | 5-4-1 | 'நசித்து இருந்தேன்' | 10-4-5 |
| 'நோற்றநோன்பு' | 5-7-1 | 'நாகத்தணையானே' | 10-4-6 |
| 'நீச்சலும் தோழிமீர்' | 5-9-4 | 'ஆழ்வான் ஆழிநீர்' | 10-5-4 |
| 'கூடி நீரை கடைந்த' | 5-10-10 | 'தலைமேல்தான்' | 10-6-6 |
| 'நாகு அணை மிசை' | 5-10-11 | 'பிரியாது ஆட்செய்' | 10-6-10 |

முதல் திருவந்தாதி
பொய்கையாழ்வார்

| | | | |
|---|---|---|---|
| 'ஆலின் (ஆலிலை)' | 6-2-4 | 'பழுதே பல பகலும்' | 16 |
| 'மெய் அமர் பல்' | 6-6-7 | 'மாலும்கருங்'(ஆலிலை) | 19 |
| 'சூது நாள்'(ஆலிலை) | 7-1-4 | 'நின்றும் நிலம்' | 21 |
| 'மையல் செய்து' | 7-2-6 | 'இமையாத கண்ணால்' | 32 |
| 'உய்வு இடம் ஏழை' | 7-7-6 | 'என் ஒருவர்'(ஆலிலை) | 34 |
| 'கள் அவிழ் தாமரை' | 7-8-4 | | |
| 'மலரடி போதுகள்' | 7-10-5 | | |

| | |
|---|---|
| 'திருமகளும்' | 42 |
| 'சென்றால் குடைய' | 53 |
| 'அவன்தமர் எவ்வினை' | 55 |
| 'பாலன்' (ஆலிலை) | 69 |
| 'இடரார் படுவார்' | 78 |
| 'படிகண்டு அறிநிதியே' | 85 |

இரண்டாம் திருவந்தாதி
பூதத்தாழ்வா

| | |
|---|---|
| 'அவர் இவர் என்று' | 12 |
| 'திரிந்தது வெண்' | 15 |
| 'இடங்கை வலம்புரி' | 71 |
| 'அத்தியூரான்' | 96 |
| 'எங்கள் பெருமாள்' | 97 |

மூன்றாம் திருவந்தாதி
பேயாழ்வா

| | |
|---|---|
| 'நான்கு ஊதும் நால்' | 11 |
| 'பணிந்து உயர்ந்த' | 15 |
| 'ஆரே துயர் உழந்தார்' | 27 |
| 'அடைந்தது அரவு' | 28 |
| 'சேர்ந்த திருமால்' | 30 |
| 'இவையவன் கோயில்' | 31 |
| 'பாலகனாய்' (ஆலிலை) | 33 |
| 'முயன்று' (ஆலிலை) | 53 |

| | |
|---|---|
| 'காய்ந்து இருளை' | 56 |
| 'நின்றெதிராய்' (ஆலிலை) | 80 |

நான்காம் திருவந்தாதி
திருமழிசையாழ்வார்

| | |
|---|---|
| 'பாலில் கிடந்ததுவும்' | 3 |
| 'அங்கு ஆரவாரம்' | 10 |
| 'ஆலநிழற்கீழ்' (ஆலிலை) | 17 |
| 'அவன் என்னை ஆழி' | 30 |
| 'தாளாள் உலகம்' | 35 |
| 'நாகத்து அணை' | 36 |
| 'இடமாவது என்' | 66 |
| 'மெய் தெளிந்தார்' | 94 |

திருவிருத்தம்
நம்மாழ்வார்

| | |
|---|---|
| 'இருள் விரிந்தால்' | 17 |
| 'அருளார் திருச்' | 33 |
| 'அழைக்கும் கருங்' | 52 |
| 'இறையே இரக்கினும்' | 62 |
| 'வேதனை வெண்புரி' | 79 |

திருவாசிரியம்
நம்மாழ்வார்


| | |
|---|---|
| 'செக்கர் மாமுகில்' | 1 |
| 'தளிர் மதி' (ஆலிலை) | 7 |

**பெரிய திருவந்தாதி**
**நம்மாழ்வார்**

| | |
|---|---|
| 'மருங்கும் ஓதம்' | 55 |
| 'கார் கலந்த மேனியான்' | 86 |


**பெரிய / சிறிய திருமடல்**
**திருமங்கையாழ்வார்**

| |
|---|
| 'மண்ணிய நாகத்து அணை' |
| 'நாராயணா! ஓ மணிவண்ணா' |



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர்
திருவடிகளே சரணம்

சுபம்



கற்பக விருக்ஷத்தில் நம்பெருமாள்



ஸ்ரீரங்கம் நம்பெருமாள் - தாயர்
பங்குனி உத்தரத் திருநாளில் ஸேர்த்தி ஸேவை.